புதுமைப்பித்தன்



அருத்தமா



பிரேம கீதம்

(நாவல்)

‘அநுத்தமா’

வி.கே.புக்ஸ் இண்டர்நேஷனல்
ஆனந்த் சரோவர் அப்பார்ட்மெண்ட்ஸ்,
Flat No.19, 117, கச்சேரி ரோடு,
மயிலாப்பூர், சென்னை - 600 004

உரிமைப் பதிப்பு
முதற் பதிப்பு : 1955
இரண்டாம் பதிப்பு : 2013

© ஆசிரியருக்கு

விலை ரூ. 125.00

Typesetting : Amaravathi, Chennai - 33
Printed by : Sankar Printers Pvt. Ltd., Chennai - 42.

முகவுரை

வாழ்வு எனும் கருவிக்கு விசை அளிக்கும் சக்தி அன்பு. அன்பு இல்லை என்றால் உலகமே இல்லை. பொன் இழை போல வாழ்வுக்கு ஒளியும் உறுதியும் அளிப்பது அன்பு. 'அன்பே சிவம்' என்ற கொள்கையில் வளர்ந்தது இந்து மதம்; அன்பும் ஜீவகாருண்யமும் உருவெடுத்தது பௌத்த மதம்; அடித்தவனுக்குத் தலை வணங்கி மறு கன்னத்தைக் காட்டுவது ஏசுவின் அன்பு மதம்; அல்லாவும் மக்களுக்குப் போதிப்பது அன்பே தான் - அன்பின் அருளினால்தான் அகிலமே அசைகிறது.

பிரேமை என்றும், பிரமை என்றும், பித்து என்றும் பலவிதமாக அதை அழைத்தாலும், அன்பு ஒன்றுதான் எல்லா இடங்களிலும் சக்தி வாய்ந்த பொருளாக அமைந்து ஆக்கி வருகிறது. தாயன்பற்ற குழந்தை வளர்ந்து கிழவனாகிவிட்ட பிறகுகூட அநாதை போலத் தனிமையை அநுபவிப்பது உண்டு. உலகத்தில் புதிதாகப் பிரவேசிக்கும் காலத்தில் அன்பின் அரவணைப்புத்தான் உறுதியான ஆதரவாக விளங்குகிறது. மிருதுத்தன்மையும் கண்டிப்பும், சலுகையும் கேட்டலும் கலந்த அந்தப் பாசத்திற்கே தனி மகிமை. பாலூட்டும் காலத்தில் குழந்தையை அணைத்துக் கொண்டும் கனிவு சொட்டும் பார்வையால் பார்த்துக் கொண்டும் இருப்பதனாலேயே குழந்தைகளின் நரம்பு பலப்படுவதாக மன தத்துவ நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். தாயின் அன்பை பூரணமாக அநுபவித்து, அதில் வளர்ந்தவர்கள் பிற்காலத்தில்

திட புருஷர்களாகவும், தன்னம்பிக்கையுள்ளவர்களாகவும் இருக்கிறார்களாம். அவ்வன்பு கிட்டாதவர்களுக்குத்தான் பிற்கால வாழ்வில் நரம்புத் தளர்ச்சி முதலிய வியாதிகள் ஏற்படுகின்றனவாம்.

தாயன்புக்கு அடுத்தபடியாகக் கணவன் - மனைவியின் இன்பப் பிணைப்பைக் கூறலாம். 'ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்' என்று தள்ளிவிடக் கூடிய ஓர் உறவு நிரந்தரமாக சௌக்கியத்திற்கு ஏதுவாகாது. இந்தியப் பண்பாட்டிலேயே வீடு தான் முக்கியமாக விளங்குகிறது. இல்லற வாழ்க்கையே மேன்மையாகக் கருதப்படுகிறது. அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கருத்துக்கு அடிப்படை பலமான அன்புறவுதான். பரஸ்பரம் விட்டுக் கொடுத்து, அன்பு நோக்குடனேயே நடத்துவதுதான் நல்லறம். சதிபதிகளின் மத்தியிலே ஒற்றுமையும், சகிப்புத் தன்மையும், அன்பும் இல்லாவிட்டால் வீட்டில் உள்ள ஒரு சூழ்நிலையே பாதிக்கப்பட்டு விடும். அத்தம்பதிகள் மட்டுமே யன்றி மற்ற எல்லோரும் கூடச் சந்தோஷத்தை இழக்க நேரிடுகிறது. அன்பற்ற தாய் தந்தையரின் குழந்தைகளின் நிலைமையைப் பற்றிக் கேட்க வேண்டியதே யில்லை. அச்சிறார்களுக்குத் தாயிடமோ, தந்தையிடமோ, மற்றும் உடன் பிறந்தவர் களிடமோ, ஏன் - தங்களிடமேகூட மதிப்பிருப்பதில்லை. கோணலான மனப்பான்மையுடன் அவர்கள் வளர்ந்து, பல பல அன்பற்ற இல்லங்களை ஏற்படுத்தப் போய் விடுகிறார்கள்.

அன்பு செய்யும் வேலைகளோ, லீலைகளோ மிக மிக அற்புதம். அழகற்ற இடத்தில் அழகு புலப்படும் - அன்பு இருந்து விட்டால். குணமற்ற பொருளைக் குணமுள்ளதாக மாற்றவல்லது அன்பு. மணமற்றதை மணம் பெறச் செய்யக் கூடியது அன்பு. அன்பென்பது குறிப்பிட்ட மனிதனின் மீதோ, பிராணியின் மீதோ, பொருளின் மீதோ வைக்கப்படும்

பற்றுதலாக இருக்க வேண்டும் என்பதில்லை. பண்பு பெற்ற ஓர் உள்ளத்தின் பக்குவமாகவே தோற்றுகிறது அது. அன்புள்ளம் மக்கள் என்றும், சுற்றத்தார் என்றும், அறிந்தோர் என்றும், அறியாதவர் என்றும் வித்தியாசமே பாராட்டாது. ஜீவனுள்ள பிராணிக்கும் உயிரற்ற பொருளுக்கும்கூட வேற்றுமை பார்க்காது. நன்றாகப் பக்குவம் பெற்று மெருகேறிய அக்கனிவானது எதையுமே திருப்தியுடனும் நிம்மதியுடனும் நோக்கும்.

> ''காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
> மாணொக்க வாய்திறக்க மாட்டாதே - வீணுக்கென்
> என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ
> அன்பில்லாள் இட்ட அமுது''

என்று ஔவையார் அன்பிலாள் இட்ட உணவைப் பற்றி உணர்ச்சி பூர்வமாகக் கூறுகிறார். அன்னமளிக்கும் அக்கரத் திற்குத்தான் என்ன மகிமை! உள்ளத்திலே எழும் விருப்பு வெறுப்புகளினால் உண்பவர்களின் மனமும் உடலும் பாதிக்கப்பட்டுவிடும் என்பது மிகவும் உண்மை என்பது அன்றாட வாழ்க்கையில் கண்கூடாக உணரப்படுகிறது.

அன்புருவங்கள் - அன்பே அவதாரமான சில பிறவிகள் - ஒரு சில குடும்பங்களில் நேருகின்றன. அத்தகைய பாக்கியம் பெற்ற குடும்பங்கள் செல்வ நிலையிலோ, மற்ற நிலையிலோ என்ன மேடு பள்ளங்கள் எதிர்ப்பட்டாலும், உலகத்தின் கண்முன்னே ஒளி குன்றாமல், புகழ் மங்காமல் வாழ்ந்து விடுகின்றன.

அத்தகைய பிறவிதான் இக்கதையில் வரும் விசாலாக்ஷி. மூத்த மருமகளான அவள் மட்டும் சற்றுத் தளர் மனம் கொண்டவளாக இருந்திருப்பாளாயின் அக்குடும்பமே இருந்திராது. அன்பை வெளிப் பிரகடனமாகக் கருதி அதன்

இருப்பிடத்தை அறிந்து கொள்ள முடியாமல் தவிக்கும் பிரகிருதி இரண்டாவது மருமகள் அபிதா. அன்பே சுரக்காத தம்பதிகள் மூன்றாவது மகன் பாலுவும் அவன் மனைவி மீனுவும். அங்க அங்கமும் கொணலுக்கே அர்ப்பணம் செய்து விட்டுத் திரியும் வக்கிர புத்திக்காரன் நான்காவது மகன் முரளி. கலாவின் மீது வைத்திருக்கும் அன்பு அவனைப் பாதிக்கிறது. தாய் இருந்தும் தாயன்பைப் பெறும் பாக்கியம் கிட்டாதவன் நடராஜன்.

'ஆண்டி பெற்றது ஐந்தும் குரங்'காக இருப்பினும், ஐந்து குரங்குகளையும் ஒருங்கே ஆட்டக்கூடிய கோலும், ஆட்டக் காரனும் இருக்கலாமல்லவா? ஜகந்நாதனும் விசாலாக்ஷியும் அன்பெனும் மந்திரக் கோலினால் உலகத்தையே தங்கள் தாளக் கட்டுக்கு நாட்டியமாடச் செய்ய வல்லவர்.

பொருளினாலும், சூழ்ச்சியினாலும், கெட்டிக்காரத் தனத்தினாலும் உலகத்தில் எந்தப் பண்டத்தையும் பெற்று விடலாம். ஆனால் அன்பை மட்டும் அவ்வாறு விலை கொடுத்து வாங்க முடியாது. அது விலைமதிப்பற்றது. ஒருவரைப் பயமுறுத்தி அதைப் பறித்துக் கொள்ள முடியாது. அது பிடிபடாத ஒரு பொக்கிஷம். கெஞ்சிக் கேட்டு அன்பை வாங்க முடியாது.. அது பிச்சைக்கும் இச்சைக்கும் அப்பாற் பட்டது. தானாகச் சுரந்து இன்பத்தை விளைவிக்கக் கூடிய அற்புத ஊற்றாம் அன்பு.

யார் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானா லும், எப்படி வேண்டுமானாலும், கறந்துவிடக் கூடியதல்ல அது. அன்பைப் பெறுவதற்கு ஒரு தகுதி வேண்டும். அன்பை அளிப்பதற்கு ஒரு பண்பு வேண்டும்.

கோபப்பட்டுப் பிறர் கோபத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம். வெறுப்பைக் காட்டிப் பிறர் வெறுப்பைப்

பெறலாம். பணத்தைச் செலவழித்துப் பிறர் அதிருப்தியை உண்டாக்கலாம். பிறர் சந்தோஷத்தை விலைக்கு வாங்கலாம். அன்பு இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அன்பு காட்டிப் பிறர் சினத்தைக்கூடக் கிளப்பலாம். ஆனால் வெறுப்பையோ சீற்றத்தையோ பிரயோகித்து அன்பைப் பெற இயலாது. அன்புக்கு விலை அன்புதான். அதற்கு உரைகல் நட்புரிமைதான். அன்பைக் காட்டித்தான் அன்பு பெற முடியும். அதிலும் ஓரளவு தியாகம் கலந்தது தான் உண்மை யான அன்பு.

அற்புதமான அன்புச் சக்தியைக் குறித்த என் எண்ண அலைகளிலிருந்து எழுந்த ஒலிதான் பிரேம கீதம். அதன் நாதத்தின் தரத்தை வாசகர்களே சுவைத்துச் சீர்தூக்க வல்லவர்.

பிரேம கீதம் ஏற்கனவே 'குமுத'த்தில் தொடராக வந்தது. இதை முதன் முதலில் வெளியிட்ட 'குமுதம்' காரியாலயத் தாருக்கு என் மனமார்ந்த நன்றி. அதைச் சுருதி சுத்தமாகப் புத்தக வடிவில் இன்று உருவாக்கித் தரும் அல்லயன்ஸாருக் கும் என் நன்றி உரித்தாகும்.

நம் நாட்டில் எத்தனையோ ஆண்டுகளாக ஊறிவிட்ட இந்த அன்பு என்றும் அழியாமல், உலகம் முழுவதும், ஒவ்வோர் உள்ளத்திலும், ஒவ்வோர் இல்லத்திலும் இன்ப நாதம் பெறுக்க வேண்டும் என்று அழியாப் புகழ் சச்சிதானந்தத் தாண்டவமாடும் ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

''அநுத்தமா''

மேட்டூர் அணை,
ஜூலை, 22, 1955

பொருளடக்கம்

முதல் பாகம்	9
இரண்டாம் பாகம்	115
மூன்றாம் பாகம்	197

முதல் பாகம்

பிரேம கீதம்

முதல் பாகம்

1. வனப்பும் வனிதையும்

நடராஜபுரத்தின் வக்ஷஸ்தலம் அந்தக் குளம். அந்த ஊரின் எழிலை எடுத்துக் காட்டுவதற்கே அது அங்கு நிலைத்தது போலும். நகரத்திற்குச் சமீபத்தில் இருந்தும், நாகரிக வாடை ஒன்றும் தன்னைத் தாக்காது கம்பீரமாக நின்றது அந்த ஊர். அவ்வூருக்குள் பிரவேசிப்பதற்கு முன், அதைச் சுற்றிப் போர்வை போல் போர்த்துக் கொண்டிருக்கும் தென்னந் தோப்பு, தன் ஆயிரம் தலைகளை ஆட்டி ஆட்டி, 'உன் நாகரிகத்தை இங்கே கொண்டு வராதே!' என்று மிரட்டுவது போல் இருந்தது. நீண்ட திறந்த வெளி. அதில் சில வயல்கள். அவைகளைத் தொட்டும் தொடாமலும் செல்லும் சாலை. இதைக் கடந்து சென்றால் நடராஜபுரம், சிப்பிக்குள் முத்துப்போல் திகழ்ந்து, புன்சிரிப்பு அரும்ப வரவேற்கும். நகரத்து வண்டிகளின் குழப்பத்திலும், ஜன நெருக்கடியிலும், முடிவிலா அவசரத்திலும் அடிபட்டுத் திணறிக் கொண்டிருந்த நகரவாசிகள், இங்கு நுழையும்போதே சாந்தி தங்களை அணைத்து அன்புடன் நல்வரவு கூறுவதை அறிந்தார்கள்.

குளத்தைச் சுற்றி மூன்று பக்கமும் சாரியாக வீடுகள். நான்காவது புறத்தில் ஒரு பதினாறுகால் மண்டபம் தனித்து

நின்றது. விலகி விலகி இரண்டு மூன்று கடைகள் அதுக்குத் துணையிருப்பனபோல் நின்றன.

குளத்தின் தென்புறத்துத் தெருவில் ஒரு வீட்டின் முன் ஒரு மாட்டு வண்டி வந்து நின்றது. வண்டியின் பின்பக்கத்திலிருந்து ஒரு சிறுமி கீழே குதித்தாள். தாவணி பின்னால் பறக்க, சிறகை அடித்துக் கொண்டு மரத்தின் உச்சிக்குத் தாவிச் செல்லும் பஞ்சவர்ணக் கிளியைப்போல் துள்ளித் துள்ளி அவள் அந்த வீட்டின் படிகளை ஏறினாள். அவளது முகத்தில் கண்ட ஆனந்தம், அவ்வதனத்திற்கே ஒரு பொன் மெருகை அளித்தது. அவள் தன்மதியையொத்த தன் முகத்தைக் குளத்தின் புறம் திருப்பிக் கொண்டு, அதையே மெய்ம்மறந்து நோக்கிக் கொண்டு நின்றாள்.

அந்தக் குளத்தைச் சுற்றி பசும்புல் தரை மரகதப் பாய் விரித்தாற்போல் படர்ந்து இருந்தது. அதனிடையே சிறு சிறு பாத்திகளில் வெள்ளையும் சிவப்புமாகப் புஷ்பங்கள் அடர்ந்த காசித் தும்பைச் செடிகள், வெல்வெட்டு மெத்தையில் மணிவேலை செய்ததுபோல் குளத்தங்கரையின் எழிலையே அதிகரித்தன. நீராழி மண்டபத்தின் நிழல் நீரிலே ஆனந்தமாகச் சுருங்கி, மடங்கி ஆர்ப்பரித்தது. உதய காலத்தின் இளங்காற்றின் ஸ்பரிசத்திலே இன்புற்ற அக்குளம் கலாவைக் கண்டு புன்சிரிப்போடு வரவேற்பு அளித்ததுபோல் தோற்ற மளித்தது. அந்த அழகைப் பருகிய கலா, தன்னை மீறியவளாய், தன் சந்தோஷத்தை, வியப்பை, மனக் களிப்பை அடக்க மாட்டாதவளாய், சிறு குழந்தையைப்போல் கைதட்டி ஆர்ப்பரித்து, வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த தன் பெற்றோர்களை அழைத்து, ஆனந்தமாய்க் கூவினாள்.

''அப்பா, அம்மா, இதோ பாருங்கள், என்ன அழகு! என்ன அழகு!'' என்று அவள் ஆரவாரித்தது அந்த ஊர்

முழுவதுமே பரவிவிட்டது போலும். தண்டோராப் போட்டிருந்தாலும் அத்தனை பேர் வெளியில் வந்து பார்த்திருப்பார்களோ என்பது சந்தேகம். பம்பாயில் மிகவும் நாகரிகமான வாழ்க்கையிலேயே பழக்கமான கலாவிற்கு இது அதிசயமாகவும் இருந்தது; மிகுந்த லஜ்ஜையையும் அளித்தது. அவள், முகம் சிவக்க, ஏதோ தவறு செய்தவள்போல் வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

வாசல் தாழ்வாரத்தில் தன்னைச் சுற்றிப் புத்தகங்களை அடுக்கடுக்காக எடுத்து வைத்துக் கொண்டு, ஏதோ படித்துக் கொண்டிருந்தார் ஒரு வயோதிகர்.

''மாமா, நான் வந்திருக்கிறேன், பாருங்கள்'' என்றாள் கலா.

அவர் தலை நிமிராமலேயே, ''ஊம், ஊம், ஆகட்டும், பேஷாக ஆகட்டும்'' என்றார்.

கலாவின் முகம் ஒரு கணம் சந்தேகத்தில் ஆழ்ந்தது. பிறகு, உடனேயே தெளிந்து பிரகாசிக்க ஆரம்பித்துவிட்டது. ''மாமா, நான் கலா. பம்பாயிலிருந்து அப்பாவும் அம்மாவும் நானும் இப்பொழுதுதான் வந்து இறங்குகிறோம்'' என்றாள் அவள் மறுபடியும்.

''யார்?'' என்று கேட்டவாறே நிமிர்ந்து நோக்கினார் ராமநாதையர். அவர் மூளையில் என்ன என்னவோ யோசனை மேகங்கள் மோதின. ஒருகணம் வெறித்துப் பார்த்தார். ஆனால், உடனே உதயமாகிவிட்டது.

''யார்? ஓஹோ, கலாவா? கலாவா? எப்பொழுது வந்தாய்? ஹ்மம்? வா, வா, வா, வா.'' மின்சார சக்தி நேரம் ஏற, ஏறச் சூடு ஏறுவதுபோல் அவர் விசாரம் சந்தோஷமாக மாறி, குதூகலத்தின் உச்சத்தை அடைந்துவிட்டது போலும்.

அவர் குரல் சிரமமாக உயர்ந்து உயர்ந்து கூச்சல் என்னும் திட்டத்தை அடைந்துவிட்டது. ''வாங்கோ, வாங்கோ. ஹல்லோ, ரகுநாதன். வாம்மா கலா. அடியே, இங்கே யார் வந்திருக்கிறார்கள், பார்... உம், உள்ளே போங்கள். மாமியைப் பார்த்தால்தான் உங்களுக்குச் சந்தோஷமாக இருக்கும்... அடே, ஜகம், ரகுநாதன் வந்திருக்கிறான். விசாலத்தினிடம் சொல்... இருக்கட்டும், இருக்கட்டும், சாமான்களை நீங்கள் தூக்குவானேன்? யாராவது எடுத்து வைக்கிறார்கள். அது கிடக்கட்டும். அடே, முரளி!..... உள்ளே போய் ஏதாவது ஆகார விவகாராதிகளை.....''

அவருடைய மனைவியிடமிருந்து ஒரு ராமபாணம் வந்த பிறகே அவருடைய வாக்குப் பிரவாகம் தடைப்பட்டது.

''யார் வந்திருக்கிறார்கள், வரட்டுமே! 'ஓ'வென்று தொண்டையை எடுத்துக் கொண்டு கூச்சல் போட வேண்டுமா?.....''

''அடி, நான் என்ன சொல்லிட்டேன்? பார்த்தாயா, ரகுநாதா? இவள்தான் இந்த ராமருடைய ஜானகி. என்ன அடக்கம்!..... அது கிடக்கட்டுமடி, இவர்களுக்கு ஏதாவது காப்பி, கீப்பி..... அம்மா, விசாலம்!.....''

''வருகிறாள் விசாலம். இவர்கள் உள்ளேதான் நுழையட்டுமே? பாரடியம்மா, கமலா. தினமும் இதே தொல்லைதான். இந்த லீவு ஏன்தான் வருகிறதோ?''

ராமநாதையரும் ஜானகியம்மாளும் இவ்வாறு தங்களுக்குள் சிறு வாக்குச் சண்டையை நடத்திக் கொண்டிருக்க, வந்தவர்கள் சிரித்தபடியே உள்ளே நுழைந்து தங்கள் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டார்கள்.

ராமநாதையரின் மூத்த நாட்டுப் பெண் விசாலாக்ஷியின் தமையன் ரகுநாதன். அவர் தம் மனைவி கமலா, பெண் கலா

சகிதம் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை விடுமுறைக்காகப் பம்பாயிலிருந்து நடராஜபுரம் வந்து தம் தங்கையின் வீட்டில் தங்குவது வழக்கம். தாய் தகப்பன் இல்லாததால் அவர், தம் தங்கையையும், அவளைச் சேர்ந்த புக்ககத்து மனிதர்களையுமே தம் மனிதர் எனப் பாவித்தார். ராமநாதையர் தம்பதிகளுக்கும் ரகுநாதனிடம் தங்கள் பிள்ளை போலவே ஓர் அலாதிப் பிரியம். கலா அவர்களுடைய ஏக புத்திரி; செல்லக் குழந்தை.

ஒவ்வொரு முறை வரும்போதும், இரண்டு மாத காலமும் கழிந்தது தெரியாமல் சென்றுவிடும். திரும்ப அவர்கள் பம்பாயிக்குக் கிளம்பும்போது கலாவை விட்டுப் பிரிய மனமில்லாமல் எல்லோரும் வருந்துவார்கள். நான்கு பிள்ளைகளே இருந்த அந்த வீட்டிலே பெண் குழந்தை இல்லாத குறையைக் கலா மறைத்து வந்தாள். ஆனால் ஒரே குழந்தையான அவளைத் தவிர அவளுடைய பெற்றோர்களுக்கும் வேறு புகல் இல்லை. அவளே அவர்களது வாழ்க்கையின் நிறைவு. லட்சியங்களின் இருப்பிடம். தங்கள் மனத்து ஆசைக்கேற்ப ஆட்டிவைக்க ஒரு பாவை. தன் அருமையையும், மகிமையையும் நன்கு உணராவிட்டாலும், தன்னை எல்லோரும் விரும்புவதைக் கண்டு பெருமிதம் கொண்ட வளாய்க் கலா சின்னஞ்சிறு கன்றுக்குட்டிப் போல் துள்ளி விளையாடுவாள். அவள் அத்திம்பேர் ஜகந்நாதன் முதற் கொண்டு, அவர் கடைசித் தம்பி முரளி வரையில் அவளுடைய விளையாட்டுத் தோழர்களாக விளங்கினர். அவளுடைய அரட்டைக் கல்லிக் கேலிக்கும், விஷமத்திற்கும் இலக்காகினர். இப்பொழுது அவர் குரல் பின்புறத்தில், கிணற்றடியில், ராட்டினத்தின் கடகடத்த ஓசையுடன் கலகலவென்ற சிரிப்புடன் போட்டியிட்டன.

''பார்த்தீர்களா, இங்கே வந்தால் இனி அவள் நம் கைக்கு அகப்படுவாளா!'' என்றாள் கமலா, தன் கணவரிடம்.

''பாவம், குழந்தை. அதற்குத்தானே அவள் ஒரு மாதமாகத் துளைத்துவிட்டாள், 'அத்தையிடம் எப்பொழுது போவோம்?' என்று!'' என்று பதிலளித்தார் ரகுநாதன்.

''வாடியம்மா, கமலா. நீங்கள் வருகிற வரையிலும் எங்களுக்கும் அப்படித்தான் இருக்கிறது. ஏதோ நீங்களும் வந்திருப்பதனாலே.....''

''ஏண்டி!'' என்று மனைவியைக் குறுக்கிட்டார் ராமநாதையர். ''ஏண்டி, என்னவோ பேசியே உபசரித்து விடுகிறாயே? நீதான் எழுந்து போய்க் காப்பியைக் கலந்து கொடேன்'' என்றார்.

ஜானகியம்மாள் முகம் சுண்டிவிட்டது. அவள் தன் கணவரை ஒரு தினுசாகப் பார்த்துவிட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இதற்குள் ரகுநாதன் உள்ளே சென்று விட்டிருந்தார். சூட்சும புத்தி படைத்தவளான கமலா, விஷயத்தை அறிந்து கொண்டு விட்டாள். அவள் முகம் ஒரு சலனத்தையும் காண்பிக்கவில்லையாயினும், மிகவும் தயக்கமான குரலில் அவள் மெதுவாகக் கேட்டாள்.

''எத்தனை மாசம், மாமி?''

''அது என்ன இழவோ? இதுதான் மாசம் போலே இருக்கிறது. பகவான் என்னை இன்னும் என்ன சோதிக்க வேண்டுமென்று நினைத்தாரோ தெரியவில்லை. ஊரார் வாயில்.....''

''சே, நீங்கள் அந்த மாதிரி அபசப்தங்களை உங்கள் வாயால் சொல்லக்கூடாது. ஈசுவரன் கொடுக்கும்போது நாம் யார் குறை சொல்ல? எங்கள் கலா இன்று இங்கு வந்திருக்கிறாள். உங்களுக்கு அவளைப் போல் ஒரு பெண் பிறக்க வேண்டாமா?''

"போதுமே! காடு வா, வா என்கிறது; வீடு, போ போ என்கிறது. இப்பொழுது பெண்ணும் பிள்ளையுந்தான் குறைச்சல்! இனிமேல் பெண் பிறந்து, அதற்கு அழகு பார்த்து, கல்யாணம் பண்ணி, காத்தி பண்ணி,..... என்னவோ, எனக்கு விசாலந்தான் பெண், நாட்டுப் பெண் எல்லாம். அவள் வயிற்றில் ஒரு குழந்தை பிறக்காமல், ஊரார் சிரிக்க எனக்கு....."

"அப்படி யெல்லாம் பேசாதீர்கள். அவளுக்குந்தான் பிறக்கும்" என்று சமாதானம் கூறிவிட்டு, கமலா தன் நாத்தனார் விசாலாக்ஷியைத் தேடிக்கொண்டு உள்ளே சென்றாள்.

ஜானகியம்மாள் அங்கேயே அமர்ந்துகொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். இதுகாறும், தன்னுடைய வாழ்க்கை பூராவும் ஒரு பெண் குழந்தைக்காக ஏங்கி ஏங்கியே வியர்த்தமாகிவிட்டதாகத் தோன்றியது அவளுக்கு.

மனித சுபாவத்திலேயே இதுதான் விசித்திரம். தன்னுடையது என்பதற்கும், பிறருடையது என்பதற்கும் இருக்கும் வித்தியாசம் வேறு எந்த விஷயத்திலும் ஈடு சொல்ல முடியாது. அண்டையில் எவ்வளவு ஐசுவரியம் சூழ்ந்திருக் கட்டும் - தன்னுடையது என்றிருக்கும் துரும்புக்குத்தான் அதிக மகத்துவம். தன்னுடைய சாமானின் அழகும் உபயோகமும் உலகில் தன்னுடையது அல்லாததான எந்த வஸ்துவையும் வெல்லக் கூடியதாகத் தோன்றிவிடுகிறது. தன்னுடையது எவ்வளவு குரூபமாக இருப்பினும், அதன் எழிலுக்கு முன் பிறருடையது சௌந்தரியம் மங்கி, குன்றி, இருக்குமிடம் தெரியாமல் போய்விடுகிறது.

ஜானகியம்மாள் மாத்திரம் இவ்விதிக்கு விலக்காக ஆகிவிட முடியுமா? அவளுக்கு நான்கு பிள்ளைகள்.

அவர்களில் இரண்டு பெயர்களுக்கு விவாகமாகி விட்டிருந்தது. அவள் தன் மருமகள்களிடம் மிகவும் பிரேமை வைத்திருந்தாள். மூத்த மகன் ஜகந்நாதனின் மனைவி விசாலாக்ஷியும் மாமன், மாமியிடம் மிக்க மரியாதையும் அன்பும் வைத்திருந்தாள். இரண்டாவது பிள்ளை அருணாசலத்தின் மனைவி அபீதகுசம் படித்த பெண்ணாக இருந்தது மல்லாமல், கற்பனைகாவியம் இவைகளில் மிகவும் பற்றுள்ளவளாகவும் இருந்தாள். பல கதைகளும், கட்டுரைகளும் எழுதியிருந்தாள். அவள் கணவன், சரித்திரம், புராணம், ஓவியக்கலை, சிற்பம் போன்ற துறைகளில் பற்றுள்ளவன். இத் தம்பதிகளின் வாழ்க்கை மிகவும் ரசம் நிரம்பியதாக இருந்தது. இதைக் கண்டு எவ்வளவோ பெருமிதம் அடைந்தாள் ஜானகியம்மாள். ஆயினும் அவர்களைத் தன் வயிற்றில் பிறந்த பெண்கள் என்று பாவிக்கும்போது அவள் மனதில் ஏதோ ஒரு குறை தோன்றிக்கொண்டே இருந்தது. இயற்கை அன்பிற்கும், செயற்கைப்பாசத்துக்கும் நடுவே வெகு அகலமான, ஆழமான நதியொன்று ஓடுவதுபோல் ஒரு பிரமை அவள் மனதில் அடிக்கடி தோன்றும். அவ்வாறு நினைப்பது அழகல்ல என்று அவள் அவ்வப்பொழுது தன்னைத்தானே கண்டித்துக் கொள்வாள். அதற்கு அவள் தனக்குத்தானே அளிக்கும் சமாதானம் இதுதான்:

"நான் என்ன, இவர்களை வெறுக்கிறேனா? என்ன இருந்தாலும் இவர்கள் வயது வந்த பெண்கள். ஒரு சின்னஞ்சிறு குழந்தைக்குத் தலை வாரி, மையிட்டு, சாந்துப் பொட்டிட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசைதானே எனக்கு?"

2. காவியமும் ஓவியமும்

கலா ஓடிவந்து ஜானகியம்மாளின் அருகில் அமர்ந்து கொண்டாள். அவள் கையில் ஒரு கட்டுத் தாழம்பூவும், சீப்பும் இருந்தன.

''மாமி, எனக்குத் தாழம்பூ வைத்துத் தைக்க வேண்டும். இங்கே நிறையத் தாழம்பூ கிடைக்கிறதே!''

''ஐயோ, பெண்ணே! நாகரிகமாக, பம்பாயில் சொகுசாக வளர்ந்துவிட்டு, உனக்கு இந்தப் பட்டிக்காட்டு வழக்க மெல்லாம் பிடித்திருக்கிறதே!'' என்று செல்லமாகக் கூறிக் கொண்டே ஜானகியம்மாள் கலாவின் தலையை வாரிப் பின்ன ஆரம்பித்தாள்.

கலா, முகத்தில் சிரிப்புத் துளும்ப ஏதோ ஓயாமல் பேசிக் கொண்டிருந்தாள்.

''அம்மா! நான் இன்றைக்குத் தலையில் தாழம்பூ வைத்துக் கொண்டிருக்கிறேனா; எனக்குத் தாழம்பூக் கரைப் பாவாடை வேண்டும்.''

''ஆகட்டும், ஆகட்டுமடி'' என்று அடக்கினாள் அவள் தாய் கமலா. ''இப்படித்தான் மாமி, வாயே ஓயாது. இவளுக்குப் பதில் சொல்வதற்கே எனக்குச் சரியாக...'' கமலா தன் பேச்சைச் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். அவள் முகம் கவலையுடனும், ஆதரவுடனும் ஜானகியம்மாளை நோக்கிற்று. ''ஏன், மாமி?''

''பரவாயில்லை... உம்'' என்று முனகியவாறு மிக்க சிரமத்துடன் பின்னலை முடித்தாள் ஜானகியம்மாள். ''குழந்தை, இடுப்பு ஒடிய உட்கார்ந்து தைத்துக்கொள்ளு கிறது'' என்று சொல்லும்போது, அவள் குரலில் உணர்ச்சி

தது‌ம்பிற்று. தான் இதுவரை யோசித்துக் கொண்டிருந்ததை அறிந்தே கடவுள் இக்குழந்தையை அனுப்பினாரோ என்று எண்ணினாளோ அவள்? அல்லது, அவளது அன்றைய தேக நிலை இன்பக் கனவுகளைத் தட்டிவிட்டனவோ? மூச்சு இருக்கும்வரையில் ஆசை வைக்கலாமல்லவா?

கலா வாசற்படியில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். எதிர்ப் பக்கத்து மூலையில் சவுக்குத் தோப்புக்குப் போகும் வழியிலிருந்து ஜில்லென்று கடற்காற்று வந்துகொண்டிருந்தது. அதன் பின்னால், கட்டிப்போட்ட சிங்கத்தைப்போல் சமுத்திரம் ஊரைப் பார்த்துக் கர்ஜித்துக் கொண்டிருந்தது. சமுத்திர ராஜனின் தூது கொண்டு வருவதுபோல் நாலாபக்கமும் தன் தேஜஸை வீசிக்கொண்டு குளத்தை நோக்கி வந்தான், சூரிய பகவான்.

கலாவுக்கு இதெல்லாம் மிகவும் விநோதமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது. இயற்கை வனப்பு அவள் இருதயத்தில் புகுந்து ஆனந்த அரவம் செய்தது. விவரிக்கத் தெரியாத புத்துணர்ச்சிகளுடன் விழித்தாள் குழந்தை கலாவதி. தன் மனத்தில் தோன்றும் அனைத்தையும் யாரிடமாவது சொல்லி, கொட்டி அளக்க வேண்டும் என்று அவள் தவித்தாள். எழுந்து உள்ளே செல்ல முயன்றாள். ஆனால் உடனேயே, ஏதோ நினைத்தவள்போல் திரும்பிவிட்டாள். அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்க யாரும் வேலையற்று இல்லை. டாக்டர் வந்திருந்தார். அக்கம் பக்கத்து ஓரிரண்டு அம்மாமிகள் வந்திருந்தார்கள். எல்லோரும் ஜானகி மாமியைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டிருந்தனர். அம்மாவும், அத்தையும் வெந்நீர் காய்ச்சுவதும், ஜானகி மாமியின் அறைக்குள்ளே எட்டி எட்டிப் பார்ப்பதுமாக இருந்தார்கள். மாமாவும் அப்பாவும் இப்படியும் அப்படியும் உலாவுவதும், ஏதேதோ பட்டும் படாததுமாகப் பேசுவது

மாகக் காலங்கழித்தார்கள். அவசர அவசரமாகச் சட்டை போட்டுக் கொண்டு வெளியே சென்ற அத்திம்பேர் இன்னும் திரும்பவில்லை.

கலாவுக்கு ஏமாற்றந்தான். மனிதனுக்கு, தான் ஒன்றை அநுபவித்தால் அதைப் பிறருடன் பகிர்ந்து கொண்டால் தான் திருப்தியாக இருக்கிறது. இல்லையேல், அவ்விஷயத்தைப் பற்றி அபிப்பிராய பேதப்பட்டுச் சண்டை போட்டாலாவது சந்துஷ்டியாக இருக்கிறதே தவிர, தனிமை ருசிப்பதில்லை. இதனால்தானே வேதாந்திகளுக்கும், துறவிகளுக்கும் மிக்க மதிப்பு?

கலா திரும்பவும் வந்து அமர்ந்தாளே தவிர, அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவள் மறுபடியும் எழுந்து உள்ளே செல்ல எத்தனித்தாள்.

அப்பொழுதுதான் மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள் அபிதா. கல்யாணமாகி இதுவே முதல் தடவையாக அவள் புக்ககம் வந்திருக்கிறாள். அவளுக்கு எல்லாம் கட்டிவிட்டாற்போல் இருந்தது. உள்ளே இருப்பவர் கள் அவளைச் 'சிறிசு' என்று வெளியே அனுப்பிவிட்டார்கள். புக்ககத்தில், மரியாதை மனிதர்கள் நடமாடும் இடத்தில், ஒன்றும் வேலையில்லாமல் தனிமையில் இருப்பது அவளுக்கு ஒரு சமயம் பயமாகவும் ஒரு சமயம் வெட்கமாக வும் இருந்தது. கலாவைப் போலவே குளத்தின் அழகைப் பருகுவோம் என்று எண்ணியவளாய் மாடியில் முன் வராந்தாவில் வந்தால், ஊரில் உள்ள அத்தனை பெண்மணி களும், ஏன் குழந்தைகளுங்கூட வெளியே வந்து அவளை வேடிக்கை பார்த்தார்கள் என்று பட்டது அவளுக்கு. அவளுடைய சங்கோசசுபாவத்திற்கு அது மிகவும் கஷ்டமாக இருந்தது. இறுதியில், 'கீழே சென்று சமையலறையில்

பேசாமல் உட்கார்ந்தாவது இருப்போம்' என்று எண்ணி அவள் கீழே இறங்கி வந்தாள்.

அவளைக் கண்டதும் தாவிக் குதித்து வரவேற்றாள் கலா. ''சின்ன அத்தை, அதோ பாருங்களேன் அந்தக் குளத்தை! எவ்வளவு அழகாக இருக்கிறது! ஒரு படகு இருந்து அதில் போனால் எவ்வளவு நன்றாக இருக்கும்!'' என்றாள். கலா அபிதாவை, 'சின்ன அத்தை' என்றே அழைப்பது வழக்கம்.

அபிதா கலாவின் அருகில் வந்து நின்றுகொண்டாள். இருவரும் குளத்தை மௌனமாகப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் கலா மறுபடியும் ஆர்ப்பரிக்க ஆரம்பித்துவிட்டாள்.

''பாருங்களேன். அந்தத் தென்னை மரங்களெல்லாம் குளத்தைச் சுற்றிக் காவல் காக்கின்றனபோல் இருக்கிறது அல்லவா? 'வெளியார் யாரும் எங்கள் குளத்தின்கிட்டே வரக்கூடாது!' என்று தங்கள் கைகளை விரித்துச் சூரிய கிரணங்களைத் தாக்குகின்றன போல் தெரிகிறது.''

குழந்தை கலாவின் கவிதையுள்ளத்தைக் கண்டு அபிதா ஆச்சரியம் அடைந்தாள். ''கலா, நீ எத்தனையாவது படிக்கிறாய்? உன் வயசென்ன?'' என்று கேட்டாள்.

''எனக்கா? நானா? எனக்குப் பன்னிரண்டு வயசு என்று அம்மா சொல்லுகிறாள். நாலாவது பாரம் படிக்கிறேன். ஏன்?''

''ஒன்றும் இல்லை. நீ இவ்வளவு தூரம் ஆழ்ந்து ரசிக்கிறாயே என்று கேட்டேன்.''

''அது இருக்கட்டும். இதோ பாருங்களேன். சூரியன் ஜயித்து விட்டான். குளம் சூரிய வெளிச்சத்தில் எப்படி இருக்கிறது!''

''சூரியன் பழம் பெருச்சாளி, கலா. அவனுக்கு இந்தத் தென்னைகள் எந்த மட்டும்? இவைகளையும் தாண்டி, உச்சஸ்தானத்தை எட்டி, தன் முழுக் கிரணங்களையும் குளத்தின்மேல் வர்ஷிக்கிறான். அந்தப் பொல்லாத குளம், பாரேன்; அதைக் கண்டு சிரித்து, அசைந்து ஆடி, சல்லாபமாடு கிறது.''

''உங்களுக்குக்கூட அப்படியெல்லாம் தோன்றுகிறதா, அத்தை?''

''அவளுக்குத் தோன்றாமலா? அவள்தான் கதை யெல்லாம் எழுதுகிறாளே, கலா?'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார்கள் இருவரும்.

தன் கணவனின் சொற்களைக் கேட்டதும், லஜ்ஜையுடன் முகத்தைக் கீழே கவிழவிட்டாள், அபிதா.

கலாவின் ஆவலைத் தூண்டிவிட்டபிறகு அவள் சும்மா இருந்து விடுவாளா? ''அத்தை, நீங்கள் எதில் எழுதியிருக் கிறீர்கள்? என்ன புனை பெயர்? சொல்லுங்களேன்'' என்று அவள் நச்சரித்தாள்.

அபிதாவுக்கு நா எழவே இல்லை. அவள் மிரள மிரள விழித்துக் கொண்டு நின்றாள். நத்தை தன் கூட்டிற்குள் புகுந்து கொள்வதுபோல், தன் புடைவைக்குள்ளேயே அடங்கி விட்டிருப்பாள்; அப்படிக் கூசிக் குனிந்தாள் அவள்.

கலாவின் செவிகளுக்கு எட்டாமல், அருணாசலம் மெள்ள அபிதாவிடம், ''என்ன வெட்கம், ஹ¥ம்?'' என்று கேட்டான். இப்படிக் கேட்டுவிட்டால், உடனே நாணத்தையெல்லாம் விட்டுவிட்டு, பளிச்சென்று அபிதா பதிலளித்து விடுவாள் என்று அவனது எண்ணம் போலும். ஆனால் அவள் முன்பைக் காட்டிலும், இன்னும் அவஸ்தைப்

பட்டாள். அதைப் போக்க வேறு வழி ஒன்று கண்டு பிடித்தான் அருணாசலம்.

நமது இந்துக் குடும்பங்களில், அதிலும் இன்னும் பழைய காலத்துப் பழக்க வழக்கங்கள், கட்டுப்பாடுகளைத் தளரவிடாமல் வைத்திருப்பவர்களின் வீடுகளில், இளம் காதலர்கள் சகஜமாக அளவளாவிப் பேசி இன்புறச் சந்தர்ப்பம் கிடைப்பதரிது. இந்த மாதிரி மறைமுகமான கட்டுத் திட்டங் களினாலேயே காதலுக்கு ஒரு தனி மகத்துவம் ஏற்படுகிறது. கண்டும் காணாமலும், தெரிந்தும் தெரியாமலும், பல சாக்குகள் சொல்லி மறைவில் சந்திக்கும் இன்பம், பகிரங்க மாகப் பழகினால் இருக்குமா என்பது அநுமானத்திற்கு இடமான விஷயம். அப்படியிருக்க, கிடைத்த ஒரு சந்தர்ப்பத்திலும் அபிதா வெட்கத்தினால் பேசாமடந்தையாகி விட்டால், அருணாசலம் அதை விரும்புவானா?

''இன்று நான் கோவில் பின்புறத்துத் தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருந்தேன்'' என்று ஆரம்பித்தான் அவன். ''அங்கே எனக்கு ஒரு கல் பெருச்சாளி கிடைத்தது. என்ன அழகான சிற்பம், என்ன தீர்மை, என்ன நிர்ணயம்! அதைக் கண்டது முதல் எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. இவ்வூரில் நிறையச் சிற்பச் செல்வம் கிடைக்கிறது; சிலவற்றைப் பார்த்தால் பல்லவ ரீதியில் இருக்கின்றன; சில தெற்குத் தேசத்துப் பாணியைக் காண்பிக்கின்றன.''

கலையின் நடுநிலைமை இருவரையும் பிணைத்து விட்டது. கல் பெருச்சாளி அவர்களுக்கிடையே நின்ற சங்கோஜத் திரையைக் கொரித்து எறிந்துவிட்டது. தன்னையும் அறியாமலேயே அபிதா பேச ஆரம்பித்தாள்.

''இந்தக் கோவிலைப் பார்த்ததும், எனக்கும் அப்படித்தான் தோன்றிற்று. பழைய காலத்து ராஜாக்கள் பல

தேசத்திலிருந்தும் சிற்பிகளை வரவழைத்து வேலை செய்வித்தார்கள். மாமல்லபுரம் அருகே இருக்கிறது. பல்லவ சாம்ராஜ்யத்தின் பெருமையின் சின்னங்கள் இங்கே காண்பதில் அதிசயம் என்ன? இந்தக் கோவிலின் விசாலமான பிராகாரத்தைப் பார்க்கும் போதெல்லாம் அந்த மதில் சுவரின் கற்கள் எனக்கு ஆயிரம், பல்லாயிரம் கதைகள் சொல்வன போல் தோன்றுகிறது. ஒருபுறம் வேத பாராயண கோஷ்டியரும், ஒருபுறம் கலையரங்கமும், மற்றொரு புறம் உபந்நியாசங்களும் இவ்வாறான பல ஆனந்தக் காட்சிகள் என் கண் முன்னே தோன்றி நர்த்தனமாடுகின்றன.'' அபிதாவின் முகம் மந்திரம் போட்டாற்போல் மாறிவிட்டது. அவள் அகன்ற நெற்றி, பள பள வென்ற சலவைக் கல்போல் பிரகாசிக்க, நெற்றிக் குங்குமம் பகலவனைப்போல் ஒளி வீசியது. கண்கள் இருதடாகங்களென அவ்வுள்ளத்து உணர்ச்சிகளைக் கக்கின.

அருணாசலம் பரவசமடைந்தான். ''வாயேன், கோவிலுக்குப் போவோமா? அபிதா, உனக்கும் இம்மாதிரி விஷயங்களில் ஆர்வமிருக்கிறது என்றால், நான் எவ்வளவு பாக்கியசாலி!'' என்றான்.

தன் கணவன் இப்படி வாய்விட்டுப் பேசியதைக் கண்டு அபிதா சட்டென்று ஜாடையாகக் கலாவின் பக்கம் கண்ணைக் காட்டினாள். இவர்களையே கவனித்துக் கொண்டிருந்த கலா, சட்டென்று முகத்தைக் குளத்துப் பக்கம் திருப்பிக் கொண்டாள். ஒன்றும் புரியாவிட்டாலும், ஏதோ காணத் தகாததைக் கண்டு விட்டது போலவும், கேட்கக் கூடாததைக் கேட்டுவிட்டது போலவும் தோன்றியது அவளுக்கு. ஏதோ திருடிவிட்டாற்போல் முகத்தை அப்புறப்படுத்திக் கொண்டு தவித்தாள் சிறுமி.

அருணாசலம் தன் மனைவியின் சைகையை அறிந்து கொண்டானா இல்லையா என்று தெரியவில்லை. ''வாயேன், அபிதா, இப்பொழுதே போவோம். காலையில் இந்நேரத்தில் அங்கே யாரும் இருக்கமாட்டார்கள். நந்தவனத்தில் செடி நிழல்களில் சுவர்க்கலோகமே வீற்றிருக்கிறது'' என்று அவன் கூப்பிட்டான்.

''நான் எப்படி இப்பொழுது வரமுடியும்?'' என்றாள் மெதுவாக, அபிதா.

''ஏன்? எல்லோரும் எங்கே?''

உள் பக்கம் கண்ணைக் காண்பித்தாள் அபிதா. அப்பொழுதுதான் அருணாசலத்திற்குச் சுய உணர்வு வந்தது.

''அப்படியானால் அம்மாவுக்கு...? டாக்டர் வந்திருக்கிறாளா?'' என்று கேட்டான் அவன்.

ஏனோ அபிதாவின் முகம் குபீரென்று சிவந்து விட்டது. மிகவும் நாணத்துடன் அவள், தலை குனிந்தபடியே, ''ஆமாம்'' என்றாள்.

''இதில் உனக்கென்னடி, வெட்கம்?'' என்று வேறு கேட்டு விட்டான் அருணாசலம், சல்லாபமாக - மெது வாகத்தான். அவள் லஜ்ஜை மேலிட இன்னும் குன்றி விட்டாள். அவள் நாக்கு மறுபடியும் இழுத்துக் கொண்டு விட்டது. கணவன் முதல் தடவையாக, அவ்வளவு நெருங்கி, 'அடி, பிடி' என்று பேசுவது, அவன் தன் அந்தரங்கத்தையே தொட்டுவிட்டதுபோல் அவள் திடுக்கிட்டாள். அவனது அண்மையில் இன்புறும் அளவு அவளுடைய சங்கோஜம் இன்னும் நீங்கவில்லை போலும். அவள் மனத்தில் குழப்பமே மிஞ்சியது.

நுட்ப புத்தி படைக்காத கசடனா என்ன அருணாசலம்? தன் மனைவியின் நிலைமையை அவன் உணர்ந்தான். 'இவள்

மிகவும் மிருதுவான ரோஜா இதழை ஒத்தவள். இவளிடம் முரட்டுத்தனமாகப் பழகக் கூடாது' என்று அவன் தன்னை எச்சரித்துக் கொண்டான். தொட்டாற் சிணுங்கிபோல் மூடிக் கொண்டுவிட்ட அவள் வாயினின்றும் மறுபடியும் பேச்சை இழுக்க முயன்றான்.

''மாடிக்கு வருகிறாயா? என் அறையில் அந்தக் கல் பெருச்சாளியை வைத்திருக்கிறேன்'' என்று குழைவுடன் அழைத்தான் அவன்.

அதிலும் ஏதேனும் தப்பு இருந்ததோ? அபிதாவின் முகம் கோவைப் பழம் போலாக, நெற்றி நரம்கள் புடைக்க, அவள் ஒரு விநாடி கண்களை உயர்த்தி அவனைப் பார்த்து விட்டு, சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அருணாசலத்துக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. கலா ஏதோ தண்டனைக்கு உட்பட்டவள்போல் தெய்வமே என்று முகத்தை வாசற் கதவின் கம்பிகளில் பதித்துக் கொண்டு குளத்தையே பார்த்துக் கொண்டு இருந்தது அவன் கண்களில் அப்பொழுதுதான் தென்பட்டது. ''கலா, நீயும் வாம்மா. இரண்டு பேரும் வாருங்கள். நான் காண்பிக்கிறேன். எவ்வளவு வேலைப்பாடு தெரியுமா?'' என்று அவன் அழைத்தான்.

கலாவின் குழப்பம் அதிகமாகிவிட்டது போலும். அவள் வெடுக்கென்று பதில சொல்வதில் புகல் கொண்டாள். ''நான் ஒன்றும் வரவில்லை. நீங்கள் சின்ன அத்தையையே அழைத்துக் கொண்டு போங்கள். நீங்களிருவரும் போகுமிட மெல்லாம், வால்போல் நான் கூடச் சென்றால் எங்கம்மா என் காலை உடைத்து விடுவாளாம்'' என்றாள், அந்தக் கள்ளம் கபடமற்ற பெண்!

அபிதாவும் அருணாசலமும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்முறுவல் பூத்துக் கொண்டனர்.

''என்ன உளறுகிறது இந்தச் சமத்து?'' என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்த கலாவின் தாய், அவர்களைப் பார்த்து, ''அருணாசலம், உனக்கு ஒரு...'' என்று முடிப்பதற் குள்ளாகவே, அவன், ''என்ன, என்ன குழந்தை?'' என்று ஆவலுடன் கேட்டான்.

''வழக்கம்போல்தான்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள் கமலா. கலா அவள் பின்னாலேயே ஓடிவிட்டாள்.

★ ★ ★

ஜானகியம்மாள் கண்ணைத் திறந்தாள். டாக்டர் புன்முறுவலுடன் அவளை நோக்கியவாறு, ''அழகான பிள்ளைக் குழந்தை'' என்றாள். ஜானகியம்மாளின் முகம் வெளிறிற்று. முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். விசாலாக்ஷி ஆவலுடன் அக் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருப்பது அவள் கண்களில் பட்டது.

3. விளையாட்டுத் தோழர்கள்

கலாவும் ஒரு பதினாறு வயதுச் சிறுவனும் தாயக் கட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள். ''கலா, கோவிலுக்குப் போகலாம், வருகிறாயா?'' என்று கேட்டுக் கொண்டே அபிதா அங்கு வந்தாள்.

''கலா, நீ எழுந்து போகாதே. வெறுமனே அருணாசலத் தோடு போய்ப் பேசுவதற்காக உன்னைத் துணை கூப்பிடு கிறாள், மன்னி. அவளே போய்க் கொள்ளட்டும், நீ என்ன

குறுக்கே? அவன் இப்பொழுதுதான் கையில் கட்டுக் காகிதத்துடன் கோவில் பக்கம் போனான்?'' என்றான் சிறுவன்.

''கலா. நீ வருகிறாயா இல்லையா, சொல்'' என்று அபிதா தன் மைத்துனனைக் கவனிக்காதவள்போல் மறுபடியும் கலாவைக் கேட்டாள்.

''நீ எழுந்திருக்காதே, கலா. நேற்று ராத்திரி நிலாவில் குளத்துப் படியில் உட்கார்ந்துகொண்டு பேசிக் கொண்டிருந்தார்களே, அப்பொழுது தனியாகப் போக முடிந்ததாக்கும்? இப்பொழுது ஒரு குட்டித் துணை! யாரை ஏமாற்றவாம் இந்த வேஷமெல்லாம்?'' என்றான் முரளிதரன்.

தன்னை நடுநிலையாக வைத்துக் கொண்டு நடக்கும் இந்தச் சம்பாஷணையைக் கண்டு, கலாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவள் கலகலவென்று சிரித்தாள். ''பேஷ், நீங்கள் இரண்டு பேரும் நேருக்கு நேராகப் பேசிச் சண்டை போடுங்களேன். நடுவில் நான் என்ன ஒரு மத்தளம்?'' என்றாள்.

''நீ சொல், கலா. நீ வரமாட்டாயே? அப்படியானால் நான் மன்னியைக் கூட்டிக் கொண்டு போகிறேன்'' என்று கூறியவாறு, உள்ளே போவதுபோல் ஜாடை செய்தாள் அபிதா.

''பேஷாகப் போகட்டும், கலா. மன்னியையே கூட்டிக் கொண்டு போகட்டும்'' என்றான் முரளி.

கலா தற்செயலாக அபிதாவின் முகத்தைப் பார்த்த போது, அது மிகவும் பரிதாபமாகக் காணப்பட்டதுபோல் அவளுக்குத் தோன்றிற்று. அவள் எழுந்து செல்ல எத்தனித்தாள்.

முரளி அவன் கரத்தைப் பிடித்து உட்கார வைத்தான். ''நடு ஆட்டத்தில் எழுந்து போனாயானால் 'மொண்டி'

என்பேன். தோற்கப் பயந்து ஓடுகிறாயா? வெட்கமாக இல்லை? இதற்குத்தான் 'பொட்டை ஆட்டம்' என்கிறது'' என்று கேலி செய்ய ஆரம்பித்தான்.

''ஆமாடா, உங்கள் ஆண்கள் ஆட்டம் மிகவும் வாழ்ந்து விட்டதாக்கும்! நான் ஒன்றும் பயந்து கொண்டு ஓட வில்லை.''

''இது வேறு, 'கீழே விழுந்தேன். ஆனால் முழங்காலில் மண் படவில்லை' என்பது. பயமில்லாவிட்டால் ஆடேன், பார்ப்போம். பயந்தாங்குள்ளி!''

''நான் ஒன்றும் பயந்தாங்குள்ளி இல்லையடா. நாளைக்கு ஆடுகிறேன், பார். யார் ஜயிக்கிறார்கள் பார்ப்போம்.''

''நாளைக்கு என்ன, இன்னைக்கு வா. இல்லா விட்டால்...''

''இல்லாவிட்டாலும் இல்லை, கொள்ளாவிட்டாலும் இல்லை. நான் சின்ன அத்தையுடன் கோவிலுக்குப் போகப் போகிறேன்.''

''போ, போ. அவளுடன் போ. அவர்கள் இரண்டு பேரும் உன்னை ஏமாற்றிவிட்டுப் பேசிக்கொண்டிருப்பார்கள். நீ அசடு வழிய நின்றுகொண்டு முழி, முழி!''

''அம்மா, இந்த முரளியைப் பாரேன்!'' என்றாள் கலா, வேறு ஒரு பதிலும் கூறத் தெரியாமல்.

'' 'அம்மா, இந்த முரளியைப் பாரேன்!' சின்னக் குழந்தை, அம்மாவைக் கூப்பிடுகிறதைப் பார், அம்மாவை!'' என்று கேலி செய்தான் முரளி. ''சகிக்கவில்லை!''

''உனக்குச் சகித்து என்ன ஆகவேண்டும்? போடா.''

''ஆமாம், போடி, நொண்டி, மொண்டி, தொத்தாங் குள்ளி, பயந்தாங்குள்ளி. இந்தப் பெண் பிள்ளைகளே சுத்த

மோசம். எல்லாம் திருட்டுத்தனத்திலேயே, மாமாலத்தி லேயே, சண்டித்தனத்திலேயே நடக்க வேண்டும். ருசு மார்க்கம் கிடையாது.''

''வா, கலா. அவனோடு உனக்கென்ன?'' என்று மெதுவாகக் கூப்பிட்டாள் அபிதா. ஆனால் அந்த வார்த்தைகள் முரளியின் செவிகளில் எட்டிவிட்டன.

''என்னோடு அதிகம் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று சொல், கலா'' என்றான் அவன்.

''நீயும் என் ஜோலிக்கு வரவேண்டாம், முரளி. மரியாதை கொடுத்துத்தான் மரியாதை வாங்க வேண்டும்'' என்றாள் இதுவரையில் பொறுத்துக் கொண்டிருந்த அபிதா.

''நான் உங்களிடம் பேசவில்லை போலிருக்கிறதே? நான் கலாவுடன்தான் பேசிக்கொண்டிருந்தேன்'' என்றான் முரளி.

''ஐயோ, வெட்கமாக இல்லை, முரளி? நேருக்கு நேராகப் பேசும்பொழுது நழுவப் பார்க்கிறாயே? சே, சே. ஆண் பிள்ளைகளின் ருசு மார்க்கம் இதுதானோ?'' என்று கைகொட்டிச் சிரித்து விட்டு ஓடினாள், கலா. அபிதாவும் அவளுடன் சேர்ந்து சிரித்தாள்.

இந்தத் தோல்வி முரளிக்குச் சகிக்கவில்லை. ஏதாவது காரசாரமாகச் சொல்லவேண்டும் என்று தோன்றிற்று அவனுக்கு. ஆனால் அவர்கள் இருவரும் அதற்குள் எட்டிப் போய்விட்டார்கள். ''மன்னீ! கோவில் பிரகாரத்து அழகைக் காண்பித்துக் கலாவை அங்கேயே நிறுத்திவிட்டு ஓடி விடாதீர்கள், நேற்று மாதிரி. அவளுக்குப் பனி உடம்புக்கு ஆகாது'' என்று அவன் வாசற்படிக் கட்டில் நின்று கொண்டு உரக்கக் கத்தினான்.

அபிதா திரும்பிப் பார்க்கவில்லை. கலாவையும் இழுத்துக் கொண்டு வேகமாக நடந்தாள். ''சீக்கிரம் நட கலா. அந்த அதிகப் பிரசங்கியின் பேச்சைக் கேட்காதே. என்னவோ செல்லம் கொடுத்துக் கொடுத்துப் பாழடிக்கிறார்கள். அப்பா அம்மாவிடம் வைத்துக் கொள்ளக்கூடாதா? என்ன இருந்தாலும் அண்ணாவும் மன்னியும் என்ன செய்துவிட முடியும்?'' என்று அவள் பட படப்பாகப் பேசினாள்.

'ஒரு பிள்ளையை நல்ல வழியில் வளர்க்க, பெற்றோர்கள் தாம் தகுதியுள்ளவர்களா? அண்ணன், மதனி அடக்க முடியாதா?' என்ற நுண்ணிய விஷயங்கள் எல்லாம் கலாவுக்கு எட்டவில்லை. இருந்தாலும் அபிதா தன்னைச் சமமாக மதித்துப் பேசும்போது, தெரியாததுபோல் இருப்பது தன் மதிப்புக்குக் குறைவாக மட்டும்பட்டது. அதனால் தனக்குத் தெரிந்ததை, அதுவும் தானே கவனித்ததும், அம்மா அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்ததை ரகசியமாகக் கேட்டறிந்து கொண்டதுமான ஒரு விஷயத்தை, அவள் பெரிய மனுஷிபோல் வெகு சாதாரணமாகக் கூறி வைத்தாள்.

''அதுதான், மாமிக்குப் பெண்ணில்லாத குறையில் பிள்ளையைக் கண்டாலே பிடிக்கவில்லையே, அத்தை? கடனே என்று தன் கடமையைத் தொலைக்கிறாளாமே?'' என்றாள்.

அம்மா கூறினது கைக்குழந்தை நடராஜனைக் குறித்து. தான் அதை முரளிக்கு ஒட்ட வைக்கிறோமே என்று அவள் என்ன அறிவாள்?

''ரொம்ப அழகாகத்தான் இருக்கிறது! அதற்காகக் குழந்தைகளிடம் அன்பாக இல்லாமல் இருப்பதா? தன் கடமையைத் தட்டிக் கழிப்பது மிகவும் லட்சணந்தான்!''

இன்னும் ஏதேதோ கூறினாள் அபிதா. கலாவுக்கு ஒன்றும் அவ்வளவாகப் புரியவில்லை. அந்த விஷயத்துப்

பேச்சை அவள் அதிகமாக ரசிக்கவும் இல்லை. பாதி இடிந்துவிட்டதுபோல் நிற்கும் ஒரு மொட்டைக் கோபுரத்தைக் காட்டி, ''ஏன் இந்தக் கோபுரம் மொட்டை யாகவே நின்று விட்டது அத்தை? இதற்கும் கோவிலுக்கும் சம்பந்தமே இல்லையே?'' என்று அவள் பேச்சை மாற்றினாள்.

''அது என்னவோ தெரியவில்லை... எனக்கு அந்த முரளியின் பேச்சு ஆறு என்றால் ஆறவேயில்லை. என்ன ஆணவம்! என்ன மமதை? நாக்கை அறுக்க வேண்டாமா? மரியாதை இல்லாமல்...!''

''அவன் அப்படித்தான். அவன் எல்லோரையும் தான் அழ வைக்கிறான். என்னைக் கூடத்தான் தினமும் அழமூட்டு கிறான். அதைச் சொன்னால் அம்மா என்னை வைகிறாள். அவனுக்கு யாருமே லட்சியம் கிடையாது. நேற்றுப் பெரிய அத்தையையே எதிர்த்துப் பேசினான். அம்மாகூட வருத்தப்பட்டாள்.''

''உங்கள் பெரிய அத்திம்பேரைச் சொல். எல்லாவற்றிற்கும் கம்மென்று மண் பிள்ளையார் மாதிரி இருக்கிறார்.''

''அம்மாவும் அதுதான் சொன்னாள் அன்று. அவருக்குப் பம்பாயில் வேலை செய்து கொடுக்கிறேன் என்று அப்பா அழைத்தால் கூட வரமாட்டேன் என்கிறாராம். 'எனக்கு எதற்கையா வேலை? அப்பா ஏதோ சம்பாதிக்கிறார். ஊரில் இந்த வேளைக்கு நிலமும் பயிரும் எதேஷ்டமாக இருக் கின்றன. அதைக் கவனித்து, கிட்டே இருந்து சாகுபடி செய்யாமல், விழுந்து விழுந்து எங்காவது போய் வேலை செய்வானேன்? இங்கே அபரிமிதமான செல்வத்தை எவனோ கொள்ளையடிக்க விட்டுவிட்டு, எங்கேயோ சென்று அலைவானேன்? இங்கே நிம்மதியாக இருப்பதை விட்டு

விட்டு, அங்கே உங்களைப் போலவே மூச்சு விடச் சுத்தமான காற்றுக்குக்கூட மோசமாய்ப் பெரிய நகரத்தில் இருக்கச் சொல்லுகிறீர்களாக்கும்!' என்று சொல்லிவிட்டார்.''

''நல்ல மனிதர்! ஆனால் அவர் சொல்வதும் நியாயந் தான். இங்கே இந்த அழகே வடிவான ஊரில், நிம்மதியாக, பிருந்தாவனத்தில் கண்ணன்போல் பாலும் தயிருமாக இருப்பதை விட்டுப் பட்டணத்தில் அலைவது என்றால் யாருக்குத்தான் மனம் வரும்?''

''உங்களுக்கு இந்தக் கதை தெரியுமா அத்தை? இந்த வீட்டை யாரோ நீங்கள் சொன்னது போலவே, கோகுலத்திற்கு ஒப்பிட்டார்களாம். ஜானகி மாமி வந்தவர்களுக்கெல்லாம் நிறையத் தயிரும் பாலும் கொடுப்பாளாம். அதனால்தான் முரளிக்கு இந்தப் பேராம். அப்பொழுது வீட்டில் மூன்று பசுக்களும் இரண்டு எருமைகளும் இருந்தனவாம்.''

முரளிதரன் பெயரை எடுத்ததுமே அபிதாவின் முகம் கடுத்தது. கலா அதைக் கண்டுவிட்டுப் பேச்சை மாற்ற முயன்றாள். இதற்குள் அங்கு தற்செயலாக வந்த அருணாசலம் அவர்களை அழைக்கவே அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

''நீங்கள் இரண்டு பேர்தான் வந்தீர்களா? சுவாமி தரிசனம் செய்த பிறகு வாருங்கள். நந்தவனத்தில் ஓர் அற்புதமான விக்கிரகம் இருக்கிறது; காண்பிக்கிறேன்.''

''இங்கேயே மூலஸ்தானத்திற்குப் பின்னால் பெரிய பிராகாரத்தில் ஒரு புத்தர் சிலை இருக்கிறது என்றீர்களே?'' என்று கேட்டாள் அபிதா.

''ஆம், அதையும் பார்க்கலாம்.''

கலாவும் அபிதாவும் சீக்கிரமாகச் சுவாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்தார்கள். அருணாசலம் அவர்களுக்காகத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தான்.

புத்த பிம்பம் வெறும் கல் உருவமாக இல்லை. கண் இமைகள் எந்தக் கணம் திறந்துவிடுமோ, புன் சிரிப்புத் தாண்டவமாடிய சிறு இதழ்கள் எப்பொழுது அகன்று அருள் மொழிகளை அருளுமோ என்று ஐயுறும்படி தெய்வ தேஜஸும், ஜீவனும் பெற்றிருந்தது அக் கல்வெட்டு. கலா மெய்ம்மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள். பக்கத்தில் ஒரு காமதேனுவின் சிலை. மடி, பால் கனம் தாங்காது கீழே இருக்கும் சிவலிங்கத்துக்குப் பால் அபிஷேகம் செய்து கொண்டிருந்தது. பசுவின் வாயில் புஷ்பக் கொத்து. அதன் முகத்தில் அமானுஷ்யமான திவ்விய தேஜஸ்.

பக்கத்தில் யாரோ ஒரு மாமி அந்த ஊரின் ஸ்தல புராணத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள். ஒரு பசு தினமும் வந்து அந்தச் சுயம்பு லிங்கத்திற்குப் பூஜை செய்யுமாம். பாலின் உஷ்ணம் தாங்காது அந்த லிங்கத்தில் கோடுகள் விழுந்து விட்டனவாம்.

இவ்விஷயங்கள் யாவும் கலாவுக்குப் புதுமையாக இருந்தன. அவள் வாய் மூடாமல் கேட்டுக் கொண்டு நின்றாள். கடைசியில் திரும்பிப் பார்த்தபோது, அபிதா அங்கு இல்லை. கலாவுக்கு முரளியின் சொற்கள் ஞாபகம் வந்தன. அவள் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே கோவில் கோபுர வாயிலை அடைந்தாள். அபிதா எங்கிருந்தோ ஓடி வந்து அங்கு அவளுடன் கலந்து கொண்டாள். அவள் ஒன்றும் சொல்லவில்லை; கலாவும் யாதும் கேட்கவில்லை. இருவரும் மௌனமாகவே வீடு வந்து சேர்ந்தனர். கலாவின் மனத்தில் மட்டும் முரளி சொன்னதற்கும், நடந்ததற்கும் இருந்த ஒற்றுமை என்னவோ செய்தது.

வீடு அடைந்ததும் இந்த விஷயத்தைத் தன் அம்மா விடமோ அத்தையிடமோ சொல்வோமா என்று போனாள்.

ஆனால் அவள் உள்ளத்தில் ஏதோ ஒன்று அது சரியல்ல என்று கூறி அவளை நிறுத்திவிட்டது. ஏதேதோ புத்துணர்ச்சிகளும், கேள்விகளும் மனத்தில் எழ, அவள் பேசாமல் குளத்தைப் பார்த்துத் திகைத்துக் கொண்டிருந்தாள்.

4. ஐ.ஸி.எஸ். பிள்ளை

''**வி**சாலம் இன்றைக்குப் பாலு வருகிறான். வண்டியை ரோடு முனைக்கு அனுப்ப வேண்டும். கோவிந்தனுக்குச் சாதம் போட்டு அவனை அனுப்பு'' என்று சொல்லிவிட்டு ஜகந்நாதன் வயல்களைப் பார்க்கச் சென்றுவிட்டார்.

ஜானகி மாமி தன் மகன் வருவதை எதிர் நோக்கி, ஏதேதோ ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தாள். ''அடி விசாலம், இந்த வீட்டைச் சற்று ஒழுங்காக வை. அவனுக்குத் தாறுமாறாக இருந்தால் பிடிக்காது. சீமைக்குப் போய் விட்டு வந்த பையன். எங்கள் பாலுவுக்குப் பட்டிக்காடு என்றால் பிடிக்காது'' என்று பெருமையாகக் கூறிக் கொண்டிருந்தாள்.

விசாலம் ஒருபடி பாலை அடுப்பில் வைத்துச் சுண்டக் காய்ச்சிக் கொண்டிருந்தாள். ''நீங்கள் இருங்கள் அம்மா, நான் வந்து எல்லாம் செய்கிறேன். மைத்துனருக்குத் திரட்டுப் பால் பிடிக்குமே என்று அடுப்பில் வைத்திருந்தேன். ஒரு கிளறு கிளறிவிட்டு வருகிறேன்'' என்று கூறியவாறே அங்கு வந்தாள்.

''எங்கே அவள், உன் ஓர்ப்படி?''

''மாடியில் கதை எழுதிக் கொண்டிருக்கிறாள். அவளிடம் சொல்லியிருக்கிறேன், வருவாள்.''

''இப்பொழுதுதானா கதை எழுதவும், காவியம் புனையவும் சமயம்? கீழே இறங்கி வரச் சொல்லடி.''

''இருக்கட்டுமே, அம்மா. அவளைக் கலைப்பானேன்?..... ஏ, கலா, இங்கே வா, சற்று இதைக் கிளறு.''

''இதோ வந்துவிட்டேன், அத்தை'' என்று ஓடி வந்தாள் கலா. ''அத்தை, பாலு என்கிறார்களே அந்த மாமா முழுப் பெயர் என்ன?'' என்று கேட்டாள்அவள்.

''பாலகோபால். அவர் சப்கலெக்டர் வேலை செய்கிறார். சீமைக்குப் போய்ட்டு வந்தவர். மிகவும் நாகரிகமாக இருப்பார்.''

கலாவை அந்தக் காரியத்தில் அங்கே விட்டுவிட்டு, விசாலாக்ஷி இன்னும் ஏதோ வேலை பார்க்கப் போய் விட்டாள். கலா தன் வேலையைக் கவனித்துக் கொண்டே, வரப்போகும் பாலு மாமாவை நினைத்துப் பலவிதக் கற்பனைகள் செய்துகொண்டே இருந்தாள். 'எல்லோரும் சொல்வதைப் பார்த்தால் அவர் மிகவும் பெரிய....' அத்துடன் நின்றது அவன் யோசனை. 'பெரிய என்ன' என்று அவளுக்குத் தோன்றவில்லை.

அபிதாவின் குரல் கேட்டுத்தான் கலாவின் சிந்தனைகள் கலைந்தன. அப்பொழுதுதான் அங்கு வந்த அபிதா, எல்லோரும் ஏதோ மும்முரமாகச் செய்வதைப் பார்த்து, ஆச்சரியத்துடன், ''நம்மாத்தில் இன்றைக்குக் கல்யாணமா என்ன? ஒரே அமளி துமளிப் படுகிறதே?'' என்று பரிகாசமாகக் கேட்டாள்.

''இல்லை, அத்தை. கலெக்டர் மாமா, பாலுமாமா, வரப்போகிறாராம். அதற்கு ஏற்பாடு பலமாக இருக்காதா? அவர் இங்கு வருவதே பெரிய பாக்கியமாம். எதுவும் மிகவும் சுத்தமாகவும், மேல் நாட்டு ரீதியிலும் இல்லாவிட்டால், அவர் இங்கே சாப்பிடக்கூட மாட்டாராம். முதலாவது அவருக்குப் பட்டிக்காடு என்றாலே பிடிக்காதாம். எத்தனையோ

வருடங்களுக்குப் பிறகு இப்பொழுதே அவர் மறுபடியும் இங்கு வருகிறாராம்.''

''அப்படியானால், நாம் எல்லோரும்கூட மேல் நாட்டாரைப் போல் கௌன் போட்டுக் கொண்டால்தான் அவர் நம்முடன் பேசுவாரோ?'' என்றாள் அபிதா, தன் மனத்திலுள்ள பரிகாச உணர்ச்சியை வெகு சிரமத்துடன் தன் குரலில் காட்டாமல்.

''போங்கள், அத்தை. உங்களுக்கே அப்படித்தான் ஏதாவது தோன்றும்!'' என்று கூறிச் சிரித்தாள், கலா.

''என்ன சிரிப்பு?'' என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தார்கள் கலாவின் பெற்றோர்கள், கமலாவும் ரகுநாதனும். அபிதா மரியாதைக்காகச் சற்று நகர்ந்து நின்றாள்.

''என்னடீ சிரிப்பு? எப்பொழுது பார்த்தாலும் அசடு மாதிரி என்ன சிரிப்பு வேண்டியிருக்கிறது, கலா?'' என்று பெண்ணைக் கடிந்தாள், கமலா.

''இல்லை, அம்மா, அத்தை சொல்கிறாள், வந்து, வந்து,..... நாமெல்லாம் கௌ...'' என்று முடிக்காமலேயே விழுந்து விழுந்து சிரித்தாள், கலா.

''அசடு! வாயில் வார்த்தையிருக்கும்போதே என்ன சிரிப்பு? எத்தனை தரம் சொன்னாலும் தெரியாவிட்டால் அப்புறம் எனக்குக் கோபம் வரும். அடுத்தாற் போல் சின்ன அத்தையைப் பார், அவள் சிரிக்கிறாளா?''

. ''நீங்கள் சொல்வது நன்றாகத்தான் இருக்கிறது!'' என்றாள் அபிதா. ''பத்தொன்பது வயசான எனக்கும், இந்தக் குழந்தைக்கும்தான் ஈடு காட்டுவார்கள் போல் இருக்கிறது?''

''அதுதானே'' என்று சேர்ந்து கொண்டார் ரகுநாதன். ''இவளே எப்பொழுதும் இப்படித்தான். குழந்தையை

அடக்கிக் கொண்டே இருப்பாள். கலா, நீ என்னம்மா செய்கிறாய்? அத்தை எங்கே?''

''அத்தை வீட்டை ஒழுங்குபடுத்தப் போயிருக்கிறாள். பாலு மாமா வருகிறாராம்.''

''ஓகோ, அதுதானா ரோடு முனையில் வண்டி நின்றது? நாங்கள் அதில் ஏறிக் கொண்டு வந்துவிட்டோம். மறுபடியும் போயிருக்கும். சரிதான்.''

''அப்பா, எனக்கு என்ன வாங்கி வந்திருக்கிறீர்கள்?''

''வா, காண்பிக்கிறேன்.''

★ ★ ★

பாலகோபால், ஐ.ஸி.எஸ்., உள்ளே பிரவேசிக்கும் முறையே தனிப்பட்டதாக இருந்தது. சலங்கை சங், சங் என்று ஒலிக்க, வீட்டு வாசலில் மாட்டு வண்டியில் வந்து இறங்குவது மிகவும் மானக்கேடான விஷயம் என்பதைப் பாலகோபால் உறுதியாக நம்பியவன். என்னவோ சந்தையில் சாமான் வந்து இறங்குவதுபோல் ஒரு மனிதன், அதிலும் ஒர கௌரவமான பேர்வழி, - அது மட்டுமா, ஒரு ஜில்லாவுக்கே அரசனாகத் திகழும் கலெக்டர் - புளி மூட்டையைப் போல் ஒரு மாட்டு வண்டியிலிருந்து கீழே குதிப்பது மிகவும் சகிக்கத் தகாத அவமானமாகத் தோன்றிற்று அவனுக்கு. ஊருக்குள் பிரவேசித்தவுடனே அவன் வண்டியைவிட்டு இறங்கி விட்டு அதிகாரமாக, ''போடா'' என்று வண்டிக்காரனை அனுப்பி விட்டு, பின்னால் மெதுவாக நடந்து வந்தான்.

மடிப்புக் கலையாத வெள்ளைக் கால் சட்டை, பளபளவென மின்னும் கறுப்புப் பூட்ஸ் மண்ணில் புதைந்துவர, ஒரு கை ஒரு சமயம் கோட்டு ஜேபியில் விடப்பட்டும், ஒரு சமயம் தலைக் கிராப்பைத் தடவியும் மாறி

மாறி வேலை செய்ய, மற்றொரு கரம் பிரத்தியேகமாகச் சிகரெட்டை ஏந்தும் பாவனையை மேற்கொண்டு அவன் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டு நின்றது. பால கோபால் மெதுவாக (அது அவன் வேண்டுமென்றே செய்ததோ,.அல்லது அவன் காலில் அணிந்திருந்த பூட்சுகள் தாராளமாக மண்ணை விழுங்கி விட்டதன் பயனோ, தெரியாது) நடந்து செல்லும் விஷயம் ஊர் முழுவதும் பரவி, எல்லோரும் வெளியே வந்து அவன் பவனியைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

'சுத்த மண்டூகங்கள். அறிவு, பண்பு எதுவும் அற்ற மூடங்கள்' என்று அவர்களை மனத்திற்குள் வைது கொண்டு, ஜானவாச ஊர்வலத்தில் நடக்கும் மாப்பிள்ளையின் நடையைக் கைப்பற்றியவனாய், அவன் வீட்டை நோக்கி நிதானமாக நடந்தான்.

அவன் வீட்டை அடைந்ததும், ஒரு பூகம்பம் ஏற்பட்ட அமர்க்களம் உண்டாயிற்று. அவனைக் குசலப் பிரச்னம் விசாரித்து, அவனுக்குச் சிற்றுண்டியும், காபியும் கொடுக்கும் போதே எல்லோருக்கும் ஒரு பயம், நடுக்கம் பிறகு அவனைச் சுற்றி, தாய், அண்ணன்மார்கள், தம்பி, கலா, ரகுநாதன், கமலா யாவரும் கூடி அவன் சொல்வதைக் கேட்டுக் கொண் டிருந்தார்கள். அவன் சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தான். பாலகோபாலனுக்குத் தன் பிரதாபத்தைப் பிரலாபிப்பதில் ஆனந்தம். மற்றவர்களுக்கு அதைக் கேட்க ஆர்வம். தனது வாக்கு வன்மையினாலேயே அவன் அவர்களுக்கு மேல் நாடுகளையும் வடக்குப் பிரதேசங்களையும் சித்தரித்துக் காண்பித்து விட முயன்றான்.

''வெளியூர்களுக்குப் போகவேண்டும், பத்துப் பேருடன் பேச வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு

விமோசனம். நம்மைப்போல் நம் கிராமங்களிலேயே இருந்து கொண்டு, 'கடல்போல் வீடு வீணாகிறது', 'நம்மூர்க் கோவிலின் அழகு உலகத்திலேயே கிடையாது' என்று பழங்கதை சொல்லிக் கொண்டிருந்தால் ஆகிவிட்டதா?''

ஜகந்நாதன் சிரித்தபடியே எல்லோரையும் சுற்றிப் பார்த்துவிட்டு, அருணாசலத்தின் முகத்தை நோக்கினார். அண்ணனும் தம்பியும் சங்கேதமாகக் கண்களைக் கலந்து கொண்டனர்: ஜகந்நாதன் ஏதோ தோன்றியவர்போல் அபிதாவின் முகத்தை நோக்கினார். அவள் ஒரு விநாடி மைத்துனனை வெட்டி விடுபவள்போல் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பாலுவின் கதைகள் எதுவும் அவளுக்கு ரசிக்கவில்லை போலும். அவள் உள்ளே சென்று விட்டாள். கலா அவ்விடம் ஓடி வந்து மெதுவாக, ''பாலு மாமா அழகாக இருக்கிறார், இல்லையா, அத்தை? ரொம்ப ஷோக்காக இருப்பார் போலிருக்கிறது!'' என்றாள். சுவரிலே மாட்டியிருக்கும் காலெண்டரைப் பார்ப்பதுபோல் பாவனை செய்து கொண்டு, அவர்கள் பேச்சைக் கவனித்தார் ஜகந்நாதன்.

''பிரமாத அழகு! படாடோபத்தைத் தவிர வேறு ஒன்றையும் காணோம். உலகத்தில் இல்லாத பெரிய தத்துவத்தை இவர்கண்டு பிடித்துச் சொல்லிவிட்டாராக்கும்! கலை உணர்ச்சியற்ற, கேவ்லம் பணமும் பதவியும்தவிர வேறு உணர்ச்சியே அற்ற மனிதர்கள். 'மனிதர்கள்' என்று பெயர் வேறு இவர்களுக்கு!'' என்று அபிதா கூறுவது ஜகந்நாதனின் செவிகளில் விழுந்தது.

'பாலுவின் பளபளப்பு ஒருவர் கண்ணில் படவே இல்லை போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டே அவர் மனத்திற்குள் சிரித்துக் கொண்டார்.

''பெண்களை வெளிநாட்டில் நடத்தும் தன்மை, அங்கே அவர்கள் முன்னேறியிருக்கும் திட்டம்..... இதெல்லாம் நான் சொன்னால்கூட உங்களுக்குப் புரியாது. திரும்பத் திரும்பக் குளத்திற்குப் போவதும், கோயிலில் எண்ணெய் தீபம் ஏற்றுவதுமே கதியென்று இருப்பதும், குறுகிய மனப்பான்மையும், அசட்டுத்தனமும் இங்கே மலிந்து கிடக்கின்றன. ஒரு வேடிக்கையா, உற்சாகமா, ஹாஸ்ய உணர்ச்சியா, தத்துவ மனப்பான்மையா, ஒன்றும் கிடையாது!''

பாலு சற்று நிறுத்தினான். அவன் மாத்திரம் ஒரே மூச்சில் எவ்வளவுதான் பேச முடியும்?

அதற்குள் அவனுடைய தாய் கொஞ்சம் திரட்டுப் பாலும், ஓமப் பொடியும் கொண்டு கொடுத்தாள். அவன் நிமிர்ந்து உட்கார்ந்து அவற்றை வாங்கிக் கொண்டான். அனைவரையும் ஒருமுறை பார்த்துவிட்டு, ''எல்லோரும் சாப்பிடலாமே?'' என்று அழைத்தான். உடனே விசாலாக்ஷி உள்ளே சென்று இன்னும் இரண்டு தட்டுக்களில் தன் அண்ணா ரகுநாதன், மைத்துனன் அருணாசலம் இருவர் முன்னிலை யிலும் பட்சணங்கள் கொண்டு வைத்தாள்.

''ஏன், நீங்களெல்லாம் சாப்பிட மாட்டீர்களா?'' என்று தன் மதனியைப் பார்த்துக் கேட்டான் பாலகோபாலன்.

விசாலம் சிரித்தபடியே பதில் சொல்லாமல் நின்றாள். அவன் மதனி கமலா, ''இல்லை, நாங்கள் பிறகு உள்ளே போய்ச் சாப்பிடுகிறோம்'' என்று பதிலளித்தாள்.

ஜகந்நாதன், தம் தம்பி தம்மைப் பார்ப்பதை நோக்கி, ''இல்லை, நான் இந்த நேரத்தில் ஒன்றும் சாப்பிடுவதில்லை'' என்றார். உடனே ஏதோ வேலையாக அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

பாலகோபாலன் மறுபடியும் ஆரம்பித்துவிட்டான்: ''இதுதான் நான் சொல்வது. இந்தக் குக்கிராமத்திலேயே

கூபஸ்த மண்டூகம் போல் இருப்பது மனிதனின் நோக்கத்தையே குறுகச் செய்துவிடுகிறது. தாராள மனப்பான்மை, சமூக மரியாதை ஓர் இழவும் கிடையாது. நாலுபேர் சாப்பிடும்போது நாமும் கூடச் சாப்பிடுவோமே என்ற மரியாதைகூட இல்லை. 'இந்த நேரத்தில் சாப்பிடுவ தில்லை' என்றால் என்ன அர்த்தம்? சாப்பிடுபவனெல்லாம் முட்டாள் என்பதோ? அதிகமான படிப்பில்லாவிட்டாலும், பத்து இடம் சுற்றினாலாவது ஒரு மனிதனுக்கு நல்ல 'பாலிஷ்' வருகிறது. இதோ பாரேன்; பெண்கள் நம் எதிரில் சாப்பிடமாட்டார்கள். அசடு வழிய உள்ளேஓட_வேண்டும். பார்ப்பதற்கு எவ்வளவு அநாகரிகமாக...."

"போதுமடா! கமலா மாமிக்கு ஒன்றும் தெரியாமல் போய் விடவில்லை. அவளும் பம்பாயில் சமூகத்தில் நிறைய வேலை செய்து நீ சொல்லும் நாகரிகத்திலேயே திளைத்து இருக்கிறாள். பிறந்தகத்துப் பெருமையை உடன் பிறந்தானி டம் சொல்லிக் கொண்டதுபோல் என்னவோ ஆரம்பித்து விட்டாயே? உன்னுடன் சகவாசந்தான் அவர்களுக்கு அநாகரிகமாகத் தோன்றியிருக்கலாம் அல்லவா?" என்று சொல்லிவிட்டு 'ஓ'வென்று சிரித்தான் அருணாசலம். மற்றவர் களும் அதில் பட்டும், படாததுமாகக் கலந்து கொள்ளவும், பாலுவும் வேறு வழியின்றி இளித்தான், மிகவும் ரசிப்பவன் போல். ஆனால் அவனுக்கு மனத்தில் சற்றுக் காரம்தான்.

"அப்படியானால், நான் சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்" என்று கூறி நகைத்தபடியே அவன் கமலாவை நோக்கினான்.

"அதற்கு ஒன்றும் அவசியமில்லை. இருந்தாலும் நாங்கள் அதை அங்கீகரித்துக் கொள்கிறோம்" என்று வேடிக்கையாகப் பதிலளித்தாள் கமலா.

எல்லோரும் ஒரே வாயாகச் சிரித்தார்கள்.

★ ★ ★

''முரளி, இந்தப் புஷ்பத்தைக் கொண்டு அபிதாவிடம் கொடேன். பிறகு கலாவை நான் கூப்பிட்டதாகச் சொல்'' என்று கூறினாள் விசாலாக்ஷி.

''எல்லாம் நீயேதான் கொடு, மன்னி. என்னால் முடியாது. அந்த மன்னியிடம் நான் கொண்டு கொடுத்தாலே, அவள் பார்க்கும் பார்வையில் அந்தப் புஷ்பங்கள் பொசுங்கி விடும். அத்துடன், கலாவுடனும் நான் பேசுவதில்லை. உனக்குத் தெரியாதோ?'' என்று பதிலளித்துவிட்டு, அங்கிருந்து அகன்றான் முரளி.

இருந்தாலும் விசாலாக்ஷி விடாமல் அவன் பின்னாலேயே சென்று, புஷ்பத்தை அவனிடமே கொடுத்து அபிதாவிடம் சேர்க்கும்படி சொன்னாள். வேலைக்காரி அரிசி நோன்ப வந்திருப்பதைப் பார்த்துவிட்டு, அவளைக் கவனிக்கச் சென்றாள்.

முரளி வேறு வழியில்லாமல் புஷ்பங்களை எடுத்துப் போனான். ஆனால் அங்கே அபிதாவைக் காணவில்லை. கலா மாத்திரமே தன் துணிமணிகளை மடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். முரளி பூக்களை அவளருகில் வைத்து விட்டு, மௌனமாக வெளியேறினான். கலா திரும்பி அவன் முகத்தைப் பார்த்தாள். ஆனால் கவனியாதவள்போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு, தன் வேலையில் ஈடுபட்டாள். அருகே விழுந்திருந்த ஒரு பத்திரிகையைக் கையிலெடுத்துப் புரட்ட ஆரம்பித்தான் முரளி. கலா எழுந்து செல்லும்போது அவனைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. அதற்கு இஷ்டமில்லாதவள்போல் அவள் சுற்றிச் சென்றாள். முரளி அவளைப் பார்த்தான். ஆனால் பேசாமல் எழுந்து போய் விட்டான். கலா அவனைக் கூப்பிட விரும்புபவள்போல் வாயைத் திறந்துவிட்டு, பிறகு மௌனத்தில் ஆழ்ந்தாள்.

அப்பொழுது அபிதா தன் கதை வந்திருக்கும் ஒரு பத்திரிகையை எடுத்துக் கொண்டு அங்கே வந்தாள். ''கலா, 'ஏழ்மையும் தாழ்மையும்' என்ற கதை வந்திருக்கிற்து, பார்த்தாயா? இந்தப் படத்தைப் பாரேன். உன் முகத்தைப் போலவே இருக்கிறதல்லவா?'' என்று வெகு ஆவலுடன் காண்பித்து விவரித்தாள்.

கலா அந்த அட்டைச் சித்திரத்தைப் பார்த்தபோது மிகவும் ஆச்சரியம் அடைந்தாள். ஆம், தன் முகத்தைப் போட்டோ பிடித்ததுபோல் வரையப்பட்டிருந்தது படம். இருவரும் வெகுநேரம் வரையில் கதையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அபிதா கலாவைப் பார்த்து, ''கலா, நீ பம்பாய்க்குப் போய்விட்டால் என்னை மறந்து விடுவாய் அல்லவா? நம் உறவெல்லாம் இன்னும் நான்கு மணி நேரம் தானே? நீ போய் விட்டால் எங்களிருவருக்கும் மிகவும் கஷ்டமாக இருக்கும்'' என்றாள் வாத்சல்யத்துடன்.

கலாவுக்கு, அந்தச் சொற்களைக் கேட்க விசனமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. இரண்டு மாத காலமாக இருந்துவிட்டு இப்பொழுது போகிறோமே என்ற வருத்தம். முரளி சொல்வதுபோல் அவர்கள் இருவருக்கும் கஷ்டமாக இருப்பது வேறு விஷயத்திற்காக என்று நினைக்கும்போது, கலாவிற்குச் சிரிப்பு வந்தது. தன்னைச் சாக்காகவும், துணை யாகவும், தூதாகவும் கொண்டு, அபிதாவும் அருணாசலமும் ஏற்படுத்திக் கொண்ட சந்திப்புக்கள் அவள் நினைவிற்கு வந்தன.

''மன்னி, உங்களை அம்மா கூப்பிடுகிறாள்'' என்று முரளி வந்து அழைத்தான்.

அபிதா கீழே இறங்கிச் சென்றவுடன், முரளியும் போய் விடுவானென்று எதிர்பார்த்தாள் கலா. ஆனால் அவன்

அவ்வாறு செய்யாமல் ஏதோ புத்தகங்களைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். கலா பலமுறை பேசுவதற்காக வாயெடுத்தாள். ஆனால் மூடிக்கொண்டு விட்டாள். முரளி எழுந்து சென்று, பூட்டப்பட்டிருந்த கலாவின் பெட்டியை ஏதோ அர்த்தமில்லாமல் தட்டிப்பார்த்தான்.

கலா ஊருக்குப் போவதற்குள் அவளுடன் சகஜமாகப் பேசி விடவேண்டும் என்றுதான் முரளியின் ஆவலும். ஆனாலும், என்றும் ஒருவருக்கும் கீழ்ப்படி.யாத அவனுக்கு இப்பொழுது ஒரு சிறு பெண்ணின் முன் தானே சென்று அடி பணிவதென்றால் கௌரவக் குறைவாக இருந்தது. அதிலும், கலாவிடம் அகப்பட்டுக் கொண்டால் லேசில் விட்டு விடுவாளா? இருந்தாலும், ஊருக்குப் போகும் சமயத்தில் ரகு மாமாவும், கமலா மாமியும்தான், அவளுடன் சண்டை போட்டுக் கொண்டதையும், பேசாமல் இருந்ததையும் அறிந்தால் என்ன நினைக்க மாட்டார்கள்? வீட்டிற்கு வந்த விருந்தினர்களை உபசரிக்கத் தெரியாத மூடம் எனறல்லவோ கருதுவார்கள்? முரளி கனைத்துக் கொண்டான். கலாவை ஓரக் கண்ணால் பார்த்தான். பேச வாயெடுத்தான். ஆனால் ஒன்றும் சப்தம் வெளிவரவில்லை.

கலாவும் யோசித்துக் கொண்டுதானிருந்தாள். அன்றொரு நாள் முரளி கூறிய சொற்கள் அவள் செவிகளில் ஒலித்தன. 'போ, போ, பைத்தியம்! அவர்கள் உன்னை ஏமாற்றிவிட்டு, பேசப் போய்விடுவார்கள். நீ அசடு வழிய விழித்துக் கொண்டு நிற்பாய்!' என்று அவன் சொன்னது அவளுக்கு நினைவு வரவும், தொண்டையில் துக்கம் அடைத்தது.

முரளி தன் விளையாட்டுத் தோழன்; வேடிக்கை வேடிக்கையாகப் பேசுவான், விளையாடுவான். இப்பொழுது

சில நாட்களாகத் தன்னுடன் பேசுவதையே நிறுத்திக் கொண்டுவிட்டான். அபிதாவின் எதிரிலே அவனைத் தான் அவமானப்படுத்திவிட்டதாக எண்ணி அவன் தன்னுடன் பேசாமலேயே இருந்துவிட்டான். தனக்கும் ரோஷம் வந்துவிட்டது. தானும் பேசாமலேயே பிகுவாக இருந்தாள்.

ஆனால், அன்று தான் ஊருக்குப் போய்விட வேண்டும் என்றதும், அவனுடன் சண்டையுடனேயே பிரிய மன மில்லை. இருந்தாலும், தானே போய்ப் பேசவும் அஞ்சின வளாய் விழித்துக் கொண்டிருந்தாள்.

அபிதா திரும்பி வந்து அவள் சிந்தனையைக் கலைத்தாள். ''கலா, நீ மறுபடியும் எப்பொழுது வருவாய்?'' என்று கேட்டாள்.

''இனி இரண்டு வருஷம் கழித்துத்தான். அப்பொழுது தான் அவள் அப்பாவுக்கு லீவு கிடைக்கும்'' என்று அந்தக் கேள்விக்கு முரளி பதில் சொன்னதும், திடுக்கிட்டவள்போல் நிமிர்ந்து நோக்கினாள் கலா. முரளி அவளைப் பார்க்க வில்லை. கீழே குனிந்தபடியே ஏதோ படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அருணாசலம் அந்த அறைக்கு வந்து தன் மேல் துண்டு ஒன்றை எடுத்துக் கொண்டு கீழே இறங்கலானான். பாதி மாடிப் படியில் நின்றவன், உரக்க, ''முரளி, சோப்புக் கொண்டுவரச் சொல்லடா'' என்றான். முரளி கலாவின் முகத்தைப் பார்த்தான். கலாவிற்குச் சிரிப்பு வந்துவிட்டது.

''அத்தை, நீங்கள் சோப்புக் கொண்டு கொடுக்க வேண்டுமாம், மாமாவுக்கு. அதை ஆரம்பித்து விட்டு, பிறகு ஞாபகம் வந்தாற் போல் முரளியைக் கூப்பிடுகிறார். ஏன், நேரே உங்களிடமே பேசிக் கூப்பிட்டால் நாங்கள் வேண்டாமென்கிறோமா? அல்லது, உங்கள் சங்கேத

சம்பாஷணைகளைத் தாங்கிச் செல்லத் தந்திக் கம்பிகளா, நாங்கள்?'' என்று கேட்டாள் கலா குறும்பாக.

அபிதா எதற்கும் பதிலளிக்காமல் சோப்புப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு போகப் போனாள். போகும் போது, ''போடி, போக்கிரிக் கழுதை!'' என்று செல்லமாக ஒரு அடைமொழி கொடுத்து விட்டுப் பறந்தோடினாள்.

''மன்னி என்னிடம் கொடுங்கள். என்னைத் தான் கொண்டு வரச்சொன்னான்'' என்று முரளி வேறு கத்தினான். கலாவும் அவனும் கலகலவென்று சிரித்தார்கள். அச் சிரிப்பில் இருவருக்கும் சமரசமாகிவிட்டது.

''என்ன கலா, நீ இன்றைக்கு ஊருக்குப் போகப் போகிறேன் என்று என்னிடம் சொன்னாயா?'' என்று கேட்டான் முரளி.

''நீதான் என்னுடன் பேசுவதே இல்லையே? நானே வலுவில் வந்து சொல்லிக் கொள்ள வேண்டுமோக்கும்! இஷ்டமில்லாதவர்களுடன் எனக்கென்ன பேச்சு?''

''நீ மட்டும் ரொம்பவும் ஒழுங்கோ? புதிதாக வந்த மன்னியுடன் சேர்ந்து கொண்டு, என்னைப் பார்த்துச் சிரித்தாயே?''

''நீ மட்டும்... சரி, சரி. மறுபடியும் எதற்குச் சண்டை? நான் உனக்குச் சொல்ல வேண்டுமென்றே இருந்தேன் - நான் அவர்களுடன் சேர்ந்ததற்கு நீ சொன்னாற்போலவே முக்கால்வாசி நேரமும் அசடு வழிய நின்று கொண்டுதான் இருந்தேன்.''

''நான் அப்பொழுதே சொன்னால் கேட்டாயா? வேண்டும்; இன்னும் நன்றாக வேண்டும், உனக்கு.''

''பார்த்தாயா, முரளி. நான் இன்றைக்கு ஊருக்குப் போய் விடுவேன்.''

''சரி, போகட்டும். ஓர் ஆட்டம் தாயக் கட்டம் ஆடலாம் வருகிறாயா?'' என்று முன் வந்தான் முரளி.

''ஓ!'' என்று சந்தோஷத்துடன் சம்மதித்தாள் கலா.

''போடா, மொண்டி ஆட்டம்!'', ''போடி, பொட்டை ஆட்டம்!'' என்ற சத்தங்கள் வெகு நேரம் வரையில் கேட்டுக் கொண்டே இருந்தன.

5. ''பேரப் பிள்ளையா?''

பாலகோபாலும் அருணாசலமும் சாயங்கால வேளையில் வெளியே உலாவச் சென்றார்கள். பாலகோபால் சொந்த ஊருக்கு வந்து வெகு நாட்களாகி விட்டதனால் ஒவ்வொன்றிலும் மாறுதல்களையும் புதுமைகளையும் கண்டான்.

''குளத்தில் இவ்வளவு நிறைய ஜலம் இருந்து நான் பார்த்ததே இல்லை. குளத்தைச் சுற்றிப் பூச்செடிகள் இருந்தனவே, இப்பொழுது இல்லையே? அப்பொழுது அந்தக் கிணற்றிலிருந்து ஜலம் பாய்ச்சுவார்கள், இப்பொழுது நிறைய நீர் இருக்கவே, செடியே வேண்டாம் என்று விட்டு விட்டார்களோ!''

''போடா. மொத்தத்தில் உனக்கு இந்த ஊரைக் கண்டாலே ஏளனம். உன்னுடன் யார் பேசுவார்கள்?'' என்றான் அருணாசலம். ''நம் ஊரில் இருக்கும் அழகும் சிற்பச் செல்வமும் எத்தகையன என்று உனக்கெப்படித் தெரியும் - தெரியப் போகிறது? செவிடன் காதில் சங்கு ஊதினாற் போல்தான். இங்கே புதைந்து கிடக்கும் சிற்பங்களை வெட்டி எடுத்துப் பார்த்தால் நம் பழைய நாட்டுச் சரித்திரத்தைக் கண்கூடாகக் காணலாம்.''

''ஆமாம், நீ கண்டெடுப்பாய், உன் மனைவி அதைக் கொண்டு கற்பனைகள் புனைவாள். இரண்டு பேருமாகச் சேர்ந்து ஒரு கயிறு திரித்து விடுவீர்கள். எவனோ ஒரு பைத்தியக்காரன் அதைப் பிரசுரிப்பான். நம் ஜனத்தைப் போன்ற வேலையற்றவர்கள் அதை வாங்கிப் படிப்பார்கள். அத்துடன் தீர்ந்து விட்டது கதை'' என்றுரைத்து ஓர் ஏளனப் புன்னகை பூத்தான் பாலு.

''எப்படி முடிந்து விடும்? அதை நீ கண்டனை செய்வாய். முரளி விற்றுக் கொண்டு வந்து விடுவான். எனக் கென்னடா குறைவு- - இதே விஷயத்தை அமெரிக்காவில் யாராவது ஒருத்தி செய்திருந்தால் உனக்கு மிகவும் ஆச்சரியமாகவும், பெருமையாகவும் இருந்திருக்கும். உன் போன்ற பிரகிருதிகள் இருக்கும் வரை நமக்குக் குறைவே இல்லை!''

''சரி, அதைப்பற்றி என்ன இப்பொழுது? - முரளி என்ன செய்கிறான்?''

''என்ன செய்கிறான். ஊர் திரிகிறான். படிப்பு என்றால் அவனுக்குக் கசக்கிறது! வீட்டிலுள்ளவர்களை எதிர்த்துப் பேசி வாயாடிக் கொண்டு சுற்றி வருகிறான். இதற்கு அண்ணாவும் மன்னியும் செல்லம் வேறு.''

''இதேதடா புதிய வீடு? பிரமாதமாக இருக்கிறதே கட்டிடம்!''

''அதுதானடா நம் வைத்தியநாதையர் வீடு. யுத்தத்தில் மிலிடரி காண்ட்ராக்ட் வேலை செய்து பணம் குவித்து வைத்திருக்கிறார். எல்லாப் பாங்கிகளிலும் வைத்தும் மீதி நிறையக் கிடக்கிறதாம். எல்லாம் வெள்ளி ரூபாய்களாம். அதனால் உறை கட்டி நெல்லுக்குப் பதில் கொட்டி வைத்திருக்கிறாராம்.''

''ஹாஸ்யம் இருக்கட்டும். நிஜமாகவே அவருக்கு நிறைய ஆஸ்தி இருக்கிறதா?''

''ஹா, ஹா, நமது பாலகோபால் அவர்களுக்கு என்ன அபிமானம் வந்துவிட்டது. திடீரென்று!'' என்று கேட்டுச் சிரித்தான் அருணாசலம். ''காசு என்றால் என்ன கௌரவம்! அவருக்கு ஒரு பெண் இருக்கிறாள்; ஒரே பெண்தான். அந்த நெல் குதிர் போலவே அழகாக இருப்பாள். முகம் வெந்நீர்த் தவலை அடிபோல் பளபளவென்று மின்னுகிறது. அவர்கள் வீட்டில் எண்ணெய் வாங்குவதே இல்லையாம். அவள் முகத்தில் வழிவதை எடுத்து வைக்கப் பாத்திரம் இல்லாமல் தவிக்கிறார்களாம். பஸ்ட் பாரம் கிராஜுவேட்! (First Form Graduate) அவருக்குக் கூட என் கலெக்டர் தம்பி மேல் ஒரு கண் இருப்பதாகக் கேள்வி. பேசாமல் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளடா, அந்தப் பணம் அத்தனையும் உன்னுடையதுதான்.''

பாலகோபால் தன் அண்ணன் கூறுவதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அந்த வீட்டின் புது மெருகைக் கவனித்தபடியே மௌனமாக நடந்தான்.

மேலே ஒரு பலகணியின் கதவு திறந்தது. கறுத்த, கொழுத்த ஓர் உருவம், வைரங்கள் மின்ன எட்டிப் பார்த்தது. அருணாசலம் அதைக் கவனிக்காததுபோல் கவனித்தான். ''சீதையின் சுயம்வரம் தோற்றுவிட்டது. பேஷ், 'யாரோ, இவர் யாரோ?' என்று பாடவேண்டியதுதான் பாக்கி'' என்று கேலி செய்தான்.

பாலுவும் அந்தப் பெண்ணைக் கவனித்தான். ''அவளா? சே, இருக்காது. யாரோ வேலைக்காப் பெண் குப்பை போடக் கதவைத் திறந்திருக்கிறது. நம்மைப் பார்த்துவிட்டு, தயங்கி நின்றது என்றுதான் நான் நினைக்கிறேன்'' என்றான்.

''அப்படியே நினைத்துக் கொள், தம்பி. நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அவள்தான் அந்தப் பெண். வைரம் மின்னுகிறதே, தெரியவில்லையா? அமாவாசை இரவில் பிளட் லைட் (Flood Light) போட்டதுபோல்?''

''உனக்கென்ன வேலை? ஏதாவது இப்படித்தான் சொல்லிக் கொண்டிருப்பாய். எந்தப் பெண்தான் எல்லா விதத்திலும் நன்றாக இருக்கிறாள்? உன் மனைவி அழகாக இருக்கிறாள், படித்தும் இருக்கிறாள் என்று உனக்குக் கர்வம். அவள் எடுத்ததற்கெல்லாம் தொட்டாற் சிணுங்கிபோல் கண்ணீர் வடிப்பதும், முகத்தைத் திருப்பிக் கொள்வதும் ஒன்றும் குறைச்சலில்லை. மன்னி-''

''மன்னியைப் பற்றிப் பேசுவது நமக்கு அழகில்லையடா'' என்று பட்டென்று பேச்சை நிறுத்திவிட்டான் அருணாசலம்.

★ ★ ★

''அடியே!''

''என்ன, 'அடியே, நுனியே?'' விஷயத்தைச் சொல்லாமல் என்னவோ அடியேவாம், நுனியேவாம்!''

ராமநாதையர் கையிலிருந்த புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் காதில் தம் தர்ம பத்தினியின் சொற்கள் விழுந்தாற்போல் தெரியவில்லை. உள்ளுக்குள் ஏதோ முனகியபடியே ராகம் போட்டவாறு அவர் தம் படிப்பில் ஈடுபட்டிருந்தார். ஒரு பென்சிலால் அவ்வப்போது கீற்றுக்கள் வரைந்தபடியே இருந்தார்.

ஜானகியம்மாள் பொறுமையை இழந்தாள். தான் சலித்துக் கொண்டிருந்த மாவை எடுத்துக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

''அடி, ஊம், ஊம்? என்ன சொன்னாய்?'' என்று கேட்டார் ராமநாதையர்.

''நான் சொன்னேன், 'சுரைக்காய்க்கு உப்பில்லை' என்று'' என்று கூறிக்கொண்டே மறுபடியும் வந்தாள் ஜானகியம்மாள். ''என்னவோ பேச ஆரம்பிக்கிறீர்கள், அப்படியே கீதையில் ஆழ்ந்து போய்விடுகிறீர்களே? மறுபடியும் என்னவோ, தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவர் போல், 'ஆ, ஆ' என்று ஆகாயத்திலிருந்து இறங்கி வந்தாற் போல், ஏதோ காணாத நிதியைக் கண்டவர்போல் தவிக்கிறீர்கள். எல்லாம் நாடகத்தைப் போலத்தான் இருக்கிறது. எனக்கு வேலை தலைக்கு மேல் இருக்கிறது.''

''என்னடி, என்னவோ அடுக்கிக் கொண்டே போகிறாய்? வாயைத் திறந்து சொல்லேன். எந்த இழவையாவது சொல்லி அழுதால்தானே தெரியும்?''

''ஓர் இழவையும் அழவேண்டாம், கருமத்தையும் எடுக்க வேண்டாம். நான் என்னத்தைக் கண்டேன். இதோ உட்கார்ந்து கொண்டு மாவு சலிக்கிறேன். நீங்களேதான் என்னவோ 'அடியே' என்று அடிவயிற்றிலிருந்து அன்பொழுகக் கூப்பிட்டீர்கள். 'என்ன?' என்று கேட்டால் அது ஒரு தப்பாகிவிட்டதா? நன்றாகத்தான் இருக்கிறது. இந்த உலகத்தில் வாயைத் திறந்தாலே தப்புபோல் இருக்கிறது: நன்றா... ஆ... க ஆச்சு!'' பட்டென்று பட்டுக் கத்தரித்தது போல் முடிவு; தோள் பட்டையில் குறி தவறாத ஓர் இடி. அதில்தான் என்ன பாவம்!

''நானா கூப்பிட்டேன்! நானா? - உனக்கு ஏதோ பைத்தியந்தான் பிடித்திருக்கிறது. நான் இதோ அரை நாழிகையாகப் படித்துக் கொண்டிருக்கிறேன். நீ இங்கே வந்ததுகூட எனக்குத் தெரியாது. என்னவோ சொல்லிக் கொண்டே போகிறாய். மொத்தத்தில் பார்த்தால், உனக்கு.....''

''சரி, சரி, அப்படியானால் ரொம்ப சரி. நீங்கள் என்னைக் கூப்பிடவே இல்லையல்லவா? தபால்காரன் வந்தான். கையிலே ஒரு கவரை வைத்துப் படித்துக் கொண்டு இருந்தீர்கள். அப்பொழுது தான் அடுத்தாத்துக் கல்யாணம் கூடப் போனான். கூப்பிடவே இல்லையாம்!..... அதற்கப்புறம் பேச்சென்ன இருக்கிறது?''

''ஊம்?'' தம் புருவத்தை நெளித்தார் ராமநாதையர். ''ஆமாண்டி, இதை அப்பவே கேட்டுத் தொலைத்திருக்கக் கூடாதா? அந்தக் கடிதம் ஜகம் எழுதியிருக்கிறான். அதற்குத்தான் கூப்பிட்டேன்.''

''நீங்கள்தாம் கூப்பிடவே இல்லையே?'

''அது சரிதானடி, இதோ பார். அட கர்மமே. அதை எங்கேயோ வைத்துத் தொலைத்து விட்டேன்.'' ராமநாதையர் கையிலிருந்த புத்தகத்தைப் பிடித்துக் கொண்டே சற்று முற்றும் தேடினார். ஜானகியம்மாள் அந்தப் புத்தகத்தைக் கவனிக்கும் போது அதில் வெளியே கடிதம் நீட்டிக் கொண்டிருந்தது தெரிந்தது.

''புத்தகத்திலேயே வைத்துக் கொண்டு, ஊர் பூராவும் தேடியாகி விட்டதாக்கும்!'' என்றாள் அவள்.

''ஓகோ, இதோ பார்'' என்று எடுத்துக் கொடுத்தார், அவர்.

ஜானகியம்மாள் கடிதத்தின் தாள்களை ஒருமுறை திருப்பிப் பார்த்தாள். ''பெரிய ராமாயணமாக எழுதியிருக்கிறானே?'' என்று கூறிவிட்டுப் படிக்க ஆரம்பித்தாள். இதற்குள் தன் கணவர் பகவத் கீதை சாரத்தில் கழுத்து மட்டும் இறங்கிவிட்டிருப்பதைக்கண்டு, அவளால் ஒருமுறை உதட்டைப் பிதுக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் மறு கணம் ஜகந்நாதனின் கடிதம் அவளை அதில் ஆழ்ந்து போகச் செய்துவிட்டது.

'அன்புள்ள அம்மாவுக்கு' என்று முதல் வரி படித்ததும், அவள், 'என் கடிதத்தை நீங்கள் ஏன் பிரித்தீர்கள்?' என்று கேட்போமா என்று வாயெடுத்தாள். ஆனால் அவரைத் தட்டி எழுப்பிக் கேட்டு அறிவது என்பது லேசான காரியமில்லை. மிக்க சிரமம் என்று பேசாமல் இருந்துவிட்டாள். மேலும் படிக்கலானாள்.

'உங்கள் கடிதம் கிடைத்தது. அருணாசலமும் அபிதாவும் இல்லாதது வீடு வெறிச்சென்று இருக்கிறது. நீங்கள் ஊருக்குக் கிளம்பிச் சென்ற பிறகு ஒரு மாதம் அருணாசலம் இங்கு இருந்தான். அவனைப் பார்த்ததிலிருந்து அபிதாவைச் சீக்கிரமே அழைத்து வந்துவிட்டால் நல்லது என்று தோன்றுகிறது. அவன் ஊருக்குப் போனதிலிருந்து எனக்கு அதிகமாகக் கடிதம் வரவில்லை. பிறகு எத்தனையோ மாதங்கள் கழித்து ஒன்று வந்தது. ஹோட்டல் சாப்பாடு தனக்குப் படிக்கவில்லையாம். அதனால் உடம்புக்கு எவ்வளவோ கெடுதல் இருக்கிறதாம்! ஜுரம் வந்து விட்டதாம். அதற்குப் பதில் நான், உன்னையோ அல்லது விசாலத்தையோ அவனுக்குச் சகாயமாக அனுப்புவதாக எழுதினேன். அதற்குப் பதில் இல்லை. நீயே ஊகித்துக்கொள்.

'முரளியைப் பற்றி நீங்கள் கேட்பதெல்லாம் எனக்குப் புரியவில்லை. அவன் குழந்தைதானே? அவன் படிப்பில் முதலில் தேறாவிட்டாலும் இதுவரை ஒருதரம் கூடப் பரீட்சையில் தவறவில்லை. அவன் மிகவும் புத்திசாலி. அதற்கென்ன செய்வது, விளையாட்டுப் புத்தி அவனை இன்னும் விடவில்லை. அவன் திருடினான் என்று சொல்வதெல்லாம் வீண் புரளி. அதைக் கேட்டதிலிருந்து

விசாலம் மிகவும் மனம் நோகிறாள். அவனை நாம் யாருமே புரிந்து கொள்ளவில்லையாம். நீங்கள் அவன் விஷயத்தில் கவலைப்படவேண்டாம். அவனை ஒன்றும் கடிந்து எழுதவேண்டாம் என்று அப்பாவிடமும் சொல். நயத்தால் நடப்பதுபோல் பயத்தால் நடக்காது, அவன் விஷயத்தில். அவனிடம் நான் பேசுகிறேன்.

'இங்கு மற்ற விஷயங்கள் யாவும் நன்றாகவே இருக்கின்றன. துவரை முளை கட்டியாகிவிட்டது. உங்களுக்குப் பருப்பு அனுப்புவது எப்படி என்றுதான் தெரியவில்லை. ஏதாவது வழி பார்க்கிறேன்.

'விசாலத்தை அனுப்பும்படி ரகு எழுதியிருக்கிறான். அடுத்த மாதம் அப்பாவுக்கு விடுமுறை ஆரம்பித்து விடுகிறபடியால், நீங்கள் இருவரும் வந்துவிட்டால் அவள் போய்விட்டு வரலாம்.

'குழந்தை நடராஜன் எப்படியிருக்கிறான்? அவனுடைய பிறந்த நாளை இங்கேயே நடத்தவேண்டுமென்று விசாலம் ஆசைப்படுகிறாள். இங்கே அவன் பெயர் கொண்ட ஈசுவரனுக்கும் அடுத்த மாதம் உற்சவம்.

'நேற்று நம் வைத்தியநாதையர் இங்கே வந்திருந்தார். நம் பாலுவுக்கு அவர் பெண்ணைக் கொடுக்க இஷ்டப் படுவதாய்ப் பிரஸ்தாபித்தார். பாலுவின் ஜாதகத்தைக் கேட்டார். என்னிடம் இல்லையே என்றேன். அவரே அப்பாவுக்கு எழுதி இருந்தாராம். அப்பா தம்மிடம் இல்லையென்றும், என்னைக் கேட்கும்படியாகவும் பதில் எழுதி இருந்தாராம். அந்தக் கடிதமும் கொண்டு வந்திருந்தார் அவர். இது விஷயமாக எனக்கு எழுதுவதற்கு அப்பா மறுத்து விட்டார் போலும். பிறகு எப்படியோ சமாளித்துக் கொண்டு, தன் உத்தரவின்றி யாருக்கும் ஜாதகத்தைக் கொடுக்கக்

கூடாதென்றும், என்னிடம் அது இருப்பதே யாருக்கும் தெரியக்கூடாதென்றும் பாலு என்னைக் கேட்டுக்கொண் டிருந்ததாகப் புளுகி மழுப்பினேன். ஜாதகத்தைக் கொடுக் கட்டுமா? மறு தபாலிலேயே பாலுவைக் கேட்டுத் தெரிந்து கொண்டு கொடுப்பதாகச்சொல்லி இருக்கிறேன். பாலு என்னிடம் அவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருப்ப தும், நான் அதைக் காப்பாற்றுவதும் எனக்கே விந்தையாக இருக்கிறது! படித்த மேதாவி அவன் எங்கே, நான் எங்கே? உடனே பதில் போடவும். அநாவசியமாக அக்கிரகாரத்து மனஸ்தாபம் வந்துவிடப் போகிறதே என்று பயப்படுகிறேன்.

நமஸ்காரம்.
ஜகந்நாதன்.'

ஒரே மூச்சில் உட்கார்ந்து படித்து முடித்தாள் ஜானகியம்மாள். சற்று நேரம் நிசப்தம் நிலவியது. அதைக் கிழித்துக் கொண்டு குழந்தை நடராஜனின் குரல் எழுப்பியது.

''இது ஒன்று; கடைசிக் காலத்துக்கு ஒரு கர்மம்!'' என்று முணு முணுத்துக் கொண்டே எழுந்தாள் ஜானகியம்மாள். தாயின் வருகையைக் கண்டதுமே மந்திரம் போட்டதுபோல் அழுகையை நிறுத்திக் கொண்டு தொட்டிலின் கயிற்றைப் பிடித்துக் கொண்டு எழுந்து நின்றான் குழந்தை. அன்னை வந்து தன்னை எடுத்துக் கொண்டதுமே அவள் முகத்தைப் பார்த்துப் பார்த்துச் சிரித்தான் பாலன்.

''அட படவா! சிரிக்க வேறு தெரிந்துவிட்டதா, உனக்கு? திருட்டுத் தனத்திலே குறைவில்லை. என் குரலைக் கேட்டு அழுகையை நிறுத்திக் கொள்ளுகிறது. பாருங்களேன்! அதன் கள்ளத் தனத்திலே.... விழ!''

''ஊம்! என்ன சொன்னாய், ஹ?'' என்று ராமநாதையர் கேட்டுத் தெரிந்து கொள்வதற்குள் யாரோ ஒருவர் உள்ளே நுழைந்தார்.

''என்ன ஐயா சௌக்கியந்தானே, யார், குழந்தை? பேரப் பிள்ளையாக்கும். அதுதான் அம்மாமிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. இப்படித்தானே உலக இயல்பு!''

வந்தவர் வார்த்தைக்குச் சளைத்தவராகத் தெரிய வில்லை. மடை திறந்தாற்போல் இன்னும் ஏதேதோ அவர் சொல்லிக் கொண்டே போயிருப்பார். ஆனால் அப்பொழுது தான் அவர் வரவை உணர்ந்த ராமநாதையர் குறுக்கிட்டார்.

''வாங்கோ, யாரு, வாங்கோ, வாங்கோ, சுவாமிகளே, வாருங்கள். அடேயப்பா, எத்தனை நாட்களாகிவிட்டன, ஊம்? சம்சாரம் எல்லோரும் சௌக்கியந்தானே?''

வந்தவர் அந்த ஊர் அணைக்கட்டு ஓவர்சியர் சங்கரன். ராமநாதையர் நினைத்துக் கொண்டிருந்தது தாலூகா ஆபீஸ் குமாஸ்தா பரமேசுவரன். நுட்பமான இந்தச் சங்கர - பரமேசுவர வித்தியாசம் வெளிப்படையாகப் பிரசுரமாவதற் குள்ளாகவே ஜானகியம்மாள் உதவிக்கு வந்துவிட்டாள்.

''போதும் எனக்கு! அவரைப் போய்ச் சம்சாரம் சௌக்கியமா என்று கேட்கிறீர்களே?'' என்று கணவரை அடக்கிவிட்டு, வந்தவரை உபசரிக்கத் தொடங்கினாள். ''என்ன, உங்கள் அணைக்கட்டை வந்து பார்க்க எனக்கு இன்னும் ஒழியவில்லை பாருங்கள். இவர் ஏதோ பள்ளிக் கூடத்துப் பசங்களுடன் உல்லாசமாக வந்து விட்டார்...''

மெல்ல, வந்தவர் யாரென்று ஜாடையாகக் காண்பித்து விட்டு அவ்விடத்தை விட்டகன்றாள் ஜானகியம்மாள். ராமநாதையர் ஞாபக மறதி படைத்தவரே தவிர, அவ்வளவுகூட விஷயம் தெரியாதவரா?

''என்ன, மாமா?'' என்றார் சங்கரன்.

''என்னவோ, உங்கள் மாமி அடுக்கிக் கொண்டே போகிறாளே என்று பார்க்கிறேன். நான் சொன்னது என்னவோ

பிசகு போலவும், தான் என்னவோ திருத்திவிட்டாற் போலவும்! நான் என்ன கேட்டேன்? உங்கள் சம்சாரமெல்லாம் சௌக்கியமா என்று கேட்டேன். சம்சாரம் என்றால் மனைவி என்றுதானோ அர்த்தம்? அவருக்குக் கட்டின பெண்டாட்டி ஒருத்தி இல்லையே தவிர, குடும்பம் ஏதாவது குறைவோ? ஒரு கிழப் பாட்டி, அப்பா, அம்மா, சின்னஞ்சிறு தம்பிகள், தங்கைகள் - இன்னும் கூறப்போனால் சற்றும் குறைச்சலில்லாமல் ஓர் எருமை மாடும் பசுவும் கூடத்தான் இருக்கின்றன!' மனைவி சென்ற திக்கை நோக்கியவாறு ஒரு வியாக்கியானமே கொடுத்துவிட்டார் ராமநாதையர்.

''நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான் மாமா. நீங்கள் பாஷையைக் கரைத்துப் புகட்டும் வேலையில் இருப்பவர். மாமிக்கு அதெல்லாம் என்ன தெரியப் போகிறது? சரி. எல்லோரும் சௌக்கியந்தானே?''

''ஆகா.''

குழந்தை பாலைக் குடித்துவிட்டுத் தவழ்ந்துகொண்டே வந்து தகப்பனாரின் மடியில் ஏறிக் கொண்டான்.

''குழந்தை யார்? பேரனா?'' என்று விட்டதை மீண்டும் பிடித்துக் கொண்டார் சங்கரன்.

''இல்லை இல்லை. என் பிள்ளைதான். இன்னும் பேரன் பேத்தி பிறக்கவில்லை.''

நடராஜன் கையையும் காலையும் ஆட்டிச் சங்கரனுடன் விளையாட ஆரம்பித்துவிட்டான்.

''தெரியாமல் கேட்டுவிட்டேன் ஸார். நீங்கள் ஒன்றும் நினைத்துக் கொள்ளக்கூடாது'' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் சங்கரன்.

''அதனாலென்ன, பரவாயில்லை. எங்கள் ஊர் சுவாமியின் பெயர்தான் இவனுக்கு வைத்திருக்கிறது. என்

மூத்த பிள்ளை கூட இன்று எழுதி இருக்கிறான். அடுத்த மாதம் இவன் பிறந்த நாளை ஊரில் சிறப்பாக நடத்தவேண்டுமாம். போகலாமென்றுதான் இருக்கிறோம்.''

இதைக் கேட்டதும் அடுத்த அறையிலிருந்து ஜானகியம்மாள் பளார் பளார் என்று தன் நெற்றியில் உள்ளங் கையால் இரண்டு அறை போட்டுக் கொண்டாள். ஏற்கனவே, குழந்தையுடன்தான் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்ததைச் சங்கரன் கவனித்துவிட்டதே அவளுக்கு வெட்கமாக இருந்தது. மேலும் அவருடைய கேள்வியும், ராமநாதையர் சகஜமாக அளிக்கும் பதிலும் அவள் அவமானத்தை அதிகப்படுத்தின.

'இந்த மனிதரையும் ஒரு பிறவியாக ஈசுவரன் சிருஷ்டித்தானே! அவனைச் சொல்!' என்று அண்ட சராசரங்களையெல்லாம் படைத்த அந்தக் கடவுளையே அவள் ஒரு போடு போட்டாள்.

மனத்தில் எந்தவிதமான எண்ணங்கள் புரட்சி செய்தாலும், எவ்வெவ் விதமான உணர்ச்சிகள் அலை மோதினாலும், வீட்டைத் தேடி வந்தவர்களை உபசரிப்பது இல்லாளின் முதற் கடமையல்லவா? பல்லைக் கடித்து, புருவத்தை நெளித்து, சங்கரனையும் சற்றுக் கடுமையாகத் தாக்கினாலுங்கூட, 'இவனுக்கு வந்த காலம் என்னடீ, 'பேரனா?' என்று வாய் கூசாமல் கேட்கிறானே! இவன் வீட்டில் நண்டும் சுண்டும், தம்பியும், தங்கையும் இல்லையோ?' என்று அவள் மனம் முரண்டாலுங்கூட, இவையனைத்தும் சமையலறைக்குள்ளேயே முடிவடைந்து விட்டன. வெளியே வரும்போது அவள் முகத்தில் புன்சிரிப்பும், வாயில் அன்பான சொற்களுமே இருந்தன.

''இந்தாருங்கள், கொஞ்சம் காபியும் தோசையும் சாப்பிடுங்கள்'' என்று மனமார உபசரித்தாள் ஜானகியம்மாள். சங்கரன், ''எதற்கு மாமி?'' என்ற போதிலும் அவள்விடவில்லை.

6. "முரளி எங்கே?"

"நான் அப்பொழுதே சொன்னால் கேட்கமாட்டேன் என்றீர்களே, இப்பொழுது என்ன பதில் சொல்லப் போகிறீர்கள் அப்பாவுக்கு? நாளைக் காலை விடிந்தால் அவர்கள் வந்துவிடுவார்களே!" என்று விசாலாக்ஷி தன் கணவரை ஏசிக் கொண்டு நின்றாள். ஜகந்நாதன் குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தார்.

"ஒரு பிள்ளையின் சமாசாரத்தைப் பெற்றோர்களுக்குத் தெரியாமல் வைப்பதென்று உங்களுக்குத் தோன்றிற்றே!" என்று மேலும் கூறினாள் விசாலாக்ஷி.

"நீதானே, 'அவன் ஒன்றும் தப்பு வழிக்குப் போக வில்லை; அவனை வையாதீர்கள்; நல்லதனமாகச் சொன்னால் அவன் திருந்தி விடுவான்' என்றாய்?"

"ஆமாம், சொல்லத்தான் சொன்னேன். நானும் அவனிடம் நல்லதனமாகப் பேசினதில் எவ்வளவோ சமர்த்தாகத்தான் இருந்தான். நீங்கள் அன்றைக்கு இருந்த கோபத்தில் அடித்துவிடுவீர்கள் போலிருந்தது. அவன் மனம் முறிந்துவிட்டிருக்கும். பிறகு அவனைத் திருத்தவே முடியாது."

"உன் வார்த்தையைக் கேட்டுத்தான் அன்றைக்கு நான் அப்பாவுக்குக் கடிதம் எழுதாமல் இருந்தேன். இப்பொழுது அப்பாவுக்குத் தெரியப்படுத்தாதது என் தப்பு என்கிறாய்."

"தப்பு, தப்பில்லை - என் பேரிலும் தான் தப்பு, உங்கள் பேரிலும்தான் தவறு. இப்பொழுதுகூட என்னால் நம்பமுடிய வில்லை. அவன் எங்கும் தப்புத்தண்டாவில் அகப்பட்டுக் கொள்ளமாட்டான்."

இப்படியே இருவரும், ஒருவரையொருவர் நிந்தித்துக் கொள்வதும், பரஸ்பரம் சமாதானம் செய்து கொள்வதுமாகக் காலங் கழித்தனரே தவிர, மனத்தில் கவலை சற்றும் குறையவில்லை. நேரமாகிக் கொண்டே வந்தது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஜகந்நாதன் உள்ளத்தையும் தலையையும் பிய்த்துக் கொண்டார்.

முரளி வீட்டை விட்டுப் போய் மூன்று நாட்கள் ஆகியும் ஒன்றும் சேதியே தெரியவில்லை. ஊரில் விசாரிப்போம் என்றாலோ, மிகவும் சங்கடமாக இருந்தது. ஊரார் தங்கள் வீட்டுப் பிள்ளை 'தத்தாரி, அப்படி, இப்படி' என்று ஒன்றை ஆயிரமாக்கித் தூற்றி விடுவார்கள். பட்டணத்துக்குச் சென்று நோக்குவோம் என்றால், யாரைக் கேட்பது, எங்கே தேடுவது என்றே தெரியவில்லை. பள்ளிக்கூடத்திலும் யாரும் இல்லை, கதவு பூட்டிக் கிடந்தது. விடுமுறை விட்டு மூன்று நாட்களாகிவிட்டிருந்தன. போலீஸ் ஸ்டேஷனில் எழுதி வைக்க அச்சமாக இருந்தது. ஜகந்நாதனும், விசாலமும் அக்கம் பக்கம் வீடுகளில், உறவினர் இல்லங்களில் சென்று ஜாடைமாடையாக விசாரித்துத் துப்பறிய முயன்றார்கள். ஒன்றும் பலிக்கவில்லை.

பகவானை நம்பிக்கொண்டு, அவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, சும்மா உட்கார்ந்திருக்க மனம் இடம் கொடுக்கிறதா? தாய், தகப்பனார் வேறு அடுத்த நாள் வந்து விடுவார்கள். அவர்கள் கேட்டால், என்ன பதில் கூறுவது என்று தெரியவில்லை. தங்கள் பாதுகாப்பில் விடப்பட்டிருந்த பிள்ளையை அதிகப்பிரசங்கியாக விட்டு விட்டீர்களே என்று கோபிப்பார்களோ என்ற பயம் வேறு அவர்கள் உள்ளத்தை உறுத்தியது. அவன் பால் இன்னும் சற்றுக் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டுமோ என்ற ஐயமும் வேறு தோன்றி அவர்களைப் பைத்தியமாக அடித்தது.

'இந்த விசாலம் தான் இதற்கு முக்கிய காரணம். 'அப்பா, அம்மாவை விட்டுத் தனியாக இருக்கும் குழந்தை அவன்' என்று அவனுக்குத் தலைக்கு மீறிச் செல்லம் கொடுத்து விட்டாள். இப்பொழுது அவளா அநுபவிக்கிறாள்? நானல்லவோ படவேண்டியிருக்கிறது?' என்று தம் மனைவிமீது முழுப் பழியையும் சுமத்த முயன்றார் ஜகந்நாதன். மனித சுபாவத்திற்கு, தன் பேரில் இருக்கும் குற்றத்தைச் சுமக்க வேண்டுமே என்ற அவதியில், கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் பிறர் மீது அப்பிழையைத் தள்ளிவிட எளிதில் மனம் துணிந்து விடுகிறது. ஆனால் ஜகந்நாதன் விவேகி யல்லவா? அடுத்த கணம், தம் மனத்திலும் கூட எண்ணிக் கொண்ட அக்குற்றச்சாட்டு எவ்வளவு அழகற்றது என்பதை அவர் உணர்ந்தார். அந்தக் கவலையிலும், அவர் உதடுகள் லேசாகப் புன்முறுவல் பூத்தன.

இந்த ஊமை நாடகத்தைக் கவனிக்கும் நிலையில் விசாலாக்ஷி இல்லை. அவள் பித்துப் பிடித்தவள்போல் பூஜையண்டை உட்கார்ந்து கொண்டு கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டாள். குல தெய்வமான திருத்தணிகை முருகனுக்கு மஞ்சள் துணியில் ஒரு ரூபாய் முடிந்து வைத்தாள். முரளியை அழைத்துக் கொண்டு ஆடி கிருத்திகைக்கு மலைக்கு வருவதாக வாக்குக் கொடுத்து ஆண்டவனுக்கு ஆசை காட்டினாள்.

''முருகா, வேலாயுதம், என்னைச் சோதிக்காதே.''

சதிபதிகள் இருந்த நிலையில், அவள் மனத்தில் அதிக வேதனை இருந்ததா, அல்லது அவள் கணவர் உள்ளம் தான் அதிகம் நைந்ததா என்று அறிய முடியவில்லை. கொந்தளிக் கும் உள்ளத்துடனே இருவரும் யோசனையில் ஆழ்ந்திருந்தனர்.

'இவர் தாம் இப்படி அவனைத் தலைக்குமேல் தூக்கி வைத்துக் கொண்டு குட்டிச் சுவராக ஆக்கிவிட்டார். நான் வந்த

புதிதில், அவனை நான் என்ன சொன்னாலும், அவனைப் பற்றி என்ன கூறினாலும், 'யோசித்துச் செய், விசாலி; உன் வயிற்றில் பிறந்த குழந்தையை எப்படி நடத்துவாயோ அப்படிச் செய். அம்மா இருந்திருந்தால் எப்படிச் செய்வாளோ, அதற்கு ஒன்றும் பங்கம் இருக்கக் கூடாது' என்று சொல்லிச் சொல்லித் தான் அவர் என்னைச் சுத்தப் பைத்தியமாக ஆக்கிவிட்டார். என்ன இருந்தாலும் அவனை நான் கண்டிக்க முடியுமா? பிள்ளையார் கோவிலைப் பெருக்கலாம், மெழுகலாம்...'

விசாலாக்ஷி தன்னைக் குற்றத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றாள். தன்னிடமும், தன் கணவரிடமும் இருந்த 'குற்றம்' அன்புதான் என்று அவள் அறியவில்லையோ?

''வரட்டும் சொல்கிறேன், உதை உதையென்று பிய்த்துத் தள்ளி விடுகிறேன். கழுதையை!'' என்று உறுமினார் ஜகந்நாதன்.

''சே, சே, வந்ததும் வராததுமாக அவனை ஒன்றும் சொல்லாதீர்கள். பாவம், குழந்தை, எங்கு அலைந்துவிட்டு வருகிறானோ, உங்களிடந்தான் அதிகாரம் இருக்கிறதென்று ஆரம்பித்து விடவேண்டாம். அப்புறம் அவனைப் பார்க்கவே முடியாது.''

''போதும், போதும், உன் கரிசனம்! உன் பேச்சைக் கேட்டுத்தான் இந்தக் கதி வந்தது.''

''இல்லாவிட்டால், நீங்கள் மிகவும் 'கடி'யில் வைத்திருந்தீர்களாக்கும்? கட்டுப்பாடு இல்லாமல் விட்டு விட்டு...? நான் இப்பொழுது என்ன பதில் சொல்லப் போகிறேன் அம்மாவுக்கு? 'இப்படித்தான் ஒரு பொம்ம னாட்டி குழந்தையைத் தெருவில் விடுவாயோ?' என்று என்னைக் கேட்பார்களா, உங்களைக் கேட்பார்களா?''

''சரி, சரி, முன்னால் அவன் திரும்பி வந்து சேரட்டும்; பிறகு நம் சண்டைகள் இருக்கட்டும்.''

அந்த வார்த்தையைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் மௌனத்தில் ஆழ்ந்தனர். அவர்கள் உள்ளத்தில் கவலை வந்து மூடிக் கொண்டது. வாசலுக்கும் உள்ளுக்கும் திக்கு, திசை தெரியாமல் திரிந்தார்கள். ஒரு நிமிஷம் கடப்பது ஒரு யுகமாகப் பட்டது அவர்களுக்கு.

ஓர் ஆள் வந்து அவர்கள் முன் நின்றான். ஜகந்நாதன் அவனை விளித்து, மெதுவான குரலில் விசாரித்தார். ''என்னடா, வீராசாமி, ஏதாவது தெரிந்ததா?''

வீராசாமி மௌனமாக நின்றான். குனிந்த தலை நிமிராமலேயே அவன் கண்களை மட்டும் உயர்த்தி அவர்கள் முகத்தைப் பார்ப்பதும், திருஷ்டியைத் திருப்பிக் கொள்வது மாக இருந்தான். கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்ட திருடனைப்போல் இருந்தது அவன் போக்கு.

''ஐயோ, முரளி!'' என்று உரக்க இரைய ஆரம்பித்த விசாலாக்ஷியைச் சட்டென்று வாயைப் பொத்தினார் ஜகந்நாதன்.

''பேசாமலிரு!'' என்று மனைவியை அவர் அடக்கின போது அவர் கண்களில் கோபச் சுவாலை வீசியது. ''என்ன வீராசாமி, சட்டென்று சொல். எதுவானாலும் பரவாயில்லை. ஏதாவது புலன் கிடைத்ததா? அவனைப் பார்த்தாயா? சீக்கிரம் சொல், நேரமாக்காதே'' என்றார்.

அவர் கவலையில் பேசியது வீராசாமியின் தயக்கத்தை அதிகப்படுத்தி விட்டது. பேசாமலிருக்கவும் அவனுக்குப் பயமாக இருந்தது.

''சாமி, பத்துப் பசங்களாக மகாபலிபுரம் போனாங் களாம். அங்கே சமுத்திரத்திலே குளிக்கப் போனபோது ஒரு பையன் இறங்கக் கூடாத இடத்தில் இறங்கி விட்டானாம். அவன் முகம் நசுங்கிவிட்டது. பார்த்தால்.....'' என்று

கூறுவதற்குள், அவனுக்குத் தொண்டை அடைத்தது. கண்களிலிருந்து மலமலவென்று நீர் பெருகிற்று.

ஜகந்நாதன் முகம் பேயறைந்தாற்போல் வெளிறி விட்டது. அவர் தலையைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்து விட்டார். அவர் செவிகளில் சமுத்திரம் அறைவதுபோல் இரைச்சல் கேட்டது. மூளையோ துடைப்பம் போட்டுப் பெருக்கி விட்டதுபோல் சூன்யமாக இருந்தது. பார்வையற்ற திருஷ்டியுடன் அவர் வெறித்து நோக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

விசாலாக்ஷிதான் சற்று சுய நிதானத்துடன் இருந்தாள். ''என்ன உடை போட்டிருக்கிறது அந்தப் பையனுக்கு - கவனித்தாயா?'' என்று அவள் திகிலுடன் கேட்டாள்.

''மஞ்சள் கரை வேட்டி கட்டியிருக்கிறது. அவ்வளவு தான்.''

''ஐயோ, முரளி!'' என்று ஓவென்று அலறினாள் விசாலாக்ஷி. ''ஐயோ, அவன் அன்றைக்கு மஞ்சள்கரை வேஷ்டிதானே கட்டிக் கொண்டிருந்தான்? ஐயோ, நான் என்ன செய்வேன்! முருகா, உனக்குக் கண்ணில்லையா? அப்பனே, என் வயிற்றில் என்னவோ செய்கிறதே! என்னவோ சங்கடம்...''

மரம் வெட்டிச் சாய்த்தாற்போல் விழுந்துவிட்டாள் விசாலாக்ஷி. ஜகந்நாதன் அவளை மூர்ச்சையிலிருந்து தெளிவிக்க முயன்றார். அவருக்கே கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. மனோபலத்தினால் தம்மைச் சமாளித்துக் கொள்ள முயன்றார்.

''வீரா, அந்த உடலை எங்கே கொண்டு போட்டிருக்கிறார்கள்?''..

''பக்கத்துக் குப்பத்திலே. ஆனால் இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் போலீஸ் வந்து விடுவார்களாம்.''

கண்ணைத் திறந்தாள் விசாலாக்ஷி. அவள் காதில் 'போலீஸ்' என்று விழுந்ததும், திகிலடைந்தவளாய் எழுந்து உட்கார்ந்தாள். ஜகந்நாதன் இப்பொழுது மிகவும் மெதுவாக வும் கண்டிப்பாகவும் பேச ஆரம்பித்தார்.

''விசாலி, நீ அநாவசியமாகக் கலவரப்படக் கூடாது. வீண் கலாட்டா பண்ணக்கூடாது. தெரியும்போது தெரிந்துவிட்டுப் போகட்டும். அதுவரை யார் கேட்டாலும் சாரணப் படையில் சேர்ந்து உல்லாசப் பிரயாணம் போயிருப்ப தாகச் சொல். பகவான் இருக்கிறான். பிறப்பும், இறப்பும் நம் கையில் இல்லை. ஊரில் ஒன்றும் எட்டக்கூடாது. தெரிகிறதா? நீ சாதாரணமாக இருக்க வேண்டும். நாங்கள் போய்ப் பார்த்துவிட்டு வருகிறோம்.''

'உம், உம்' என்று தலையை ஆட்டினாளே தவிர, பாதி விஷயம் அவளைத் தாண்டி எங்கோ சென்றது. ஜகந்நாதனும் வீராசாமியும் போய் வெகு நேரம் கழித்துத்தான் அவளுக்குச் சுய நினைவு வந்தது.

தலையை வாரிப் பின்னிக்கொண்டு, புஷ்பத்தை வைத்துக் கொண்டாள் அவள். வாசலில் விளக்கேற்றி விட்டு, பூஜையிடத்திலும், கூடத்திலும் குத்துவிளக்கை ஏற்றி வைத்தாள். கடவுளின் முன் சென்று நமஸ்கரித்து விட்டு முற்றத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். கறந்த பால் குவளையுடன்கிடந்தது. அடுப்பில் பூனைதூங்கிற்று. எழுந்து கரியடுப்பைப் பற்ற வைத்துவிட்டு, பாலைக் காய்ச்ச ஆரம்பித்தாள்.

'திருத்தணிகை வெற்றிவேல் முருகா! என் வயிற்றுத் தீயை தணியச் செய்யப்பா. எங்கள் வயிற்றில் பாலை ஊற்று'

என்று மனனம் செய்தவாறே அவள் அடுப்பை விசிற ஆரம்பித்தாள். கணவனின் கட்டளைக்கு உட்பட்டு அவள் உடல் அமைதியாக இருந்ததே தவிர., மனம் தலை விரித்தாடியது. உள்ளே புயல் வீச, வெளியே நிர்மலமாகக் காட்டிக் கொள்ள அரும்பாடு பட்டாள் விசாலாக்ஷி. அந்தப் போராட்டத்தினால் அவள் உடல் ஜ்வரம் வந்ததுபோல் கணகணத்தது.

''அம்மா'' என்று கூப்பிட்டவாறே, வேலைக்காரி வந்து உட்கார்ந்தாள். அவள் கையில் இரண்டு புடலங்காய்கள் இருந்தன.

''உம்.''

''அம்மா, இந்தக் காயை அறுத்துக் கொண்டு வந்தேன். ஏம்மா, என்னவோ கம்மென்று உட்கார்ந்து இருக்கிறாயே?''

''ஒன்றுமில்லையடி. தனியாக உட்கார்ந்திருக்கவே, சாயங்கால நேரமாயிற்றேயென்று ஏதோ சாமி பேரில் சுலோகம் சொல்லிக் கொண்டிருந்தேன்'' என்றாள் விசாலாக்ஷி. அவள் உடல் சிலிர்த்தது.

''ஏம்மா, அப்படித் தூக்கிப் போடுதே!''

''எனக்கு அப்படித்தான் இருக்கிறது இப்பொழுதெல்லாம்.''

''முரளி ஐயா இருந்தால் இரண்டு பேரும் ஏதாவது வம்பு பண்ணிக்கிட்டு இருப்பீங்க. அது இல்லாமே வீடே வெறிச்சினு இருக்குது அம்மா.''

உடலுக்குள்ளே ஒரு குரங்கு புகுந்துகொண்டு ஆட்டினாற் போல் விசாலாக்ஷியின் தேகம் ஒரு குலுங்கு குலுங்கிற்று.

''என்னம்மா, இப்படி எடுத்துப் போடுதே? உனக்கு ஜுரம்தான் வரப்போகுது. இதுக்குத்தான் சீக்கிரமே ஆத்தா வீட்டுக்குப் போகவேண்டும் என்கிறது. நாங்களானா பத்து மாசம் முடியவும் வேலை செய்வோம்; உடம்புக்கு ஒண்ணும் செய்யாது. இது முரட்டு தேகம்.''

மெல்லச் சிரிப்பதுபோல் முகத்தைக் கோணிக் கொண்டாள் விசாலாக்ஷி. வேலைக்காரி முரளியைப் பற்றிப் பிரஸ்தாபித்ததும் அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அவளது உடல் நிலைமையில் எவ்வித ஹானியும் செய்திருக்கலாம். விசாலாக்ஷி சிரமத்துடன் சமாளித்துக் கொண்டு, பொதுவாக ஊரில் வரப்போகும் தெப்ப உற்சவத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள். வேலைக்காரியும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டு எழுந்தாள்.

''நான் போய்விட்டு வரேன் அம்மா. பிள்ளைகளுக்குச் சோறு போடவேண்டும். ஐயா வந்தூடமாட்டாரு?'' என்று கூறிவிட்டு அவள் போய்விட்டாள்.

அவள் போனதே ஒரு பெரிய பளு நீங்கினதுபோல் பெருமூச்சு விட்டாள் விசாலாக்ஷி. ஆனால் தனிமையில் உட்கார்ந்திருக்கும்போது இருட்டியிருக்கும் மூலைகளிலும், ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னாலும் முரளியின் முகம் எட்டிப் பார்ப்பது போலவும், சில சமயம் தன் அருகில் அவன் உடல் கிடப்பது போலவும் முகம் மட்டும் மூடியிருப்பது போலவும் பிரமை தோன்றி அவளைப் பயமுறுத்தியது.

அவள் எழுந்து வாசலில் சென்று உட்கார்ந்து கொண்டாள். குளம் நிலவு வெளிச்சத்தில் மிகவும் அமைதியாக இருந்தது. பால் போன்ற நிலாவில் குளித்த குளம், கடற் காற்றின் சீண்டுதலைக் கண்டு நாணிக் கோணுவது போல் கண்ணைச் சிமிட்டிற்று. அப்பொழுது ஓரிரண்டு தாரகைகள்

குளத்தில் விழுந்து விளையாடின. எழுந்து நின்றால் சந்திரனின் பிம்பமும் சில சமயம் தெரிந்தது; சில சமயம் தெரியவில்லை.

கல்லிழைத்த ராக்கடி வாங்கி வந்த அன்று, ஐந்து வயதாக இருந்த கலா, அதைத் தன் பாவாடைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு, கொஞ்சம் காண்பிப்பதும், பிறகு பார்த்துப் பார்த்து மூடிக் கொள்வதுமாக விளையாடியது விசாலாக்ஷியின் கண்முன் தோன்றியது. குளமும் ராக்கடி போன்ற சந்திர பிம்பத்தைத் தன் அலை மடிப்புக்களில் மறைத்துக் கொண்டு விளையாடுகிறதோ என்று அவள் நினைத்தாள்.

'கலா - கலாவுக்கு முரளியைப் பற்றித் தெரிந்தால் - இரண்டும் விளையாடும், சண்டை பிடித்துக் கொள்ளும். இனிமேல் கலா வரும்போது முரளி இருப்.....'

''மாமி, உங்களைக் கேட்டு இட்லித் தவலை வாங்கி வரச் சொன்னாள் அம்மா'' என்று ஒரு பெண் கேட்டது, விசாலாக்ஷியின் சிந்தனைகளை அறுத்து எறிந்தது.

''வா அம்மா, கொடுக்கிறேன்'' என்றாள் விசாலாக்ஷி. அவளுக்குத் தனியாக உள்ளே போகவும் பயமாக இருந்தது. போகும்போதும் வரும்போதும் யாரோ பின்னால் வருவது - போன்ற பிரமை விடவில்லை.

அந்தப் பெண்ணும் உடனே போய்விடவில்லை. ''மாமி, சமாசாரத்தைக் கேட்டீர்களா? யாரோ பையன்களாம், குளிக்கப் போனார்களாம், அதிலே ஒரு பையன் போகவே போய்விட்டானாம். மாமாவும்கூடப் போயிருக்காளாமே? எங்கள் அப்பா கூடப் போயிருக்கிறார். காலம் அப்படிக் கெட்டுக் கிடக்கிறது. ஏன் மாமி, உங்கள் முரளி எங்கே?'' என்று அவள் வளவளவென்று பேசினாள்.

விசாலாக்ஷி தான் உட்கார்ந்திருந்த வாசற்படியை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டாள். பல்லைக் கடித்துக் கொண்டிருந்ததில் நடுவில் உதடு அகப்பட்டுக் கொண்டு கொஞ்சம் ரத்தமும் வந்துவிட்டது போலும். வாய் எல்லாம் உப்புக்கரித்தது. 'இந்தப் பெண் இட்டிலித் தவலையைச் சாக்கு வைத்துக் கொண்டு புலன் விசாரிக்க வந்ததோ? வம்பர் மகா சபைக்கு விஷயம் சேமிக்க வந்ததோ? ஒரே மூச்சில் அந்த விபத்தைச் சொல்லி, இவர் போனதையும் பிரஸ்தாபிப்பா னேன்? காலம் கெட்டுக் கிடப்பதற்கும், முரளி வீட்டில் இல்லாததற்கும் முடிச்சப் போடுவானேன்? இருட்டிப் போன பிறகு ஆரம்பித்து எப்பொழுது இட்டிலி வார்ப்பார்கள்? எல்லாம் வெறும் சூழ்ச்சியோ? நம் மனம் இப்படிப் புண் பட்டுக் கொண்டிருக்க, இவர்கள் வேறு வந்து அதைக் குத்திக் கிளறிப் பார்க்க வேண்டுமா?'

தன் நைந்த மனத்தில் தோன்றிய ஆயிரம் சந்தேகங்களை உந்தித் தள்ளிவிட்டு, ''ஏண்டி லலிதா, இத்தனை நாழிகைக்கு மேலா உங்கள் அம்மா இட்டிலி வார்க்கப் போகிறாள்?'' என்று அந்தப் பெண்ணைக் கேட்டபோது, விசாலாக்ஷியின் செவிகளுக்குத் தன் குரலில் விஷம் தோய்ந்திருப்பதாகத் தோன்றிற்று. அதில் சற்றுச் சந்தோஷப்பட்டாள்.

''இல்லை மாமி, எங்கள் மாமா ஊரிலிருந்து வந்திருக் கிறார். அவர் நாளைக்கு விடியற்காலமே போய்விடுவாராம். அதற்காகத்தான் இப்பொழுதே வாங்கி வரச் சொன்னாள்.''

அந்தப் பெண் இரண்டு படி இறங்கிவிட்டுத் தயங்கி நின்றாள். சவுக்குத் தோப்பு வழியை நோக்கிக் கொண்டே, ''ஏன் மாமி, அவர்கள் இன்னும் வரவில்லையே, இங்கேயே கொண்டு வந்து விடுவார்கள் இல்லையா?'' என்றாள்.

சாவதானமாகத்தான் கேட்டாள் அச்சிறுமி. ஆனால், அதுவரை அடக்கிக் கொண்டிருந்த விசாலாக்ஷி, தன் கண்களின் வழியாகக் குபுகுபு வென்று பொங்கி வந்த கண்ணீரை அடக்க மாட்டாமல் தேம்பினாள்.

''மாமி, மாமி, ஏன் மாமி அழுகிறீர்கள்?''

மறுகணம் சமாளித்துக் கொண்டு விட்டாள் விசாலாக்ஷி. ''ஒன்றுமில்லை அம்மா. அந்தப் பையனின் தாய் யாரோ, தகப்பன் யாரோ என்று நினைக்கும்போது என்னால் தாங்க முடியவில்லை'' என்றாள்.

அந்தப் பெண் போய்விட்டாள். விசாலாக்ஷி மறுபடியும் சந்தேகமும் பயமும், பீதியும், பக்தியும், ஆசையும், நிராசையும் கலந்து, புரண்டு குழம்பும் உள்ளத்துடன் கணவனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

கடவுள் அவள் பொறுமையை வெகு நேரம் சோதிக்கவில்லை. ஜகந்நாதனும் வீராசாமியும் சீக்கிரமே வந்து விட்டார்கள். தன் ஆவலை அடக்கிக் கொண்டு, விசாலாக்ஷி அமைதியாய் உள்ளே முன் சென்றாள். அவர்களும் பேசாமல் பின் தொடர்ந்தார்கள். ரேழிக் கதவை முன் ஜாக்கிரதையாகச் சாத்திவிட்டு, கூடத்தை அடைந்தார்கள்.

''என்ன, என்ன ஆச்சுது? அவன் இல்லையே?'' என்று தன் கணவனின் தோளைப் பிடித்து உலுக்கியவாறே கேட்டாள் விசாலாக்ஷி.

''விசாலி, நான் ஒரு சுத்த உதவாக்கரை. பேடி. சரியாகச் சொல்லதத் தெரியவில்லை எனக்கு. ஒரு சமயம் பார்த்தால் அவனைப் போலவே இருக்கிறது. ஒரு சமயம் பார்த்தால் இல்லை போல் இருக்கிறது. இதற்குக் காரணம் என் மனத்தில் போராடும் திகிலும், ஆசையும் தானோ என்னவோ? சொல்ல முடியவில்லை.''

''கூடப் போன பிள்ளைகள் என்ன ஆனார்கள்?''

''எல்லாம் சிட்டுக் குருவிகள் போல் ஓடிவிட்டனவாம். ஒரு பையன் மாத்திரம் கூடவே வந்திருக்கிறான். ஆனால் குப்பத்துச் செம்படவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. சித்தப் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருக்கிறான். மரத்தில் செதுக்கின பதுமைபோல் இருக்கிறான். யாரோ சிலர் அந்த உடல் தங்கள் குழந்தைதான் என்று ஓவென்று அலறுகிறார்கள். எனக்குச் சந்தேகமாக இருந்தது. அவர்களிடம், 'அவசரப் படாதீர்கள். உங்கள் பையன்தானா என்று நிச்சயமாகத் தெரியாமல் ஒன்றும் தீர்மானம் செய்யாதீர்கள்' என்று எச்சரித்தேன், பாவி. அவர்கள் பந்துக்களாம். பிள்ளையின் பெற்றோருக்கு ஆள் போக்கி யிருக்கிறார்கள்.''

விசாலாக்ஷிக்கு அவர் சொல்வது ஒன்றும் புரியவில்லை. பிரமை பிடித்தவள் போல் கேட்டுக் கொண்டிருந்தாள். வீராசாமி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அது வேறு அரைகுறையாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

''என்னவோ சொல்லிக் கொண்டு வந்து விட்டீர்களே? என்னை அங்கே விடமாட்டார்களா? கூடப் பிறந்த பிறப்பு கூடவா அடையாளம் தெரியவில்லை? இப்படியும் உண்டா?'' என்று அரற்றிவிட்டாள் விசாலாக்ஷி.

''எப்படிப் போயிற்றோ அந்தப் பிராணன்?'' என்று தனக்குள் முணுமுணுத்தார் ஜகந்நாதன்.

''அந்தத் தலைமயிர் சுற்றிக் கொண்டிராவிட்டால் உயிர் அவ்வளவு சீக்கிரம் போயிருக்காதுங்க'' என்று ஏதோ சொன்னான் வீராசாமி.

தலையை அழுத்திக் கொள்வதும், வயிற்றைப் பிய்த்துக் கொள்வதுமாக ஏதோ செய்துகொண்டிருந்த விசாலாக்ஷி, திடீரென்று வெறிகொண்டவள் போல் எழுந்தாள்.

''கேட்டீர்களா? அவன் சொன்னதைக் கேட்டீர்களா? தலைமயிர் கழுத்தில் சுற்றிக் கொண்டது என்றானே? நம் முரளிக்குத் தலைமயிர் ஏது? அவன் கிராப் தலைமயிர் கழுத்துவரை கூட எட்டாதே?'' என்று அவள் கத்தவும், ஜகந்நாதன் பித்துப் பிடித்தவர்போல் அவள் முதுகைக் கட்டிக் கொண்டார்.

''பகவானே, பகவானே! பிழைத்தோம். பிழைத்தோம். முரளி, முரளி!'' என்று இருவரும் ஏதோ உளறிக்கொண்டு, ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டனர்.

வீராசாமி மெதுவாகக் கதவைச் சாத்திக் கொண்டு தெருவை எட்டிவிட்டான். அவனுடைய நயனங்களிலும் நீர் நிரம்பி வழிந்தோடியது. இப்பொழுது அது ஆனந்த பாஷ்பம் ஆனபடியால், அவன் கால்கள் வேகமாக நடந்தன. கால்களில் கட்டிவிட்டிருந்த இரும்புக் குண்டுகள் தகர்ந்து விழுந்து விட்டன போல, அவன் ஓடோடியும் சென்று வீடு சேர்ந்தான். தன் எஜமானுக்கு நேரவிருந்த விபத்து நீங்கிவிட்டது.

துக்கம், துக்கம்தானே? யாருக்காக இருந்தாலும், புத்திர சோகம் சகிக்க முடியாதது தானல்லவா? அப்படி இருக்க, தன் வரையில் துக்கம் நேரவில்லை என்றதும், மனிதனின் மனம் மகிழ்ச்சி அடைவானேன்? தன்னுடையது என்றதும் உலகமே இருண்டு விட்டது போன்ற அதிர்ச்சி ஏற்படுவானேன்? அது பிறருடையது என்று அறிந்தவுடன் உள்ளம் குதூகலம் அடைவானேன்? பிறர் துக்கத்தைக் கண்டு சந்தோஷிக்கா விட்டாலும் கேவலம் சில விநாடிகளுக்கான அநுதாபத்துடன் நின்றுவிடுகிறது. இதுவும் மனித இயல்பின் சிக்கலான தத்துவங்களில் ஒன்று போலும்.

இரண்டு மூன்று வேளைகளாகச் சாப்பாட்டின் நினைவே இல்லாமலிருந்த ஜகந்நாதனுக்கும், விசாலாக்ஷிக்

கும் இப்பொழுது பசி கிளம்பி விட்டது. வீடு அலங்கோல மாகக் கிடந்தது வேறு கண்ணை உறுத்தியது. முதல் நாள் சமைத்த பண்டம் வீணாவதைக்கண்டு மனம் வருந்தியது. விசாலாக்ஷி வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

மனம் சுறுசுறுப்பாக இருந்தாலும், உடல் சோர்வுற்றிருந் தது. மனத்தில் கவலை விட்டதும், சரீரத்தைவிட்டுச் சக்தி ஓடிவிட்டது. ஜகந்நாதன் சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு அப்படியே உறங்கிவிட்டார்.

மணக்க மணக்க மிளகு ரசம் சாதம் சமைத்து வைத்து விட்டு, கணவரைச் சாப்பிட அழைக்க வந்த விசாலாக்ஷி, அவர் நித்திரையைக் கண்டு சிரித்தாள். ''நன்றாகத்தான் இருக்கிறது. என்னதான் கவலை விட்டுவிட்டாலும், இப்படி நிம்மதியாகக் குறட்டைவிட ஆரம்பித்து விட்டீர்களே! நான் மட்டும் தனியாக விழித்துக் கொண்டிருந்து திண்டாடட்டும் என்ற எண்ணந் தானே?'' என்று செல்லமாகப் பரிகசித்தவாறு அவரை எழுப்பினாள்.

ஜகந்நாதன் கண்ணைப் பிசைந்து கொண்டே எழுந்தார். முகத்தில் மந்தஹாசம். ''சமையல் ஆகிவிட்டதா? அம்மாடி'' என்று சோம்பல் முறித்தார். ''ஹாவ்'' என்று ஒரு கொட்டாவி விட்டுவிட்டு, ''ஆகட்டும், சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுப் படுப்போம்'' என்றார்.

''உங்களுக்கு அவ்வளவு சுலபமாகி விட்டது'' என்றாள் விசாலாக்ஷி. ''எனக்கு இன்னும் விட்டபாடில்லை. இந்தப் பிள்ளை நாளைக்கும் வராவிட்டால் என்ன செய்வது? வேறு எங்கேயாவது காரிலோ, டிராமிலோ அகப்பட்டுக் கொண்டு ஆஸ்பத்திரியிலோ, கீஸ்பத்திரியிலோ.....'' என்று முரளி காணாமற்போன பாரம் முழுவதும் தன் தலைமேலேயே இருப்பதுபோல் பேசினாள் விசாலாக்ஷி.

''ஆமாம் என்றால், இன்று கவலை தீர்ந்துவிட்டால், முரளியை பற்றிய விசாரமே விட்டு விட்டதா? பார்ப்போம். கடவுள் இருக்கிறார்'' என்று மனைவியைச் சமாதானம் செய்தார் ஜகந்நாதன்.

7. பயம் தெளிந்தது

இரவு முழுவதும் எப்படியோ கழித்துவிட்ட ஜகந்நாதனும் விசாலாக்ஷியம், ராமநாதையரும் ஜானகியம்மாளும் வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு தரமும் அவர்கள் விடுமுறைக்கு வருவதென்றால் எவ்வளவோ ஏற்பாடுகளும் சந்தோஷமும் விசாலாக்ஷியைப் பெருமிதத்தில் ஆழ்ந்துவிடச் செய்யும். ஆனால் இன்றோ, விவரிக்க முடியாத பலவித உணர்ச்சிகள் உள்ளத்தை உழப்ப, அவள் வாசலுக்கும் உள்ளுக்கும் அலைந்தாள்.

ஜகந்நாதன் மனத்திலோ ஒருபக்கம், 'பெரியவர்கள் வந்துவிட்டால் நம் பளுவு சற்றுக் குறையுமே' என்றிருந்தது. மற்றொருபுறம், 'அவர்கள் வந்து மட்டும் என்ன செய்ய முடியும்? நம்மிடம் ஒப்புவித்த பொறுப்பை நாம் சரியாக நடத்தவில்லையே' என்று அச்சமாகவும் இருந்தது.

வண்டி வந்ததும் அவர் ஒன்றும் பேசத்தெரியாமல் நின்று கொண்டிருந்தார். உள்ளேயிருந்து விசாலாக்ஷி ஓடிவந்தாள். 'முரளி எங்கே?' என்ற கேள்வி எப்பொழுது வந்துவிடுமோ என்று இருவருக்கும் 'திக், திக்' என்று அடித்துக் கொண்டது. எப்பொழுதுமே பெற்றோர்கள் வந்ததும் வராததுமாக முரளீதரன் ஓடிவந்து முன்னிலையில் தோன்றி வரவேற்கும் வழக்கம் கிடையாது. எங்கேயோ சுற்றிக் கொண்டிருப்பான். அந்த நாள் முடிவடைவதற்குள் எப்பொழுதாவது சாப்பிடவோ குளிக்கவோ வந்தானானால்

அவர்களைப் பார்த்துப் பேசுவான். சில சமயம் அதுவும் மாட்டான். ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு ஓடிப்போய்விடுவான். இன்று மாத்திரம் அந்த நியதிக்கு மாறாக முரளியைத் தேடப் போகிறார்களா என்ன, அவன் பெற்றோர்? இருந்தாலும் மனம் இருக்கும் நிலைமையில் அதெல்லாம் நிதானமாக யோசிக்க அவர்களுக்கு நேரமில்லை.

விசாலாக்ஷி குழந்தை நடராஜனைக் கையில் வாங்கிக் கொண்டாள். அவனுடன் விளையாடிக்கொண்டே உள்ளே சென்றாள். ஜானகியம்மாள் அவளைப் பின் தொடர்ந்தவாறே பேசிக்கொண்டு சென்றாள்.

''ஏன், அம்மா? வீட்டைப் பூட்டிவிட்டுத்தான் வந்தீர்களோ? பிரயாணம் ஒன்றும் கஷ்டமில்லையே? நேற்று எப்பொழுது சாப்பிட்டதோ, பல்லைத் தேய்த்துக் கொண்டு வாருங்கள்'' என்று மடமடவென்று பேசி, தன் உள் பதற்றத்தை அடக்க வெளிப்பதற்றம் கொண்டாள் விசாலாக்ஷி.

''நேற்றுச் சாயங்காலம் பல்லில் ஜலம் குத்தினது. குழந்தைக்குப் பால் மாத்திரம் எடுத்துக் கொண்டு வந்திருந்தேன். அது ஒன்று இருக்கிறதோ இல்லையோ; கால் கட்டு, உயிருக்கு உலை?'' என்றாள் மாமியார்.

''என்னம்மா அவனை அப்படிச் சொல்லுகிறீர்கள்? அவன் நடராஜாவாயிற்றே - எங்கள் ராஜாவன்றோ அவன்! அவனுக்குக் கல்யாணம் வருகிறது'' என்று குழந்தையை முத்தமிட்டவாறே பதிலளித்தாள் விசாலாக்ஷி.

''ஏண்டி, முரளி எங்கே? காலங்கார்த்தாலே எங்கேயாவது ஊர் சுற்றப் போய்விட்டானா?'' என்று கேட்டாள் ஜானகியம்மாள்.

விசாலாக்ஷிக்குத் தூக்கி வாரிப் போட்டது. பதில் சொல்வதற்கு ஆயத்தமாக எச்சிலை விழுங்கினாள். இந்தக் கேள்வி தம் தகப்பனாருக்குக் கை, கால் அலம்ப ஜலம்

எடுத்துக் கொண்டிருந்த ஜகந்நாதன் காதிலும் விழுந்தது. அவர் கை நடுக்கம் தாங்காது செம்பைக் கீழே போட்டுவிட்டார்.

விசாலாக்ஷி அதற்குள் சமாளித்துக் கொண்டுவிட்டாள். வெகு சாதாரணமாகப் பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

''முரளியா? அவன் 'ஸ்கௌட் காம்ப்' புக்குப் போயிருக்கிறான். வருவதற்கு நான்கு நாட்களாகும் என்றான். கட்டிக் கொள்ளுவதற்கு இரண்டாம் துணிகூட எடுத்துக் கொள்ளாமல் போய்விட்டான். அநேகமாக இன்றைக்கு வருவான்'' என்று அவள் சகஜமாகப் புளுகியது ஜகந்நாதனையே ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது.

''எந்த ஊருக்குப் போயிருக்கிறான்?'' என்று கேட்டார் தந்தை.

அதற்கு என்ன பதில் சொல்லுவார்கள் அவர்கள்! விசாலாக்ஷி புருவத்தை நெளித்துக் கொண்டாள். பிறகு கணவரைப் பார்த்து, ''எந்த ஊர் என்று சொன்னான்? எனக்கு மறந்துவிட்டது'' என்று கேட்டாள் மெய்போல.

''அது என்னவோ, உன்னிடந்தான் சொன்னான்'' என்று மழுப்பிவிட்டு, இனி அங்கிருந்தால் ஆபத்து என்று நினைத்தவர் போல் வாசற்பக்கம் சென்றுவிட்டார் ஜகந்நாதன்.

அதற்கேற்ப, உள்ளே ஓர் உருவம் மெதுவாக நுழைவது அவர் கண்ணில் பட்டது. அவர் வந்து பார்ப்பதற்குள் அது நழுவப் பார்த்ததும் தெரிந்தது. அவர் சட்டென்று போய் அந்த உருவத்தைப் பிடித்தார். ''இங்கே வாடா, ராஸ்கல், எங்கேயடா போயிருந்தாய் மூன்று நாட்களாக?'' என்று பல்லைக் கடித்தபடி தரதர வென்று முரளியை இழுத்துக் கொண்டு வந்தார்.

அதற்குள்ளாகவே ஏதோ ஞானதிருஷ்டியில் அறிந்தவள்போல் விசாலாக்ஷி அங்கு வந்துவிட்டாள். ''உஸ்...

ஸ்... வந்ததும் வராததுமாக என்ன?'' என்று கணவரை லேசாகக் கடிந்துவிட்டு, முரளியை வரவேற்க முன் வந்தாள்.

''வாடாப்பா... எந்த ஊருக்குப் போயிருந்தாய்? அப்பா, அம்மா எல்லோரும் வந்திருக்கிறார்கள். உன் சிநேகிதர்க ளெல்லாம் வரவில்லையா?'' என்று உரக்கக் கேட்டாள்.

முரளி பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். மேலும், பெற்றோர்கள் வந்து விட்டார்கள் என்றதும் அவனுக்குப் பயமே பிடித்துக் கொண்டுவிட்டது. என்றும் கடிந்தே பேசியறியாத அண்ணனோ உக்கிர ரூபத்துடன் எதிரே நின்று கொண்டிருந்தார்.

''எங்கேயடா போனாய்?'' என்று மெல்லக் கேட்டார் மறுபடியும், ஜகந்நாதன்.

''செஞ்சிக்கு நான் கடிதம் போட்டேனே, வரவில்லையா?'' என்றான் முரளீதரன் தயக்கத்துடன்.

அவனுக்குத் தன் மதனியின் பேரில்தான் மிகவும் கோபம் வந்தது. 'இவளை யார் கூப்பிட்டார்கள்?' அண்ணன் அடித்தாலும் பட்டுக்கொள்ளத் தயாராக இருந்தான் அவன். தான் செய்தது தவறு என்று அவன் அறிவான். வீட்டில் சொல்லாமல், கொள்ளாமல் போனது இதுவே முதல் தடவை. இப்பொழுது மன்னி ஒன்றும் நடக்காததுபோல் சகஜமாகப் பேசித் தன்னைக் காப்பாற்ற முன் வந்ததனாலல்லவோ 'கடிதம் எழுதினேனே?' என்று ஒரு பொய் சொல்லத் தோன்றியது? 'எப்படியோ உதைபட்டுச் செத்துப் போகிறோம். இவளுக்கு என்ன வந்தது? எல்லாவற்றிற்கும் 'நான் இருக்கிறேன்' என்று கிளம்பி விடுகிறாளே?' அவனுக்கு இருந்த கோபத்தில் அவனால் ஒன்றும் பேசக்கூட முடியவில்லை. பேசாமல் நேரே புழக்கடைக்கிணற்றடிக்குச் சென்று அவன் குளிக்க ஆரம்பித்தான்.

அத்துடன் தப்பித்துக் கொண்டுவிட முடிகிறதா? அவன் தாய் செஞ்சியைப்பற்றி ஓயாமல் கேள்விகள் கேட்டாள்.

சாரணப் படையைப் பற்றிக் கேட்டாள். அவன் சரியாகவே பதில் கூறவில்லை.

''முரளி, வா அப்பா சாப்பிட'' என்று விசாலாக்ஷி சகஜமாகக் கூப்பிட்டது அவனது அர்த்தமற்ற ஆத்திரத்தைப் பன்மடங்கு மூட்டிவிட்டது.

''எல்லாம் வருகிறேன். நீ இருக்கும்வரை எனக்குச் சோற்றுக்கு என்ன குறைச்சல்! மனிதனை நல்ல வார்த்தைகளினாலேயே கொன்றுவிடுவாயே'' என்று குரோதத்துடன் சொல்லிக் கொண்டே சாப்பிட உட்கார்ந்தான் முரளி.

விசாலாக்ஷி சிரித்தாளே தவிர வேறு ஒன்றும் பதில் சொல்லவில்லை.

★ ★ ★

''அம்மா, பாலு வருகிறானாம். அருணாசலத்துக்கும் லீவு கிடைத்திருக்கிறதாம். அவன் சிற்ப ஆராய்ச்சி சம்பந்தமாக யாரையோ அழைத்துக் கொண்டு வரப்போகிறானாம். உனக்கென்ன, குடும்பம் முழுவதும் உன்னைச் சுற்றித்தான்'' என்றார் ஜகந்நாதன்.

''அதெப்படி? விசாலம்தான் ஊருக்குப் போகிறாளே?''

''எல்லோரும் வருவதென்றால் நான் வேண்டுமானால் பம்பாய்க்குப் போகவில்லை'' என்றாள் விசாலாக்ஷி மெதுவாக.

''வேண்டாமடி அம்மா. போனதரமே நீ போகாதது தப்பாகிவிட்டது. உன் அண்ணாவுக்கு அதுவே மனசில் குறையாகி விட்டது. இந்தத் தடவையாவது அவர்களுக்குத் திருப்தியாக இருந்து, உடம்பைக் கவனித்துக் கொண்டு, சௌகரியமாக வா. இந்த நடராஜன் புண்ணியத்தில் இந்தத்

தரமாவது உயிரோடு குழந்தையும் கையுமாக வந்தால் போதும். பெண்ணோ, பிள்ளையோ ஏதோ ஒன்று'' என்றாள் ஜானகியம்மாள்.

விசாலாக்ஷியால் தன் முகத்தில் எழுந்த சிரிப்பை அடக்க முடியவில்லை. 'இந்த அம்மாவுக்கு எப்பொழுது பார்த்தாலும் 'பெண்' என்ற ஆசை வராமல் இருக்காது போலும். பேத்தியாவது பிறந்தால் தான் குறை நீங்கும்!' என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

''அம்மாவுக்கு என்ன, அபிதாவை அழைத்துக் கொள்கிறாள்'' என்றார் ஜகந்நாதன்.

''இல்லாவிட்டால், உங்கள் சங்கமே இல்லாமல், எங்கள் அம்மா கைச் சமையலே சாப்பிட்டுக் கொள்கிறோம். நீங்கள் செய்யும் ஒத்தாசை எங்களால் செய்ய முடியாதோ?'' என்றான் முரளி, துடுக்காக.

''முரளீ! மன்னியிடம் அப்படியா பேசுகிறது, மட்டு மரியாதை இல்லாமல்?'' என்று ஜானகியம்மாள் கண்டித்தாள்.

''என்னிடம் தானே, அம்மா, இப்படிப் பேசுகிறான்? எல்லாரிடமுமே இப்படிச் சுவாதீனமாக இருப்பானா?'' என்று பரிந்து பேசினாள் விசாலாக்ஷி.

'ஆமாம், இவள் பரியாவிட்டால் என்னவாம்! நான் நிஜமாகவேதான் சொன்னேன். என்னவோ, எப்பொழுதும் இவளுக்கு நான் கடமைப்பட்டு இருக்க வேண்டுமாக்கும்! சுவாதீனமாம், சுவாதீனம்!' என்று பிதற்றிற்று முரளீதரனின் மனம்.

''அம்மா, நான் இப்பொழுதே உன்னிடம் சொல்லு கிறேன். அப்புறம் சௌரியப்படுமோ, படாதோ; பாலு வந்தால், வைத்தியநாதையர் விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தா பித்து, ஒரு வழியாகத் தீர்த்துவிடு'' என்று கவனப் படுத்தினார் ஜகந்நாதன்.

''தீர்ப்பதென்னடா? 'இல்லை' என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் கரிக் கட்டையை யார் மணக்கச் சம்மதிப்பார்கள்? பெண் நல்ல குணம்தான். பாலுவின் அழகென்ன, அந்தஸ்தென்ன? 'கோடலு நலுபைதே குலமந்த நலுபு' என்பார்களே தெலுங்கில்? 'ஜாதகம் சரிப்படவில்லை' என்று ஏதாவது சொல்லிவிட வேண்டியதுதான்'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள் ஜானகியம்மாள்.

ஜகந்நாதன் அவசரப்பட்டுப் பதில் சொல்லவில்லை. ''நாளைக்கு அருணாசலம் வருகிறான். பாலுவும் இன்னும் இரண்டு நாட்களில் வந்துவிடுவான். யோசித்துத்தான் சொல்லுவோமே'' என்று கூறிவிட்டு அவர் தம் இதர அலுவல்களைக் கவனிக்கச் சென்று விட்டார். முரளியும், சப்புவதற்கு ரசமான தின்பண்டம் அகப்பட்டவன்போல் கள்ளச் சிரிப்புடன் மாடிக்கு ஓடினான்.

ஜானகியம்மாள் தன் கணவரிடம் விஷயத்தைச் சொல்ல எழுந்து சென்றாள்.

''ஏன்னா, இதைக் கேளுங்கள். நம் மூன்றாவது வீட்டு வைத்தியநாதையர் இருக்கிறாரே.....''

''ஊம்?''

ஆரம்பப் பள்ளிக்கூட வருஷாந்தரக் கொண்டாட்டத்தில் பேசுவதற்குப் பொருத்தமான விஷயம் பொறுக்கிக் கொண்டிருந்த ராமநாதையர் சிந்தனைச் சிக்கலிலிருந்து விடுபடாமலேயே நிமிர்ந்து பார்த்தார்.

''ஊம்.....?''

''மூன்றாவது வீட்டு வைத்தியநாதையர் இருக்கிறாரோ, இல்லையோ?.....''

''யாரு? ஊம்.''

''அதுதான்னா... மூன்றாவது வீட்டு வைத்திய நாதையர்.''

''யாரு, வைத்தியநாதையர் வந்திருக்கிறாரா? வாங்கோ, சார், ஐயர்வாள்...'' என்று உரக்கக் கூப்பிட்டுக்கொண்டே அவரை வரவேற்க வாசலுக்குப் போய்விட்டார் ராமநாதையர்.

''வாயிலே வார்த்தை இருக்கும்போதே என்னவோ வாசலில் ஓடுகிறீர்களே? மூன்றாவது வீட்டு வைத்தி இருக்கிறாரே, அவர் பெண் ஜாதகத்தை.....''

''யாரு? அவர் பெண்ணா? அவருக்குப் பெண் இருக்கிறதா? எது, பெரிய பெண்ணா, சின்னப் பெண்ணா?''

''அவருக்கு எத்தனை பெண்கள் இருக்கிறார்கள்? பதினாயிரம் பெண்கள் பக்கம் பக்கமாக நிற்கிறார்களா என்ன? ஒரே பெண்தான்.''

''ஆமாம், அவளுக்கென்ன? அவள் ஜாதகம் யாருக்காவது வேண்டுமாமா? அதற்கென்ன, வாங்கிக் கொடுத்தால் போயிற்று.''

''உங்களோடு யார் பேசுவார்கள்? காதில் ஓர் அட்சரம் விழுவதற்குள்ளாகவே பத்து மைல் ஓடுகிறீர்கள், பதினைந்து விஷயங்கள் ஊகித்து விடுகிறீர்கள்!''

''என்ன விஷயம், சொல்லேன். ஏதாவது ஆரம்பப் பள்ளிக் கூடத்து.....''

''ஆரம்பப் பள்ளிக்கூடமா? அது என்ன கூத்து? எல்லோரும் என்ன என்னவோ விருதங்கள் வைத்துக் கொள்ளுகிறார்களே, உங்களுடன் பேசுவதில்லை என்று நான் ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொண்டால் என்ன என்று தோன்றுகிறது.''

''அடி, என்னடீ, சமாசாரத்தைச் சொல்லாமல் கொள்ளாமல், என்னவோ அடுக்கிக் கொண்டே போகிறாயே?''

''ஆமாம், நான் அடுக்குகிறேன். ஏதோ நாற்பது வருஷ காலமாக அடுக்கியாகிவிட்டது. இன்னும் எத்தனை யுகம்தான் அடுக்க வேண்டுமோ தெரியவில்லை. என் தலையில் என்ன எழுதியிருக்கிறதோ?''

''சரி, சரி. உன்னோடு என்ன பேச்சு? சொல்ல வேண்டியதைச் சீக்கிரம் சொல்லுவதென்றால் சொல், இல்லையென்றால் நான் வருஷாந்திரக் கொண்டாட்டத்திற்கு ஜாதகம் பொறுக்க.....''

''அடி, விசாலம், இந்த வேடிக்கையைக் கேள். உன் மாமனார், வருஷாந்தரக் கொண்டாட்டத்திற்கு ஜாதகம் பார்க்கப் போகிறாராம்!''

''என்னவோ வாய் தவறிவிட்டது. வாய்தானா குழறும், நீ செய்யும் அட்டகாசத்தில்! நாக்கே அறுந்து விழுந்து விடுமே.''

''இதோ சொல்லுகிறேன்; ஒரு தரம்தான் சொல்லுவேன். நம் பாலுவுக்கு வைத்தியநாதையர் பெண் கொடுக்க முன்வந்திருக்கிறார். உங்களுக்குக்கூடக் கடிதம் போட்டிருந்தாராமே?''

''ஆ! வைத்தி பிள்ளைக்கு?''

''உங்களிடம் சொல்லி வயிற்றை அறுத்தாற்போல் தான்! உங்களுக்குப் 'பாலு' என்று ஒரு பிள்ளை இருக்கிறானே தெரியுமா?''

''தெரியும், அதுதான் நீ, 'பாலு' என்றால் பெண்ணின் பெயர்போல் இருக்கிறதென்று பொறுக்கி வைத்தாயே? எனக்குத் தெரிந்திருந்தால் ராதாகிருஷ்ணன், கௌரீ சங்கர் என்று பெயர் வைத்திருப்பேன். உன் மனமார, 'ராதா', 'கௌரீ' என்று அழைத்திருக்கலாம்.''

''போதும், உங்கள் வேடிக்கை. எனக்கு ரசிக்கவில்லை. உங்கள் பிள்ளைக்கு அவர் பெண்ணைக் கொடுக்க முன்வந்

திருக்கிறாராம். பிள்ளையைக் கேட்டுச் சொல்லுவதாகச் சொல்லுங்கள். தாறுமாறாக ஒன்றும் உளறி வைக்க வேண்டாம். பெண்கறுப்பு.''

''எங்கள் பிள்ளை சிவப்பு, உங்கள் பெண்கறுப்பு என்று சொல்லிவிட்டால் போகிறது. இதில் ஒளிவென்ன, மறைவென்ன?

''வெகு லட்சணந்தான். அதற்குத்தான் பயப்படுகிறான் ஜகம். இந்த ஊரில் அவருக்கு நல்ல ஹோதா. அவரைப் பகைத்துக் கொண்டால் அப்புறம் நாம் இந்த ஊரிலேயே இருக்க முடியாது.''

''அடேயப்பா, அப்படியென்றால் தம் பெண்ணைச் செக்கச் செவேலென்று எலுமிச்சம் பழமாக ஆக்கி விடட்டுமே?''

''எலுமிச்சம் பழம் சிவப்போ? உங்களிடம் பாடம் கற்றுக் கொண்டு.....! எலுமிச்சம் பழம்போல் இருந்தால் 'காமாலை' என்று அனுப்பிவிடமாட்டேனா?''

''அட, உனக்குக் கூடச் சில சமயம் ஹாஸ்ய உணர்ச்சி இருக்கிறதடீ!''

''ஹாஸ்யம் எல்லாம் இருக்கத்தான் இருந்தது. பள்ளிக் கூடத்து வாத்தியாரோடு சேர்ந்துதான் அதுவும் மங்கிவிட்டது'' என்றாள் ஜானகியம்மாள். ''நான் சொன்னது ஞாபகமிருக் கட்டும். 'நமக்கு ஒன்றும் அதிகாரம் கிடையாது; எல்லாம் பையன் இஷ்டம்' என்று சொல்லுங்கள்'' என்று கடைசி முறையாக உபதேசித்துவிட்டுக் கிளம்பினாள்.

8. அசடு வழிந்தது

பாலு, அருணாசலம், ஜகந்நாதன், முரளி யாவரும் ஜானகியம்மாளைச் சுற்றி உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் முன்னிலையில் வறுத்த வேர்க்கடலைக் குவியல் கிடந்தது. கீழே அடித்து, ஒவ்வொன்றாக உரித்து, பருப்புகளை ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொண்டிருந்தாள் தாய். பிள்ளைகளில் முரளி, உரித்து உரித்து வாயில் கொஞ்சமும், ஜேபியில் கொஞ்சமுமாக நிரப்பிக் கொண்டிருந்தான். அருணாசலமும், ஜகந்நாதனும் ஒரு தரம் பாத்திரத்தில் போடுவதும், ஒரு தரம் வாயில் போடுவதுமாகச் செய்து கொண்டிருந்தார்கள். பாலு ஒரு தட்டில் தனக்கு வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு ஒருபுறமாக உட்கார்ந்துவிட்டான் தின்பதற்கு. நடராஜனும் தன் பங்கு குறைவானேன் என்று தோல் முழுவதுடனேயே வாயில் வைத்துச் சுவைத்துக் கொண்டிருந்தான்.

அருணாசலம் குழந்தையைப் பார்த்து, ''அடே, நீ டாக்டராகப் போகப் போகிறாய். இன்றே நான் சொல்லுகிறேன்'' என்றான்.

''எப்படியப்பா ஞானம் உதித்தது?'' என்று பரிகாசமாகக் கேட்டான் பாலு.

''பாரேன், ஒரு வைடமினும் வீணாகக் கூடாதாம். அப்படியே தோலுடன் விழுங்கப் பார்க்கிறான் பார்.''

''அதற்கென்ன குறைச்சல்! எல்லோரும் பங்கு போட்டுக் கொண்டு தின்கிறீர்கள். நான் எதைக்கொண்டு வெல்லம் செலுத்தப் போகிறேனோ தெரியவில்லை'' என்றாள் ஜானகியம்மாள் செல்லமாக.

''எப்படிச்சாப்பிட்டால் என்னம்மா? வேர்க்கடலையை எதிரே வைத்துக்கொண்டு தின்னாமல் இருக்க முடியுமா?

இதெல்லாம் பட்டிக்காட்டுப் பட்சணம்'' என்றார் சாத்வீகமாக ஜகந்நாதன்.

''உஷ், அப்படிச் சொல்லாதே. அப்புறம் நம் பாலு அதைத் தொடவே மாட்டான்'' என்று அருணாசலம் வேடிக்கையாக எச்சரிக்கவும், முரளி கைகொட்டிச் சிரித்தான்.

''இதைத்தான் அமெரிக்காவில் 'பீநட்ஸ்' என்கிறார்கள். ரொம்ப மவுசு இதில் அவர்களுக்கு'' என்று சம்பந்த மில்லாமல் சொன்னான் பாலு.

''ஓகோ, அதுதானா? என்னடா என்று பார்த்தேன்; நம் சப் கலெக்டர் தம்பி வணங்கி உரிப்பதென்ன, அதை நாசுக்காகத் தட்டில் வைத்துத் தின்பதென்ன என்று. எனக்கு இப்பொழுது தான் விளங்குகிறது'' என்றான் அருணாசலம்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்க, ஜானகியம்மாள் வேலை முடிந்தவளாய், பாகு கூட்ட அடுப்பைப் பற்ற வைக்க எழுந்தாள். ஜகந்நாதன் செத்தை, குப்பையையெல்லாம் திரட்டி முறத்தில் போட்டுவிட்டுக் குழந்தையை எடுக்கக் கையை நீட்டினார்.

''இருக்கட்டுமடா, நீ குப்பையை அள்ளுவானேன்?'' என்றாள் அன்னை.

''பரவாயில்லை, அம்மா. இல்லாவிட்டால் நீ தானே செய்யவேண்டும்? முரளி, குழந்தையை வாசற்பக்கம் கொண்டுபோய் வைத்துக் கொள்ளடா. அம்மாவைத் தொந்தரவு செய்யப் போகிறது'' என்றார் ஜகந்நாதன்.

''அம்மாவுக்கு ஒத்தாசைக்கு யாரும் இல்லாமல் கஷ்டப்படுகிறாள். இதில் நான் வேறு விருந்தாளிகளை அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். ஏன் அம்மா, உன் நாட்டுப் பெண்ணை வேண்டுமானால் அழைத்து வருவதுதானே? சிரமப்படுவானேன்?'' என்று அருணாசலம்

சகஜமாகக் கேட்டதைக் கண்டு, ஜகந்நாதனும் அவர் தாயும் சங்கேதமாகக் கண் கலந்து கொண்டனர். முரளி இதைக் கவனித்துவிட்டான்.

''அண்ணா, நீ மன்னியை வரவழைப்பதற்காகவே இப்படிச் சொல்லுகிறாய்; அம்மாவின் சிரமத்தை ஒட்டி அல்ல என்று அம்மாவும் ஜகண்ணாவுக்கும் எண்ணம். இனிமேல் அவள் வந்தாலும் அவர்களுக்கு அந்தச் சந்தேகம் நீங்காது. இப்பொழுது என்ன செய்வது? பெரிய மன்னி வரமுடியாது. பாலுவாவது மீனாக்ஷியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு விடட்டும் என்றாலோ, அம்மா குறுக்கே நிற்கிறாள். அவள் கறுப்பாம். கறுப்பானால் என்ன? 'காந்தலே ருசி; கறுப்பே அழகு.' ஜாதகம் பொருந்தவில்லை என்று தட்டிக் கழித்து விட்டாள் அம்மா'' என்று முரளி பிரசங்கித்தான்.

''என்னம்மா, பாலுவைக் கேட்காமலா பதில் சொல்லி விட்டாய்?'' என்று ஜகந்நாதன் கேட்க, அருணாசலமும் கலந்துகொண்டான்.

''என்னம்மா, அப்படியா? நீ கூட ஏன் அப்படி யோசனையில்லாமல் செய்துவிட்டாய்? அன்றைக்கே அவனுக்கு அவர்கள் பேரில் ஒரு கண்.''

''இல்லைபடா, அவனை இன்னும் கேட்கவில்லை. அவன் மாத்திரம் என்ன சொல்லப் போகிறான் என்று இருந்தேன். அத்தோடு உங்கள் அப்பாவே பிரஸ்தாபிக் கட்டுமே என்று பேசாமலிருந்தேன்'' என்றாள் தாய்.

''இன்னும் பதில் சொல்லவில்லையே?'' என்றான் பாலு. அவன் முகம் சர்வ சாதாரணமாகத்தான் இருந்தது.

''ஹ¨ம், அருணாசலண்ணா, நிமிர்ந்து உட்கார். பாலுவுக்குச் சபலம் தட்டிவிட்டது. அவர்கள் வீட்டு ஊஞ்சல் பலகை எவ்வளவு அகலம்?'' என்று குறும்பாகக் கேட்டான் முரளி.

''நான்கு அடி. எதனால் செய்தது?'' என்று அதே குரலில் மொழிந்தான் அருணாசலம்.

''பித்தளை'' என்று முரளி பதில் சொன்னான்.

ஜகந்நாதன் பாலகோபாலனின் முகத்தைப் பார்ப்பதும், மற்ற இருவரைப் பார்ப்பதுமாக இருந்தார். அவருக்கு வெகு வேடிக்கையாகவே இருந்தது. ஆனால் அவர்கள் வர்ணனை புழக்கடை முற்றத்திலிருந்து பெண்ணின் சப்பை மூக்குவரை எட்டியதும், அவர் பேச்சை நிறுத்த முயன்றார். ''முரளி, எழுந்து போ, வாசலில். அதிகப் பிரசங்கித்தனம் செய்யாதே. அப்புறம் எனக்குக் கெட்ட கோபம் வரும். பெரியவர்கள் விஷயத்தில் குறுக்கே பேசுவது என்பது கெட்ட பழக்கம்'' என்று கடிந்தார்.

முரளி நடராஜனைத் தூக்கிக்கொண்டு வாசற்பக்கம் போய்விட்டான், நல்லபிள்ளைபோல். ஆனால் போகுமுன் ஒரு முறை அருணாசலத்தைப் பார்த்துச் சிரித்துவிட்டே அகன்றான்.

பாலு தன் தாயுடன் சமையற்கட்டிற்குச் சென்று உட்கார்ந்து கொண்டான். ஜானகியம்மாள், அறை அவ்வளவு நன்றாயில்லை என்று சொல்லுவானோ என்ற பயத்துடன் அங்கும் இங்கும் நோக்கிக்கொண்டிருந்தாள். ஒரு பாத்திரத் தின் மூடியை எடுத்து வேறு ஒன்றுக்கு மூடினாள். பால் பாத்திரத்தின் மூடியை வெறும் பாத்திரத்தின்மேல் வைத் திருந்ததைக் கவனித்துக் குழப்பம் மிக அதைச் சரிப்படுத்தி னாள்.

'இவன் ஏன் இங்கு வந்து என்னை மல்லுகட்ட வேண்டும்!' என்று அவள் தவித்துக்கொண்டிருக்க, பாலு தன் பாட்டில் அடுப்புக் கட்டையுடன் விளையாட்டாக என்னவோ செய்து கொண்டிருந்தான்.

இறுதியில் ஜானகியம்மாளுக்குப் பொறுக்க முடிய வில்லை. அவள் மகனைத் திரும்பிப் பார்த்து, ''என்னடா வேண்டும்? என்றுமில்லாத கருட சேர்வையாக இங்கே வந்து அழுக்கிலும், கரியிலும் உட்கார்ந்துவிட்டாயே?'' என்று கேட்டாள்.

''அம்மா, அந்த வீட்டுப் பெண்ணை நீ பார்த்திருக் கிறாயா?''

''ஆகா, தினமும்தான் அந்த சேவை எனக்குக் கிடைக்கிறது. நல்ல கறுப்பு, தொட்டால் ஒட்டிக்கொள்ளும் போல். மீனாக்ஷி என்று பெயர் வைத்ததைச் 'சாந்து காமாக்ஷி' என்று வைத்திருக்கலாம்.''

''ஏனம்மா, அவள் கறுப்பு நம்மை என்ன செய்யப்போகிறது? அவர்கள் சம்பந்தம் கிடைத்தால் நம் ஜகத்துக்கு இந்த ஊரில் நல்ல செல்வாக்குக் கிடைக்கும். எனக்கும் உத்தியோகத்தில் மேலே மேலே அபிவிருத்தி யடையப் பணம் கிடைக்கும். அழகிருந்தால் மட்டும் ஆகிவிட்டதா?''

''ஆமாம், நீ சொல்வதும் ச...ரி...தா...ன்'' என்று அதை ஆமோதிக்காதவள் போல் மெல்ல இழுத்தாள் ஜானகியம்மாள். அவ்வளவு எளிதில் சம்மதித்து விடுவதில் அவளுக்கு இஷ்டம் இல்லை. ஆகவே, அவள் விட்டுக் கொடுக்காமல், ''எதற்கும் அவ்வளவு சீக்கிரம் பதில் சொல்லவேண்டாம். பெண்ணை நீ பார்த்துவிட்டு, அப்புறம் கிரமமாகச் சொல்லி அனுப்பினால் போயிற்று'' என்றாள்.

''பெண்ணை என்ன பார்ப்பது? என்னவோ-உங்கள் சாக்குகளும் சால்ஜாப்புகளும்!'' என்று கூறிவிட்டு எழுந்துபோய் விட்டான் பாலு.

ஜானகியம்மாளின் முகத்தில் வர்ணிக்கத் தெரியாத ஒருவிதத் திகைப்பு மிகுந்த குழப்பம் குடிகொண்டது. 'பணத்தின் மாயை இவ்வளவு சக்தி வாய்ந்ததோ!' என்று அவள் ஆச்சரியமுற்றாள் போலும்.

பாலகோபால் ஒரு நல்ல ஏற்பாடு செய்துவிட்ட பெருமையுடன் வெளியே உலாவச் சென்றுவிட்டான். வைத்தியநாதையர் வீட்டைத் தாண்டும்போது, பழைய பலகணி நாடகம் மீண்டும் நடைபெறுமோ என்று எதிர்பார்த்தவன்போல் அவன் அந்தப் பக்கம் நோக்கிக் கொண்டே சென்றான்.

★ ★ ★

வைத்தியநாதையரின் முகம் புன்முறுவலினாலே பிரசன்னமாக விகசித்தது. நல்ல சிவந்த மேனி. தலையில் மெல்லிய உச்சிக்குடுமி. இடுப்பிலே சரிகை வேஷ்டி. சற்று இரட்டை நாடி சரீரம். மூக்குச் சற்று ஜடைக்குஞ்சு உருவத்தை நாடி இருந்தாலும், அவரது கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலியிலே தொங்கிய உருத்திராட்சத்தைப்போல் ஒருவித மதிப்பை அளித்தது என்றே சொல்லலாம். அதிலும், தற்சமயத்தைப்போல் சற்று உணர்ச்சிவசப்பட்டுவிட்டால் அது சிவந்த நிறம் பூண்டு வெகு அருமையாக விளங்கியது. நெற்றியில் பட்டை விபூதி நடுவில் அட்சதைப் பொட்டுக் கம்பீரமளிக்க, அவரது இயல்பான ஒரு மமதை அவரை மிடுக்காக உட்காரச் செய்தது.

பாலகோபாலும் அவருக்குத் தான் நிகர்தான் என்றோ, அல்லது அவரது பழைய காலப் பகட்டைக் காட்டிலும், தன் நவநாகரிக அசட்டை இன்னும் ஒரு படி உயர்ந்தது என்றோ எடுத்துக் காட்டுபவன்போல் அலட்சிய பாவத்துடன் உட்கார்ந்திருந்தான். கால் மேல் கால் போட்டுக்கொண்டு,

இந்த உலகமே ஒரு ரசமற்ற தொல்லை என்பதுபோல், தன் முகாரவிந்தத்தைச் சலித்த பாவத்துடன் அலங்கரித்தவனாய், இரு விரல்களை நடுவில் சிகரெட் இருப்பது போல் ஒன்றன்மேல் ஒன்றாகப் பதித்துக்கொண்டு அமர்ந்திருந்தான். இன்னும் அவனுக்குச் சிகரெட் பிடிக்கும் பழக்கம் ஏற்படவில்லை. இருந்தாலும் அந்த அபிநயத்தில் ஏதோ ஒரு கௌரவம் இருப்பதாகவே கருதினவன்போல் அவன் அப்படி வீற்றிருந்தான்.

அவன் அவ்வாறு உட்கார்ந்திருப்பதில் ஜகந்நாதனுக்கு அதிருப்தி. பெரியவர்கள் முன்னிலையில் மரியாதைக் குறைவாகக் கால் மேல் கால் போட்டுக் கொள்வது உசிதமில்லை என்று அவர் எண்ணம். இதையே அவர் அருணாசலத்தினிடம் மெதுவாகச் சொன்னார்.

''நீ பேசாமலிரு ஜகம். அவருடைய மமதைக்கும் இவனுடைய கர்வத்துக்கும், அவருடைய படாடோபத்துக் கும் இவனுடைய பகட்டுக்கும் போட்டிப் பந்தயம் நடக்கிறது. அதைப் பார்த்து ரசிக்காமல் நீ என்னவோ பயப்படுகிறாயே?'' என்று பதில் கூறிவிட்டான் அருணாசலம், தனது சுயமான நகைச்சுவையுடன்.

''என்ன, அண்ணனும் தம்பியும் பேசிக் கொள்ளு கிறீர்கள்?'' என்று வைத்தியநாதையர் சுவாதீனமாகக் கேட்டார்.

''என்ன செய்வது, ஏதாவது பேச வேண்டுமோ இல்லையோ?'' என்று பட்டதும் படாததுமாக இங்கிதமாகப் பதில் சொன்னார் ஜகந்நாதன்.

ஆனால் அருணாசலம் அவ்வளவு எளிதில் முற்றுப் புள்ளி வைக்கவில்லை. ''குழந்தை மீனாக்ஷியை வரச் சொல்லுவோமா என்று என்னைக் கேட்டான். பாலுவே

சொல்லுவான், இல்லாவிட்டால் அம்மாவாவது அழைத்து வருவாள் என்றேன். அவ்வளவுதான்'' என்றான்.

அதற்கு வைத்தியநாதையர் வேடிக்கையாகச் சவால் கொடுத்தார்: ''நீ பிள்ளை வீட்டுச்சம்பந்தி. எங்கள் ஜகத்துக்கு உள்ளூர்ப் பந்துத்துவம். தாமதமாகிறதே என்ற பெண் வீட்டானின் கவலை அவனை வாட்டுகிறது.''

இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். பால கோபால் இருபுருவங்களையும் சோம்பல் முறிக்கும் பூனையைப் போல் உயரத் தூக்கிக் கீழே விட்டான். ஒரு லேசான புன்சிரிப்பு வருவோமா, வேண்டாமா என்று அவன் அதரங்களிலே சந்தேகப்பட்டுக் கொண்டு தயக்கமுற்றது.

ராமநாதையரும் அங்கு இருந்தார். சிரிப்பொலியைக் கேட்டு அவர் நிமிர்ந்து நோக்கினார். அவர் கண்கள் கோலிக் குண்டுகளைப்போல் உருண்டு திரண்டு விட்டு, புரியாத ஏமாற்றத்துடன் அவருடைய மறதி உலகத்திற்குத் திரும்பிச் சென்றுவிட்டன.

''பாவம், அப்பா!'' என்றான் அருணாசலம் மெதுவாக.

வைத்தியநாதையர் ஜகந்நாதனுடன் பேசுவதுபோல் ஓரக் கண்ணாலேயே பாலுவைக் கவனித்தார். அந்தப் பார்வையில் எந்த நுணுக்கமும் தப்பாது என்பது மட்டும் புலப்பட்டது.

''இவர்தாம் பெண் பார்க்கிறார், பாலுதான் பெண்'' என்று அருணாசலம் தம் காதண்டை சொன்னதை ஜகந்நாதன் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

வைத்தியநாதையரின் மேற்பார்வை - பரிசோதனை - முடிந்துவிட்டு போலும். பாலு தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு தன் கால்களால் தாளம் போட்டுக் கொண்டிருந்

தான். அவனுடைய திருஷ்டியும் தன் கால்களையே பார்த்து மெய்ம்மறந்து மகிழ்ந்து கொண்டிருந்தது.

''உம், செட்டியார் எடை போட்டாகி விட்டது'' என்றான் அருணாசலம் மெல்லிய குரலில்.

ஜகந்நாதன் பாடு மிகவும் சங்கடமாகிவிட்டது. வைத்தியநாதையரைக் கவனித்துப் பார்த்தார். அவர் உள்ளே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு சற்றுச் சமாதானம் அடைந்தார்.

''மீனா, இங்கே வாம்மா. இவாளுக்கெல்லாம் நமஸ்காரம் பண்ணு'' என்று அவர் கூறி முடிப்பதற்கும், ஜானகியம்மாளே மீனாக்ஷியை அழைத்து வருவதற்கும் சரியாக இருந்தது.

மீனாக்ஷி ராமநாதையரை வணங்கும்போது அவர் கவனிக்கவில்லை. கையில் இருந்த ஒரு சிறு காகிதத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். ஜானகியம்மாள் அவர் சங்கதியை அறிந்தவளாதலால், மனத்திற்குள் சபித்துக் கொண்டிருந்தாள். 'எங்கே வந்தாலும் என்ன படிப்பு, வாசிப்பு, எழுத்து? பிரம்ம லிபியோ?' என்று தனக்குள் எண்ணிக் கொண்டாளேதவிர, சந்தர்ப்பம் வாயை விட்டு வெளியே ஏது சொல்லுவதற்கும் சௌகரியப்படவில்லை. அதற்கேற்றாற் போல் கவனம் மறந்த ராமநாதையர், தம்மை நமஸ்கரித்த மீனாக்ஷியை அபிதா என்று நினைத்தவராய், 'என்ன விசேஷம் அம்மா? ஊருக்குப் போகப்போகிறாயா?' என்று கேட்க வாயெடுத்தார். சட்டென்று தம் சூழ்நிலையைக் கவனித்து விட்டு, விஷயத்தை ஒருவாறு புரிந்து கொண்டு சாதுரியமாகப் பேசாமலிருந்து விட்டார்.

பாலகோபாலனின் முகபாவத்தின் நெளிவுகளைக் கவனித்துக் கொண்டிருந்த வைத்தியநாதையர், அதிகமாகத்

திருப்தியடையாதவர்போல், இப்படியும் அப்படியும் தம் பார்வையைத் திருப்பிக் கொண்டிருந்தார். மீனாக்ஷி உள்ளே சென்றுவிட்டாள்.

உடனே புறப்பட்டுப் போவது அவ்வளவு இங்கிதமில்லை என்று எண்ணியவர்கள் போல், வந்தவர்கள் சற்றுநேரம் ஏதோ அர்த்தமற்று, சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் பேசிக் கொண்டிருந்தனர். வைத்தியநாதையரைப் பாலுவின் அலட்சிய பாவம் குடைந்து கொண்டிருந்தது. ராம நாதையரோ, நாளன்றைக்கு ஊருக்குப் போனதும் போகாததுமாக உபாத்தியாயர் மகாநாட்டில் பேசுவதற்குத் தயாரித்துக் கொண்டிருந்த சொற்பொழிவுக்கு நடுவில் பொருத்துவதற்கு விவேகாநந்தரின் பொன் மொழி ஒன்றைத் தேர்ந்து கவனப்படுத்திக் கொண்டிருந்தார். உடனே அதைக் குறித்துக் கொள்ளவேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தார். வீட்டிற்கு எப்பொழுது திரும்புவோம் என்று துடித்துக் கொண்டிருந்த அவருக்குப் பேசுவதற்குப் பொறுமையில்லை.

ஜகந்நாதனுக்கு ஆயிரம் தொல்லைகள் காத்துக் கொண்டிருந்தன. தாம் முதலில் எழுந்து செல்வது ஊர் மரியாதைக்குக் குறைவு என்று இருப்புக் கொள்ளாமல் அவர் உட்கார்ந்திருந்தார். அருணாசலத்திற்கோ ஹாஸ்யத்துக்கு அளவிலா விஷயங்கள் தோன்றிக் கொண்டேயிருந்தன. 'வீட்டுக்குப் போய் இப்பொழுதே சொன்னால், அபிதா அழகாக ஜோடித்து எழுதிவிடுவாள்' என்று அபிதாவின் சகாவிற்காக ஏங்கினான் அவன்.

உள்ளே ஜானகியம்மாள், நாட்டுப் பெண்ணாக வரப்போகும் மீனாக்ஷியை இன்னும் எத்தனை நேரம் தான் பார்ப்பது என்று சங்கடப்பட்டாள். 'பிராப்தம், தெய்வ சங்கல்பம், பெண்ணின் மனசு, பரஸ்பர உறவு விட்டுப் போகாமலிருத்தல்' என்றெல்லாம் மாறி மாறிப் பேசி

அலுத்துவிட்டது. இன்னும் கொஞ்ச நேரம் சென்றால் பள்ளத்தில் இறங்கிவிட்ட கிராமபோன் ஊசிபோல் யாரும் கேட்காமலேயே சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்ல ஆரம்பித்து விடுவோமோ என்று பயங்கூடத் தோன்ற ஆரம்பித்துவிட்டது அவளுக்கு.

பாலுதான் இருப்பதற்குள் சற்றும் பதற்றமின்றி மிக்க மிடுக்குடன் இருந்தான். மூக்குக் கண்ணாடியின் வேலை முடிந்துவிட்டது, இனி அது மூக்கின் மேல் ஏறலாம் என்று நினைத்தவன் போல் அவன் அதைத் துடைத்துக் கண்ணில் போட்டுக்கொண்டான். ''போகலாமோ இல்லையோ?'' என்று ஜகந்நாதனைப் பார்த்துக் கேட்டான்.

''அப்பா!'' என்று அவர் வணக்கத்துடன் தந்தையை விளித்துவிட்டு, எழுந்து நிற்க, அருணாசலம் துள்ளிக் குதித்தான்.

ராமநாதையர், தாம் சொல்லவேண்டியதைக் கேட்கத் தயாராக நிற்கும் வைத்தியநாதையரை நோக்கி, ''சரி, நாங்கள் உத்தரவு வாங்கிக்கொள்ளுகிறோம். ஏதோ, கல்யாணம் என்பது ஈச்வரனின் செயல். அவனன்றி ஓரணுவும் அசையாது! நம் கையில் ஒன்றுமில்லை. பார்ப்போம்'' என்று கூறிவிட்டுத் தாம்பூலம் பெற்றுக்கொண்டு கிளம்பினார். பிள்ளைகளும், மனைவியும் பின் தொடர்ந்தனர். பாலு சற்றுப் பின்தங்கி, தனியாக விடை பெற்றுக் கொண்டான்.

''நான் போய்விட்டு வருகிறேன்'' என்று அவன் கூறும் போது சற்று லேசாகச் சிரித்தது போலக் கூடத் தோன்றிற்று. ஆனால் சந்தேகத்துக்கே இடமில்லாத விஷயம் என்ன வென்றால், அவன் வெகு சொகுசாகத் தன் பார்வையைக் கூடத்து ஜன்னல் பக்கம் ஓட்டியதுதான். வைத்தியநாதையர் சாமான்யப்பட்டவரா? சூடிகையில்லாமலா அவர் அவ்வளவு திரவியம் சேமித்து வைத்திருந்தார்? பாலுவின் திருஷ்டியைப்

பின்பற்றி நோக்கும்போது அவர், மீனாக்ஷியும் தம் சகதர்மிணியும் அங்கு நிற்பதைக் கண்டார். காணக் கிடைக்காத காட்சியைக் கண்டுவிட்டவர்போல் களிகொண்டார்.

வந்தவர்கள் சற்று நகர்ந்த பிறகு, அவர் தம் சதை பருத்த தேகத்தையும் பாராட்டாமல் துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடினார். ''அடியே, பார்த்தாயா, பையன் எப்படி ராஜா மாதிரி இருக்கிறான்? என்ன கம்பீரம்! கண்ட உதவாக் கரைக்கும் கலெக்டர் வேலை கொடுத்து விடுவார்களா என்ன? அதிகாரத்துக்கு ஏற்ற தோரணை, வயசுக்குத் தக்க மிடுக்கு இருந்தால்தான் அழகு. அவனுக்கு நம் குட்டியைப் பிடித்துவிட்டதடீ!'' என்று உற்சாகம் மிகுந்து அவர் சொல்லுவதற்கும், கூடத்துக் கடிகாரம் மெதுவாக ஐந்தடிப்பதற்கும் சரியாக இருந்தது. ''பார்த்தாய், நல்ல சகுனம் கூட ஆகிறது. இந்த வைத்தி ஒன்றைப் பிடித்தால் அதை நடத்தாமல் விட்டு விடுவானோ? அந்தப் பரமசிவனே இவனிடம் பயப்பட வேண்டுமே? நான் ஓர் ஐ.ஸி.எஸ்.ஸுக்குத்தான் என் பெண்ணைக் கொடுப்பேன் என்றேன். அதுதான் நடக்கப் போகிறது'' என்று அவர் அகமகிழ்ந்தார்.

''மூன்றாவது வீட்டு பாலு கிடைத்துவிட்டால் உலகத்தையே சாதித்துவிட்டாற்போல் எண்ணம் போலும்! என்ன அதிசயம்? நம் வீட்டுச் சீருக்கும் சிறப்புக்கும் சப் கலெக்டர் மாப்பிள்ளை கிடைப்பது, கிடைக்கத் தகாத பாக்கியமாக்கும்? கோவிலூர் மிராசுதார் பிள்ளைக்குக் 'கண்டேன், கண்டேன்' என்று பண்ணிக் கொண்டிருப்பார்கள். அவன் லட்சத்துக்கு அதிபதி. இவனும் நானும் என்ன, மஹா மஹா உன்ஹத உத்ஹியோகம் பண்ணினாலுங்கூட, அண்ணன் சம்பாதிப்பது அம்பி அரைஞாண் கயிற்றுக்குக்கூட ஆகாது!''

வைத்தியநாதையரின் இல்லாள் தன் பேச்சு ஆணித் தரமாகத் தோன்ற 'ஹ' சப்தத்தைச் சற்றும் பொருத்தமற்று

உபயோகிப்பது வழக்கம். அதைக் கையாளும்போதே அவளுடைய கணவர் சம்பாஷணை சீக்கிரம் முடிவடையாது என்று எண்ணினார் என்று நினைக்கவேண்டியிருந்தது. ஏனெனில், அவர் மேல் துண்டால் விசுப்பலகையைத் தட்டிவிட்டு உட்கார்ந்துகொண்டார். பெண்மீனாக்ஷியும் வந்து அவர் பக்கத்தில் அமர்ந்தாள்.

அந்த அம்மாள் மீண்டும் தொடங்கினாள். ''ஐந்து பிள்ளைகள் குடும்பம். மூத்தவன் ஊரிலேயே உட்கார்ந்து விட்டான், 'தம்பி மார்கள் சம்பாதித்துப் போடட்டுமே, கவலையற்றுச் சாப்பிடலாம்' என்று. முரளி ஓர் அசத்து. கையில் ஒரு சிசு. இன்னும் அதற்கு அன்னப் பிராசனத்திலிருந்து அவன் பேரன் ஷஷ்டியப்த பூர்த்தி வரை நடத்தியாக வேண்டும். அவன், கலெக்டர் என்ன; கவர்னர் ஜனரல் வேலை பார்த்தாலுங்கூடப் போதாது சம்பளம்'' என்றாள்.

''போடி, என்னவோ பேசுகிறாயே? இவன் என்றால் நாளைக்குப் பட்டமும் பதவியும் பெற்று, சேவகனும் சொக்கட்டானுமாக ஹோதாவாக இருப்பான். நம் மீனு ராணி போல் இருப்பாள். நமக்குப் பணமா இல்லை, மறுபடியும் பணத்தின் மேல் விழு? மூக்கும் முழியுமாக அர்ச்சுனனைப் போன்ற பிள்ளை. படிப்பு வேறு இருக்கிறது. பெரிய சர்க்கார் உத்தியோகம். வேறு என்ன வேண்டும்?''

''ஒன்றும் வேண்டாம். காரிலே ஜம்மென்று வந்து இறங்கிவிட்டு, பெட்ரோலுக்கு நாலு ரூபாய்க்குத் திண்டாடுவான். எனக்குத் தெரியாதாக்கும்? பார்த்துப் பார்த்துக் கிடக்கிறது!''

''மறுபடியும் இதையே சொல்லுகிறாயே? பணம் எதற்கடீ? அவன் சம்பளம் முழுவதும் அவர்கள் குடும்பத்திற்கே கொடுத்து விடட்டுமே. நம் ஆஸ்தி முழுவதும் அவனுக்குத்தானே?''

இப்படியே இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். மீனாக்ஷி, தகப்பன் முகத்தை மாற்றித் தாயின் முகத்தையும், அதை மாற்றி மறுபடியும் தகப்பனாரின் முகத்தையும் பார்ப்பதற்குள் அவளுக்குக் கழுத்துச் சுளுக்கிக்கொண்டு விடும் போலிருந்தது.

வைத்தியநாதையர் அதைக் கவனித்துவிட்டு, ''உனக்குப் பாலு தானேடி வேண்டும், ஹ¤ம்?'' என்று அவளை மிகவும் செல்லமாகக் கேட்டார்.

''போ, அப்பா, எனக்கு வெட்கமாக இருக்கிறது'' என்று அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டபோது அசடு வழிந்தது.

9. பணமும் மணமும்

''அம்மா, என் கையில் என்ன இருக்கிறது பார். சின்ன மன்னி எழுதிய கதை இன்று தபாலில் வந்திருக்கிறது. 'மன்னரது வருகை'யாம் அதன் பெயர்'' என்று கூறியவாறு ஓடிவந்தான் முரளி.

''எதோ, காண்பி, பார்க்கிறேன்'' என்று அபிதா ஓடிவந்தாள். அதற்குப் பதில், சிரித்துக்கொண்டே புத்தகத்தைப் பின்புறமாக வைத்துக்கொண்டு அதைப்பற்றி விமரிசிக்க ஆரம்பித்துவிட்டான் முரளி. ஜானகியம்மாள் முரளீதரனிடத்திலிருந்து புத்தகத்தை வாங்கி அபிதாவிடம் கொடுக்க முயன்றாள்; ஆனால் நடக்கவில்லை.

'' 'மன்னரது வருகை'யா? ஏன் மன்னி, பேசாமல் 'பாலுவின் வருகை' என்றோ, 'என் மைத்துனர் விஜயம்' என்றோ வாஸ்தவத்தை எழுதுவதுதானே?'' என்று கேட்டான் முரளி.

அபிதா காது கேட்காததுபோல் இருந்துவிட்டாள். அப்படியும் அவன் விடாப்பிடியாக அவளிடம் பேச்சுக் கொடுத்தான். அம்மாவிடம் சொல்லுவதுபோல் சொல்லி அவளைக் கேலி செய்தான்.

''அம்மா, அந்த ஆசிரியர் 'மேதாவி' எழுதி இருக்கிறான் பார். நான் படிக்கிறேன் கவனி: 'இந்த இளம் எழுத்தாளரின் கற்பனா சக்தி மிக அருமையாக வேலை செய்திருக்கிறது. வர்ணனைத் திறமை மிகவும் போற்றத்தக்கதாக இருக்கிறது. இத்தகைய 'மன்ன'ரை நாம் அடிக்கடி வாழ்க்கையில் சந்திக்கிறோம். எழுத்தாளரின் கவனசக்தி மிகவும் தீட்சண்ணியமானது என்று புலப்படுகிறது'-'' முரளி சற்று நிறுத்திவிட்டு விஷமம் மிகத் தன் மன்னியை நோக்கினான். மறுபடியும் பேச ஆரம்பித்தான். ''அம்மா, இதில் கற்பனா சக்திக்கு எங்கே இடம் இருக்கிறது? நடந்ததை நடந்தது போலவே எழுதுவதில் என்ன கஷ்டம்? பாலுவைப் போட்டோ பிடித்துவிட்டாள், மன்னி, அவ்வளவுதான்.''

''முரளீ, உன்னை அறியாமலே என்னைப் பாராட்டுகிறாய்! கச்சிதமாகப் போட்டோ பிடிப்பதுபோல் வர்ணிப்பது ஒரு கலைத் திறம்தானே?'' என்று கேட்டாள் அபிதா, சிரித்துக் கொண்டே.

''யார் இல்லை என்கிறார்கள்? உங்களைப் பற்றியே நான் பேசவில்லை. மற்றவர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கிறேன். எல்லோரையும் பிடித்துக் கதையில் நுழைத்து விடுவது என்றால் சற்று ஜாக்கிரதையாய் இருக்கவேண்டாமா?'' என்றான் முரளி.

''முரளி, நான் சொல்வதைக் கேள். நான் யாரையும் வைத்துக்கொண்டு எழுதவில்லை. மனத்தில் தோன்றியதை எழுதுகிறேன். நீ இப்படியெல்லாம் பேசினாயானால்

எல்லோரும் தங்களைப்பற்றி எழுதியதாக நினைத்துக் கொண்டு ஏதாவது மனஸ்தாபம் வந்துவிடப் போகிறதே என்று பார்க்கிறேன். உலகத்தில் எல்லாவித மனிதர்களும்தான் இருக்கிறார்கள். ஒரேவித நடை, உடை, பாவனை, சுபாவம், ரூபம் கொண்டவர்கள், அநேகம் பேர் இருக்கின்றனர். 'பம்பாயில் ஒரு சிறு பெண்' என்றால் கலா, 'கிராமத்தில் இருக்கும் மனிதர்' என்றால் பெரியண்ணா, 'கலெக்டர்' என்றால் பாலு அண்ணா என்று நீ கணக்குப் போட்டால் அப்புறம் பம்பாயிலும் கிராமத்திலும் இவர்களைத் தவிர மனிதர்களே கிடையாதா? அல்லது உலகம் முழுவதற்கும் ஒரே ஒரு சப் கலெக்டர்தானா?''

''என்னவோ மன்னி, இதில் வரும் 'மன்னர்' பாலு என்று தான் எனக்குத் தோன்றுகிறது. அது இல்லை என்று சொல்லுங்கள் பார்ப்போம்.''

''நான் அவரைப்பற்றி எழுதவில்லை என்று நன்றாகச் சொல்வேன்.''

முரளி ஏதும் பதில் கூறுவதற்குள், ''என்னடா?'' என்று முரளியை அதட்டலாகக் கேட்டுக்கொண்டே அங்கே வந்தான் பாலகோபால்.

முரளி கூத்தாடும் கண்களுடன் அபிதாவின் பக்கம் நோக்கினான். 'சொல்லிவிடட்டுமா? சொல்லிவிடட்டுமா?' என்று பயமுறுத்துவதுபோல் அவன் உதடுகள் துடித்தன. அபிதாவுக்கு இந்தப் பயத்தில் கண்களில் நீர்த்திரை படிந்துவிட்டது.

முரளி அதைக் கவனித்தான். இருந்தாலும் முகத்தில் அந்தக் குறும்புத்தனம் நீங்காமலே பதில் சொன்னான். ''என்ன என்று கேட்கிறாயா? மன்னி ஒரு கதை எழுதி இருக்கிறாள். 'ராதையின் கிருஷ்ணா, ராதாகிருஷ்ணா' என்று பெயர் அந்தக்

கதைக்கு. தன்னையும் அருணாசலத்தையும் வைத்தே எழுதி இருக்கிறாள். அன்று நம் கோவிலில் உத்ஸவம்...'' என்று ஏதோ ஆரம்பித்தான்.

''எங்கே? நான் பார்க்கலாமா?'' என்று பாலகோபால் அபிதாவைக் கேட்டான். அபிதா முகத்தில் வந்த புன்சிரிப்பை அடக்கிக்கொண்டு தலையை ஆட்டினாள். அவள் மாமியாரின் ஏற்பாடுகளில் ஒன்று என்னவென்றால் நாட்டுப் பெண்கள், தங்கள் கணவனுக்கு அடுத்த தம்பிவரை பேசாமல் இருப்பதுதான் மரியாதை என்பது தான். விசாலம் அருணாசலத்தினிடம் பேசமாட்டாள், பாலுவிடம் பேசுவாள். அபிதா பாலுவிடம் பேசக்கூடாது, முரளியிடம் பேசலாம். பாலுவின் பெண்டாட்டி வந்தால், அவள் முரளியிடம் பேசக்கூடாது, நடராஜனிடம் வேண்டுமானால் பேசிக் கொள்ளலாம் போலும்! தான் மைத்துனனுடன் சரிசமமாகப் பேசுவதைப் பார்த்துத் தன் மாமியார் ஏதாவது நினைத்துக் கொள்ளுவாளோ என்று பயந்தவளாய் அபிதா திரும்பிச் சுற்றுமுற்றும் பார்த்தாள். மாமியார் பார்க்கவில்லை. தான் முரளியைப் பேரிட்டு அழைத்து அடிக்கடி சகஜமாகப் பேசுவதே ஜானகியம்மாளுக்கு இஷ்டக் குறைவு என்று அவள் அறிவாள். ஆனால் முரளியின் சுபாவமும் அவளுடைய சுபாவமும் காலப்போக்கும், மேலும் முரளீதரன் அபிதாவைக் காட்டிலும் இரண்டு மூன்று வயது சிறியவன் என்பதும் காரணமாக அந்தக் கட்டுப்பாடு நிலைக்கவில்லை.

பாலு கதையைப் படித்துவிட்டு, மிகவும் சந்தோஷப் பட்டான். அருணாசலத்தினிடம் அதைப் பிரகடனம் செய்து கொண்டிருக்கும் போது, ஜகந்நாதன் அங்கே வந்தார். அவர்கள் பேச்சைச் சற்றுக் கேட்டுக்கொண்டு நின்றார்.

''இதுதானடா நான் மிகவும் பிரியப்படுகிறேன். எவ்வளவு அழகாக எழுதி இருக்கிறாள் பார். அவளை மேலும்

மேலும் உற்சாகமூட்டி முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது நம் கடமை'' என்று பாலு அளவளாவிக் கொண்டிருந்தான்.

அருணாசலத்திற்குப் பெருமை தாங்கவில்லை. தானும் உடன் சேர்ந்து வாயாரப் புகழவேண்டும் என்றுதான் இருந்தது. ஆனாலும் அது நம் குடும்பங்களில் வழக்க மில்லாததால் சங்கோசப்பட்டவனாய், தன் நயனங்களினா லேயே தன் பெருமையை, மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த அபிதாவுக்குக் காட்டினான்.

ஜகந்நாதனுக்கும் மிகவும் மகிழ்ச்சி. தம்பியின் மனைவி இவ்வளவு அழகாக எழுதுகிறாளே என்ற சந்தோஷத்துடன், அருணாசலம் - அபிதா நயனத் தந்தி நாடகம் பார்ப்பதன் ஆனந்தம் வேறு சேர்ந்துகொண்டது. தாம் வந்த காரியத்தைப் பிரஸ்தாபித்தார் அவர்; ''பாலு! அவருக்கு என்ன பதில் சொல்வது என்று அப்பா கேட்கிறார்'' என்றார்.

''என்ன பதில்? சம்மதம்தான் என்று சொல்லி அனுப்பி விடுங்கள்'' என்றான் பாலகோபால், சாவதானமாக. 'கடைக்குப் போய்க் கத்தரிக்காய் வாங்கிக் கொண்டுவா' என்று சொல்வதில் கூட ஜானகியம்மாள் இன்னும் கொஞ்சம் உணர்ச்சி காண்பித்திருப்பாள்! இதைக் கூறிவிட்டுப் பாலு மிகவும் அமைதியாக விட்ட சம்பாஷணையை மீண்டும் தொடங்கினான். ''நல்ல ஹாஸ்ய உணர்ச்சி இருக்கிறது. ஆனால் நம்மவர்கள் தம்மைப்பற்றி எழுதினால் தப்பர்த்தம் செய்துகொண்டு மனத்தாங்கல் அடைந்து விடுவார்கள். அதுதான் கஷ்டம். நம்மிடம் இருக்கும் நல்லதை, பொல்லாததை எடுத்துக்காட்டி அழகாகச் சொன்னால் அதை ரசித்தால் என்ன? வேறு யாரையாவது கேலி செய்தால்தான் நாம் ரசிப்போம். நம்மைப்பற்றி என்றால் கோபம் வந்து விடுகிறது. அதுதான் கூடாது. அமெரிக்கப் படங்கள் பார்க் கிறோமே; ஒருத்தருக்கு மூக்குச் சப்பை என்றால் அதையே

வைத்து வேடிக்கையாகப் பேசி விளையாடுகிறார்கள். ஒருவனுக்குக் கை மொண்டியென்றால் அவனையும் நடிக்கச் செய்து அவன் குறைபாட்டை நம் அநுதாபத்திற்கும், இரக்கத்திற்கும், கேலிக்கும் இடமாக்குகிறார்கள். அந்த நடிகனும் அதை ரசிக்கிறானேதவிர...''

பாலகோபால் தன் மேல் நாட்டு மோகத்தை ஆரம்பித்து விட்டால் பிறகு அவனை நிறுத்துவதே கஷ்டம் என்று ஜகந்நாதன் அறிவார். ஆயின் தன் வாழ்க்கையைப் பாதிக்கும் முக்கியமான கட்டமாகிய விவாகத்தைப் பற்றிய பேச்சை அவ்வளவு சீக்கிரம் அலட்சியமாய்ப் பாலு தீர்ப்புக் கட்டி விடுகிறது அவருக்குப் பிடிக்கவில்லை. ''பாலு, உன் பேச்சு அப்புறம் இருக்கட்டும். கொஞ்சம் நின்று நிதானித்து யோசித்துப் பதில் சொல். கல்யாணம் என்பது லேசான பொறுப்பல்ல. உன்னுடைய வாழ்வையும் உன்னையே நம்பி வரும் ஒரு பெண்ணுடைய முழுவாழ்க்கையையும் பாதிக்கும் பெரும் கடமை அது. ஆதலின், தீர ஆலோசியாமல் விளையாட்டாகப் பேசுவது நியாயமல்ல. அவளைப் பார்த்தாயே, உனக்குப் பரிபூர்ணமாகப் பிடித்து இருக்கிறதா?'' என்று அவர் கேட்டார்.

பாலகோபாலன் அவருக்குப் பதில் சொல்லுமுன் அருணாசலத்துடன் தன் பேச்சை முடிப்பதைப்போல் ஒரு வாக்கியம் சொல்லிவிட்டே நின்றான். ''நம்மவர்களில் ஒரு நொண்டியைப் பிடித்துப்போடு; அவன் தன் குறையை உலகமெல்லாம் பார்க்கிறதே என்று தீராத்துக்கம் அடைந்து, மனம் உடைந்து இடிந்து போய்விடுவான்.'' பிறகு தன் மூத்த அண்ணனின் பக்கம் திரும்பினான். ''என்ன சொன்னாய்?''

''உன் கல்யாணத்தைப்பற்றி நன்றாக ஆலோசித்துச் சொல் என்றேன்'' என்று சாந்தமாக மறுபடியும் கூறினார் ஜகந்நாதன்.

''எனக்கு அது சௌகரியமாக இருக்கிறது. சரிதானே?'' என்றான் பாலகோபால்.

பாலகோபாலனின் அலட்சியமும், சுஷ்க வியவகாரமும் சுபாவிகமே ஆயினும் ஜகந்நாதன் சற்று மனம் நொந்தவராய் முகத்தைச் சுளுக்கிக்கொண்டு, அவன் சொன்னதைப் பெற்றோர்களுக்குச் சொல்வதற்குச் சென்றார். அவர் முகத்தில் அதிருப்தி குடிகொண்டிருந்தது. தந்தையை வைத்தியநாதையர் வீட்டிற்கு அனுப்பிவிட்டுத் தம் அறைக்குச் சென்றார்.

''நீயும் வாயேன், ஜகம்'' என்று அழைத்தார் தகப்பனார்.

''இல்லை, அப்பா, அருணாசலத்தை அழைத்துக் கொண்டு போங்கள்'' என்று கூறிவிட்டார் அவர்.

அவர் வாடிய முகத்துடன் வீற்றிருப்பதைக் கண்ட விசாலம் விஷயம் என்ன என்று விசாரித்தாள்.

''என்ன இருந்தாலும் படித்தவர்கள் தங்கள் பிகுவைக் காண்பிக்காமல் இருப்பார்களா? அவன் சீமைக்கெல்லாம் போய்ப் படித்துவிட்டு உலக மேதை அனைத்தும் பெற்றிருப்பவன். நான் ஒரு பட்டிக்காட்டு முட்டாள். வெறும் இண்டர்மீடியட். கிராமத்தில் தினமும் குடியானவனுடன் பேசுபவன். மண்ணிலே திளைப்பவன். குறுகிய மனப் பான்மைக்காரன். என்னுடன் அவன் பேசுவானா? அருணாசலம் என்றால் படித்தவன், கலையுணர்ச்சியுள்ளவன். அவர்களெல்லாம் கலா ரசிகர்கள்...''

''பாலு மைத்துனரின் பேச்சுக்காகவா இப்படித் தாபம் கொள்கிறீர்கள்? அவர் சுபாவமே அதுவே தவிர, உங்களைத் தனியாக அவமதித்தாரா? நீங்களா இப்படிப் பேசுவது? நீங்கள் அவரைப் புரிந்துகொள்ளாவிட்டால் யார் புரிந்துகொள் வார்கள்? அவருக்குத் தனியாக இருந்து இருந்து 'வெட்டு

ஒன்று துண்டு இரண்டு' என்று பேசி வழக்கமாகிவிட்டது. நன்றாகத்தான் இருக்கிறது! எழுந்திருங்கள். உங்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. சிறு குழந்தையைப்போல் வருத்தப்படுகிறீர்களே? நீங்கள் படித்த அளவு இந்தப் பட்டதாரிகள் படித்து விட்டார்களாக்கும்! போதுமே, அவர்கள் மேதை ஜாஜ்வல்லியமாக ஜ்வலிக்கிறதும் உங்கள் அறிவீனம் தரையோடு தரையாக மங்கிக் கிடப்பதும்! அவர்கள் படிப்பு உத்தியோகம் பெறுவதற்கு, பணம் சம்பாதிப்பதற்கு, வயிறு வளர்ப்பதற்கு. ஆனால் நீங்கள் புத்தி விசாலத்திற்காக, மனச்சாந்திக்காக, ஆத்ம சுத்திக்காகப் படித்தீர்கள். உங்களுக்கு வேண்டிய நேரம் இருக்கிறது, வித்தைக்காகச் செலவழிக்க. அவர்களுக்கு ஆபீஸுக்குப் போவதற்கும், வீட்டுக்கு வருவதற்குமே நேரமில்லையே? பேசாமல் இருங்கள். மொத்தத்தில் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? மீனாக்ஷியைப் பாலு மணந்தால் அவர்கள் சந்தோஷமாக இருப்பார்களா என்ற கவலை உங்களைப் பைத்தியமாக அடித்திருக்கிறது. அவருக்கு வயசாகவில்லையா? மீனாக்ஷி கறுப்பானாலும் குணம் தங்கம். எப்படியோ சந்தோஷமாக இருக்க வேண்டியதுதானே? அதற்காகக் கவலைப்பட்டால் முடியுமா? உங்களால் இயன்றதைச் செய்துவிடுங்கள். அம்மாதம்மால் முடிந்த வரை சொல்லிப்பார்த்து விட்டார். அவருக்குத் தெரியாததை நாம் சொல்லப் போகிறோமா? வேறு ஒன்றும் வேண்டாம், முரளியைக் கேட்டுப் பாருங்கள். அவன் செய்யும் வேடிக்கைகள்!'' என்றாள் விசாலாக்ஷி.

''விசாலி, அவர்கள் என்னைப் பைத்தியமாக்கவில்லை. நீதான் என்னைப் பித்தனாக அடித்து விடுகிறாய்'' என்று செல்லமாக அவள் கன்னத்தில் லேசாகத் தட்டிவிட்டு அலுவல்களைக் கவனிக்கச் சென்றுவிட்டார் ஜகந்நாதன்.

அவர் கூடத்தைத் தாண்டிச் செல்லும் சமயம், முரளீதரன் சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

''மன்னி, இனி நீங்கள் 'மன்னரது சுயம்வரம்' என்று எழுதலாம். அம்மா, பாலு மீனாக்ஷியையா கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறான்? அவர்கள் வீட்டு நூக்கமரப் பீரோவையும் கோத்ரேஜ் இரும்புப் பெட்டியையும் கண்டு மோகித்து, கரையிலாக் காதல் கொண்டு, மணவாளனாகச் சம்மதித்துவிட்டான். ஏன் மன்னி, எப்படி என் நடை? உங்கள் எழுத்தாளர் பரிபாஷையில் இருக்கிறதா?''

ஜகந்நாதன் அவனை அடக்கவில்லை. மனத்திற்குள் சிரித்தவாறே அவர் வாசற்புறம் சென்றார்.

10. முதல் சந்திப்பு

பாலகோபாலன் அறைக்குள் நுழைந்ததும், அபிதா வெளியே நழுவிவிட்டாள். பாலு அவளைப் பார்த்துச் சிரித்தபடியே, ''ஏன் போய் விடுகிறீர்கள் மன்னி? 'முதல் சந்திப்பை'ப் பற்றி எழுதுவதற்கா?'' என்றான்.

அபிதா பதில் சொல்லவில்லை. அவள் சிரித்துக் கொண்டே ஓடிவிட்டாள். கட்டுப்பாட்டினால் பேசாமல் இருந்தாளே தவிர அவளுக்குத் தன் மைத்துனனுடன் சகஜமாகப் பேச இஷ்டம்தான். அவன் கூறுவதெல்லாம் மிக மிக வாஸ்தவம் என்றே அவள் எண்ணினாள். அன்று அவன் அவளை மெச்சிப் பேசினதிலிருந்து அவளுக்கு அவனிடம் மதிப்பு வந்துவிட்டது. முன்பு அவள் அவனைக் 'கர்வி' என்று பழித்ததையெல்லாம் நினைத்து நொந்து கொண்டாள். அவனைக் கேட்டு இன்னும் மேலைநாட்டாரின் வாழ்க்கையைப்பற்றி அறிய ஆவல் கொண்டாள். 'இனிமேல்

என்ன கஷ்டம்? அவருக்கு விவாகம் ஆகிவிட்டது. மீனு வந்துவிடுவாள். அவளைக் கொண்டு, அவள் மூலமாக அவரிடம் பழக முடியுமே' என்று நினைத்தவளாய், அபிதா தன் அறையில் போய் உட்கார்ந்து கொண்டாள். அவளை அறியாமலேயே கை பேனாவை எடுத்து, பேப்பரின் முகப்பில் 'பேட்டி எப்படியோ?' என்று ஒரு தலைப்பை எழுதிற்று. சுய நினைவு வந்து அறிந்தபோது, அவள் வெட்கி அதை அடித்து விட்டாள். 'அவர் சொன்னது என்ன, நாம் செய்வது என்ன? அவர் அதை மெச்சித் தம்மைப்பற்றி எழுதினால்கூட ஆட்சேபிக்கமாட்டேன் என்றதனால்தானே எனக்குப் புத்தி இப்படிப் போகிறது?' என்று பாலுவின் பேரில் பழியை வீசி எறிந்துவிட்டு, நிம்மதியாகத் தன் படுக்கையில் விழுந்தாள் அபிதா.

★ ★ ★

தன்னைப் பற்றி இவ்வளவு அபிப்பிராயங்கள் கொள்ளப் படுகின்றன என்றே அறியாமல் பாலகோபாலன் தன் மனைவியிடம் நெருங்கினான். அருகே இருந்த ஒரு நாற்காலியில் அவன் அமர்ந்து கொண்டான். அது வாசற் படிக்கருகில் இருந்தபடியால், மீனாக்ஷி நாணிக்கோணிக் கொண்டும், தலை கவிழ்ந்துகொண்டும், திடீர் திடீர் என்று ஜட்கா வண்டிக் குதிரை நெற்றி மயிரைக் குலுக்கிக் கொண்டு நிமிர்வதுபோல் நிமிர்ந்து கொண்டும், கணவனைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

பாலகோபால் அப்பொழுதே முதல் முதலாக 'மனைவி' என்ற எண்ணத்துடன் மீனாக்ஷியை உற்றுப் பார்த்தான். என்னதான் காசுக்காக அவன் அவளை மணக்கச் சம்மதித்தான் என்றாலும் அவன் மனிதன், அதிலும் இளம்

காளை; ஆதலால் புதுமண வாழ்க்கையின் ருசியை அறிய ஆவல் கொள்வது இயற்கை தானே? அந்த முதல் பார்வை அவனுக்கு அவளிடம் அடக்க முடியாத ஒரு வெறுப் புணர்ச்சியைக் கிளப்பிவிட்டது. முகத்தில் அது பிரதி பலிக்காமல் இருக்க அவன் மிகவும் சிரமப்பட்டான்.

மீனாக்ஷியின் ஸ்தூலமான சரீரமும், சப்பை மூக்கும், கறுப்பு நிறமும் அவன் கண்களில் நிறைந்து, கன்னத்தில் அறைந்தாற் போலிருந்தன. அத்துடன் அவள் தேர் அலங்காரம்போல் நகைகளைப் பூட்டிக் கொண்டிருந்ததும், அவளது அசட்டு லஜ்ஜையும் அவனுடைய நாசூக்கான தன்மைக்குச் 'சுரீர்' என்றிருந்தன.

அவன் வயது வந்த - படித்த - பண்பு பெற்ற - மனிதன். அதிலும் ஒரு ஜில்லாவின் மனிதர்களின் சுக துக்கங்களை அறிந்து கடமை செலுத்த வேண்டிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகம் பெற்றவன். பாலகோபாலனின் மனம் சற்று வேகமாக யோசனை செய்ய ஆரம்பித்தது.

'நாம் செய்தது சரியான காரியந்தானா? ஒரு பெண்ணை நம் சுகத்திற்காக, சௌகரியத்திற்காகப் பலியிட்டு விட்டோமா? நம் போன்றவர்கள் சமூகத்திற்கு நல்ல உதாரணத்தால் வழி காட்ட வேண்டியவர்கள் அல்லவா? பல பேர் வாழ்க்கையின் நியாய அநியாயத்தைப் புரிந்துகொண்டு திருத்த வேண்டியவர்கள் அல்லவா? நாம் படித்த படிப்புக்கும், பல இடம் சென்று கிடைத்த அநுபவத்திற்கும், பண்பு பெற்றுவிட்டதாக நினைத்து இறுமாப்புக் கொள்ளும் அகந்தைக்கும் தீராத அவமானத்தைத் தேடிவிட்டோமா?'

பாலகோபாலன் தன் உள்ளத்தில் மோதும் சர்ச்சை அலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். தன் ஊனக் கண்கள் மீனாக்ஷியைக் கொட்டாமல் பார்த்துக் கொண்

டிருப்பதை அவன் அறியவில்லை. ஆனால் அப்பார்வை யினால் அவள் சொல்லொணா வேதனை அடைந்தாள். செல்வமாகப் பட்டுத் திண்டுக்களில் மிருதுவாகச் சாய்ந்து உட்கார்ந்து பழகிய அவளுக்கு, வெறும் தரையில்கூட உட்கார்ந்து அறியாத அவளுடைய மிருதுத் தன்மைக்கு, கால் கடுக்க நிற்பது மிகவும் சிரமத்தை அளித்தது. ஆனால் வீட்டில் பெரியவர்களும், அண்டை அசல் தோழிகளும் சொல்வதி லிருந்தும் அவள் தெரிந்து கொண்ட மட்டில், உடலில் ஊறிக் கொண்டிருந்த பழக்க வழக்கங்கள் எடுத்துக் காட்டியமட்டில், பதியின் எதிரில் உட்காருவது மன்னிக்கத் தகாத அவமரியாதை என்றே அவளால் எண்ண முடிந்தது. எதிரே எதிர்த்துப் பேசினாலும், சண்டை பிடித்தாலும், உதாசீனமாக இருந்தாலும் அவர் அந்தண்டை போன பிறகு கைசொடுக்கி ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டாலும், கணவன் வந்தால் எழுந்து நிற்க வேண்டும்; பிறர் எதிரில் அவருடன் பேசக்கூடாது; முடிந்த மட்டில் 'நீங்கள்' என்ற எழுவாய் கூட இல்லாத மொட்டை வாக்கியங்களில் 'வருகிறீர்களா? எங்கே போயிருந்தீர்களோ?' என்று பேச வேண்டும் - இன்னும் இதே ரகத்தில் அவள் அநேகம் கற்றிருந்தாள். அத்தகைய கடினக் கோட்பாடுகளுக்கிடையே வளர்ந்த அவளுக்கு இப்பொழுது என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவளது பருத்த தேகம் இன்னும் அதிகக் கஷ்டத்தை அளித்தது. நின்று நின்று இடுப்பும் வலி எடுத்தது. முதுகு விரிந்து விடுமோ என்று அவள் எண்ணினாள். வேறு சமயமாக இருந்தால் அவளுக்குத் துக்கம்கூட வந்துவிட்டிருக்கும். ஓர் இளம் பெண் தன் காதலனை முதல் முறையாகச் சந்திக்கும்போது ஏற்படும் வேதனை அனைத்தும் அவளைப் பொறுத்த வரையில் இன்ப வேதனையே. நாணம் எனும் போர்வை அவளைத் தழுவி, வேதனையைத் தடவி அழித்து ஆறுதல் தந்தது.

பாலுவும் தான் வேதனையுற்றான். ஆயின் அவன் அவளைப் போல் இன்புறவில்லை. அவனுக்கு மிளகாய் அரைத்துவிட்டாற் போல் மண்டையில் ஒரு வேதனை சுரீர் என்று ஏறித் துளைக்க ஆரம்பித்தது. அவளுடைய தர்ம சங்கடத்தைக் கவனிக்காமலேயே அவன் அவள் தோற்றத்தை ஏற இறங்கப் பார்த்தான்.

'நடுவில் வகிடு எடுத்து, கொஞ்சம் குறைவாக எண்ணெய் தடவி, தூக்கி வாரிப் பின்னிவிட்டு, குறத்தி மாதிரி கழுத்தில் தொங்கும் இரத்தினமாலைகளை யெல்லாம் வீசி எறிந்து விட்டு, கையில் இரண்டு தங்க வளையல் மட்டும் போட்டு, மெல்லிய வெள்ளை 'ஆர்காண்டி' ரவிக்கை போட்டு, இந்தப் பல பூப்போட்ட வாயில் புடைவையைக் கழற்றி எறிந்துவிட்டு, அகலக் கரை போட்ட வெளுத்த நிறப்புடைவை ஒன்று கட்டிவிட்டால் ஒரு சமயம் பார்க்க வழங்குமோ? முதலில் பீப்பாய்க்குப் பட்டம் போட்டாற் போன்ற அந்த ஒட்டியாணத்தைக் கழற்றி எறிய வேண்டும்.'

இப்படி அவளை அலங்கரித்துச் சீர்திருத்திக் கொண் டிருக்க பாலகோபாலனின் காதில் மீனாக்ஷியின் குரல் விழவில்லை. பாவம், அவளுக்கோ அந்த ஒரு முயற்சி மயக்கம் வந்து விடும்போல் செவிகளில் ஓசை கேட்டது. கண்கள் இருண்டன. புருஷனுக்கு முன், அவன் பேசாமல் இருக்க, முதல் முதல் பார்க்கும்போதே தானே வலுவில் போய்ப் பேசுவதா? எத்தகைய ஆணவம்! மீனாக்ஷிக்கு அவமானம் தாங்கவில்லை. தன் துணிச்சலை நினைக்க நினைக்க அவளுக்கு இதுகாறும் பயமுறுத்திக் கொண்டிருந்த அழுகை குபுக் குபுக் என்றது தொண்டையில். இனி அங்கு இருப்பது நியாயமில்லை; ஆபத்து என்று எண்ணியவளாய் அவள் வாய் திறவாமலே பாலுவைத் தாண்டி வெளியே செல்ல முயன்றாள்.

'ஒரு சாந்துத் திலகம் இட்டு, அந்த லோலாக்கை எடுத்துவிட்டு ஜிமிக்கைப் போட்டால் நன்றாக இருக்கும்' என்று மனத்திற்குள் குறித்துக் கொண்டான் பாலு. மீனாக்ஷி தன்னைத் தாண்டி வெளியே செல்ல எத்தனிப்பதை அவன் அப்பொழுதே உணர்ந்தான். அவளுடைய பட்டிக்காட்டு மட்டத்தையும், தன் நவநாகரிக நாசூக்கின் மேன்மையையும் அவன் அந்தக் கணத்தில் மறந்தான். தன் அருமை மனைவியைக் கண்ட இளம் யுவனாக மாறினான்.

''இரேன், என்ன அவசரம்? இப்படி உட்காரேன். சற்றுப் பேசுவோம். உன்னைப் பற்றி எனக்குத் தெரியவேண்டும். என்னை உனக்குப் புரியவேண்டும். நான் நாளைக்கு ஊருக்குப் போய்விடுவேன். அப்புறம் நீ என்னிடம் வந்தால்தான். அடுத்த மாதம் வருவாயோ இல்லையோ? ஆட்சேபணை இல்லையே?'' என்று அவன் கேட்டான். அவனுக்கு அதில் ஒன்றும் புதுமை தோன்றவில்லை.

மீனாக்ஷிக்கோ சொல்ல முடியாத குழப்பமாகிவிட்டது. அவனுடைய சலுகையும் நெருங்கிய பேச்சும் அவளைத் திகைப்புறச் செய்தன. தான் அவனிடம் போய்ச் சேரும் நாளைப்பற்றி அவன் தன்னுடன் பேசுவது அவளுக்கு மிகவும் நாணமாக இருந்தது. நாக்கு ஒட்டிக்கொண்டு பேசுவதற்கு விடாமல் தடுத்தது. அதைத் தொடர்ந்தாற்போலவே ஒரு தைரியமும் பிறந்தது. தான் எல்லாக் கிராமத்துப் பெண்களைப் போல் அல்ல, தன் கணவர் மிக்க நாகரிகம் வாய்ந்தவர், ஆதலால் தாங்கள் பேசுவதே சரி என்று அவளுக்குத் தோன்றிற்று. நாளைக்குச் சகிகளிடம் சொல்லிக் கொள்ள ஒரு பெருமையல்லவோ? அவள் மிகவும் நாணிக் கோணிக் கொண்டு, ''ஐயோ, எனக்கு வெட்கமாக இருக்குன்னா!'' என்று அசடு வழிய இளித்துவிட்டு முரட்டுத் தனமாகத் திமிறிக்கொண்டு ஓடினாள். கடைசியாக ஒரு 'இன்னா'

சேர்த்தது, பேச்சுக்கு ஒரு நகாசு கொடுத்ததாகவே அவள் எண்ணினாள். 'இன்னா, இன்னா' என்று எப்பொழுது பேசுவது? மிகவும் நெருங்கிப் பழகிக் குடித்தனம் செய்யும் போதல்லவா அப்படிப் பேசலாம்? தான் அப்படி முன்னேறி விட்டதில் தன் புருஷன் மிகவும் மெச்சுவான் என்று மனங்களித்தவாறே அங்கிருந்து அகன்றாள் பேதை மீனு!

ஆயின், பாலகோபாலனின் செவிகளில் 'இன்னா' ஒரு சவுக்கடிபோல் உறைத்தது. அவளுடைய கோணலும், அசடு வழிந்த முகமும், 'எனக்கு வெட்கமாக இருக்குன்னா!' என்று அவள் அசடு வழியக் கூறியதும் திரும்பத் திரும்ப அவனை உறுத்தின.

'என் ஜன்மம் முழுவதும் அழியாமல் ஒலித்துக் கொண்டு இருக்குமோ? வெட்கமாம்! ஹ¨ம்! எனக்கல்லவோ இப்பொழுது வெட்கமாக இருக்கிறது? நான் செய்த இந்தக் காரியத்திற்கு இந்த ஜன்மம் அல்ல, இன்னும் பதினாலு ஜன்மங்கள் எடுத்தாலும் நான் தலைதூக்க முடியாது' என்று முணு முணுத்துக் கொண்டான் அவன். அப்பொழுது அவன் வேறு சமயங்களில், பிறர் செய்தால், 'அநாகரிகம்' என்று கருதும் ஒரு செயலைச் செய்தான். கையால் தலையில் அடித்துக் கொண்டான்.

அவன் மனக் கண் முன் ஜகந்நாதன் - விசாலாக்ஷி, அருணாசலம் அபிதா, தன் அப்பா அம்மாவின் தாம்பத்தியம் தோற்றமளித்தது. அதைத் தொடர்ந்து, தன் மாமனார் வீட்டின் வெள்ளிப் பூண் போட்ட நூக்கமர விசுப் பலகையும்; சுவர் உயர நிலைக்கண்ணாடிகளும் வந்து நின்றன. முரளீதரன் குரல் வேறு, 'அவன் மீனாவையா கல்யாணம் செய்துகொள்கிறான்? அவர்கள் வீட்டு கோத்ரேஜ் இரும்புப் பெட்டியையல்லவா தாலி கட்டிவிட்டான்!' என்று கேலியாக ஒலித்தது.

என்றும் பழக்கமில்லாத புது வழக்கமாகப் பால கோபாலன் ஐ.ஸி.எஸ்.ஸின் அகம் குறுக்கு விசாரணைக்கு ஆளாயிற்று. அதை விரும்பாமல் அது மாட்டைப்போல் மிரண்டு உதைத்தது.

அப்பொழுது அவன் உள்ளத்தை ஓர் இரும்புச் சுவர் மூடிக் கொண்டது. ''எனக்கு அதுதான் சௌகரியம்'' என்று அன்று அண்ணனுக்குத் தான் பதிலளித்தது அவனுக்கு ஞாபகம் வந்தது.

★ ★ ★

கீழே இவன் இப்படி இருக்க, மாடி அறையில் அபிதா தான் எழுதிய கற்பனைச் சித்திரத்தைக் கணவனுக்குப் படித்துக் காண்பித்துக் கொண்டிருந்தாள். அதன் பிறகு அவன் மடியில் படுத்துக் கொண்டே, ''எப்படி இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''நீ எப்படித்தான் இருவர் மனத்தையும் அறிந்து ஆராய்ந்து அநுபவித்து எழுதுகிறாயோ? பாலு வரையில் நீ எழுதியிருப்பது மிகவும் பொருத்தம்; அவளைப் பற்றி எனக்கு எப்படித் தெரியும்?'' என்றான் அருணாசலம். மேலே பேசாமல் நின்றுவிட்டான்.

புதுக் கற்பனை உலகில் சஞ்சரித்துவிட்டு வந்த மெருகு அவள் முகத்தைப் பிரகாசிக்கச் செய்தது. அவன் அதைக் கண்டு பிரமிப்பு மிக அவள் முகத்தை நெருங்கினான். அதை எதிர்பார்த்து அவள் இன்பமாகக் கண்களை மூடிக் கொண்டாள்.

———

இரண்டாம் பாகம்

1. துடுக்குப் பெண்

அந்தக் குளத்தில் இப்பொழுது ஜலம் குறைந்து விட்டிருந்தது. பச்சை நிறம் கொண்ட அந்தத் தடாகத்தின் நீரில் சூரிய கிரணங்கள் முத்தமிடும்போது அதன் சிருங்கார அலைகள் பார்ப்போரைக் கண்டு மின்வெட்டுக்கள் செலுத்தின. அக்காட்சியில் ஒரு சினிமா. 'ஆர்க் லேம்ப்' அடியில் கல் நகைகளின் கண்ணைப் பறிக்கும் பிரகாகம், சாகசம் தோன்றும். மறுகணம் வானத்து மீன்கள் கீழே விழுந்து நீச்சல் தெரியாமல் தவிப்பது போன்ற ஒரு பிரமை தட்டும்.

சூரியன் தன் எஜமானத்துவத்தை நிலைநாட்டுவது போல் குளத்தைத் தன் இஷ்டப்படி உருக்கிவிட்ட வெள்ளிபோல் தத்தளிக்கச் செய்தான்.

ஜட்கா வண்டி ஒன்று நடராஜபுரத்திற்குள் நுழைந்து எங்கும் நிற்காமல் நேரே விரைவாக ஓடிவந்தது. அதன் அவசரமும் முன்னால் உட்கார்ந்திருந்த கலாவுக்குப் போதவில்லை; ''வேகமாகப் போ'' என்று கூறியபடியே இருந்தாள் அவள். வண்டி ராமநாதையர் வீட்டின் முன்னால் நின்றதும் அவள் வண்டியிலிருந்து இறங்கி, துள்ளிக் குதித்துக் கொண்டு படிகளை ஏறினாள். கதவைத் தட்டிவிட்டு, குளத்தையும் ஊரையும் பார்த்தாள். இரண்டு வருடங்களில் அவை எவ்வளவு மாறிவிட்டன என்று அவள் மனம் ஒப்பிட்டது. அப்போது அவளுக்கு வரவேற்பளிப்பதுபோல் தென்னை மரங்களும் சூரிய வெளிச்சத்தில் குளித்துத் தங்கள்

ஓலைகளுக்கு வெள்ளிமுலாம் பூசிக்கொண்டன. கலாவின் முகத்தில் இவ்வழகிய காட்சி மிகவும் லயித்துவிட்டது.

''ஊம், இன்னும் இருக்கிறீர்களா?'' என்று அவைகளுடன் பேசினாள் கலா.

அவள் பின்னால் தொடர்ந்து வந்த அவள் தாய் அவள் வாய்விட்டுப் பேசுவதைப் பார்த்துச் சிரித்தாள். ''உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ இல்லையோ, இந்த ஊரில் காலை வைத்ததும் வைக்காததுமாய்!'' என்றாள் அவள்.

''அப்படியென்றால் என்ன அர்த்தம்? எங்கள் ஊர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியா? அது அவளுக்குத் தொத்திக் கொண்டு விடுமா?'' என்று சரமாரியாகப் பொழிந்து கொண்டே கதவைத் திறந்தான் முரளீதரன்.

''முரளி, நீ வீட்டில் இருக்கிறாயோ இல்லையோ என்று நினைத்தேன். பம்பாயில் நடந்த கிரிக்கெட் மாட்ச் படங்கள் கொண்டு வந்திருக்கிறேன். அம்மா பெட்டியைத் திறக்கட்டும், காண்பிக்கிறேன். அப்புறம் 'மனாபலி' வாங்கினேன். நாம் விளையாடலாமல்லவா? அடேயப்பா, நீ எவ்வளவு உயர்ந்துவிட்டாய்? பாலு மாமா உயரம் இருப்பாய் போலிருக்கிறதே? பாலு மாமா மனைவி எங்கே இருக்கிறாள்? அவர்கள் வீட்டுக்கு என்னை அழைத்துப் போவாயா?'' கலா மூச்சு விடாமல் கேள்விச் சரம் தொடுத்தாள்.

''முதலில் உள்ளே வாருங்கள். பிறகு நீ ஒவ்வொன்றாய்க் கேள். என்னால் இந்தத் தாக்குதலைத் தாங்க முடியாது. நானும் உனக்கு நிறையச் சமாச்சாரம் சொல்லுகிறேன். இப்பொழுது பெரிய மன்னி பார்த்தால் என்னை திட்டுவாள்'' என்றான் முரளீதரன்.

''ஆமாம், நீ ரொம்ப திட்டுக்குப் பயந்து விட்டாயாக்கும்!'' என்று பதிலளித்தாள் கலா.

''கலா, முரளி! உள்ளே வாருங்கள். கை கால் அலம்பி, காபி சாப்பிடு, வா, கலா. பேச ஆரம்பித்துவிட்டாயே? முரளி, நீ ஒரு சுத்த மூடமடா. வந்தவர்களை வா என்று கூப்பிட வேண்டாமா? ரகு மாமாவுக்கு என்ன வேண்டும் என்று பார்க்காமல் இஞ்சி தின்ற குரங்கு மாதிரி விழித்துக் கொண்டு அங்கு நிற்கிறாயே? சுத்த உதவாக்கரை!'' என்று ஜகம் அதட்டவும், அவன் கலாவைப் பார்த்து, ''அடியம்மா, நீ உள்ளே நுழையும்போதே எனக்கு எத்தனை பட்டம்? மூடம், குரங்கு, உதவாக்கரை! - இன்னும் என்ன வைத்து இருக்கிறாய் மகராஜி!'' என்றான்.

''என்னடாப்பா, மகாராஜா, வரும்போதே என்னுடன் சண்டை பிடிக்கிறாயே?'' என்றாள் கலா. பிறகு இருவரும் சிரித்துக் கொண்டே உள்ளே சென்றார்கள்.

★ ★ ★

கலாவதிக்கு மற்றவைகளைக் கவனிக்கும்போதே மிகவும் விந்தையாக இருந்தது. முன்பு இருந்த வீட்டிற்கும் இப்பொழுது இருப்பதற்கும் மிகவும் வித்தியாசம் இருந்தது. அபிதாவும் அருணாசலமும் விடுமுறைக்காக வந்திருந்தனர். அபிதா அருணாசலத்துடன் எல்லோர் எதிரிலுமே சவால் கொடுத்தாள். அவனும் பரிகசித்தான். ஒருவரையொருவர் அதட்டிக் கொள்வதும், போற்றிக் கொள்வதும் பார்க்கவே கலாவுக்கு விநோதமாக இருந்தன. முன்பு தன் சகாயத்தை நாடியவர்களில்லை இவர்கள் என்று அவள் தெரிந்து கொண்டாள். அவள் இப் புது மனிதர்களைச் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் கவனித்தாள். முன்பெல்லாம் முரளிக்கும் அபிதாவுக்கும் சண்டை நடக்கும். அவனைக் கண்டாலே திட்டும் அபிதா இப்பொழுது அவனுடன் ஏதேதோ சொல்லிச் சிரித்தாள். குழந்தை நடராஜன் மழலைச்

சொற்களில் பேசினான். அவனுக்கு விளையாட்டுத் தோழியாகத் தன் அத்தை விசாலத்தின் குழந்தை பிரபா திகழுவது வேடிக்கையாக இருந்தது.

''சிற்றப்பா என்றால் சாமான்யமா? பெண்ணைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அவனைச் சேர்ந்ததோ இல்லையோ?'' என்று எல்லோரும் வேடிக்கையாகப் பேசினார்கள்.

இனி ஒன்றும் கலாவின் கண்களுக்குப் புலப்பட்டது. ஜானகியம்மாள் நடராஜனை நடத்தும் விதமே அலாதியாக இருந்தது.

கொஞ்ச நேரம் ராமநாதையருடனும், கொஞ்ச நேரம் வாசலில் நின்றபடியே அடுத்தாத்து மாமியுடனும் பேசுவதற்கே கலாவுக்குப் பொழுது போதவில்லை. அவளைப் பார்த்தவர்கள் எல்லோரும், ''கலா, எப்பொழுது வந்தாய்? சௌக்கியமா?'' என்று விசாரித்தார்கள். இதெல்லாம் அவளுக்குப் பரமானந்தமாக இருந்தது. ''மாமி, என்னை எல்லோரும் சூழ்ந்து கொண்டு 'கலா, கலா' என்று ஆசையோடு பேசுகிறார்கள்!'' என்றாள் அவள் பெருமையாக.

''நீ எல்லோரிடமும் அப்படிக் கலந்து கட்டிப் பேசுகிறாய்.''

''அது இல்லை அம்மா, நம் ஊருக்குக் கலாதேவியே பிரத்தியக்ஷமாக வந்துவிட்டாளே என்று அவர்களுக்கு ஆச்சரியம். என் காதில் கூடப் பட்டது; நாளைக் காலை நமது சம்ஸ்கிருத வித்வத் ஸமிதியிலிருந்து பெரிய வித்வான்களும், விதுஷிகளும் கலாவுக்காக நல்வரவுக் கூட்டம் போடப் போகிறார்களாம். இவ்வளவு பெரிய கருணை செய்து ஸாக்ஷாத் ஸரஸ்வதியே வந்துவிட்டாள் என்று அவர்களுக்குப்

பெருமை இராதா?'' என்று கேலி செய்தவாறே அங்கு பேச்சில் கூடிக்கொண்டான் முரளீதரன்.

''அப்படித்தான் இருக்கட்டுமே. நான் உன்னைப்போல் மக்கு இல்லை; தெரியுமோ இல்லையோ?'' என்றாள் கலா.

''நானும் அதைத்தான் சொன்னேன். நீ பெரிய மேதாவி; அதிலும் பம்பாய் பிராண்ட். நான் இந்தக் குப்பைக் காடுதானே?''

''நீ குப்பைக் காடு என்று நான் சொன்னேனா? நீயாக எதற்காக இல்லாததையும் பொல்லாததையும் சொல்லுகிறாய்?''

''நீ என்னை 'மக்கு' என்று பாராட்டினாயே, அது ஒன்றே போதுமே.''

''அவள் சொன்னால் என்னடா? அவள் பாரேன், இந்தத் தரம் முதலில் தேறினாளாம். பரிசுகூட வாங்கி இருக்கிறாளாம்.''

''எல்லாம் அவள் சொல்வது தானே? யார் கண்டார்கள், பம்பாயில் எது எப்படி என்று? ஒரு மாமா பிறந்த நாளைக்கு வாங்கிக் கொடுத்ததைக் கூட நம்மிடம் பள்ளிக்கூடத்துப் பரிசு என்று காண்பித்துவிடலாம். நான் நம்பவில்லை.''

''நீ நம்பாவிட்டால் எனக்கு ரொம்ப மோசமாக்கும்.''

முரளி பேசாமல் சிரித்துக்கொண்டே காலேஜுக்குக் கிளம்பிப் போய்விட்டான்.

''அது ஒரு முரட்டுப் பீடை. அவனுக்குப் பேசவும் தெரியாது ஒன்றும் தெரியாது'' என்று ஜானகியம்மாள் சொன்னாள். அவளுக்குத் தன் வீட்டில் தானே வந்திருக்கும் பெண் குழந்தையை யாரும் துன்புறப் பேசுவது இஷ்டம் இல்லை.

முரளியைப்பற்றி ஜானகியம்மாள் பேச்சுக் கலாவுக்கு ஏனோ ரசிக்கவில்லை. ஆனால் அவள் ஒன்றும் கூறவில்லை. அடுத்த வீட்டில் புத்தகம் வாங்கிக்கொண்டு வர ஓடிவிட்டாள்.

★ ★ ★

''கலா!'' என்று அழைத்துக்கொண்டே உள்ளே ஓடிவந்தான் முரளி.

''என்னடா?'' என்று கலா கேட்டுவிட்டுத் தன் தாயின் பக்கம் திரும்பினாள். கமலா தன் பெண்ணை நிந்திக்கும் பாவனையில் நோக்கினாள்.

கலா தன்னைத் திருத்திக் கொண்டாள். ''என்ன முரளி?'' என்று கேட்டாள்.

''வாசலில் வந்து வேடிக்கை பாரேன். நீ சினிமா ஷூட்டிங் பார்த்திருக்கிறாயே? இல்லையோ? பார்த்துக் கொள், உன் சொத்தைப் பம்பாயும் ஒன்று; எங்கள் நடராஜபுரமும் ஒன்று. இயற்கையழகு, செயற்கையழகு, சிற்பம், சித்திரம், ஆரோக்கியம், வம்பு, வீண் எதற்கும் இங்கு குறைவு கிடையாது. பட்டணத்தின் குழப்பம் இல்லாமல் பட்டணத் தின் வசதி இங்கே கிடைக்கும். நகரத்து நாகரிகத்துடன் கிராமத்து நிம்மதியும் சீலமும் சிறப்பும் ஒருங்கே கிடைக்கும் சிறந்த கிராமமாக்கும் எங்களது!''

''பச்சைமலை, பவழமலை எங்களது நாடு'' என்று குறத்தி பாடுவது போலிருக்கிறது உன் விமரிசனம். ஏ ரெயில்வே கைட், வா போகலாம்'' என்று கலா அவனை அடக்கினாள்.

''இந்தப் பெண்ணை என்ன செய்வது என்றே தெரியவில்லை மாமி எனக்கு. வாயாடித்தனம் நாளுக்கு நாள் அதிகமாகிறதே தவிரக் குறையவில்லை. நாளைக்குப்

புக்ககத்தில் போய் யார் யாரிடம் இடிவாங்கிக்கொண்டு நிற்குமோ?'' என்று கவலைப்பட்டாள் கமலா.

''ஆமாம் மன்னி. உனக்கு எப்பொழுது பார்த்தாலும் குழந்தையைக் கரிப்பதுதான் வேலை. சற்றுச் சுறு சுறுப்பாக இருக்கிறாள். முரளியும் அவளும் குழந்தையிலிருந்து விளையாடினார்கள். இந்த வீட்டில் நாங்கள் எல்லாம் என்ன இடிபட்டுத் திண்டாடுகிறோமாம்? அவளுக்கும் இதேபோல் ஒரு புக்ககம் கிடைத்துவிடட்டுமே? தானே வயசு வந்தால் சரியாகிவிடுகிறது. என்னவோ பிரமாதமாக அவள் 'இப்படி, அப்படி' என்று குறை கூறிக்கொண்டு இருக்கிறாயே?'' என்று விசாலம் தன் மருமகளுக்குப் பரிந்து பேசினாள்.

''ஆமாமடி கமலம், உன் வாயாலே அவளை ஒன்றும் சொல்லாதே. 'தாயிட்ட பெயரை ஊர் இட்டு அழைக்கும்' என்று சொல்வார்கள். நீ 'வாயாடி' என்றால் எல்லோரும் அவளை அப்படியே கூறுவார்கள்'' என்று ஜானகியம்மாளும் ஆமோதிக்கவும் கமலா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டாள். ஆனால் மாத்திரம், ''என்னவோ அம்மா, அப்புறம், 'வளர்த்தாளே அவளைச் சொல்' என்று என்னைத்தானே பழிப்பார்கள் என்று எனக்குப் பயம்'' என்றாள்.

''ஒன்றும் இல்லை. 'அத்தையா, பாட்டியா?' என்று என்னைத்தான் சொல்வார்கள். என்னைக் கொண்டாள் என்றால் உனக்குத் திருப்திதானே?'' என்று சிரித்தபடியே பதலளித்தாள் விசாலம்.

''இப்பொழுது ஞாபகம் வருகிறது. ரகு என்னவோ மாமாவிடம் சொல்லிக் கொண்டிருந்தானே? கலாவுக்கு இப்பொழுதே கல்யாணத்துக்கு என்ன அவசரம்?'' என்று கேட்டாள் ஜானகியம்மாள்.

''ஏன் மாமி, அவளுக்குப் பதினாலு வயசு ஆகிவிட்டது. என்வரையில் இப்பொழுதே பண்ணிவிட்டால்தான் நன்றாக இருக்கும் என்று எண்ணம். அவர் என்னவென்றால் பெண் பி.ஏ.பாஸ் ஆகும்வரை ஒன்றும் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவே மாட்டாராம். அதுவரை நல்ல வரன்கள் காத்துக் கொண்டிருக்குமா?''

''நானுந்தான் சொல்லுகிறேன். பி.ஏ. முடியும்போது அவள் பதினெட்டு வயசாகியிருப்பாள். அதுதான் சரியான வயசு. இப்பொழுது என்ன, முன்போல் சிறு பிள்ளைகள் கிடைக்கிறார்களா என்ன?'' என்று விசாலம் குறுக்கிட்டாள்.

''அண்ணாவும் தங்கையும் என்ன செய்யப் போகிறீர்களோ பார்க்கிறேன். என் வாக்குக்கு மதிப்பேது?'' என்று கமலா பேச்சை முடித்துவிட்டாள்.

★ ★ ★

கலாவைப்பற்றியும் அவளுடைய வாழ்க்கையைப் பற்றியும் இவ்வளவு தூரம் உள்ளே சர்ச்சைகள் நடக்க, அவள் தன்னையும் மறந்து வெகு உல்லாசமாக வாசற்படிக்கட்டில் வீற்றிருந்தாள்.

எதிரே குளத்தை நடு நாயகமாக வைத்துக்கொண்டு சினிமாப்படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அழகு அழகாக ஆடை அணிந்த பெண்கள் பளபளவென மின்னும் குடங் களுடன் குளத்தில் இறங்கித் தண்ணீர் மொண்டு சென்றனர். அவர்களை 'இப்படி நில்!', 'அப்படி நட' என்று ஒருவர் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஊரில் எல்லா வீட்டு வாசலிலும் வேடிக்கை பார்க்கும் ஜனங்கள் கூடி இருந்தனர். குளத்தைச் சுற்றிக் குடியானத்தெருவே சேர்ந்துவிட்டது.

கலாவும் முரளியும் கரும்பு தின்று உமிழ்ந்து கொண்டிருந்தார்கள். முரளி கரும்புக் கணுவைப் பல்லால் கடித்து ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். கலா ஒரு தட்டில் கரும்புத் துண்டங்களை வைத்துக் கொண்டு தின்றாள்.

''கரும்பை அப்படியே பல்லால் கடித்து உறிஞ்சினால் தான் ருசி. இப்படித் தின்றால் என்ன நன்றாய் இருக்கும்?'' என்றான் முரளி.

''உன்னைப்போல் நானும் தின்றால் எல்லோரும் என்னையே வேடிக்கை பார்ப்பார்கள் இந்த ஊரில். அப்புறம் அவர்கள் நம்மைத்தான் படம் பிடித்துக் கொண்டு போவார்கள்.''

''அப்பொழுது கரும்பு தின்னாதே!''

''ரொம்ப நன்றாக இருக்கிறதே உன் பேச்சு! குரங்கு மாதிரி கடித்துத் தின்னச் சொல்லுகிறாயாக்கும்!'' என்றாள் கலா சிரிப்புடன்.

''நான் குரங்கு, மக்கு. நீ வந்து.....''

''முரளி, உனக்குக் கோபமா? நான் தெரியாமல் சொல்லிவிட்டேன், மன்னித்துவிடு'' என்றாள் கலா.

''பரவாயில்லை - இரு, நான் அந்த டைரக்டருடன் பேசிவிட்டு வருகிறேன்.''

''போ, போ, உன்னை உதை கொடுத்து அனுப்புவார். பெரிய மனுஷன் இல்லையா நீ. உன்னுடன் அவர் பேசுவாராக்கும்!''

''நீயும் வாயேன், பேசுகிறாரா இல்லையா பார்ப்போம். நிஜமாகத்தான். வா, கலா, கிட்டே போய்ப் பார்ப்போம்'' என்று முரளி அழைக்கவும் கலாவும் அவனுடன் சென்றாள். சற்று நேரத்திற்கெல்லாம் அவள் சங்கோஜமின்றி அந்தப் படம்

பிடிப்பவர்களிடம் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் பேசிச் சிரிப்பதைக் கண்டு, ஊரார் அதிசயத்துடனும், அசூயை யுடனும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''என்ன இருந்தாலும் இந்தத் துணிச்சல் அசாத்தியம்'' என்று அவர்கள் கூறுவது கலாவின் செவிகளையும் எட்டியது.

2. அநியாயமும் அபவாதமும்

''இப்படியும் அநியாயம் நடப்பதுண்டோ? அவனை யாரும் கேட்பாரே கிடையாதா?'' என்று இதோடு முப்பது தடவைபோல் கேட்டுவிட்டாள் ஜானகியம்மாள்.

ஏழெட்டு வருஷங்கள் கழித்துத் தமக்கு மேல் வேலை கிடைக்கப்போகிறது என்று எண்ணி இருந்த சமயத்தில், அது வேறு யாருக்கோ ஆகிவிட்டது. ஆனால் ராமநாதையர் அதைப் பற்றிச் சிறிதேனும் கவலைப்படவில்லை.

''ஏதோ, அன்று எழுதினவன் மாற்றி எழுதமாட்டான். நமக்கு அது பிராப்தமில்லை. போகட்டும், அதுவும் நன்மைக்குத்தான்'' என்று அவர் சமாதானம் அடைந்து விட்டார். ஆனால் ஜானகியம்மாள் அவ்வளவு எளிதில் திருப்தியுறவில்லை. கைக்கு எட்டிய பண்டம் வாய்க்கு எட்டவில்லையே என்று அவள் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. கிராமத்தில் ஒரு குடும்பம் நடக்க வேண்டும். முரளீதரன் படிக்கவேண்டும், தாங்கள் இருக்கும் இடத்தில் ஒரு குடித்தனம், இன்னும் நடராஜன் வேறு வளர்ந்தாக வேண்டும் - என்று கணக்கிட்டுப் பார்த்து, அவள் மனம் ஆறுதல் பெறாமல் மாய்ந்துவிட்டது. ஒவ்வொரு பிள்ளை யிடமும் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தாள்.

ஜகந்நாதன் பலவிதத்திலும் சொல்லித் தம் தாயை ஆசுவாசப்படுத்தினார். ''அம்மா, கிராமத்தில் இப்பொழுது இங்கே இருப்பவர்களுக்கும் உங்களுக்கும் சாப்பாட்டுக்கு அரிசி வருகிறது. பருப்பு, புளி, வேர்க்கடலை கிடைக்கிறது. எள், நம் தேவைக்கான எண்ணெய் கிடைக்கிறது. கரும்பில் நிறையப் பணம் கிடைக்காவிட்டாலும் ஏதோ கொஞ்சம் கைச் செலவுக்கு வருகிறது. முரளியின் படிப்புக்குத்தானே? அதைத் தவிர அப்பாவின் சம்பளம் உங்கள் இருவருக்கும் போதாதா? அருணாசலமும் பாலுவும் தங்கள் செலவைப் பார்த்துக் கொள்ளுகிறார்கள். இதைக் காட்டிலும் நமக்கு எதற்கு அம்மா? பெரிய வேலை வந்திருந்தால் சரிதான். தவறி விட்டதனால் என்ன நமக்குக் குறைவு? கடவுள் கிருபையால் இதற்கு லோபமில்லாவிட்டால் நம்மைக் காட்டிலும் யார் பாக்கியசாலிகள்? வீடாயிற்று, பசு, எருமை, கறிகாய், வாழை எல்லாம் இருக்கின்றன. யார் வந்தாலும், மாசக் கணக்கில் இருந்தாலும் நமக்குக் கவலையில்லையே.''

இந்த ஆறுதல் சொற்களில் திருப்தி அடையாதவள் போல் ஜானகியம்மாள் தன் இரண்டாவது மகனை நாடிச் சென்றாள். ''கேளடா இந்த அக்கிரமத்தை!'' என்று ஆரம்பித்து அவனிடம் ஒரு தடவை முறையிட்டாள்.

''என்ன அம்மா, பிரமாதப்படுத்துகிறாயே? நம் தேவைக்குப் பணம் வேண்டும்தான். அதற்காக மண்டையை உடைத்துக் கொள்வதா? அப்பாவே பேசாமல் இருக்கிறாராம். திரும்பத் திரும்பச் சொன்னால் வந்துவிடுமா?'' என்று ஒரே பேச்சில் தாயை அடக்கிவிட்டு அருணாசலம் கோவிலை நோக்கி நடந்துவிட்டான். இப்பொழுது அங்கே பூமியைத் தோண்டிச் சிற்பங்களைப் பெயர்த்து எடுக்க ஏற்பாடாகி இருந்தது. அதை மேல் பார்வையிடவே அவன் சென்றான்.

தன் கணவருக்கு வேலை உயர்வு கிடைக்காததுகூட ஜானகியம்மாளுக்கு அவ்வளவு துக்கமாக இல்லை. அதைப்பற்றிப் பேசவே விடாத பிள்ளைகளைக் கண்டால் தான் அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. அபிதாவிடம் இரண்டு முறை சொல்வதற்குள்ளேயே அவள் என்னவோ யோசித்துக் கொண்டே மாடிக்குப் போய்விட்டாள். அவளையும் விடாமல் மேலே பின் தொடர்ந்த ஜானகியம்மாள் அவள் அறையைச் சேருவதற்குள்ளேயே அவள், 'சிபாரிசின் மகிமை' என்று ஒரு கட்டுரை எழுத ஆரம்பித்துவிட்டாள். ஜானகியம்மாள் தோளில் முகத்தை இடித்துக்கொண்டே கீழே இறங்கிவிட்டாள். ''நல்ல பெண்! இதுக்கு வேறே வேலையே கிடையாதோ?'' என்று முணுமுணுத்தது அவள் வாய்.

விசாலம் புழக்கடையில் தேங்காய் பறிப்பதை மேற் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள். ஆட்கள் தேங்காய் களைக் கூடைகளில் எடுத்து வந்து முற்றத்தில் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவைகளை எண்ணி வாங்கி வைப்பதிலேயே கண்ணாக இருந்த விசாலம் தன் மாமியார் அங்கு வந்ததைக் கவனிக்கவில்லை.

''விசாலம், கேட்டாயா சங்கதியை? அந்தப் பாழாய்ப் போன ஸ்ரீகண்டையா என்ன செய்தாராம் பார்த்தாயா? பத்து வருஷமாகக் காத்துக் கொண்டிருந்த இவருக்கு வரவேண்டிய பிரமோஷனைத் தம் ஜாதிக்காரனான சங்கரராவுக்குச் செய்து வைத்துவிட்டார். இதுதான் உலகம். ஏதோ நமக்கும் நல்ல காலம் வரும் என்று பார்த்தால்.....''

விசாலாக்ஷிக்கு விஷயம் புரிவதற்குச் சற்று நேரம் பிடித்தது. பிறகு அவள் சாந்தமாகவே பதில் கூறினாள். ''என்னவோ, வந்திருந்தால் சௌக்கியந்தான். இப்பொழுது நமக்கு என்னம்மா குறைவு? ஏதோ அப்பா சம்பளம் நமக்குப்

போதாதா? இங்கே தவறின நல்ல காலம், மைத்துனருக்கு வாய்க்கட்டுமே, கலெக்டர் ஆகட்டுமே? இனி இந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு எதற்கு? அவரவர்களுக்கு இறக்கை முளைத்துவிட்டது. முரளியையும், நட்டுவையும் முன்னுக்குக் கொண்டுவர அப்பாவால் முடியாமல் போய் விடுமா? அப்படித்தான் இல்லையென்றாலும் அண்ணன் மார்கள் செய்யமாட்டார்களா? அவ்வளவு அவர்கள் கடமைப்படவில்லையா? முன்பு என்றாலும் நீங்களே கஷ்டப்பட்டு எல்லோருக்கும் செய்யவேண்டும். இப் பொழுது என்னம்மா உங்களுக்குக் குறைவு? ஐந்து ரத்தினங்களைப்போல் ஐந்து பிள்ளைகளைப் பெற்று இருக்கிறீர்கள். இனி சர்க்காரில் அதிகப்படி சம்பளம் கொடுத்தால் என்ன, கொடுக்காவிட்டால் என்ன? நியாயமாக வேலை செய்தவர்களுக்குத் தகுந்த சம்மானம் கொடுக்கா விட்டால் அந்தப் பாவத்தில் அவர்கள் போகிறார்கள்.''

இந்த வேதாந்தமும் மாமியாருக்கு ரசிக்கவில்லை. ''அதற்கு என்ன குறைச்சல்? எல்லோரும் நன்றாகத்தான் வியாக்கியானம் செய்கிறீர்கள். எனக்கு அல்லவோ அந்தக் கஷ்டம் தெரியும். இங்கே ஒரு குடித்தனம், அங்கே ஒரு குடி நடக்கவேண்டாமா? கைக்கு எட்டியது வாய்க்கு எட்ட வில்லை என்றால் வயிறு எரிகிறது. வியாக்கியானம் எனக்குக் கிடைக்கிறது.''

விசாலத்தின் இயற்கையான சாந்த முகம், இன்று எக்காரணத்தாலோ சஞ்சலமுற்றது. தேங்காய்களை உள்ளே சேர்க்கும் வியாஜத்தில் அவள் எழுந்து போய்விட்டாள்.

ஜானகியம்மாள் அங்கேயே உட்கார்ந்துகொண்டு தனக்குள்ளேயே முணுமுணுத்தாள். முரளீதரன் அங்கு வந்து சேர்ந்தான், தனக்கு இளநீர் கிடைக்குமா என்று பார்க்க. தன்

தாய் ஏதோ சொன்னதும், விசாலம் முகம்வாட எழுந்து சென்றதும் அவன் தீட்சண்ய திருஷ்டியில் பட்டுவிட்டது.

''என்னம்மா சமாசாரம்? என்னது, என்னவோ குசு குசு என்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?'' என்று அவன் கேட்கவும் அவனுடைய தாய்க்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. தன் மனக் குறையைக் கேட்கவும் ஒரு பிள்ளை கிடைத்தானே என்று, உடனே சவிஸ்தாரமாய்த் தன்னுடைய சொந்தமான அபிப்பிராயங்களையும் சேர்த்து, வசைமொழிகளையும் தெளித்துச் சொன்னாள்.

★ ★ ★

''மன்னி, கொஞ்சம் வேர்க்கடலை உப்புப் போட்டு வறுத்துக் கொடுக்கிறாயா? பத்துப் பதினைந்து பிள்ளைகள் வருகிறார்கள். நாங்கள் பீச்சுக்குப் போய் உல்லாசமாக இருந்துவிட்டு வரலாம் என்று இருக்கிறோம். நான் வீட்டுக்குத் திரும்பி வர மணி ஒன்பதாகும். மன்னி, கொஞ்சம் வெல்ல உருண்டையும் செய்து கொடுக்கிறாயா?'' என்று கேட்டான் முரளீதரன்.

''அதற்கென்ன, செய்து கொடுக்கிறேனே'' என்று உடனே எழுந்துவிட்டாள் விசாலாக்ஷி.

''எதற்கடா? எந்தப் பையன்களுக்குச் செய்துகொடுக்க இங்கே படி, படியாகக் கொட்டிக் கிடக்கிறது? உன் அட்டகாசமும் அக்கிரமும் மனிதர்களால் சகிக்க முடிய வில்லை வரவர!'' என்று கோபித்துக் கொண்டாள் ஜானகியம்மாள்.

''அவனுக்குப் பத்து செய்துகொடுக்க இல்லாமல் போய்விட்டதா? நான் செய்து கொடுக்கிறேனடா, முரளி'' என்றாள் விசாலாக்ஷி.

''இப்படி அவன் ஆடின ஆட்டத்துக்கெல்லாம் ஆடுகிறது. அப்புறம் அவனுக்குக் குடும்பக் கஷ்டம் தெரிகிறது இல்லை என்கிறது.''

''அவனுக்குக் குடும்பக் கஷ்டம் தெரிவானேன், அம்மா? குழந்தை கேட்கிறான். மைசூர்ப்பாகு, பாதுஷா என்றாலும் சர்க்கரை தேடவேண்டும், நெய் தேடவேண்டும். வீட்டில் இருக்கும் கடலைக்காயை வெல்லத்தில் செலுத்த என்ன வேண்டும்? நமக்கு என்ன விறகு ரேஷனா?''

''நீ ஒன்றும் எனக்குப் பரியவேண்டாம். செய்துகொடு என்றேன்; முடிந்தால் செய், இல்லாவிட்டால் பேசாமலிரு. என்னவோ நான் சின்னக் குழந்தை போலவும் நீ உடம்பு சிரமத்தைப் பாராட்டாமல் எனக்காகச் செல்லமாகச் செய்து கொடுப்பது போலவும் என்ன நயவஞ்சகப் பேச்சு? அம்மா என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுவாள். அதற்கு நீ என்ன பெரிய எதிர்ப்பு?'' என்று முரளி சுருக்கெனச் சொன்னான். விசாலாக்ஷி முகத்தில் மெல்லிய புன்சிரிப்புத் தவழ, கையில் விறகுக் கட்டைகளும் சுள்ளிகளும் எடுத்துக் கொண்டு சமையலறைப் பக்கம் சென்றாள்.

முரளியின் வார்த்தைகளை அவள் ஒன்றும் பொருட்படுத்தாவிட்டாலும் கலாவின் செவிகளில் அவ் வார்த்தைகள் பட்டதும், அவள் முகம் கடுத்தது.

'நல்ல காலம்; அப்பாவும், அம்மாவும் இன்று இங்கே இல்லை' என்று நினைத்துக் கொண்டாள் அவள். ஆயினும் தன் மனத்தில் ஏற்பட்ட வேதனையை அவளால் அடக்க முடியவில்லை. முகத்தைத் தூக்கிக்கொண்டு திரும்பிப்போய் விட்டாள். அவள் முகத்தைப் பார்க்காத ஜானகியம்மாள், ''வாம்மா கலா, மல்லிகை அரும்பு வாங்கி வைத்து இருக்கிறேன். வங்கிப் பின்னல் பின்னிவிடுகிறேன்'' என்று

அழைத்தாள். கலா பதில் சொல்லாமலே வாசற்புறம் சென்று குளத்தை நோக்க ஆரம்பித்துவிட்டாள்.

முரளீதரன் அங்கு வந்தான். அவனுடைய கால் ஓசை கேட்டும் திரும்பாமல் நின்றாள் கலா.

''கலா, ஓகோ! ஏகாக்கிர சிந்தையா? அந்தப் பாசி பிடித்த குளத்தைப் பார்த்தால் உனக்கு என்னதான் மோகம்? கலா, நான் இன்றைக்கு ஒரு வேடிக்கை பண்ணப் போகிறேன் பார். நான் ராத்திரி வந்து சொல்லுகிறேன், என்ன மஜாவாக இருக்கப் போகிறது பார்.''

கலா பதில் சொல்லவில்லை. அவன் பேச்சைக் காதிலும் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. முரளீதரனுக்கு அது மிகவும் புதுமையாக இருந்தது. தான் செய்யும் குறும்புத்தனங்களையெல்லாம் கேட்டுக் களிக்கும் கலாவா இவள்?

''கலா, உனக்கு என்ன, காது செவிடா?''

''செவிடு இல்லை. செவிடா இருந்தால்கூட நான் சந்தோஷமாக இருந்திருப்பேன். உன் வேடிக்கை ஒன்றும் எனக்கு ரசிக்கவில்லை, தெரியுமா? உன்னோடு சேர்ந்து விளையாடுவதே தப்பு என்று இன்றைக்குத்தான் தெரிகிறது.''

''ஓகோ, கொஞ்சம் இரு, கொஞ்சம் பொறு; பட பட பட டப, டபா என்று சீனா வெடி வெடித்துவிட்டாயே? நான் கொஞ்சம் தயாராகிறேன். என்ன சொன்னாய் நீ?''

அவன் ஹாஸ்யப் பேச்சையே லட்சியம் செய்யவில்லை அவள். தான் ஆரம்பித்ததைத் தடையில்லாமல் சொல்லி முடித்தாள். ''நீ என் விளையாட்டுத் தோழன் என்று நினைத்தேன். நீ இவ்வளவு மட்டமாக, உன் பேரில் பிரியமாக இருப்பவர்களிடம் இவ்வளவு மோசமாகப் பேசுவாய் என்று

நான் நினைக்கவே இல்லை. நீ மரியாதை இல்லாதவன், நீ முரடன்.''

''அடடா, உன் அத்தையைச் சொல்லிட்டேனா? என்ன பாசம், என்ன பாசம்! ஹா..... ஹா!''

''நீ பேசாமலிரு, என் அத்தையைப்பற்றி நீ பேசினால் நான் அப்படித்தான் பேசுவேன். உனக்கு நன்றியில்லை என்றால் எனக்கும் சுரணை அற்றுவிடவில்லை.''

கலாவின் ஆக்கிரோஷம் தீர்ந்து, துக்கமும் வந்துவிட்டது. கண்களில் நீர் மல்க, தொண்டை அடைக்க, அவள் மாடிக்கு ஓடினாள்.

''பூஹீஹீம்'' என்று அழுவதுபோல் கேலி செய்தான் முரளி.

''நீ ஒன்றும் என்னை அழகு காட்டிப் பழிக்க வேண்டாம். இனி உங்கள் ஊருக்கே நான் வரப்போவ தில்லை.''

''எங்கள் ஊர் என்ன பாவம் செய்ததோ, இத்தகைய தண்டனைக்கு ஆளாவதற்கு'' என்று அதற்கும் பதில் சொல்லி விட்டுத்தான் அகன்றான் முரளி.

★ ★ ★

குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டே யிருந்த விசாலாக்ஷி ஏதோ ஞாபகமாக ஜன்னல் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். என்றுமில்லாத புதுமையாக அவள் நயனங்களில் நீர் நிறைந்து இருப்பதை அகஸ்மாத்தாக அங்கு வந்த ஜகந்நாதன் கவனித்துவிட்டார். அவரும் அவள் அருகில் வந்து அமர்ந்தார். குழந்தை பிரபா தகப்பனாரைக் கண்டு சிரித்தாள். அதைக் கண்டதும் அன்னை தன்னையும் மீறிச்

சிரித்தாள். அப்பொழுது ஒரு முத்துக் கண்ணீர் குழந்தையின் வயிற்றில் விழுந்தது.

''இதென்ன விசாலி!'' என்று கேட்டுக்கொண்டே அவள் மோவாய்க் கட்டையை நிமிர்த்தினார் ஜகந்நாதன்.

''ஒன்றும் இல்லை'' என்று தலையைத் திருப்பிக் கொண்டாள் விசாலாக்ஷி.

''என்ன, சொல்லேன்.''

''நான் என்ன என்று சொல்வது? உங்களுக்கு எவ்வளவு சொன்னாலும் உங்கள் பிடிவாதத்தை விடமாட்டீர்கள். அண்ணா கூப்பிட்டபோதே ஒரு வேலையில் அமர்ந்திருந்தால்?''

''அதற்கு இப்பொழுது என்ன? உன் ஓரகத்திகளைக் கண்டதும் நாமும் ஓர் உத்தியோகஸ்தன் மனைவியாக இல்லையே என்று தோன்றுகிறதாக்கும். ஏன் விசா?''

''உங்களுக்கு என்ன, எல்லாந்தான் வேடிக்கையாக இருக்கிறது.''

''வேடிக்கையில்லை. வெகு கடுமையாக முகத்தை வைத்துக் கொள்கிறேன், சொல்.''

''நான் சொல்லவும் இல்லை, நீங்கள் கேலியும் செய்ய வேண்டாம். உங்களைச் சொன்னால் என்ன பிரயோஜனம்?''

''என்ன நடந்தது சொல்லேன்?''

''ஒன்றும் நடக்கவில்லை. அப்பாவுக்கு வேலை உயரவில்லை. இரண்டு குடும்பங்களைக் காப்பாற்ற அவர் ஒரு ஒருத்தர் கஷ்டப்பட்டு முடியுமா? தீராதது, கடைசி இரண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும். மற்ற இருவர் நன்றாகத் தங்கள் பெண்டு பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளும்போது

நீங்கள் மாத்திரம் இப்படி பளுவாக இருப்பது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்காதா? அம்மா வாய்க்கு வாய் இரண்டு குடும்பம் என்கிறார். எனக்கு அது சுருக்கென்று உறைக்காதோ? இதில் குழந்தையில்லை என்று குறைவேறு. இந்தப் பெண் ஒரு கொசுரு இப்பொழுது.''

''விசாலம்! என்னைப் பார். நீயா இப்படிச் சொல்லுகிறாய்? உன் வாயினின்று இந்த மாதிரி பேச்சு வரலாமோ? அம்மா நம்மைச் சொல்லுவாளா? ஏதோ கிடைக்காமல் போயிற்றே என்ற துக்கத்தில் சொன்னால் அதை உனக்கு என்று எடுத்துக் கொண்டாயாக்கும். ரொம்ப சமத்து போ. என்ன விசாலி, நீ எனக்குச் சொல்லிக் கொடுப்பாயே? அசடு, கண்ணைத் துடைத்துக் கொள், எழுந்திரு'' என்று முதுகில் தட்டிக் கொடுத்தார் ஜகந்நாதன். அந்த அதிர்ச்சியில் பிரபா 'களுக், 'களுக்' என்று சிரித்தது.

''பார், பிரபா கூடச் சிரிக்கிறாள், அம்மாவின் அசட்டுத் தனத்தைப் பார்த்து'' என்று கூறியவாறே தம் பெண்ணை மார்புறத் தழுவி முத்தமிட்டார் ஜகந்நாதன்.

''விசாலம், காபி போடு'' என்றார் அவர். அவள் அதைச் செய்யப் பரபரவென்று சமையலறைக்குச் சென்றாள்.

3. கடற்கரை நாடகம்

முரளீதரன் கடற்கரையில் உலாவினான். கையில் ஒரு பை; அதினின்று கமகமவென்று கடலைக்காயின் நறுமணம் வந்து கொண்டிருந்தது. அவன் முகத்தில் புன்சிரிப்பு. அவனுடைய சுறுசுறுப்பான கண்கள் இப்படியும் அப்படியும் நோக்கிக் கொண்டே இருந்தன. அடிக்கடி அவன் கைக் கடிகாரத்தை நோக்கினான். பிறகு ஒரு படகின் மறைவில்

இருந்து கொண்டு மேலே போட்டுக்கொண்டிருந்த துவாலை முண்டாசு கட்டினான். மேல் சட்டையை மடித்து, பையில் தயாராக வைத்திருந்த காகிதத்தில் பொட்டலமாகக் கட்டினான். அதை ஒரு அக்களில் வைத்துக் கொண்டு, மற்றக் கையால் வாயைத் தாங்கியபடி, ''வறுத்த வேர்க்கடலை! கடலைக்காய் உருண்டை!'' என்று கூவிக்கொண்டே சென்றான். அநேகம் பேர் அவனைக் கூப்பிட்டு வாங்கினார்கள். காசு வாங்கும்போது தன்னை யாராவது அடையாளம் கண்டுவிடுகிறார்களோ என்று அவன் அடிக்கடி நோக்கியவாறு இருந்தான்.

அன்று அவன் தன் சிநேகிதர்களிடம், சினிமாவுக்கு வருவதாகச் சொல்லியிருந்தான். இரண்டு நாட்களுக்கு முன்தான் ஒருதரம் போயிருந்தான். மறுபடியும் போகவேண்டும் என்று கேட்டால் வீட்டில் அம்மா பணம் கொடுக்கமாட்டாள் என்று தெரியும். ஆதலால் தான் சினிமாவுக்குப் பணம் திரட்ட இந்தச் சூழ்ச்சி செய்தான். அவன் அடிக்கடி இம்மாதிரி செய்வதுண்டு.

''ஏ, கடலை!'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பினான் முரளி. போவோமா வேண்டாமா என்று அவன் சற்றுத் தயங்கினான். அவனைக் கூப்பிட்டவர்கள் யார் என்று அறிந்ததும் அவனுக்குப் பலத்த யோசனையாகிவிட்டது. தன் தகப்பனாரின் உத்தியோக விஷயத்தில் பக்ஷபாதம் பார்த்த அதே ஸ்ரீகண்டையா அங்கு உட்கார்ந்திருந்தார், குடும்ப சமேதராய். முரளி ஒரு கணம் யோசித்தான். உடனே அவனுடைய விளையாட்டுப் புத்திக்கு ஒரு விஷமம் தோன்றிற்று. தன் தலைப்பாகையைச் சற்று அவிழித்துத் தன் வாய் மூக்கு வரை மறைத்துக் கட்டிக் கொண்டு, அவர்கள் பக்கம் சென்றான்.

''எப்படியப்பா கொடுக்கிறாய்?''

துணியின் பின்னாலிருந்து முரளியின் குரல் 'கஷபஷ'வென்று கேட்டது.

அவர்கள் வாங்கிக் கொண்டனர். அந்தக் கூட்டத்தில் வயது வந்த ஒரு பெண்ணும் இருந்தாள். அவளைத் தவிர ஒரு பெண்ணும் இரண்டு வாலிபர்களும், இரண்டு சின்னப் பையன்களும் இருந்தார்கள். அந்தப் பெண் முரளியுடன் படிப்பவள். அதற்காகவே அவன் அவ்வளவு மறைவு ஏற்படுத்திக் கொண்டான். அவன் பணம் வாங்கிக்கொண்ட பிறகும் அங்கேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தான். அந்தப் பெரிய அம்மாள், எல்லாக் குழந்தைகளுக்கும் பங்கிட்டு விட்டு, தன் வாயிலும் ஒரு பிடி போட்டுக் கொண்டாள். முரளி அதைப் பார்த்துவிட்டான்.

''இதல்லே நல்ல மனம்! சாதி பேதம் இல்லாத.....'' என்று அவன் ஏதோ உளறியது அந்த அம்மாளின் காதுக்கு எட்டியது. எட்ட வேண்டுமென்பதுதானே முரளீதரனின் எண்ணமும்!

அந்த அம்மாள், ''என்ன பையா, நீ பிராமணன் இல்லையா?'' என்றாள்.

''நான் நாயர். எங்கள் ஹரிஜன சங்கத்திற்குப் பணம் சேமிக்கிறேன். ஹரிஹனக் குட்டிகள் கையிட்டுச் செய்தது, நம்பமுடியுமா? பாருங்கள்!'' என்று மிகப் பெருமையாகக் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு வேகமாக அகன்றான்.

''ஐயோ, கர்மமே! நான் சொன்னால் நீங்கள் கேட்டீர்களா?'' என்று அந்த அம்மாள் அரற்றியது, அவன் செவிகளுக்குக் கானாமிருதமாக இருந்தது. சிரித்தபடியே அவன் படகின் மறைவை அடைந்தான்.

இதுவரை குனிந்தபடியே இருந்த பெண் நிமிர்ந்தாள். அவன் குரல் எங்கோ கேட்ட மாதிரி இருந்தது அவளுக்கு. அவள் எழுந்து தன் அண்ணனை அழைத்தாள்.

''அண்ணா, கொஞ்சம் என்னுடன் வாயேன்'' என்று கூறிக்கொண்டு அவள் மிகச் சாவதானமாக நடப்பதுபோல் முரளியைத் தொடர்ந்தாள்.

படகின் அருகில் சென்று முரளி, தன் முண்டாசை அவிழ்த்து விட்டு, சட்டையை மாட்டிக் கொண்டான். பையிலிருந்த ஒரு சீப்பை எடுத்துத் தலையை வாரிவிட்டு, தனக்கு அன்று கிடைத்த காசை எண்ணினான். பிறகு வெற்றிப் புன்முறுவல் பிரகாசிக்க மிக்க மிடுக்குடன் மணலை விட்டு அகன்றான்.

இந்தச் சிறு நாடகத்தைக் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண் என்றோ, அல்லது, ''நான் நினைத்தேன்'' என்று அவள் முணுமுணுத்ததோ அவனுக்குத் தெரியாது.

''என்ன நினைத்தாய்?'' என்று கேட்டான் அண்ணன், தங்கையை.

''கடலைக்காய் விற்றவன் யார் தெரியுமோ? என்.ராமநாதையரின் பிள்ளை முரளீதரன். காலேஜில் என் வகுப்பில் படிக்கிறான். நன்றாகப் படிப்பான். அதுதான் அம்மாவை அவன் அப்படிக் கேலி செய்து இருக்கிறான்.''

''போகட்டும். அவன் பிராமணன் தான் என்றால் அம்மாவுக்குச் சற்று நிம்மதியாக இருக்கும்'' என்று சிரித்தான் அண்ணன்.

''அவன் எப்பொழுதும் இப்படித்தான். ஏதாவது விளையாடிக்கொண்டே இருப்பான். பாதி நேரம் பிரின்ஸிபால் ரூமில்தான் இருப்பான்.''

★ ★ ★

முரளீதரன் சினிமாவுக்குப் போக எண்ணினான். ஆனால் பாதி வழி போவதற்குள் நேரமாகிவிட்டிருந்தது. அத்துடன் அவனுக்கு, தான் அன்று செய்த விஷமத்தை நினைத்து நினைத்து மகிழ்வதற்கே சரியாக இருந்தது.

கடைத் தெருவைத் தாண்டிச் செல்லும்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. ஒரு ரிப்பனும் ஒரு பிஸ்கோத்துப் பொட்டலமும், ஒரு கிலிகிலிப்பையும் வாங்கிக் கொண்டான்.

வீட்டை அடைந்ததும் கிலிகிலிப்பையைக் குழந்தை பிரபாவிடம் கொடுத்து வேடிக்கை பார்த்தான். பிஸ்கோத்தை ஆசைகாட்டி நடராஜனுடன் விளையாடினான். விசாலாக்ஷி அவனைப் பார்த்தவாறே நின்று கொண்டிருந்தாள். அவளுடைய அதரங்களில் பெருமிதம் தாண்டவமாடியது.

''எங்கே முரளி, இதை எல்லாம் வாங்கினாய்?'' என்று அவள் கேட்டாள்.

''கடையில்.''

''ஐயோ பிள்ளையே, பின்னே எங்கே வாங்குவார்களாம்?''

''அவனா? திருடிக் கொண்டுகூட வந்திருப்பான். உனக்கு ஏதடா காசு?'' என்று அங்கு வந்த ஜகந்நாதன் அதட்டினார்.

''நீதான் கூறிவிட்டாயே; நான் திருடினேன் என்று. அதற்குப் பிறகு காசைப்பற்றி என்ன கேள்வி?'' என்று திரும்பக் கேள்வி கேட்டான் முரளீதரன்.

''என்ன? யாரோ ஏதோ சொன்னால் அதைக் கேட்டுக் கொண்டு நீங்கள் சொல்லுகிறீர்களே? நீங்கள் கூடவா அப்படி இருக்க வேண்டும்? நம் குழந்தையை நாமே பழித்தால்?

அத்துடன் அவன் எப்படிப்பட்டவன் என்று உங்களுக்குத் தெரியாதாக்கும்? மனத்தில் தைக்கும்படிப் பேசாதீர்கள்'' என்று விசாலாக்ஷி சற்றுக் காரமாகவே பேசினாள். ''சின்னப் பையனாக லட்சணமாக அவன் கிடைத்த காசை எதையும் வாங்கிச் சாப்பிடாமல் குழந்தைகளுக்குப் பிஸ்கோத்தும், கிலிகிலிப்பையும், கலாவுக்கு ரிப்பனும் வாங்கி வந்திருக்கிறான். அதைக் கண்டு சந்தோஷிப்பதற்கு இந்த வீட்டில் ஆள் கிடையாது. 'அவன் நின்றான், உட்கார்ந்தான்' என்று தப்புக் கண்டுபிடிக்க நிறைய இருக்கிறார்கள். நீங்களும் எங்கே அந்தப் பட்டாளத்தில் சேராமல் இருந்து விடுவீர்களோ என்று நினைத்தேன்; அந்தக் கவலையும் தீர்ந்தது.''

ஜகந்நாதன் தம் மனைவியை நிமிர்ந்து நோக்கினார். தம் மனத்திற்குள்ளேயே புன்னகை பூத்துக் கொண்டார்.

''ஏதடா காசு? மன்னி கொடுத்தாளா?'' என்று சற்றுச் சாந்தமாகக் கேட்டார் தம் தம்பியைப் பார்த்து.

''திருடினேன்.''

''சொல் என்கிறேனே'' என்று கூறும்போது அவர் குரலில் கோபம் தொனித்தது.

''சொல்லடா என்றால், அதிகப் பிரசங்கித்தனமா செய்கிறாய்? இந்த லட்சணத்திற்கு அவள் வேறு சிபாரிசும் பரியலும்.''

ஜகந்நாதனின் அதட்டலைக் கேட்டு முரளி கொஞ்சம் அச்சமுற்றான். அவன் எவ்வளவு வாயாடினாலும் என்ன என்ன விஷமங்களும், தொந்தரவும் செய்தாலும் அவை எல்லாவற்றிற்கும் ஊடே பெரிய அண்ணனிடம் மதிப்பும் பயமும் இருந்தன. இப்பொழுது, அவர் மன்னியைப் பற்றிக் கூறவும், அவனுக்கும் அவள் பரிவதைப் பற்றித் தனக்கு ஏற்படும் அசூயை பற்றிச் சொல்ல ஆவல் மூண்டது.

''ஆமாம், அண்ணா, நான் எது செய்தாலும் என்னைத் தாங்கிப் பேச வந்து விடுகிறாள். நீ அடித்தால் நான் பட்டுக் கொள்கிறேன். இவள் என்ன ஒன்று குறுக்கே?'' இன்னும் இதே பாணியில் அநேகம் சொல்ல எண்ணினான் முரளி. ஆயினும் வாய் திறப்பதற்குள் அவனுடைய கண் ஜேபியிலிருந்து எட்டிப் பார்க்கும் ரிப்பனின் மேல் பட்டது. அதைத் தொடர்ந்து கலாவின் ஞாபகம், அவளுடன் வாக்குவாதம் நடந்தது, தான் கடற்கரைக்குச் சென்றது, அங்கு நடந்த வேடிக்கை நாடகம் எல்லாம் அவனுக்கு மீண்டும் நினைவுக்கு வந்தன. முகம் குறும்புத்தனமான சிரிப்புடன் பிரகாசித்தது.

''காசு ஏது என்றா கேட்கிறாய்? மன்னி எனக்குக் கடலைக்காய் உருண்டைகள் செய்து கொடுத்தாள் அல்லவா? அதை நான் விற்றேன்'' என்றான் அவன்.

''விற்றாயா? எங்கே? யாருக்கு? ஏன்?''

முரளீதரன் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் கூறி முடித்தான். ஜகந்நாதன் சிரித்துக்கொண்டே எழுந்து போய்விட்டார். முரளியும் வெளியே சென்றான்.

''பார்த்தாயோ இல்லையோ விசாலி, உன் மைத்துனன் திருவிளையாடலை?'' என்று அவர் கேட்டதற்கு அவள் முப்பத்து இரண்டு பற்களும் ஜொலிக்கச் சிரித்தாள்.

அத்தைக்கு ஒத்தாசையாகக் கும்மட்டி விசிறிக் கொண்டிருந்த கலா இத்தனைக்கும் தலை நிமிரக்கூட இல்லை. விசாலாக்ஷி அவளை அழைத்து முரளியின் சாமர்த்தியத்தைப் பற்றிக் கூறினாள். அவள் காது கேட்காதவள்போல் இருந்துவிட்டாள்.

''என்ன கலா? உனக்கும் முரளிக்கும் 'டூ'வாக்கும்?''

'' 'டூ' விடுவதற்கு நான் ஒன்றும் குழந்தை இல்லை. இனிமேல் நான் இந்த ஊருக்கே வரப்போவதில்லை.''

''என்ன? ஏன் அப்படிக் கோபம் எங்கள் பேரில்?''

''உனக்குத்தான் முரளியின் கேளிக்கைகள் பிடிக்கின்றன. உன்னை எடுத்து வீசிப் பேசுகிறான். நீ அகமகிழ்கிறாய். என்னால் பொறுக்க முடியவில்லை.''

''முரளி பேரிலா உனக்கு அவ்வளவு கோபம்? அவன் ஒன்றும் தப்புத் தெரியாத குழந்தையாயிற்றே? அவன் என்னை ஏன் அப்படி ஏசுகிறான்? என்னிடம் இருக்கும் சலுகைதான். அவன் அபிதாவிடம் அப்படிப் பேசுகிறானா? மரியாதையாகத் தூர விலகுகிறான். மீனாக்ஷியுடன் அதிகம் பேசுவதுகூட இல்லை. அதைப் பற்றிச் சொன்னாலும் அர்த்தம் இருக்கிறது. அவனை உதாசீனம் செய்வது அவன் சிறு வயசுக்கு அழகில்லை. நாம் யாரிடம் மரியாதையாக இருக்கிறோம்? முன்பின் தெரியாத அந்நியரிடம். யாரிடம் சிரித்துப் பேசுகிறோம்? தூரத்துச் சிநேகிதர்களிடம். ஆனால் யாரிடம் மனம் விட்டுப் பேசி, கோபித்து, சந்தோஷித்து அளவளாவ முடியும்? நெருங்கிப் பழகுபவர்களிடந்தான். அவன் என்னிடம் எவ்வளவு சலுகையுடன் இருந்தால் சுவாதீனமாக ஆஞ்ஞைகள் இடுவான்? அவன் கேவலம் மதனி மரியாதை பார்ப்பதென்றால் என்னிடம் ஒன்றுமே கேட்கமாட்டானே, சங்கோஜப்படுவான். தன் தாய்க்கு அடுத்தபடியாக, தன் தமக்கைக்குச் சமானமாக நினைப்பதனால் அல்லவோ அவன் என்னிடம் அந்தரங்கமாகப் பழகுகிறான்? கலா, உனக்கு அவன் சுபாவம் தெரியாது. நாகதாளிப் பழம்போல் வெளியில் சுள் என்று குத்தும் முட்களால் மூடியிருந்தாலும், அவன் உள்ளம் மிகவும் இனியது, இளகியது, நுட்பமானது. அவனுக்குக் கிருஷ்ண பகவானின் பெயர் வைத்த குற்றம்தான், கண்ணனைப் போலவே லீலைகள் ஆடுகிறான்'' என்று ஓர் உபந்நியாசம் செய்து முடித்தாள் விசாலாக்ஷி.

கலாவின் மனம் முற்றிலும் திருப்தியடையாவிட்டாலும் முகம் தெளிவடைந்தது. ''தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்'' என்று அவள் பாட ஆரம்பித்து விட்டாள்.

''மன்னி, இதைக் கலாவிடம் கொடுத்துவிடு'' என்று முரளீதரன் நீல நிற ரிப்பனை விசாலத்தின் கையில் கொடுத்து விட்டு, கலா அங்கு இருப்பதைக் கவனிக்காதவன்போல் வெளியே போக எத்தனித்தான்.

''அத்தை, இதை முரளியிடம் கொடுத்துவிடு'' என்று கலா குடத்திலிருந்து ஒரு கை ஜலத்தை எடுத்து முரளியின் பேரில் தெளித்தாள். பிறகு கையைத் தாவணியில் துடைத்துக் கொண்டு அத்தையின் கையிலிருந்து முரளீதரன் தனக்கு அளித்த பரிசை வாங்கிக் கொண்டாள்.

முரளீதரனும் திரும்பிப் பார்த்தான். அவன் முகமும் சிரித்தது. கலா அவனைத் தொடர்ந்து கொண்டே கூடத்திற்குச் சென்றாள்.

''முரளி, வருகிறாயா? ஓர் ஆட்டம் போடலாமா?''

''நீ சொல்லும் வார்த்தை ஓர் பெண்ணுக்கு அழகா?''

''தாங்கள் செய்யும் காரியங்கள் ஓர் ஆணுக்கு அழகோ?''

''சரி சரி; உன்னுடன் வாய் கொடுத்தால் மனிதன் பிழைப்பது ஏது?''

''ஏசாது மாமா, சௌக்கியமா?'' என்று கேலி செய்தாள் கலா.

''கலா, உனக்கு என் பேரில் ரொம்பக் கோபம்; இல்லையா?''

''ஆமாம்'' என்று தலையை ஆட்டினாள் கலா.

''இப்பொழுது? - நீ நாளைக்கே ஊருக்குப் போகப் போகிறாயாமே? ரகு மாமா, கமலா மாமி, அபிதா மன்னி,

அருணாசலம், அம்மா, அப்பா அத்தனை பேருமாகடைக்குப் போயிருக்கிறார்கள்?''

''எல்லோரும் பட்டணம் போயிருக்கிறார்கள். அவ்வளவுதான் நான் சொல்லுவேன். அபிதாவுக்குக் காகிதம் வாங்கவேண்டுமாம். அருணாசல மாமா ஏதோ ஆபீசுக்குப் போய் பார்க்க வேண்டுமாம். மாமா, மாமி வேறு எங்கேயோ போயிருக்கிறார்கள். நான் வரவில்லை என்று கூறிவிட்டேன். எனக்கு அத்தையுடனும், பிரபா, நட்டுவுடனும் இருக்கவேண்டுமென்று ஆசையாக இருந்தது.''

''நான் வரட்டுமாகலா உன்னுடன்?''

''பேஷாக வாயேன். நீ எங்கள் வீட்டுக்கு வந்தால் நான் உன்னுடன் சண்டை போடமாட்டேன்.''

''அப்படியென்றால் என்ன அர்த்தமாம்? நீ இங்கு வந்தால் நான் உன்னுடன் சண்டை போட்டுக் கொண்டு இருக்கேனாக்கும்?''

''பார்த்தாயா முரளி, மறுபடியும் ஆரம்பித்து விட்டோமே? என் மேல் உனக்குக் கோபமா?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. நீ பாலு பெண்டாட்டியைப் பார்க்கவில்லையே?''

''கல்யாணத்துக்கு முன் பார்த்து இருக்கிறேன். ஆனால் இப்பொழுது பாலு மாமா அழகுக்கும் அவள் - 'இதற்கும்'...''

''எதற்கும்?''

''அது என்னவோ போகட்டும்.''

''பாலு அவள் பணத்தைப் பறிப்பதிலேயே கண்ணாக இருக்கிறான். எத்தனை நாள் இப்படியே நடக்கப் போகிறது? அவள் இவனிடமிருந்தே கற்றுக்கொண்டு, ஒரு பைசாக்கூட இவன் கண்ணில் காண விடப்போவதில்லை.''

''முரளி, நீ இப்படியெல்லாம் பெரியவர்கள் காரியத்தில் தலையிடக்கூடாது.''

''ஆகட்டுமடியம்மா, பெரிய மனுஷி! தலையிடுவது என்ன? வைத்தி மாமா வத்தி வைத்துக்கொண்டுதான் இருக்கிறார் என்று நினைக்கிறேன். போன தரம் மீனா இங்கு வந்தபோது அவள் அப்பாவுக்கும் அவளுக்கும் பெரிய வாக்கு வாதம். தாய் வேறு நடுவில் கூச்சல். நம் வீட்டவர்களுக்கு ஒன்றுமே தெரியாது.''

''உனக்கு மட்டும் ஞானதிருஷ்டியால் தெரிந்து விட்டதாக்கும்!''

''நீ சின்னவள், உனக்கு என்ன தெரியும்? நான் இந்த வேடிக்கையை முழுக்கப் பார்ப்பதற்கே அடுத்த லீவுக்குப் பாலுவிடம் போகப் போகிறேன்.''

''பம்பாய்க்கு வருகிறேன் என்றாயே?''

''அது அப்புறந்தான்.''

4. உடைந்த உள்ளம்

பாலகோபால் கிளப்புக்குப் போக உடையணிந்து கொண்டு மாடிப்படி இறங்கி வந்தான். கீழே தன் அறையில் ஏதோ தைத்துக் கொண்டிருந்த மீனாக்ஷி, அதை மடித்து வைத்துவிட்டு, தன் கணவன் சொல்வதையே நோக்கிக் கொண்டு இருந்தாள்.

பாலு கடைசிப் படியில் நின்றவாறு சுற்று முற்றும் பார்த்தான். அவள் அந்தப் பார்வையை ஊகித்தவளாய் ஒரு தம்ளர் தண்ணீரை எடுத்து வந்து கணவனிடம் கொடுத்து விட்டுச் சற்று விலகி நின்றாள். அவன் தண்ணீரைக்

குடித்துவிட்டு, லோட்டாவை அப்படியே கை பிடிக் கட்டையின் மேல் வைத்துவிட்டு, அவளைத் திரும்பிக்கூடப் பாராமல், வாசற் பக்கம் போக எத்தனித்தான்.

''இதோ, இன்றைக்கு இது வந்தது'' என்று மெதுவாக உரைத்துக்கொண்டே ஒரு கவரை நீட்டினாள் மீனாக்ஷி.

அவள் குரலைக் கேட்டுவிட்டு, அசட்டையாகத் திரும்பின பாலு, கவரை வாங்கிப் படித்தான். பிறகு அதைத் தன்சட்டை ஜேபியில் திணித்துக் கொண்டு, ஒன்றும் கூறாமல் வெளியே போய் விட்டான். மீனாக்ஷியும் தன் வேலை முடிந்துவிட்டது என்று நினைத்தவள்போல் தனது அறைக்குச் சென்று ஏதோ தையல் தைக்கலானாள். அவள் முகத்தில் முடிவிலாச் சோகம் குடி கொண்டு இருந்தது.

முரளீதரன் ஹாலின் மூலையில் ஒரு சோபாவில் அமர்ந்தபடி, பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். படித்துக் கொண்டுதான் இருந்தானோ அல்லது படிப்பதாகப் பாசாங்கு செய்துகொண்டிருந்தானோ தெரியாது; பாலு அவ்விடத்தை விட்டு அகன்ற பிறகு அவன் எழுந்து தன் மன்னியின் அறைக்குச் சென்றான். அங்கே ஒரு ஜன்னலில் அமர்ந்தான். அவனைக் கண்டதும் மரியாதையாக எழுந்தாள் மீனாக்ஷி.

''எனக்கு என்ன மரியாதை மன்னி, பேசாமல் உட்கார். அதோடு நீ சப்கலெக்டரின் அகமுடையாளல்லவா? இந்த மாதிரிப் பட்டிக்காட்டுப் பழக்கங்களையெல்லாம் விட்டுவிட வேண்டும். நாளைக்கு ஒரு கவர்னர் வருவான். அவனுக்குச் சரி சமானமாக உட்கார்ந்து பேசவேண்டும். அவர்கள் வீட்டுக் கோழிக் குஞ்சின் சௌக்கியத்தைப்பற்றி விசாரிக்க வேண்டும். நீ எழுந்து நிற்பதும், உட்காருவதும் பார்த்தால் எனக்குச் சிரிப்பாய் வருகிறது. பாலுவுக்குக் கூட எழுந்திருக்கிறாயோ?''

மீனாக்ஷி பேசவில்லை. நின்றுகொண்டே இருந்தாள்.

''சரியாய்ப் போச்சு! என்னுடன் பேசமாட்டாயா? முன்னால் இருந்த ஊர் உறவுகூடப் போய்விட்டதா? பேஷ், நல்ல அண்ணா, நல்ல மன்னி! அவன் என்னவோ நாடகத்தில் வருபவன் போல் வேளைக்கு ஓர் உடை மாற்றிக்கொள்கிறான், எங்கோ போகிறான், எங்கோ வருகிறான். நீயோ பேசக்கூட மாட்டேன் என்கிறாய். இதுதான் பணத்தின் மகிமையாக்கும்? நான் நாளைக்கே ஊருக்குப் போகிறேன்.''

''நீங்கள் அப்படிக் கோபித்துக் கொள்ளக் கூடாது. எனக்கு யாருடனும் பேசியே பழக்கமில்லை. அத்துடன் நீங்கள் சொல்வதெல்லாம் எனக்கு மிகவும் வேடிக்கையாக இருக்கிறது.''

முரளீதரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மீனாக்ஷியா இப்படிப் பேசுகிறாள்? அர்த்தமற்ற சிரிப்பும், அசட்டுப் பேச்சும் தவிர அறியாத மீனாவா இவள்? என்ன அடக்கமாகப் பளிச்சென்று பதில் சொல்லுகிறாள்! அவள் வாயைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்க்கலாம் என்று வந்த அவன், அவள் இப்படிப் பேசுவதைக் கண்டு பிரமித்துவிட்டான். அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். தன்னைக் காட்டிலும் ஒரு வயது சிறியவள் ஆயினும் விவகாரத்தில் தன்னைவிடப் பன்மடங்கு முதிர்ச்சி அடைந்துவிட்டாள் என்பதை அவன் ஒரு கணத்தில் அறிந்து கொண்டான். வாழ்க்கையின் நிலைப்படியில் நிற்கும் முரளீதரன் அதன் ஒவ்வொரு மர்மமும் வெளியாகும்போதும் திகைப்புற்றான். தனக்கு இன்னும் விளையாட்டிலும் குறும்பிலும் ருசி போகவில்லை. இவள் அதில் சிறிதளவும் இச்சை காட்டவில்லை. இவளுக்கு முன்னே தான் ஒரு குழந்தையெனத் தோன்றியது அவனுக்கு. அந்த ஓர் எண்ணத்திலே அவனும் எவ்வளவோ முதிர்ச்சி

அடைந்துவிட்டான். அவன் கண்களுக்கு மீனாக்ஷியின் முகத்தில் பிரதிபலித்த சோகம், அவளுடைய வைர நகைகளையும் மங்க அடித்தது. மெதுவாகக் கவனித்த முரளியின் கண்களில் மீனாக்ஷியின் தோற்றத்தில் புதியதாக ஏற்பட்டிருக்கும் ஒவ்வோர் அம்சமும் பட்டது.

மிதமான நகைகள், ஆடம்பரமற்ற ஆடைகள், அடங்கிய பாவம் - மீனாக்ஷி முரளியிடத்திலும் மதிப்புப் பெற்றுவிட்டாள். தன்னையும் அறியாமல் 'அவளுக்கு ஆறுதல் அளிக்கவேண்டும்' என்று தோன்றிற்று அவனுக்கு.

மீனாக்ஷி இதற்குள் கீழே அமர்ந்துவிட்டாள். கையில் ஏதோ தையலை எடுத்துக் கொண்டு, அதைத் தைப்பதில் முனைந்தாள்.

முரளீதரனுக்குத் தான் ஏதாவது பேசவேண்டும் என்று தோன்றிற்று.

''மன்னி, இன்றைக்கு வந்ததே, அது என்ன கடிதம்?'' என்று அவன் வினவினான்.

''அதுவா! லேடீஸ் கிளப் சார்பாக ஏதோ நாடகமாம். நாளைக்கு நடக்கிறதாம். அதற்கு எங்களுக்கு அழைப்பு.''

''நீ போவாயோ இல்லையோ?''

''மாட்டேன், நான் போகிற வழக்கமில்லை. அவர்தாம் போவார்.''

''ஏன்?''

''ஏன் என்றால்? எனக்கு அவர்களுடன் எல்லாம் பேசக்கூடத் தெரியாது.''

''அது சுத்தப் பயங்கொள்ளித்தனம். அவர்களும் மனிதர்கள்தாமே?''

''அது என்னவோ, நான் போகிறதில்லை. தீராமல் போய்விட்டால் எப்பொழுதாவது யார் வீட்டுக்காவது போவேன், உடனே வந்துவிடுவேன். இந்த மாதிரிப் பொது விஷயங்களுக்குப் போக எனக்குப் பயம்.''

''ரொம்ப அழகாக இருக்கிறது!'' என்று கூறிவிட்டு எழுந்து விட்டான் முரளி. அவனுக்குச் சப்பிட்டுவிட்டது. தான் ஒரு விநாடி முன் நினைத்ததெல்லாம் வெறும் பிரமை, இன்னும் பழைய அசட்டு மீனா மறையவில்லை என்று தீர்மானித்துக் கொண்டவனாய், அவன் அங்கிருந்து போய்விட்டான்.

ஆனால் மீனாக்ஷியின் மனத்தில் எத்தகைய புயலைக் கிளப்பி விட்டுவிட்டோம் என்று அவன் என்ன அறிவான்? மைத்துனன் அவ்விடத்தை விட்டு அகன்ற பிறகு, மீனாக்ஷி இந்த இரண்டு மூன்று வருஷங்களாகத் தான் நடத்தி வரும் மணவாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்தாள். சில சமயம் மிகவும் சிரிப்பு வந்தது. சில் சமயம் மிகவும் துக்கமாக இருந்தது.

இன்று வந்தது போல் இதுவரை எத்தனையோ அழைப்புக்கள், எத்தனையோ கடிதங்கள் வந்துவிட்டன. ஆனால் மீனாக்ஷி ஒன்றிற்கும் போனது கிடையாது. அதற்கு, தான் காரணமா அல்லது தன் கணவன் காரணமா என்று அவளால் நிச்சயிக்க முடியவில்லை. ஆனால் ஊரில் - ஏன், தன் வீட்டில் வேலைக்காரர்கள் கூட, தான் எங்கும் செல்லாததைப்பற்றி, வீட்டில் நடந்துகொள்ளும் விதங்களைப்பற்றி பேசிக்கொள்வது அவள் காதில் படாமல் இல்லை.

முதல் முதலில் மீனாக்ஷிக்கு எல்லாம் மிகவும் வெட்கமாக இருந்தது. அவள் தன் கணவன் எதிரில் நிற்கவும் பயப்பட்டாள். கிராமத்திலேயே வளர்ந்த அவளுக்கு,

நகரத்துப் பெண்மணிகளின் முற்போக்கு மிகவும் பீதியையே அளித்தது. தன்னை அந்தச் சூழ்நிலைக்குச் சரிப்படுத்திக் கொள்ளத் தெரியாமல் அவள் திண்டாடினாள். இந்தத் தடுமாற்றம் பால கோபாலனுக்கு அருவருப்பை அளித்தது. அவள் அசட்டு வெட்கம் அவனை எட்டிப் பறந்தோடச் செய்தது. அவன் விலகியே நின்று பழகினான். வெளி வேஷத்திற்காக ஏதோ பேச்சும் விவகாரமும் நடத்தினான்.

மீனாக்ஷியின் மொட்டு உள்ளம் மலர்ந்தது. அந்த விழிப்பில், தன் கணவனின் சுந்தரரூபத்தைக் கண்டு அவள் பிரமித்தாள், களித்தாள்; தனக்குக் கிடைத்த பாக்கியத்தை நினைத்து மகிழ்ந்தாள். ஆனால் அம்மலர் சீக்கிரமே திரும்பக் குவியும்படி ஆகிவிட்டது. முதலிலே இயற்கையாக உண்டாகாத பிணைப்பு இப்பொழுது அகண்டு தன் கணவனுக்கும் தனக்கும் இடையே அகழிபோல் வாயைப் பிளந்து நின்றது. அதை அறிந்து உள்ளம் குமுறினாள் மீனாக்ஷி. அவளது மனம் என்ன என்னவோ கேள்விகள் கேட்டது, புரியாத புதுப் புது விஷயங்களைக் கோரி நச்சரித்தது. அளவிலா ஆவல்களையும் ஆசைகளையும் காட்டிற்று. மீனா அதை அடக்கினாள். 'நீ கோருவது வியர்த்தம்' என்று பதிலளித்து அந்த ஆழமான அகழியைச் சுட்டிக் காண்பித்தாள். அவளைத் துன்புறுத்தும் வேதனை பலூனைப்போல் மார்பில் உப்பிற்று, பிறகு நீண்ட கனத்த பெருமூச்சாகப் பிளந்து கொண்டு வெளியே வந்தது.

மீனாக்ஷி தன் கண்களில் நிரம்பிய நீர்த்துளிகளைச் சுண்டு விரலால் தெறித்துவிட்டு, எழுந்து, சுவரில் மாட்டியிருக்கும் தன் கணவன் படத்தின் எதிரே வந்து நின்றாள். அதன் சட்டத்தில் கையை வைத்து அதன் மீது நெற்றியைப் பொருத்திக்கொண்டு, ''சுவாமி, உங்கள் அன்பு எனக்கு என்றைக்கும் கிடைக்காதா?'' என்று கேட்டுப் புலம்பினாள்.

துக்கத்தின் வல்லமைதான் என்ன! குழந்தைகளை முதிர்ச்சி பெற்ற மூதாட்டிக்களாக்கி விடுகிறது; அடங்காத அகம்பாவத்தை நொடியில் வெட்டித்தள்ளி விடுகிறது. எந்த அசட்டுத்தனத்தை அவள் முகத்திலிருந்து அழிக்கப் பாலு அரும்பாடுபட்டானோ அது இப்பொழுது காணவும் கிடைக்கவில்லை. மீனாக்ஷியின் மனத்தைத் தாக்கிய துயரம், அதை அடித்துக் கொண்டு போய்விட்டு, அவள் வதனத்தை நிர்மலமாக விட்டுவிட்டது. எந்த அநாகரிகத்தைத் தொலைக்கப் பாலகோபாலன் முயன்றானோ அம்முயற்சியை அவனுடைய அசட்டை வெகு எளிதில் செய்து முடித்து விட்டது.

தான் யாருக்காக அலங்காரம் செய்துகொள்ள வேண்டும்? தன் இருதயத்தில் வைத்துப் பூஜிக்கும் கணவனோ தன்னை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. மீனாக்ஷி தன் கணவனின் கௌரவத்திற்கு ஹானி வராமல் சொல்பமாக ஆபரணங்கள் அணிந்து கொண்டாள். ஆமாம், அவர்தாம் தன்னை எப்படிப் பார்ப்பார்! ஒருநாள் வீட்டு வேலைக்காரி மற்றொருத்தியிடம் சொல்லிக்கொண்டது மீனாக்ஷியின் காதில் விழுந்துவிட்டது: ''எள்ளும் பச்சரியும் கலந்தாற்போல் இருக்கிறது. பாவம், ஐயா, ராஜா மாதிரி இருக்காரு. அவங்க தகப்பனாரு இப்படி ஜோடி பிடிச்சிட்டாரு. இப்போ ஐயாவுக்கு மனசுக்குப் பிடிக்கலே. அவங்களுக்குள் பேச்சு வார்த்தை கூடக் கிடையாதாம். சமையக்கார ஐயா சொல்லிச்சு.'' இதைக் கேட்டவுடன், மீனாக்ஷியின் உள்ளம் சுக்கு நூறாயிற்று. தன் தகப்பனார் கட்டிய கோட்டைகள் என்ன? இப்பொழுது இவ்வாறு வேலையாட்கள் கூடத் தன் வாழ்க்கையைப் பற்றிப் பேசி அனுதாபப்படுவதா? அன்றிலிருந்து தான் தன் கணவனுடன் வெளியே புறப்படுவ தில்லை. அவருக்கு அவமானம் என்று எண்ணித் திட

சங்கல்பம் செய்து கொண்டாள். இதற்கு முன் எத்தனையோ முறை சென்றுவிட்டாற்போல்!

அதையெல்லாம் நினைக்கும் நேரத்தில் அவளுக்குத் தாங்க முடியாத துக்கம் தோன்றி அவள் நெஞ்சை அடைத்தது. தன் அப்பாவின் அருகில் அமர்ந்து, அம்மாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு எல்லாவற்றையும் சொல்லி அழவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

மாலை பாலு வந்ததும் மூவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். முரளீதரன் தன் தமையனைப் பார்த்து, தான் அடுத்த நாள் ஊருக்குப் போவதாகக் கூறினான்.

''என்னடா அவசரம்?''

''இங்கே இனிமேல் என்ன இருக்கிறது? எனக்குப் பொழுதே போகவில்லை.''

''நானும் அவருடன் ஊருக்குப் போய்விட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள் மீனாக்ஷி. பாலகோபால் அவளை நிமிர்ந்து நோக்கினான். பிறகு மெதுவாக, ''எதற்கு?'' என்று கேட்டான்.

''வெறுமனேதான். போய் ஒரு மாசம் இருந்துவிட்டு வருகிறேனே?'' மீனாக்ஷி இவ்வாறு தைரியமாகக் கணவனிடம் பேசியது இதுவே முதல் தடவை.

''உம், போயேன். நான் சொன்ன விஷயம் ஞாபகம் இருக்கட்டும். போனவுடனே உன் அப்பாவுடன் சொல்லி ஏற்பாடு செய்'' என்றான் பாலு.

''ஆகட்டும்.''

★ ★ ★

வழியில் முரளி அதைப்பற்றிக் கேட்டான்.

''அவருக்குப் புதிய கார் வேண்டுமாம். அந்தஸ்துக்குத் தக்கபடி இருக்கவேண்டுமாம்'' என்று கணவனைத் தாங்கிப் பேசினாள் மீனாக்ஷி.

5.கல்வெட்டும் கலவரமும்

''என்ன, நான் கேள்விப்படுவது நிஜமா?'' என்று திடும் பிரவேசம் செய்த அபிதா, தன் கணவனைக் கேட்டாள்.

அருணாசலம் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். அவள் கேட்டதை முழுவதும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவளை நோக்கியபடியே, ''என்ன விசேஷம்?'' என்று அவன் திருப்பிக் கேட்டான்.

''என்ன விசேஷம் என்று என்னைக் கேட்கிறீர்களே? ரொம்ப வேடிக்கைதான்.''

''என்ன சமாசாரம் சொல்லேன். எனக்கு ஒன்றும் புரியவில்லையே? மேலும் நான் இந்தத் 'தீஸிஸை' இன்றைத் தபாலுக்கே அனுப்பவேண்டும். லக்ஷ்மிநாராயண ஐயர் பார்வையிட்டு அபிப்பிரயாம் சொல்லுகிறேன் என்றார். நாள்ளக்கு அவர் விருது நகரத்துக்குப் புறப்பட்டுப் போய்விடுவார்.''

''யார்? சரித்திர நிபுணர் ஸர்.கே. லக்ஷ்மிநாராயண ஐயரா? தேவலையே!''

''ஆமாம். அவர்கூடப் போன வாரம் இங்கே வந்தாரே? நீ ஊரில் இல்லை.''

''அப்படியென்றால் நீங்கள்கூட ஒருநாள் பெரிய ஆசாமி ஆகிவிடுவீர்கள் என்று சொல்லுங்கள்.''

''தற்சமயம் இது எழுதியாகட்டும். அப்புறம் கற்பனைக் கோட்டைகள் பிடிக்கலாம்.''

''சொல்லுங்கள், சொல்லுங்களேன். என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே? உங்களுக்கு நான் இங்கே இல்லாவிட்டாலே சௌக்கியமாக இருக்கிறது.''

''நான் எல்லாம் சொல்ல வேண்டுமென்றுதான் இருந்தேன். இதை முடித்துவிட்டு வருகிறேன். சமத்து அல்லவா நீ? பொறு.''

''இதற்கு மாத்திரம் பதில் சொல்லி விடுங்கள். நீங்கள் வேலையை ராஜீநாமாக் கொடுத்து விட்டீர்களாமே, நிஜமாவா?''

''ஆமாம். அதற்கு என்ன இப்பொழுது? உத்தியோகம் எங்கே, இந்த வேலை எங்கே? இப்பொழுதுதான் இதன் பேரில் பெரியவர்கள் திருஷ்டி பட்டிருக்கிறது. நம் சௌகரியத்தைப் பார்த்தால் ஆராய்ச்சி செய்ய இயலாது.''

''ஆமாம், கீர்த்தி வருவதென்றால் சாமானியமா? சகலவிதமான கஷ்ட நிஷ்டூரங்களையும் சகித்துத்தான் ஆகவேண்டும். பெரிய பெரியவர்களின் சரித்திரங்களைப் படித்துப் பாருங்கள். ஒன்றுமில்லாமல், சோறுகூட இல்லாமல், கஷ்டப்பட்டு, முன்னேறினவர்களே பிற்காலத்தில் தமக்கு நிகர் இல்லை என்று புகழ்பெற்று வாழ்ந்திருக்கிறார்கள்.''

'' 'பத்மஜாவின் பலவீனம்' என்ற உன் நாவலிலும் அப்படித்தானே பாஸ்கரன் முன்னேறுகிறான்?'' என்று கேட்டான் அருணாசலம். தன் கணவன் தான் எழுதியதைப் பற்றிப் பெருமையடைகிறான் என்ற நினைப்பு அபிதாவுக்கு அளவிலா மகிழ்ச்சியை ஊட்டியது. ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமலே அவள் போலித் தணிவுடன் பதில் கூறினான்.

''அதென்ன? நாம் வாழ்க்கையில் கண்கூடாகக் காணும் நிச்சயங்களைத் தானே நான் சித்தரிக்கிறேன்? ஈசுவரனின் சிருஷ்டியில் இல்லாததைப் புனைந்து சொல்ல எனக்குத் துணிவு ஏது?''

அருணாசலம் அவளது வாய்ச் சாலக்கைப் பார்த்து அகமகிழ்ந்து கொண்டிருந்தான். அவன் உள்ளம் ஆனந்தப் படுவதற்கு வேறு காரணமும் இருந்தது. வீட்டில் எல்லோரும் தான் ராஜீநாமாக் கொடுத்ததைப் பற்றிப் பலவிதமாக அபிப் பிராயப்பேதப்பட்டார்கள். அப்படியிருக்க, அபிதா வேறு ஆரம்பித்துவிட்டாளே என்று அவன் பயந்து கொண்டிருந் தான். அந்த மட்டும் 'தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று' என்பதுபோல், அபிதாவின் புகார், புகழ் முறையில் முடிந்ததைப்பற்றி அவன் மனத்திற்குள் களித்துக் கொண்டான்.

அவனுடைய தகப்பனார் சமாசாரத்தைக் கேட்டவுடன், ''சரி, இந்த வேலையை விட்டு விட்டதனால் உன் ஜீவனத்திற்கு ஒன்றும் கவலையில்லையென்றால் சரிதாம். பிற்காலத்தை யோசித்துச் செய். உனக்கு விவாகமாகி யிருக்கிறது. அத்துடன் நீ ஒரே பிள்ளையல்ல. உன் சகோதரர்கள் யாரும் உனக்கு உதவி செய்ய முடியாது. ஜகத்துக்குச் சௌகரியம் போதாது, பாலுவுக்குச் சௌகரியம் உண்டு; ஆனால் செய்யமாட்டான்'' என்று கூறிவிட்டுத் தம் பொறுப்பை நீக்கிக் கொண்டார்.

''என்னவோ அப்பா, இந்த ராஜீநாமாவும் கீஜீநாமாவும்... எனக்கு ஏதாவது இந்த வியவகாரம் பிடித்தால்தானே? கல்யாணமான புதிதிலே சிறிசுகள் கூடிப் பேசுவதற்குச் சாக்குப் போக்காக கல்வெட்டையும், கற்பனையையும், மண்ணாக் கட்டியையும், மருக்கொழுந்தையும் சொல்லுகிறதுகள் என்று நினைத்தேன். எந்தக் காலத்திலேயோ எவனோ ஒருவன் வயிற்றுப் பிழைப்புக்காகச் செதுக்கினானாம். அது

பாழடைந்து இடிந்து போய் விட்டது. நம் கோவில் தற்போது இருக்கும் நிலையிலிருந்து அது இடிந்து கீழே விழாம லிருப்பதற்கு வழியைக் காணோம். இவன் பூமியைத் தோண்டி ஒரு புது உலகத்தையே கண்டுபிடிக்கப் போகிறானாம்!

''அப்படி என்ன ராஜீநாமாக் கொடுக்கும்படியான வேளை வந்துவிட்டது இவனுக்கு? தப்பு, தண்டா செய்து விட்டு அவர்கள் நம்மைத் தள்ளிவிடப் போகிறார்களே என்ற அவமானமா? ஏதோ 'மாட்டை மேய்த்தோம், கோலைப் போட்டோம்' என்று வேலையைச் செய்துவிட்டுக் கொடுத்த சம்பளத்தை வாங்கிக்கொண்டு சிவனே என்று இருப்பதை விட்டு..... தோண்டுகிறானாம். இவன்... வீட்டைத் தோண்டிக் குடும்பத்தையே அடியோடு வெட்டியெறியத் .தான் வழி பார்க்கிறான்!

''அங்கே வெட்டிக் குவிப்பதை, நம் வீட்டுத் தோட்டத்தில் செய்தாலும், கீரை விதைப்பதற்காவது உபயோகப்பட்டிருக்கும். இந்தப் பள்ளம் வெட்டுவதற்கு ஊரில் இருக்கிற பெரிய மனுஷாள் சிபாரிசு வேறே! இதற்குப் பாடுபட்டதற்கு நாலில் ஒரு பங்கு தன் வேலை நிமித்தம் செலவழித்திருந்தால் இப்பொழுது ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு ஹாய்யாக இருக்கலாமே? அந்த வழிக்குத்தான் நான் வரவில்லையே! ஒரு சமயம், ஏண்டீ விசாலம், ஒரு சமயம் உன் மைத்துனனுக்கு எங்காவது திடீரென்று ஆஸ்தி வந்துவிட்டதோ? அவன் மாமனார் அவனுக்கு அஷ்ட ஐசுவரியத்தை அளித்து இருக்கிறாரோ? அவனுக்கு இந்த அற்ப உத்தியோகம் லட்சியம் இல்லை போலும். யார் கண்டார்கள்? எதோ ஒரு தைரியம் இல்லாமல் களஞ்சியம்போல் வந்து கொண்டிருந்த சம்பளத்தைவிட்டு விட்டு இங்கே வந்து மண்வெட்டுவானா, கல் பொறுக்கு வானா? ஏண்டீ, விசாலம், ஒரு வேளை அவனுக்கு எதாவது

புதையல் கிடைக்குமோ?'' என்றெல்லாம் குரோதமாகவும், கேலியாவும் ஜானகியம்மாள், தன் இஷ்டக் குறைவை வெளிப்படுத்தியவாறே இருந்தாள். இதைக் கேட்டு விட்டுத்தான் அபிதா தன்னைத் தேடிக்கொண்டு வந்தாள் என்று அருணாசலம் அறிவான்.

வீட்டில் உள்ள அத்தனை பேரும், அப்பா முதல் முரளி வரை அனைவரும் தத்தம் அபிப்பிராயங்களைச் சொல்லியாகி விட்டது. குழந்தைகள் நடராஜனும், பிரபாவும் உலகச் சிந்தனைகள் அற்ற பரமயோகிகள். மீனாக்ஷி அவ்விஷயத்தில் அவர்களைக் காட்டிலும் சற்றே உயர்ந்தவள். செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே புகுந்த அவளுக்குப் பணமுடை போன்ற விஷயங்கள் தெரியா. அத்துடன் கணவனின் காதலுக்காக ஏங்கி நின்ற அவளுக்கு, அன்பின் லோபத்தைக் காட்டிலும் வேறு எதுவும் பெரிதாகத் தோன்றவில்லை.

பாலகோபாலனின் மனத்தில் அருணாசலம் ஒரு பைத்தியக்காரன் என்று எண்ணம். ஜகந்நாதன் ஒன்றும் கூறவில்லை. அவர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். ''அருணாசலம், நீ செய்த வேலை அபிதாவுக்கு தெரியுமாடா? அவள் சுபாவத்துக்கு, இந்தக் குக்கிராமத்திலே அக்கிரகாரப் பழக்க வழக்கங்களை அநுசரித்தும், கட்டுப்பாடுகளுக்கு அடங்கியும் நடக்க முடியுமா? நிரந்தரமாக இங்கு இருப்பது, விடுமுறைக்கு வந்து இருக்கும் உல்லாச வாழ்க்கையைப் போல் இருக்காது. யோசித்துச் செய்'' என்று அவர் கூறுவதற்குள்ளாகவே அருணாசலத்தின் முகம் கறுத்து விட்டது.

''ஜகம், அபிதாவைப்பற்றி உனக்கு அதிகம் தெரிய வில்லை என்றே நான் நினைக்கிறேன். அவள் நுண்ணிய புத்தி படைத்தவள். கவியுள்ளம் கொண்டவள். இந்தச் சில்லறை

விஷயங்களுக்கெல்லாம் இடம் கொடுக்கமாட்டாள்'' என்று அவன் தன் அண்ணனின் பேச்சை அடக்கி விட்டான்.

''நீ சௌக்கியமாக இருக்க வேண்டியதுதான் என் கோரிக்கை'' என்று கூறிவிட்டு அவர் போய்விட்டார்.

அருணாசலத்திற்கு இப்பொழுது தன் மன்னியின் அபிப்பிராயம் என்ன என்று அறிய வேண்டுமென்று ஆவல் தோன்றிற்று. முரளியை அனுப்பிக் கேட்கச் சொன்னான். தான் மறைவிலிருந்து அவள் பதிலை ஒட்டுக் கேட்டான்.

''மன்னி, அருணாசலம் விஷயம் தெரியுமோ இல்லையோ? அவன் இனி உன்னுடனேயே நிரந்தரமாகக் குடியேறிவிட்டான்'' என்றான் முரளி.

''அவர் வீடு, அவர் வந்திருக்கிறார். கலையுணர்ச்சி என்பது எல்லோருக்கும் வந்துவிடுமா? ஆராய்ச்சி ஊக்கம் சாமான்யப்பட்டதா? அத்தகைய கடினமான சித்தமும் ஆவலும் அவருக்கு இருப்பது நம் பாக்கியம். அவருக்குத் தக்க சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டியது நம் கடமை. நாளைக்கு அவருக்குப் பெரிய கீர்த்தி கிடைத்தால் நமக்குத்தானே பெருமை? மாட்டைப் பாலித்து, மேய்த்து, பால் கறந்து, அதைக் காய்ச்சி, உரைகுத்தி, அந்தத் தயிரைக் கடையாமலே உருண்டை உருண்டையாக வெண்ணெய்க் கும், புத்துருக்கு நெய்க்கும் ஆசைப்பட்டால் மட்டும் கிடைத்துவிடுமா? உடல் நலுங்காமலேயே ராஜ பதவி வந்து அடையுமா?'' என்றாள் மதனி.

''உனக்குந்தான் கவிதா ரசம் பொங்குகிறது. நம் வீடு பிறகு ஒரே கவி மயமாகி விடுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது'' என்று கேலி செய்தான் முரளி.

''எனக்கு ஒரு ரசமும் கொதிக்கவில்லை. ஏதோ உங்களுடன் எல்லாம் பழகிய சகவாச தோஷத்தினால் ஒரு

திவலை இப்படித் தெறித்து இருக்கலாமல்லவா?'' என்று கேட்டுக் கலகலவென்று சிரித்துவிட்டு அகன்றாள் விசாலாக்ஷி.

''மன்னிதான் சரி, தன் தலைமேல் பூகம்பம் வந்தாலும் அசைந்து கொடுப்பதில்லை'' என்று நினைத்துக் கொண்டான் அருணாசலம்.

இத்தகைய அபிப்பிராய பேதத்திற்கிடையே தன் நிரந்தர உத்தியோகத்தை விட்டு விட்டு, சரித்திர, சிற்ப, ஓவிய ஆராய்ச்சிக்குள் இறங்கிவிட்டான் அருணாசலம்.

6. லீலா விநோதன்

வீட்டில் யாரும் இல்லை. விசாலாக்ஷி தனியாக வாசற் பக்கத்து வராந்தாவில் அமர்ந்திருந்தாள். எதிரே ஒரு கூடை கனகாம்பரம் இருந்தது. அதனருகில் தொடுப்பதற்காக வாழை நாரும், ஒரு கிண்ணத்தில் நீரும் இருந்தன. விசாலம் புஷ்பத்தைத் தொடுக்காமல் விசுப் பலகையில் தன் அருகில் வீற்றிருக்கும் குழந்தை நடராஜனை நோக்கினாள். தோள் களும் காலும் சும்பி, வயிறு மாத்திரம் பருத்து அவனுடைய ரூபம் மிகப் பரிதாபமாக இருந்தது. அத்துடன் சுறுசுறுப்பாக விளையாடாமல், எப்பொழுதும் பொம்மைபோல் அமர்ந்திருந்தான் சிறுவன். எட்டு மாதம் நிரம்பியிருந்த பிரபா செய்யும் விஷமம்கூட மூன்று வயதாகியும் அவன் செய்வதில்லை. எப்பொழுதும் முகத்தில் பயந்த பார்வை, அழுகை. அந்தக் குழந்தையைக் காணக் காண விசாலாக்ஷி பலவித உணர்ச்சிகளுக்கு ஆளானாள். தாய்மை உணர்ச்சி அவளை மனமுருகச் செய்தது. பெண்மை தன் மாமியை நிந்தித்தது. பிறகு உடனே தான் நினைத்தது தவறு, அக்

குழந்தையைத் தானே பார்த்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்தாள்.

ஜானகியம்மாளுக்கு வயது சென்று பிறந்த குழந்தையைக் கண்டதும், வெறுப்பு இல்லாவிட்டாலும் அசிரத்தை, அவமானம் தோன்றின. தன்னையும் மீறிச் சில சமயம் பீறிட்டு வரும் தாயின் பாசத்தை அவள் அடக்கிக் கொண்டாள். ஏதோ தீராக் கடமையாகக் குழந்தையைப் பாலூட்டி, குளிப்பாட்டி வளர்த்தாள். இதனால் அக்குழந்தைக்கு ஒருவிதத் தீங்கும் நேரும் என்று அவள் நினைக்கவில்லை. ராமநாதையர் தம் யௌவன காலத்திலும் குடும்ப நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொண்டவர் இல்லை. ஏதோ பார்த்தபோது, தோன்றியபோது குழந்தையை எடுத்துச் சீராட்டுவார். ஆனாலும் அந்த மாதிரிச் சந்தர்ப்பங்கள் மிக மிக அரிதாக நேர்ந்தன.

இதனால் குழந்தை நடராஜன் உலகத்தைச் சுற்றிப் பார்க்கும் போதே, அது பலவிதத் தப்புக்களும் பயமும் நிறைந்ததாக இருந்தது. அவனுடைய சிறு உள்ளம் உதிக்கும்போதே கருக ஆரம்பித்துவிட்டது. உயிர்நிலையாகிய மனம் வளராமல் இருக்க, அவனுடைய உடல் நிலையும் பாதிக்கப்பட்டது.

விசாலாக்ஷி இதையெல்லாம் யோசித்தவாறே பூத் தொடுக்க ஆரம்பித்தாள்.

'செடி வளருவதற்கு ஆரம்பத்தில்தான் நீர் வார்த்து, கடும் வெயிலில் வாடாமல், சூரியனின் கிரணங்கள் பட்டும் கூனாமல் ஆதாரம் கொடுத்துக் காப்பாற்ற வேண்டி யிருக்கிறது. அது வளர்ந்து மரமான பிறகு அதை நாம் கவனிக்கவேண்டியது அநாவசியம். அப்பொழுது அது நமக்கு நிழல் தரும், நம்மைக் காக்கும். வசந்தத்தில் புதுத் துளிர் பூட்டிக்கொண்டும் இலை உதிர் காலத்தில் பழுப்பு

நிறமாகவும், இன்னும் அநேக விதமாகவும் தன்னை அலங்கரித்துக் கொண்டும் நம்மை மகிழ்விக்கிறது. பூக்களையும் கனிகளையும் குலுக்கி உற்சாகப்படுத்துகிறது.

'நம் கடமையை மறந்து, சிறு பிராயத்தில் போஷிக்காமல் இருந்துவிட்டு, ஆடு மேய்ந்து, மாடு மிதித்து வெள்ளத்தில் தரையோடு தரையாக அழுந்தினாலும், காற்றடியில் பிய்ந்து போகாமல் நின்று, எப்படியோ விதிவசமாக, தெய்வச் செயலாகப் பிழைத்து, அந்தச் செடி வளர்ந்த பிறகு, 'அது ஏன் கோணலாக வளர்ந்திருக்கிறது? நன்றாக நிழல் தரவில்லையே? பருவத்தில் பூக்காதோ!' என்றெல்லாம் ஐயுறுவதுபோல்தான் குழந்தையின் போஷணை விஷயமும்.

'குழந்தைகளைத் தாய்மார்கள் பாலூட்டிச் சீராட்டி, அன்பும் ஆதரவும் மிக வளர்க்காவிடில் அவர்கள் தைரியமில்லாமலோ, அல்லது அசட்டுத் துணிச்சலுடனோதான் வளருவார்கள். அவர்கள் மனம் முறிந்துவிட்டால் பிற்காலத்தில் அவர்கள் தாங்கள் சுகத்தை அடையாததுடன், சமூகத்திற்கே ஒரு முள்போல் ஆகிவிடுகிறார்கள்.'

இப்படியே யோசித்துக் கொண்டு சென்ற விசாலாக்ஷி தன் சிந்தனைகளைச் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். அவளுக்கே சிரிப்பு வந்துவிட்டது. 'ஏதேது, அபிதாவைத் தோற்க அடித்து விடுவோம் போலிருக்கிறதே!' என்று நினைத்துக்கொண்டாள். குழந்தை நடராஜனை வாரி அணைத்துத் தன் முகத்தோடு முகம் பதித்துக் கொண்டாள். ''அப்பனே, உனக்கு ஒரு குறையுமில்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அச் சிறுவனுக்கு வாக்குறுதி அளித்தாள்.

இப்பொழுது சாதுவாக, பிறர் கண்டு பரிதவிக்கும்படி அமர்ந்து இருக்கும் நடராஜன் விசாலாக்ஷி மனக் கண்களில்,

பெரியவனாகி, தைரியமற்று, மனைவி ஏச, ஊரார் சிரிக்க, உற்றார் நிந்திக்க நிற்பதாகத் தோற்றமளித்தான். விசாலாக்ஷியை அந்தக் காட்சி, கற்பனை மாத்திரத்திலேயே நடுங்கச் செய்தது.

''செடி போனால் வரும். உன் மனம் நொந்தால், திடமாகுமோ?'' என்று நடராஜனைக் கேட்டாள் அவள்.

''மன்னி சமத்து'' என்றான் அவன்.

பத்திரிகையை மடித்து வைத்துவிட்டு, ஜகந்நாதன் தம் மனைவியைத் தேடிக் கொண்டு உள்ளே சென்றார்.

''விசாலம்!'' என்று அவர் அழைத்ததும், அவர் குரலிலிருந்து ஏதோ முக்கியமான விஷயம் என்று அறிந்து ஓடிவந்தாள் அவள்.

''என்ன? என்ன?''

''எங்கே உன் செல்ல மைத்துனன்?''

''நடராஜாவா? குழந்தைகள் இரண்டிற்கும் எண்ணெய் தேய்த்துவிட்டேன். புழக்கடையில் விளையாடுகிறதுகள்.''

''இன்னும் அவனைப் பற்றிக் கேட்கும்படியான காலம் வரவில்லை. இன்னொரு அவதாரம் இருக்கிறதே - வானரத் தலைவன் - முரளீதரப் பிரபு! அந்தச் சனியன் எங்கே என்றேன்.''

''நீங்கள் ஏன் அவன் பேச்சை எடுத்தாலே எரிந்து விழுகிறீர்கள்?''

''போதும். இந்தத் தடவை மட்டும் நீ குறுக்கிடாதே. அவனை எப்படித்தான் அடக்குவது என்று எனக்குத் தெரியவில்லை. இன்றைக்கு என்ன வேண்டுமானாலும் ஆகிவிட்டுப் போகட்டும் என்று என் கை நமைச்சல் தீர அவனைச் செம்மையாகப் புடைத்து விடுகிறேன்.''

''அவசரப்பட்டு அடிக்காதீர்கள். அவன் அப்புறம் மனமுடைந்து ஓடிப்போய்விட்டாலும் போய்விடுவான்.''

''அப்படித்தான் ஒழிந்து போகட்டும். எனக்கு அக்கறையில்லை. இதோ பார், பிள்ளையின் லட்சணத்தை! மறுபடியும் பரீட்சை தவறி விட்டது. அப்பா ஒன்றையும் கவனிக்கமாட்டேன் என்கிறார். அம்மாவோ இவனுக்குப் பரீட்சைக்குப் பணம் கட்டுவதே கோணி அறுந்துவிடுகிறது என்று புகார் செய்கிறாள். இதுவே கடைசித் தடவை. இனிமேல் அவனை அவன் பெற்றோர்களிடமே அனுப்பிவிடுகிறேன். அவன் தொல்லையே எனக்கு வேண்டாம்.''

''உங்கள் பெற்றோர்கள் யாரோ?'' என்று கேட்டுச் சிரித்துவிட்டு, விசாலாக்ஷி குழந்தைகளைக் குளிப்பாட்டப் பின்புறம் சென்றாள். ஜகந்நாதன் பெஞ்சின் மேல் தலை குனிந்து வீற்றிருப்பதைக் கண்டு அருணாசலம் அவரை நெருங்கி விஷயம் என்னவென்று விசாரித்தான்.

''இந்த முரளியின் விஷயந்தான். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மறுபடியும் பெயில். அதோடு மட்டும் இருந்தால் ஏதோ இங்கே எனக்குச் சகாயமாக வேலை செய்யச் சொல்லுவேன். அதற்கும் வழியில்லை. புத்தியில்லாத மண்டூகமாக இருந்தால் அவ்வளவு கஷ்டமாக இருக்காது போலிருக்கிறது. எப்பொழுது பார்த்தாலும் ஏதோ அநாவசிய விவகாரத்தில் கை வைக்காமல் இருப்பதில்லை. முன்பு ஸ்ரீகண்டையா வீட்டினருக்குக் கடலை விற்ற கதை தெரியுமோ இல்லையோ? அதனால் அவருக்கு அப்பா பேரில் இன்னமும் கோபமாம். தம்மை வேண்டுமென்றே அவமானப் படுத்தியதாக நினைத்துக் கொண்டு அவர் அப்பாவிடம் பேசுவதே இல்லையாம்.

''இங்கேயோ ஊரில் தலை தூக்க முடியவில்லை. என் காதில் படும்படி ஜாடைமாடையாக எல்லோரும் அவனைத் திருடன், தத்தாரி, மக்கு, கர்வம் பிடித்தவன் என்று ஏதேதோ சொல்லுகிறார்கள். சில சமயம் அதை நான் நம்பத்தான் வேண்டி இருக்கிறது.''

அருணாசலம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் தவித்தான்.

''ஜகம், நானும் அவன் விஷயமாகத்தான் பேச வந்தேன். அவன் அபிதாவைக் கண்டபடி ஏசுகிறானாம். என்ன இருந்தாலும் வயது வந்த பையன். அவளிடம் மரியாதையாக இருக்கவேண்டாமா? தனக்குப் பிடிக்காதவர்களைப் பற்றி வைவதற்கென்றே எழுத்துத் தொழில் வைத்துக் கொண்டிருக் கிறாள் என்று சொல்லுகிறானாம். இதைக் கேட்டுக் கொண்டு அம்மாவும் ஏதோ மனஸ்தாபமாகச் சொன்னாளாம். அம்மாவிடம் போயிருந்த இரண்டு மாத காலமும் நரக வேதனைதான் என்று செய்துவிட்டானாம். இனி நான் இல்லாமல் தனியாக அம்மாவுடன் போய் இருக்கவே அவள் பயப்படுகிறாள். உயிர் போனாலும் முரளீதரனுடன் எங்கும் போக மாட்டேன் என்று அவள் கூறிவிட்டாள். நாம் வேண்டுமானால் பொறுத்துக் கொள்ளலாம். நமக்குத் தம்பி. அவளுக்கென்ன, சொல். நமக்கு வேண்டுமானால் அவள் பயப்படுவாள், மரியாதை செய்வாள், கோபித்துக் கொண்டாலும் பொறுப்பாள். நம் தம்பிமார் குணத்தை யெல்லாம்.....''

''சரிதானடா, அவர்கள் நம் குடும்பத்தில் சம்பந்தப்பட்ட வரையிலும், நாம் பொறுப்பதையெல்லாம் அவர்களும் பொறுத்துத்தான் ஆகவேண்டும். நாம் ரசிப்பதையும் ரசித்துத்தான் ஆக வேண்டும். இது ஒரு பிரமாதமா? விசாலத்தைப் பார் - என்னைக் காட்டிலும் அவளுக்குத்தான்

இந்தக் குடும்பத்தில் பற்றுதல் அதிகம். அதற்காக அவன் அடங்காப் பிடாரியாக வளரவேண்டுமென்பதில்லை.''

ஜகந்நாதனின் மொழிகளைக் கேட்டு அருணாசலம் பதில் சொல்லாமல் எழுந்துபோய் விட்டான்.

★ ★ ★

முரளீதரன் கவலையற்று லஸ்ஸிலிருந்து மாம்பலம் போகும் பஸ்ஸில் அமர்ந்து எங்கோ போய்க் கொண் டிருந்தான்.

வண்டி தேனாம்பேட்டையை அடைந்தது. பஸ் கண்டக்டர், ''டிக்கட், டிக்கட்'' என்று கேட்டான். முரளீதரன் அவனைப் பார்த்து, ''ஒரு வண்ணாரப்பேட்டை கொடு அப்பா'' என்றான்.

''ஏன், ஐயா, ரொம்ப சொகுசா டிரஸ் பண்ணிண்டு இருக்கிறயே, இந்தப் பஸ் மாம்பலம் போவது என்று படிக்கத் தெரியவில்லையா?'' என்று கேட்டான் கண்டக்டர். ''வண்ணாரப்பேட்டைக்குக் கேட்கிறார்! இறங்கையா, கீழே.''

முரளீதரன் சிரித்துக்கொண்டே இறங்கிவிட்டான். அங்கிருந்து சற்றுத் தூரம் நடந்து, மவுண்டுரோடு வழியாகச் செல்லும் வேறு ஒரு பஸ்ஸில் ஏறிக் கொண்டான். அங்கு அவன் சிநேகிதன் ஒருவன் வந்து சேர்ந்தான்.

''ஏ, முரளி, எங்கேடா போகிறாய்?''

''இந்தப் பஸ் எங்கு கொண்டு போகிறதோ, அங்கே'' என்று பட்டதும் படாததுமாகப் பதில் சொன்னான் முரளி.

பஸ்ஸில் கூட்டம் மிகவும் அதிகமாக இருந்தது. கண்டக்டர் தன் அருகில் வரும் சமயம் முரளி இறங்கி விட்டான். இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் அவன் டவுன்

பஸ்ஸில் ஏறி, சைதாப்பேட்டைக்கு டிக்கட் கேட்டுவிட்டு, பழையபடி வசவு வாங்கிக் கொண்டு மவுண்டு ரோடில் இறங்கிவிட்டான்.

'அவன் திட்டினால் என் உடம்பில் காய்த்தா தொங்குகிறது? மொத்தத்தில் எவ்வளவு லாபம், பார்ப்போம். மூன்றணாவுக்குக் குறைவில்லை. ஒரு வேளை டிபன் செலவு ஆயிற்று. இன்னும் கொஞ்ச நேரம் கழித்து வீட்டுக்குப் போகலாம். ஜகம் படுத்துக் கொண்ட பிறகு போனால் ரிஸல்டைப் பற்றி அமர்க்களம் நடக்காது' என்று யோசித்தவாறே அவன் வேகமாக நடக்கலானான்.

அவன் எங்கெங்கோ போக வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தான். கடைசியில் உல்லாசமாகச் சுற்றிவிட்டுக் குழந்தைகளுக்காகச் சிறு பரிசுகள் வாங்கிக்கொண்டு வீடு திரும்பினான்.

பாஸ் செய்தவனுக்காவது மார்க்குகளைப் பற்றிய கவலை; முரளீதரனுக்கு அவ்விதச்சங்கடம் ஒன்றும் இல்லை.

7. தந்தையும் மகனும்

''ஜகந்நாதா! ஜகம்!'' என்று உரக்கக் கூப்பிட்டார் ராமநாதையர்.

ஜகந்நாதன் பலகாரம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். தகப்பனாரின் குரலைக் கேட்டதும், அதை அப்படியே விட்டுவிட்டு எழுந்து வந்தார்.

''நல்ல பிள்ளை! வயது முப்பத்தைந்து ஆகப்போகிறது. இன்னும் சின்னக் குழந்தைபோல் அப்பா கூப்பிடுவதற்கு முன் ஓடுகிறான். அவனுக்குச் சின்னவர்கள் அத்தனை பேரும் அவனுக்கு நேர் விரோதம். அவரை அதிகாரம் செய்யாமல்

இருந்தாலே போதும் போலிருக்கிறதே!'' என்று அங்கலாய்த்த தாயின் குரலில் தன் பிள்ளையின் பயபக்தி மரியாதையைக் குறித்துப் பெருமிதம் தொனிக்கத்தான் செய்தது.

''என்னப்பா?''

''இங்கே வா, உன்னுடன் நான் சற்றுப் பேசவேண்டும்.''

''என்ன விஷயம் சொல்லுங்களேன்.''

''நாம் கொஞ்ச நேரம் தனிமையில் பேச முடியுமா? உனக்கு இப்பொழுது ஒன்றும் வேலையில்லாவிட்டால் வாயேன், கடற்கரைப் பக்கமாகப் போய்விட்டு வருவோம்.''

ஜகந்நாதன் மறுபேச்சின்றி, அங்கவஸ்திரத்தை மேலே போட்டுக் கொண்டு தந்தையுடன் கிளம்பினார். தந்தை எதைப் பற்றிப் பேசப் போகிறார், தம்மிடம் அந்தரங்கமாகப் பேசுவதற்கு என்ன இருக்கிறது என்று யோசித்தபடியே அவர் மௌனமாக நடந்தார். ஆயினும் தாமே பேச்சைத் துவக்க இஷ்டமில்லாமல் தந்தை சொல்லுக்காகப் பொறுமையுடன் காத்திருந்தார்.

''ஜகம், உன்னுடன் நிதானமாகப் பேசவேண்டும் என்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்று ஆரம்பித்தார் பிதா. ''நீ எதையும் வெளிக் காட்டிக்கொள்ள மாட்டாய், எனக்குத் தெரியும். இன்று காலையில் நீ காட்டானுடன் பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. இந்த வருஷம் வருமானம் குறைந்து விட்டது என்று தெரிகிறது. அருணாசலம் வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டான். நானும் பென்ஷன் வாங்கிக்கொண்டு விட்டேன்.''

''அதனால் என்ன, அப்பா? இப்பொழுது நாம் எல்லோரும் ஒரே இடத்தில் இருக்கிறோம். முரளியின் படிப்பையும் நிறுத்தி விட்டோம். என்ன இருந்தாலும் சாராசரியில் ஒன்றும் அதிகச் செலவு ஆகிவிடாது. அதெல்லாம்

உங்களுக்கு ஏன் அப்பா, கவலை? பேசாமல் உங்கள் படிப்போ, பூஜையோ பார்த்துக் கொள்ளுங்கள். இனி இந்தக் குடும்பம் எங்களுடையது. அம்மாவும் நீங்களும் யாதொரு சிந்தையும் இல்லாமல் இருங்கள். இந்த மாதிரி உங்களையும், என் தம்பிமார்களையும் வைத்துக்கொண்டு நிர்வகித்துக் குடும்பம் நடத்த நானும் விசாலமும் கொடுத்து வைக்க வேண்டுமே?''

பேச்சுவாக்கில் தம் மனைவியைப் பெயரிட்டுக் குறிப்பிட்டது அவருக்குச் சங்கோஜமாகிவிட்டது. எப்பொழுதும் 'அவள்' என்றோ, இல்லாவிட்டால் வேறு ஏதாவது சங்கேதமாகவோ கூறிப் பழக்கமானவர். இன்று வாய்தவறிப் பேசிவிட்டதனால் சற்று வெட்கப்பட்டுக்கொண்டு மேலே பேசாமல் இருந்துவிட்டார் ஜகந்நாதன். அவருடைய மௌனத்தைக் கவனிக்காமல் ராமநாதையர் பேசலானார்.

''நீ இப்படிச் சொல்லுவாய் என்று எனக்குத் தெரியும். எதற்கும் இருக்கட்டும் என்று உன்னைக் கேட்காமலேயே பாலுவுக்குக் கடிதம் போட்டேன். அவனால் முடிந்ததைக் குடும்பத்துக்கு அனுப்பும்படி எழுதினேன். அவனால் அது சாத்தியம் என்று தோன்றவில்லையாம். ஏதோ கொஞ்சம் அனுப்புவதாகப் பதில் வந்திருக்கிறது. எப்படி இருக்கிறது விஷயம்? நாம் வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, அம்மாவின் நகையை விற்று, பார்க்காதவனையெல்லாம் பார்த்து, பல்லை இளித்து, சிரிப்பாய்ச் சிரித்து, சிபாரிசு பிடித்துக் கஷ்டப்பட்டதென்ன! இவன் நல்ல நிலைக்கு வந்துவிட்டால் நமக்கென்ன குறை என்ற எண்ணம் தானே? இப்பொழுது அவனுக்கு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள இஷ்டம் இல்லை. தானே, தன் சாதுரியத்தினாலேயே, முன்னுக்கு வந்துவிட்டதாக அல்லவா அவன் நினைக்கிறான்!''

''சிறு பிராயத்தின் காரணம் தான் அது. இப்பொழுது தானேசற்று ஆடம்பரத்திலும், ஆடையிலும் ஆசை தோன்றும் சமயம்? போதாக் குறைக்குக் கல்யாணமான புதிய கருக்கு. கொஞ்சநாள் அவன் கவலையற்று இருக்கட்டுமே - பிறகு இருக்கவே இருக்கிறது, இந்தச் சம்சாரத் தொல்லை யெல்லாம். அத்துடன், நமக்கு ஒன்றும் அப்படிப்பட்ட பணமுடை இல்லையே? சின்ன வயதில் கொஞ்ச காலம் புதுக் குடித்தனம் செய்யட்டும், அப்பா. அவனை ஒன்றும் கேட்காதீர்கள்.''

''அவன் புதுக் குடித்தனம் நடத்திப் பாழாய்ப் போயிற்று. நேற்று வைத்தி என்னுடன் பேசிக்கொண் டிருந்தான். தன் பெண்ணை மாப்பிள்ளை சரியாக நடத்தவில்லை என்று அவன் ஏதோ ஜாடைமாடையாகக் கூறினான். பாலு என்னவோ அவனைக் கார் வேண்டும், அது வேண்டும், இது வேண்டும் என்று பணம் கேட்டபடியே இருக்கிறானாம். பெண் சந்தோஷமாக இருப்பதானால் இந்த உலகத்தையே வாங்கி அவன் காலில் காணிக்கையாகச் செலுத்திவிடுவானாம் வைத்தி. பெண்ணையும் மாப் பிள்ளையையும் உட்கார வைத்துக் கனகாபிஷேகம் செய்விப்பானாம். ஆனால் தன் மனம் நோகும்படி நடந்தால்... என்று என்னைப் பயமுறுத்தும் ரீதியில் ஏதோ பேசுகிறான். எனக்கும் அப்பொழுதே தெரியும். இந்த மாதிரி ஏதாவது வந்து விளையுமென்று. உன் அம்மாவிடம் சொல்லித் தடுக்கச் சொன்னேன். அவள் பிள்ளை சொல்லைக் கேட்டு மகிழ்ந்துவிட்டாள்.''

''அம்மா பேரில் தப்பில்லை அப்பா. நானுந் தான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவன் அதற்கெல்லாம் பிடிகொடுக்கவே இல்லையே? நான் சொன்னதற்குக்கூட, 'எனக்குச் சௌகரியமாக இருக்கிறது' என்று பட்டென்று பதிலளித்தான். அவரவர்கள் தலையில் எழுதியபடித்தான் நடக்கும். நாம் என்ன செய்வது? இருந்தாலும் வயது வந்த

பிள்ளைக்கு இந்த மாதிரி கேவலம் பணப்பேய் பிடிக்க வேண்டாம். மாலையிட்ட பெண் மனம் நோக நடந்து கொள்ளக் கூடாது என்று அவனுக்குத் தெரியலாம். யாரும் அவனை முன்னெச்சரிக்கை செய்யவில்லை என்று சொல்ல முடியாது. முரளி ஒருவன் செய்த கேலியே போதும்.''

''முரளி என்ன சொன்னான்? அதிகப்பிரசங்கி!..... எனக்கு எந்தவிதம் யோசித்துப் பார்த்தாலும் பிடிக்கவில்லை. முரளி ஓர் உதவாக்கரை. அவனைப்பற்றி வரும் புகார்கள் மனிதனாகப் பிறந்தவன் கேட்கச் சகிக்க மாட்டான். அவன் என்ன வேளையில்தான் பிறந்தானோ தெரியவில்லை.''

''அவன் என்ன அப்பா, செய்தான்?''

''என்ன செய்தானா? அன்று உன் சித்தி வந்திருந்தாளாமே?''

''ஆமாம்?''

''அவள் என்னவோ குடியிருக்க வீடில்லாமல் கஷ்டப்பட்டாளாம்.''

''ஆமாம், அது ஒரு பெரிய கதை. நீங்கள் ஊரில் இல்லை. அவளும் அவள் குழந்தைகளும் வந்திருந்தார்கள். அவை அத்தனைக்கும் வால் இல்லாத குறை தவிர, மற்றப்படி எல்லாம் கிஷ்கிந்தாபுர வாசிகள்தாம். சித்தியின் சுபாவந்தான் தெரியுமே? அவள் எது ஒன்றுக்கும் தப்புக் கண்டுபிடித்துக் கொண்டே இருந்தாள். அம்மாவிடம் எல்லோரையும் பற்றி ஆயிரம் புகார்கள் சொன்னாள். அபிதாவோ ஒன்றும் நோகக் கேட்கமாட்டாள். அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்க, அருணாசலம் அவளுக்குப் பரிந்து பேசி வீட்டில் இரைய, சில சமயம் மிகவும் கஷ்டமாகி விட்டது. இந்த அழகில் தன் வீடு காலியாகும் வரை இங்கேயே இருக்கப் போவதாக வேறு சொல்லிக் கொண்டிருந்தாள். அப்புறம்

எப்படியோ மாமியாரும் நாட்டுப் பெண்ணுமாக யோசனை செய்து, நல்லதனமாகவே அபிதாவை அவள் பிறந்தகத்துக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். ஆனால் சித்தி எதிர்பார்த்ததை விட சீக்கிரமே அவள் வீடு காலியாகி விட்டது. அவளும் போய்விட்டாள்.''

''அந்த 'வீடு காலியான கதை'யைத்தான் இப்பொழுது நான் சொல்ல வந்தேன். உங்கள் சித்தி அகத்துக்குப் பக்கத்திலே ஒரு சின்ன மனை இருக்கிறதாம். அதில் ஒரு சிறு குடிசையும் இருக்கிறதாம். திடீரென்று அந்தக் குடிசையில் சில காலிப் பையன்கள் குடி வந்தார்களாம். தினமும் ராத்திரியானால் அவர்கள் பஜனையாம், சிரிப்பாம், கொட்டமாம். அண்டை அயலில் யாரையும் தூங்க விடாமல் தொந்தரவு செய்தார்களாம். அத்துடன் நில்லாமல் சில நாள் ராத்திரியில் அந்த வீட்டில் கல் விழ ஆரம்பித்ததாம். இது விஷயமாக அந்த வீட்டில் குடியிருந்தவர்கள் குடிசையில் வந்து விசாரிக்கவும், அந்தப் பையன்கள் தாங்கள் அங்கு நிரந்தரமாகவே ஒரு கட்டிடம் கட்டிக்கொண்டு ஒரு 'வாலிபர் சங்கம்' நடத்தப் போவதாகச் சொன்னார்களாம். அந்த வீட்டினர் இந்தக் 'கல்லடிச் சித்தன்'களுடன் சகவாசம் வைத்துக் கொள்ளப் பயந்து அடுத்த நாளே வீட்டைக் காலி செய்து விட்டார்களாம்.''

''அதற்கும் நம் முரளிக்கும் என்ன சம்பந்தம், அப்பா?''

''அதை ஏன் கேட்கிறாய்? வெட்கக்கேடு! உன் சிற்றப்பா தற்செயலாக அந்தப் பையன்களைச் சந்தித்தாராம். அவர்கள் தாங்கள் யுக்தி செய்து அவர் வீட்டை அவருக்கு மீட்டுக் கொடுத்ததைப் பற்றிப் பீற்றிக் கொண்டார்களாம். முரளீதரன்தான் அவர்களுக்குப் பணம் கொடுத்து, அவ்வாறு செய்யச் சொன்னான் என்றும் அவர்கள் சொன்னார்களாம். வீடு காலியானது ஒரு பக்கம் இருக்கட்டும், இவன் ஒரு 'காலி'

யானானே, அதைச் சொல், எனக்கு எப்பொழுதும் மறக்காமல்! இதற்கெல்லாம் அவனுக்குக் காசு ஏது? அதை வேறு எங்கு திருடினானோ என்று பயமாக இருக்கிறது.''

''அதைப் பற்றிக் கவலையில்லை, அப்பா. அவன் திருடமாட்டான். ஏதாவது ஒரு வழியில் சம்பாதிப்பான். அவன் பேரில் தினமும் வரும் புகார்கள்தான் சகிக்க முடியவில்லை. இந்த ஊரில் சினிமாக் கம்பெனி ஒன்று அடிக்கடி வந்து படம் பிடித்துச் சென்றது. எப்பொழுதோ ஒரு தரம் முரளியும் படத்தில் விழுந்து விட்டானாம். அவர்களிடம் போய் அதைப் பற்றிப் பிரமாதப் படுத்தி, தன்னையறியாமல் தன்னைப் படம் பிடித்ததற்கு ஏதாவது காசு கொடுத்தால்தான் ஆயிற்று என்றானாம். அவர்களும் அதை ரசித்து, ஏதோ கொஞ்சம் கொடுத்தார்கள் போலிருக்கிறது. அதற்கப்புறம் அவர்கள் வந்தால், அவன் நம் ஊர்ப் பசங்களையெல்லாம் தூண்டிப் பணம் கேட்கும்படி ஏவிவிட்டானாம். அவர்கள் பணம் கொடுக்க மறுத்தால், ஏதாவது ஊதல் ஊதுவது போன்ற உபத்திரவங்கள் செய்து வந்தானாம். அவர்களும் வேறு வழியின்றி அவன் சொற்படி நடந்தார்களாம். அவன் என் தம்பி என்று அறிந்ததும், என்னிடம் கூறுவதாகப் பயமுறுத்தினார் களாம். அதைக் கேட்டு அவன், 'நீங்கள் அப்படி ஏதாவது செய்யுங்கள்; பிறகு நீங்கள் இந்த ஊரில் கால் வைப்பதைப் பார்க்கிறேன்' என்றானாம். போன தடவை அவர்கள் வந்தபோது கோவில்காரர்களும் குளத்தைப் படம் பிடிப்ப தென்றால், அநுமதியில்லாமல் செய்யக் கூடாது என்று நிர்ப்பந்தித்தார்களாம். நேற்று அந்தச் சினிமா முதலாளி என்னைக் கண்டு பேசினான். நான் முரளீதரனை விசாரித்தால், 'என்ன கேடு, அண்ணா? லட்சம் லட்சமாகப் புரட்டுகிறானே, கோவிலுக்குத்தான் ஒரு நூறு ரூபாய் கொடுக்கட்டுமே' என்கிறான்! அதுவும் ஒரு விதத்தில் நியாயம் தானே, அப்பா?'' என்று சிரித்த முகத்துடன் கூறினார் ஜகந்நாதன்.

ராமநாதையர் மகனின் ஹாஸ்ய உணர்ச்சியை ரசிக்காத வர் போல் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டார். ''அவன் தொல்லையே எனக்குப் பெரும் கவலையாகப் போய்விட்டது, ஜகம். அவனை எப்படிக் கண்டிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை. நாளுக்கு நாள் அவனுடைய அதிகப்பிரசங்கித்தனம் அதிகரித்துக் கொண்டே வருகிறது.''

''இன்னும் இரண்டொரு வயது சென்றால் சரியாகி விடுவான், அப்பா. ஏதாவது பொறுப்பான வேலையில் அமர்த்திவிட்டால் அவனுக்கு விளையாட நேரமிராது.''

''ஏதோ உனக்குத் தோன்றியபடி செய்யப்பா..... அருணாசலம் செய்யும் வேலையில் ஏதாவது ஏற்படுமா?''

''நேற்றுக்கூடப் பேப்பரில் அவனுடைய ஆராய்ச்சியைப் பற்றிப் புகழ்ச்சியாக எழுதியிருந்தது. அதன் விஷயம் நமக்குப் புரியாததால் அவன் செய்வதெல்லாம் ஏதோ பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகிறது. அம்மா சொல்லு கிறாள், அவன் மண்ணைத் தோண்டுவதை, நம் தோட்டத்தில் தோண்டினாலும் நாலு தெண்ணம் பிள்ளைகள் வைக்கலாமாம்! முரளி வேறு அவனைக் கேலி செய்தபடியே இருக்கிறான். அருணாசலத்தின் முயற்சிகள் கடைசியில் ஒரு குளமாக முடியுமாம். நந்தவனத்து நடுவில் இருக்கும் குளத்தை வைத்துக் கொண்டு அபிதா கவிதா சித்திரங்கள் தீட்டி விடுவாளாம். அவள் பெயர் பத்திரிகைகளில் அடிபடுமாம். அப்பொழுது அவள் இன்னாருடைய மனைவி என்று வரும்போது அந்த மட்டாவது நம் பெயர் அதில் வந்ததே என்று அவன் அகமகிழ்ந்து விடுவானாம். இந்தக் கதையை வந்தவர்கள் போனவர்களிடம் சொல்லிக் கொண்டு மிகுதிக் காலத்தையும் தள்ளி விடுவானாம்.''

''இந்த அரட்டலுக்கு என்ன குறைவு! உன் தலைமேல் பெரும் பொறுப்பு இருக்கிறது. அதை நீ எப்படித்தான்

நிர்வகிக்கப் போகிறாயோ? கடவுள்தான் உனக்குச் சக்தி தரவேண்டும்'' என்றார் தகப்பனார்.

8. மடை திறந்த மனம்

விசாலாக்ஷியும் ஜானகியம்மாளும் இலை தைத்துக் கொண்டு கூடத்தில் அமர்ந்திருந்தார்கள். நடராஜன் ஓடிவந்து தன் மன்னியின் மடியில் 'பொத்'தென்று விழுந்தான்.

''மன்னி'' என்று வாசலைச் சுட்டிக் காட்டினான்.

''இப்போ முடியாதடா, கண்ணா. அப்புறம் ஆகட்டும், கோயிலுக்குப் போகலாம்'' என்றாள் விசாலாக்ஷி.

குழந்தை தலையை அசைத்தான். ''மன்னி வந்திருக்கா - மீனா'' என்றான் மழலை மொழிகளில்.

''அட போக்கிரி! 'மீனா' என்றா சொல்கிறது?'' என்று விசாலாக்ஷி செல்லமாகக் குழந்தையைக் கண்டிக்கும் போதே, மீனாக்ஷி உள்ளே நுழைந்தாள்.

''பார்த்தாயா, மீனு, நீ மீனுவாம் இந்தக் குட்டித் தடியனுக்கு'' என்றாள் விசாலாக்ஷி புன்முறுவலுடன்.

மீனாக்ஷியின் முகத்தில் லேசாகப் புன்சிரிப்புப் படர்ந்தது. தானும் அமர்ந்து கொண்டு இலைகளைத் தைக்க ஆரம்பித்தாள்.

''அம்மாவுக்கு ஜுரம் எப்படி இருக்கிறது? உங்கள் அப்பா ஊரிலிருந்து வந்தவிட்டாரா?'' என்று விசாரித்தாள் ஜானகியம்மாள். மூன்றாவது வீட்டில் இருந்து கொண்டும் அவர்கள் வீட்டு விஷயம் தனக்கு ஒன்றும் தெரியவில்லையே என்ற குறை, அப்படிக் குத்தலாகக் கேட்கத் தோன்றியது, மாமியாருக்கு.

மீனாக்ஷி தலை குனிந்தபடியே மெதுவாகப் பதில் சொன்னாள். ''அம்மாவுக்கு உடம்பு ஒன்றும் இல்லை. அப்பா நேற்றே வந்து விட்டார்.''

''பாலகோபாலன் கடிதம் போட்டானா?''

மீனாக்ஷி சற்றுநேரம் பதில் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு என்ன தோன்றிற்றோ, ''ஏன், இங்கு எழுதவில்லையா? இங்கே எழுதாத கடிதமா எனக்கு எழுதப்போகிறார்?'' என்று கேட்டு விட்டாள்.

ஜானகியம்மாளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. ''ஏன்? எழுதக்கூடாதா என்ன? என்ன அதிசயம்! நாங்கள் கண்டு கழித்ததை நீங்கள் கொண்டு குலாவுகிறீர்கள். அவன் எங்களுக்கு எழுதாமல் உனக்கு எழுதுவதே இல்லையா?'' என்று கூறிவிட்டு அவள் எழுந்து போய்விட்டாள்.

அப்பொழுது அவள் முணுமுணுத்தபடிக் கூறியது மீனாக்ஷியின் காதில் ஸ்பஷ்டமாக விழுந்தது. விசாலாக்ஷி கவனித்தாதவள் போல் தலை குனிந்து வேலையைக் கவனித்தாள்.

''உன்னை வேண்டுமென்றே வரித்துத்தானே கல்யாணம் செய்து கொண்டான்? இப்பொழுது உங்கள் வீட்டுப் பணமும் நீங்களும்தானே அவனுக்குத் தெய்வமாக இருக்கிறீர்கள்?''

இம் மொழிகள் விசாலாக்ஷியின் செவிகளையும் தப்பவில்லை. அவள் மீனாக்ஷியின் முகத்தை உன்னிப்பாகக் கவனித்தாள். மீனாக்ஷியின் கண்களில் நீர் மல்கியது. தொண்டையில் ஓர் உருண்டை மேலும் கீழும் பிரயாணிப்பது வெளியிலும் தெரிந்தது. அவள் கை விரல்கள் தைக்க முடியாமல் தவிப்பது தெரிந்து விசாலாக்ஷி, தன்னையு மறியாமல் ஒரு கையை நீட்டி அந்த நடுங்கும் கரத்தைப்

பிடித்தாள். மீனாக்ஷி நிமிர்ந்து நோக்கினாள். தன் ஓரகத்தாளின் முகத்தில் குடியிருக்கும் சாந்தமும் கண்களின் ஊடே வழிந்து ஓடும் கருணையும் அவள் தாபத்தை மிதப்படுத்தின.

விசாலாக்ஷி இலைச் சருகுகளை அடுக்கிக் கட்டிவிட்டு, தைத்த இலைகளை எண்ணி மணையின் அடியில் வைத்துவிட்டு எழுந்தாள்.

''மீனு; இதெல்லாம் எடுத்துக் கொண்டு பின்கட்டுத் தாழ்வாரத்துக்குப் போ. நான் கூடத்தைப் பெருக்கிவிட்டு வருகிறேன். புருஷாள் வரும் நேரமாகிவிட்டது'' என்று உரக்கச் சொன்னாள். மீனாக்ஷி அவள் சொற்படியே பின்புறம் சென்றாள்.

விசாலாக்ஷி சீக்கிரமே வந்துவிட்டாள். ''மீனு, உன் மனத்தில் என்ன குறை?'' என்று கேட்டாள்.

''எனக்கு ஒரு குறையும் இல்லை. நான் கறுப்பாக இருப்பது என் குற்றமா? பருமனாக இருப்பது நான் வேண்டு மென்றே செய்துகொள்வதா? அதெல்லாம் தெரிந்துதானே என்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டார்கள்? இவர்கள் அழகாக இருந்தால் இருக்கட்டுமே? மேல் பூச்சு இருந்தால் போதுமா? மெத்து மெத்தென்று ரோஜா இதழ்ச் சருமத்திற்கு அடியில் பாறாங்கல்லைக் காட்டிலும் கடினமான இருதயம் இருப்பதை யார் அறிகிறார்கள்?''

விசாலாக்ஷி அவள் பேச்சைத் தடுக்கவில்லை. அவள் மார்பில் கொந்தளிக்கும் துக்க சாகரம் வெடித்து வெளியே வர ஒரு வழியைத் தேடிற்று. மீனாக்ஷி இப்பொழுது தன் மாமியார், கணவன் இருவர் பேரிலும் குற்றம் சாட்டுகிறாள் என்று அறிந்தாள் விசாலாக்ஷி. குறைகளை மனத்திற் குள்ளேயே அடைத்து வைத்து, அதைப் பன் மடங்கு பெரிதாகக் கற்பனை செய்துகொண்டு, உள்ளத்தை விஷமாக்குவதைவிட, சொல்லித் தீர்த்துவிட்டால் ஆறிவிடும்

என்று அவள் அநுபவத்திலிருந்து அறிந்த விஷயம். அதனால் மீனாக்ஷி பேசுவதைக் குறுக்கிடாமல் கேட்கத் தயாரானாள் விசாலாக்ஷி.

''மன்னி, நான் சொல்வதைக் கேட்டால் நீங்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பீர்களோ? ஆனாலும் என்னால் பொறுக்க முடியவில்லை. வீட்டில் இருந்தால் அம்மா என்னை நச்சரிக்கிறாள். 'அவர் எப்படி நடந்துகொள்கிறார்? ஏன் கடிதம் எழுதவில்லை? எழுதும் கடிதத்தில் ஒன்றையாவது காண்பி' என்றெல்லாம் தொந்தரவு செய்கிறாள். அப்படிக் காட்டுவதற்கு என்னிடம் என்ன காதல் கடிதம் கிடக்கிறது? இளம் பெண்கள் தம் ஆசைக் கணவரிடமிருந்து வந்த கடிதங்களைக் காட்ட நாணப்படுவார்கள். அந்த அன்புப் பெருக்கைப் பிறர் கண்பட எடுப்பதற்குக் கூசுவார்கள். நானுந்தான் வரும் கடிதங்களை எடுக்க வெட்கப்பட்டு அவஸ்தைப்படுகிறேன்.. பிறர் கண்ணில் அவை பட்டு விடுமோ என்று என் உள்ளம் கூசுகிறது. ஆனால் எனக்கும் அவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்! நான் என் உள்ளத்தில் வைத்துப் பூஜிக்கும் அவர், பிறர் எதிரில் விட்டுக் கொடுக்காமல் தாங்கி நான் பேசுவதற்குப் பாத்திரமாக இருக்கும் அவர், எனக்கு எழுதும் மொட்டைக் கடிதங்களை யார் பார்க்க விரும்புவார்கள்? அவர் எழுதுவதெல்லாம் பண வசூலுக்குப் போடும் மனுக்களே தவிர வேறு விஷயத்தில் வறட்சியானவை என்று யார் நம்புவார்கள்?

''நான் ஒன்றையும் வெளிக் காட்டிக்கொள்ளாமல் இருக்க, அப்பா எப்படியோ என் வாழ்க்கையைப் பற்றிச் சந்தேகப்பட ஆரம்பிக்கிறார். பழைய அசட்டுத்தனம் இல்லாமல் நான் இருப்பது அவருக்கு வெறிச்சென்று இருக்கிறது போலும்!'' ஒரு வறண்ட சிரிப்பு அவள் கண்டத்தைத் தப்பி வெளிவந்தது.

விசாலாக்ஷிக்குத் தன் ஓரகத்தியை எத்தனையோ கேள்விகள் கேட்கவேண்டும் என்றிருந்தது. ஆயினும் தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு அவள் சொல்லி முடிக்கட்டும் என்று மௌனமாக இருந்தாள்.

"மன்னி, முன்பெல்லாம் நான் எவ்வளவு சந்தோஷமாக இருந்தேன் என்பது இப்பொழுதுதான் தெரிகிறது. வீட்டில் இன்னும் அண்ணன், தங்கை, அக்கா, தம்பி என்று நாலு பேர் இருந்தாலும் என்னை யாரும் கவனிக்கமாட்டார்கள். ஆனால் நான் ஒருத்தியே இருப்பதனால் அவர்கள் கண்ணில் தட்டுப்படாமல் இருக்க முடியவில்லை. இங்கு வருவோமே என்றாலோ இங்கும் மாமிக்குக் கோபமாக இருக்கிறது. இஷ்டமில்லாத நாட்டுப் பெண் கைப்பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்பது எனக்குத்தான் தகும்.

"நான் என்ன செய்வேன் மன்னி? எனக்கு மனச்சாந்திக்கு வழியே கிடையாதா? ஆனால் உங்களுக்கெல்லாம் என் நிலைமை என்ன தெரியப்போகிறது? அபிதாவுக்குக் கண் இமையில் வைத்துக் காப்பாற்றுகிறவராக வாய்த்து இருக்கிறார் கணவர். உங்கள் தாம்பத்தியத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். பிறர் எதிரில் ஏதோ ஒதுங்கினாற்போல் இருந்தாலும் உள்ளூறப் பெரியமைத்துனருக்கு இருபத்து நாலு மணி நேரமும் விசாலம் ஸ்மரணைதான். ஹ¤ம். அதற்கெல்லாம் கொடுத்து வைக்கவேண்டும்" பாதி துக்கமாகவும், பாதி குரோதத்துடனும் பேசினாள் மீனாக்ஷி. பெருமூச்சுக்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்தன.

சாந்த மயமான ஓர் இள நகை விசாலாக்ஷியின் வதனத்தில் மலர்ந்தது. "மீனு, தற்சமயம் நீ உன் மனப் புண்ணின் காரணமாக உணர்ச்சி வசப்பட்டு இருக்கிறாய். உனக்கு என்ன குறைச்சல், சொல் பார்ப்போம்?" என்று கேட்டாள் அவள்.

''சொல்வதைப் பார்ப்பானேன்? நன்றாய், பேஷாய், காது கொடுத்துக் கேட்பதுதானே?''

விசாலாக்ஷி சிரித்தாள். ''மீனு, நீயே யோசித்துப் பார். உன் பெரிய மைத்துனர் குணவந்தராக இருக்கலாம்; பார்ப்பதற்கு வெகு சாதாரணமாகத்தான் இருக்கிறார்; படிப்பில் பட்டம் கிட்டம் ஒன்றும் பெறாதவர். அடுத்தவர் பட்டம் பெற்றவர்தாம்; ஆனால் உத்தியோகம் ஒன்றும் இல்லாமலிருக்கிறார். முரளீதரன் அழகாக இருக்கிறான்; மற்ற விஷயங்களில் சூன்யம். அதே உன் அகத்துக்காரரைப் பார்; பார்ப்பதற்கு லட்சணம், பெரிய படிப்பு, கைநிறையச்சம்பளம், பெரிய உத்தியோகம், உயர்ந்த ஹோதா எல்லாம் இருக்கின்றன. ஒரு பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்?''

''மன்னி, நீங்கள் வக்கீல் உத்தியோகத்துக்குப் போயிருக்க வேண்டும். எதையும் உங்கள் இஷ்டம்போல் அநுகூலமாகத் திரித்துப் பேசத் தெரிகிறதே!''

''நான் உள்ளதை உள்ளபடிதானே சொன்னேன்? நான் ஒன்றும் மாற்றவில்லையே? உன் கணவரிடம் இவ்வளவு மேன்மைகளும் இருப்பது பொய்யா?''

''யார் பொய் என்றார்கள்? எல்லாம் வாஸ்தவந்தான். ஒரு பொம்மையைச் செய்துவிட்டு அதற்குக் கண் மாத்திரம் வைக்கவில்லை; அவ்வளவுதான். ஆகட்டும். உங்கள் ரீதியிலேயே நானும் பேசுகிறேன், கேளுங்கள்:

''இவரிடம் இல்லாதது அவர்களிடம் ஒன்று இருக்கிறது. அது என்னவென்று தெரியுமா? அதுதான் இருதயம். பெரியவருக்குக் குடும்பத்தினரிடம் அளவிலாப் பாசம் மேலோங்கி நிற்கிறது. தம்மைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் எப்பொழுதும் சதா சர்வ காலமும் அவர் பிறருக்கே உழைக்கிறார். அதனால் அவர்களுக்கு அவரிடம் மதிப்பும் பிணைப்பும் இருக்கின்றன. சின்னவருக்கு மற்றப்

பெயர்களிடம் அவ்வளவு அதிகமான பிடிப்பு இல்லாவிட்டாலும், மனைவியிடமே அவர் கொண்டிருக்கும் காதல் கண்ணை மறைக்கிறது. அவர்கள் வரையிலாவது திருப்தியாக, சந்தோஷமாக இருக்கிறார்கள். ஆனால் இவருக்கு என்ன இருக்கிறது? ஆழ்ந்த நோக்கங்களும், உயரிய அபிப்பிராயங்களும் அவர் இருக்கும் திசையிலேயே இருக்குமோ என்பதுகூடச் சந்தேகம் எனக்கு.''

''உஷ்...! மீனா, நீ இப்படிப் பேசக்கூடாது. என்ன இருந்தாலும் கட்டின புருஷனை இகழ்ந்து பேசுவது பெண்ணுக்கு அழகல்ல. இது நம் இந்துப் பெண்ணுக்கு லாயக்கில்லை. நம் முன்னோர் பண்பென்ன? நளாயினி, கண்ணகி பிறந்த பெண் குலத்தில், பாரத நாட்டில் பிறந்துவிட்டு, நாம் அதற்கு முற்றும் மாறாக நடக்கலாமா?''

''ஆமாம்! நளாயினியாவது, சீதையாவது!''

''நான் உனக்குப் பிரசங்கம் செய்யவில்லை. ஆனாலும் நம் குடும்பங்களில் நெடுநாட்களாகப் பெண் என்பவள் குலத்திற்கே தீபம், அவளே குடும்பத்திற்கு ஊன்றுகோல் என்று கருதப்பட்டு வருகிறது. அவள் பொறுமையும், கண்டிப்பும், நளினமும், சாகசமும், குழைவும் ஒருங்கே கொண்டு இருக்க வேண்டும். சாதுரியம் வேண்டும். அத்துடன் தியாக புத்தியும் இருக்க வேண்டும். நமக்கு அந்த லட்சியத்தை எட்டுவதற்கு எத்தனை தடைகள் ஏற்படுகின்றனவோ அவ்வளவும் நல்லது. அவைகளை வென்று சம்சாரம் என்னும் சாகரத்திலே கம்பீரமாக மிதந்து சென்றோமானால்.....''

''போதும் மன்னி, ஏதோ பாடப் புத்தகம்போல் கொட்டி அளக்கிறீர்கள். அதெல்லாம் கனவு காண்பதற்குச் சரிதான். வயிறு நிறைய உண்டுவிட்டு, ஏப்பங்களுக்கிடையே, ஏகாதசி மகாத்மியத்தைப் பசிப்பிணியுடன் துடிக்கும் தரித்திரனுக்குப் போதிப்பதுபோல்தான். ஒருநாள் விழித்துக் கொண்டது

முதல், இரவு படுக்கும் வரை ஒரு மனிதனுக்காக, அவனுடைய ஓர் அன்புச் சொல்லுக்காக ஏங்கித் தவிப்பது என்பதைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அந்த ஆசை மொழி கிடைக்காது என்று தெரிந்தும், நைப்பாசையுடன் அதை எதிர்பார்த்துவிட்டு ஏமாற்றமும் சலிப்பும் அடையும் மனத்தை நீங்கள் கற்பனையிலும் காண முடியுமா?

''நான் அந்த மாதிரி நரகத்தைத் தினமும் அனுபவிக்கிறேன். ஊர்ப் பெண்கள் எல்லோரும் பார்த்துப் பெருமூச்செறியும் மன்மத ஸ்வரூபம் படைத்து எனக்கு என்ன பயன்? அதை ஏறெடுத்துப் பார்த்து மகிழவும் எனக்கு வசதியில்லை. கிடைத்தற்கரிய உத்தியோகம் இருந்தால் என்ன, அவருடன் நானும் சேர்ந்து சமூகத்தில் நடமாட முடியாவிட்டால்? அதைக் காட்டிலும் ஓர் ஏழையை மணந்துகொண்டு மனமொத்து கஞ்சி காய்ச்சிக் குடிப்பதே சுவர்க்கம். ஐசுவரியம் இருந்தால் எனக்கென்ன? என் வாழ்க்கையில் அரிதாக இருக்கும் அன்பைக் காசு கொடுத்து வாங்க முடியுமா? என் கணவருக்கு ஓர் இருதயம் வாங்கி அந்தக் கடின மார்பில் பதிக்க முடியுமா?''

ஆவேசம் வந்தவள் போல் பேசினாள் மீனாக்ஷி. தான் பேச்சைத் துவக்கினதே பிசகு என்று விசாலாக்ஷிக்குத் தோன்றி விட்டது. ஆரம்பத்தில் மீனாக்ஷி துயரம் தாங்காது, வெகு பணிவாகவே பேசினாள். ஆனால் நேரம் ஏற ஏற, பேச்சு மேல் பேச்சு விழுந்து, கடைசியில் மிக மிகக் கசப்பான மொழி களைக் கக்கினாள் அவள். இதைக் கவனித்த விசாலாக்ஷி, தான் அவளைச் சாந்தப்படுத்த முயன்றது அவளுக்கு அதற்கு நேர்மாறான ஒரு தூண்டுதலை அளித்துவிட்டதை அறிந்தாள். முன்பு தனக்குத் தெரிந்த அசட்டு மீனாவுக்கும் இப்பொழுது சொற்பாணங்களை அழகாகத் தொடுத்து வீசும் மீனாக்ஷிக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தைக் கண்டு அவள் அச்சுற்றாள்.

'முரளிக்கு வேலையிடுவது போலல்லவா இருக்கிறது? அவனால் ஒரு வேலை சீக்கிரம் முடிய வேண்டுமென்றால் அவனிடம் 'அதைச் செய்யாதே' என்று வற்புறுத்தினால் கட்டாயம் செய்தே தீர்ப்பான். அவனைச் செய்யும்படி மன்றாடினாலோ வந்துவிட்டது ஆபத்து; அந்தக் காரியத்தைத் தான் செய்யாததோடு நிற்காமல் வேறு யாரையும் செய்யவிடமாட்டான். அப்படியல்லவா இருக்கிறது இவள் கதையும்? அவருடைய நல்ல அம்சங்களை எடுத்துக் காட்டிப் பொறுமையாகவும் பணிவாகவும் நடக்கும்படி உபதேசிக்கப் போய், இப்பொழுது இவள் அதற்கு நேர்மாறான திட்டத்துக்கு வந்துவிட்டாளே? உன் கணவனைக் காட்டிலும் மற்ற எல்லோரும் சற்றுக் குறைந்தவர்களே என்றால் அதிலும் ஒரு பிழையைக் கண்டு பிடித்து அந்த ஒப்பிடலையே ஆதாரமாகக் கொண்டு தன் கணவனை ஏசுகிறாள். அவர் பதவியை மற்றவர் எட்டவே முடியாது. உனக்கு அத்தகைய கணவன் கிடைத்திருப்பதே ஓர் அதிருஷ்டம் என்றால் அதிருஷ்டமே ஒரு பாபம் என்று என் பேரிலேயே திருப்பிக் கொள்கிறாள். உன் கடமை, கணவனுக்கு மனைவி செய்ய வேண்டிய பொறுப்பு என்று உபதேசித்தாலோ அவையனைத்தும் பிதற்றல் என்றே நினைக்கிறாள். நல்ல விசித்திரப் பெண்!' விசாலாக்ஷிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஆயினும் வாய்விட்டுச் சிரிக்கு முன் தன்னை அடக்கிக் கொண்டாள். 'பாவம், சிறு பெண், நான் சிரித்தால் அவள் உள்ளம் உடைந்துவிடும். தன் துக்கத்தைச் சொல்லி ஆற்றிக் கொள்ள நம்மிடம் வந்தால் அவளைக் கேலி செய்யலாமா?' என்று ஓடியது அவள் மனம்.

''மன்னி, நீங்கள் என்னவோ சொல்கிறீர்களே தவிர, என் மனசு அவரைக் காட்டிலும் கடினமாகிக் கொண்டு வருகிறது. என் அப்பா கூறுவது போல் பேசாமல் அவரை விட்டு விட்டு வந்துவிடலாமா என்றுக்கூடத் தோன்றுகிறது. ஆனால்

உலகத்து நிந்தனைக்கு அஞ்சி நான் அவ்வாறு செய்யாமல் இருக்கிறேன். இன்னார் பெண் புருஷனை உதாசீனம் செய்தாள் என்று பிறந்த வீட்டுக்கு அபக்கியாதி வரக்கூடாது என்ற எண்ணம் வந்து குறுக்கே நிற்கிறது. அத்துடன் நாலுபேர் எதிரில் அவருக்குக் கெட்ட பெயர் வரக்கூடாது, 'கட்டின பெண்டாட்டியை அடக்கி நடத்தத் தெரியாத மூடம்' என்ற பட்டம் வேறு அவருக்குக் கிடைக்கக்கூடாது என்று நான் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய ஆழ்ந்த பக்திக்கு அவர் பாத்திரமாவதற்குத் தகுதியுள்ளவரா என்று கூடச் சில சமயம்.....''

விசாலாக்ஷிக்கு நிலைமை சற்றுக் கைம்மீறிப் போவதுபோல் தோன்றிற்று. 'இவளை இப்படியே விடக் கூடாது. நம்மால் இயன்றதைச் செய்து, இவளைத் தடுக்கவேண்டும். புத்திமதி கூற வேண்டும்' என்று அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

''மீனாக்ஷி, நீ அநாவசியமாக மனத்தைக் கெடுத்துக் கொள்ளாதே. எத்தனையோ பேர் இன்னும் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்கவில்லையா? விதி சதி செய்து விட்டதென்று கை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்களா? தங்களது மதியால் விதியை வெல்ல எத்தனிக்கவில்லையா? இதுவரை நீ என்ன செய்தாய்? சொல்? ஏதோ சாதாரணமாக எல்லோரும் செய்வதுபோல் அவருக்குச் சாதம் போட்டார்களா என்று பார்த்து, கேட்கும் போதெல்லாம் தீர்த்தம் கொடுத்துவிட்டால் முடிந்துவிட்டதா? உன் கையாலேயே அவர் வாய்க்குப் பிடித்ததைச் சமைத்துப் போடவும் வழி இல்லை; வீட்டில் வேலையாட்கள் இருக்கிறார்கள். நீ செய்ய வேண்டியதில் பாதி வேலை செய்வதற்கு வேலையாட்கள் இருக்கிறார்கள். அவருக்காக, உன் தாம்பத்திய வாழ்க்கையின் சந்தோஷத்திற்காக, நீ பிரத்தியேகமாக என்ன செய்கிறாய்?''

விசாலாக்ஷி சற்று நிறுத்திக் கொண்டாள். தன் மனத்தில் மேலும் மேலும் தோன்றிய சொற்களைச் சொல்லலாமா என்று அவள் யோசித்தாள். ஆனால் சற்றுத் தயங்கினாள். மீனாக்ஷியைச் சுட்டிக் காண்பிப்பது போல் இருக்குமோ, அவள் புண்ணில் கோலிடுவது போலாகுமோ என்றெல்லாம் எண்ணலானாள். குணப்படுத்த வேண்டியிருந்தால் சிலசமயம் எலும்பை வலிய முறித்துக் கட்டுக் கட்டுவதும் உண்டு. அவளுக்கு நல்ல புத்தி வரச் செய்ய வேண்டும். அவர்களது வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட வேண்டும் என்றால் கொஞ்சம் ராட்சச வைத்தியமும் செய்யத்தான் வேண்டும். விசாலாக்ஷி தான் எடுத்துக் கொண்ட கைங்கரியத்தை நிறைவேற்றுவதற்காக நீண்ட மூச்சு ஒன்று வாங்கிக் கொண்டு பேசத் தொடங்கினாள். தான் சொல்லப் போவதை முழுக்கக் கேட்காமல், கோபம் கொண்டு விடுவாளோ, பெரியவர்கள் பேசாமலிருக்கும்போது தான் இதில் பிரவேசிப்பது சரிதானா என்ற அச்சம் தோன்றவும் அதைப் பலாத்காரமாக அழுத்திக் கீழே தள்ளிவிட்டுத் தன் ஓரகத்தியின் பக்கம் திரும்பினாள் விசாலாக்ஷி.

''மீனா, நான் சொல்வது உனக்குப் பத்தியமாகப் படுமோ படாதோ எனக்குத் தெரியாது. ஆனாலும் எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். உனக்கு எத்தனையோ கடமைகள் இருப்பது போலவே எனக்கும் இருக்கிறது அல்லவா? ஒருபுறம் நீ என் சகோதரி ஸ்தானத்தை வகிக்கிறாய். மற்றொருபுறம் என் மைத்துனரின் வாழ்க்கைத் துணைவி. நம் குடும்பத்தை வெற்றிகரமாக நடத்தவேண்டியது மூத்த நாட்டுப் பெண்ணான என் கடமை. ஆதலால் நான் இந்த விஷயத்தில் அவசியம் தலையிட வேண்டியிருக்கிறது.''

மனத்திற்குள், 'தேவலையே, நல்ல போடு போட்டு விட்டோமே!' என்று தன்னைப் போற்றிக் கொண்டாள் விசாலாக்ஷி.

''சாயங்காலம் கணவன் களைத்து வீடு திரும்பும்போது மலர்ந்த முகத்துடன் கதவைத் திறப்பது, குளிப்பதற்கு இதமாக வெந்நீர் வைப்பது இதெல்லாம் சிறிய சிறிய பணிவிடைகள். இப்படியே அவரை மனங்குளிரச் செய்து, அதிலிருந்து ஒரு பெரிய அன்பு விருக்ஷத்தை வளர்த்து விடலாம். ஆனால் உனக்கோ அந்தப் பணிவிடைகளையெல்லாம் செய்ய வேலையாட்கள் இருக்கிறார்கள். ஆகவே வேறு விதத்தில் அவருடன் நெருங்கிப் பழக வேண்டும். அவருடன் வெளியே செல்லவேண்டும். அவர் நண்பர்கள் வந்தால் உபசரிக்க வேண்டும். எனக்கு அதெல்லாம் என்ன செய்ய வேண்டும் என்று தெரியாது என்று வைத்துக்கொள்.

''அவர் விஷயத்தையும் ஆலோசித்துப் பார். யௌவன புருஷன். புதிய அந்தஸ்து. அவருக்கும் தம் தோழர்களைப் போல் மனைவியுடன் உல்லாசமாக வெளியே போக வேண்டும். பத்துப் பெயருடன் நவநாகரிகமாகப் பழக வேண்டும் என்று தோன்றாவா?''

''தோன்றலாம். அதற்கு நான் என்ன செய்வேன்? அவருடைய சௌந்தரியத்திற்கு ஏற்ப நான் ரதியாக மாறிவிட முடியுமா? அவரல்லவோ முன்பே யோசித்து ஓர் அழகியை மணந்துகொண்டிருக்க வேண்டும்? நீங்கள் கூறுவதும் ஒரு விதத்தில் நிஜந்தான். அவருடன் பொதுக்கூட்டங்களுக்குப் போக வேண்டும், தேநீர்க் கச்சேரிகளுக்குப் போகவேண்டும் என்பது சரிதான். பெண்கள் சங்கத்துக்குப் போகக்கூட எனக்கு பயமாக இருக்கிறது. அவருக்கும் அவமானமாக இருக்கிறது.''

''நீ ஏன் பயப்படவேண்டும்? நீ உன் ரூபத்தை மாற்றிக் கொள்ள முடியாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் மற்ற விஷயங்களில் நீ ஏன் உன்னைச் சரிப்படுத்திக் கொள்ளக் கூடாது? வாத்தியார் வைத்துப் படிப்புக்

கற்றுக்கொள்ளேன். அபிதாவை பார்; அவள் தன் புருஷனுடன் எப்படிச் சர்ச்சைகள் செய்கிறாள்? கிளப்பில் சேர்ந்து பந்து விளையாடக் கற்றுக்கொள். நாலு பெயர்களைச் சிநேகம் பிடித்துக்கொள். அவர்களுடன் நான்கு நாட்கள் பழகினால் தானாகவே உனக்கு எல்லாம் வந்து விடுகின்றன. அப்புறம் அவர் ஏன் அவமானப்படவேண்டும்? அன்பு என்பது வெளியழகை எல்லாம் கடந்த நிலை என்பது பிறகு உனக்கே புலப்படும்.''

மீனாக்ஷியின் குழம்பிய மனத்தில் சற்று நிம்மதியின் சாயல் படர ஆரம்பித்தது. விசாலாக்ஷி கூறுவதிலும் சிறிது வாஸ்தவம் இருப்பதாக அவளுக்குத் தோன்றிற்று. 'நாம் முயற்சி செய்யாமலே மூக்கால் அழுவானேன்?' என்று நினைத்துக் கொண்டு அவள் எழுந்தாள்.

''என்னடி பேச்சு, விசாலம்? உள்ளே ஒரு காரியமாக வில்லை. 'இலை தைக்கிறேன் பேர் வழியே' என்று புழக்கடையில் கதை அளக்கிறீர்கள். இத்தனை நேரம் ஒரு கல்யாணத்துக்கு இலை சேர்ந்து இருக்குமே!'' என்று ஜானகியம்மாள் அவர்களை அதட்டவும் விசாலாக்ஷியும் சிரித்துக் கொண்டே எழுந்தாள்.

''வேண்டுமோ இல்லையோ, அம்மா? அபிதா சீமந்தத்துக்குக் காலணாக் காசு கொடுத்து இலை வாங்க வேண்டாம். நாங்களே தைத்து விடுவோம். ஆனால் தையல் இலையாகல்யாணத்துக்குப் போடுவார்கள் அம்மா?'' என்று வேடிக்கையாகப் பதில் சொன்னாள் விசாலாக்ஷி.

மீனாக்ஷி செல்லு முன் தன் ஓரகத்தியின் கையைப் பிடித்துக்கொண்டு, ''மன்னி, உங்களுடன் பேசியதில் எனக்கு மிகவும் நிம்மதியாக இருக்கிறது. அடுத்த தடவை நான் ஊரிலிருந்து வரும்போது என்னை உங்களுக்கு அடையாளமே தெரியாது பாருங்கள்'' என்றாள்.

விசாலாக்ஷி அவளை முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்தாள். அவள் அவ்விடத்தை விட்டு அகன்ற பிறகு, தன் வேலையைப் பார்க்கச் சமையலறைப் பக்கம் சென்றாள். ''நல்ல பெண்!'' அவள் தன் மனத்தில் நினைத்தது அவள் வாயினின்றும் வெளிவந்துவிட்டது.

''யார் நல்ல பெண்?'' என்று கேட்டார் அங்கு வந்த ஜகந்நாதன்.

''ஏன், நம் மீனுவைத்தான் சொல்கிறேன். நல்ல பெண், தங்கமான குணம்.''

''இந்த வீட்டில் நான் ஒருத்திதான் நல்ல குணமில்லை; கெட்ட பெண்'' என்று ஒரு குரல் கேட்டதும் விசாலாக்ஷி திரும்பினாள். ஜகந்நாதனும் யாரென்று பார்த்து விட்டுப் பேசாமல் விடுவிடென்று வெளியே சென்று விட்டார்.

அபிதா வாயிற்படியில் நின்று கொண்டிருந்தாள். மனக்குறை அவள் இளம் முகத்தை விகாரப்படுத்தியது. கண்கள் நிந்தனை செய்தன.

''உஷ்'' என்று விரலை வாய்மேல் வைத்து எச்சரித்தாள் விசாலாக்ஷி. அவள் கண் தன் கணவர் சென்ற திக்கை நோக்கிவிட்டு அபிதாவிடம் சென்றது.

''ப்சூ'' என்று அசட்டையாக வாயைக் கோணிக் கொண்டாள் அபிதா.

9. அறுந்த தந்தி

''என்னடீ, விசாலம், இப்படித் தலைகால் தெரியாமல் செய்கிறாய்?''

''என்ன அம்மா, அப்படிச் சொல்லுகிறீர்களே? நான் தலை எடுத்து இதுவே நம் வீட்டில் நடக்கும் முதல் பிரமேயம் அல்லவா?''

தான் அளவு கடந்த உற்சாகத்துடன் வேலை செய்வதற்கு என்ன காரணம் சொல்வதென்றே தெரியவில்லை விசாலாக்ஷிக்கு. ஒரு கிருகிணிக்குத் தன் முழுத் திறமையையும் காண்பிக்க இது போன்ற வைபவந்தான் வழி என்பது அவள் இருதயத்திற்கே தெரியவில்லையே? பிறருக்கு என்ன பதில் சொல்லப் போகிறாள் அவ்ள்? தனக்குத் தோன்றும் விதமெல்லாம் ஏற்பாடுகளையும் விதரணைகளையும் செய்யத் தொடங்கினாள்.

அபிதா கூடத்து ஜன்னலருகில் இருந்து கொண்டு சூன்யப் பார்வையுடன் வெளியே நோக்கிக்கொண்டிருந்தாள். விசாலாக்ஷி கையில் எண்ணெயும் சீப்பும் எடுத்துக் கொண்டு வந்து அவளிடம் அமர்ந்து கொண்டாள்.

''அபிதா! இங்கே வா. தலைவாரிப் பின்னிக்கொள். பூச்சூட்டி விடுகிறேன். நீ இந்த மாதிரி இருக்கும்படி என்ன நேர்ந்துவிட்டது? சின்ன வயசில், இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் அழகாக அலங்கரித்துக் கொண்டு சந்தோஷமாக இல்லாமல், ஏனோ இப்படி...?''

''ஆ...மாம். எனக்கு அலங்காரம் வேறு, சந்தோஷம் வேறு!''

''என்ன வந்துவிட்டது இப்பொழுது? புதிய கதையின் கதாநாயகியாகப் பாவித்துப் பார்த்துக் கொள்கிறாயா? அது சரி, நான் உன்னைக் கேட்க வேண்டுமென்றே நினைத்தேன். நீ இப்பொழுது எழுதுவனவெல்லாம் சோகமாகவே முடி கின்றனவே? உன் மன நிலையை அவை பிரதிபலிக் கின்றனவோ?''

அபிதா பதில் ஒன்றும் சொல்லவில்லை. 'மௌனம் சர்வார்த்த சாதகம்' என்று இருந்து விட்டாள் போலும். ஆனால் இங்கு அம்மௌனத்தின் அர்த்தம் 'ஆமாம்' என்பதுதான் என்று அறிந்து கொண்டாள் விசாலாக்ஷி.

''எழுந்து வா, தலையைப் பின்னி விடுகிறேன். அந்த நீலப் புடவையை எடுத்துக் கட்டிக்கொள். கோவிலுக்குப் போய் விட்டு வருவோம்.''

''நான் ஒரு கோவிலுக்கும் வரவில்லை, ஒரு புடைவையும் கட்டிக் கொள்ளவில்லை.''

''அசடு.''

''அசடுதான் நான். இல்லாவிட்டால் இப்படி வார்த்தை கேட்பேனா?'' அபிதாவுக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. உதடு பிதுங்கித் துடித்தது.

விசாலாக்ஷி ஒன்றும் பதில் சொல்லவில்லை. அபிதாவின் தலையை அவிழ்த்துக் கோதுவதில் ஈடுபட்டாள்.

''என்ன மன்னி, நீங்கள் பாட்டில் காதில் கேட்காதது போல் இருந்து விடுகிறீர்கள். நான் அப்படி இருக்க முடிய வில்லை. அவருக்கு உத்தியோகம் இல்லாமல் இருக்கும் போது நீங்கள் இப்படி அமர்க்களமாக ஏற்பாடு செய்வது அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. என்ன இருந்தாலும் ஐ.ஸி.எஸ். உத்தியோகஸ்தர் என்றால் தனி மதிப்புதான். பெற்ற பிள்ளையானாலும் வித்தியாசம் தான் தோன்றுகிறது.'' அபிதாவின் குரலில் துக்கம் தோய்ந்திருந்தது.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. ஒரு தாய்க்குத் தன் குழந்தைகளில் ஏற்றம் தாழ்வே தோன்றாது. எல்லாம் நம் மனப் பிரமை.''

''உங்களுக்கு என்ன, சொல்லாமல்? உங்களை யாரும் ஒன்றும் சொல்கிறதில்லை. எனக்கல்லவோ ஜாடை ஜாடையாகச் சாட்டையடி கொடுத்து ஆகிறது. காலையில் எழுந்ததுமே நான்தான் குளிக்க வேண்டும். இல்லாவிட்டால் கட்டை அதிகம் செலவாகி விடுகிறது. 'கட்டை கிடைக்கிற விலையிலே அவரவர்கள் காலையில் எழுந்ததுமே குளிக்கக்

கூடாதா?' என்ற கேள்விகள் எல்லாம் என்னைக் குறித்தே வருகின்றன. 'சரி' என்று முன்னால் குளித்தால், ''சூடாக இருக்கும்போது அவரவர்கள் குளித்து விடுகிறார்கள். பின்னால் வருகிறவர்களுக்குப் பச்சைத் தண்ணீர்தான். தவலை காலி!'' என்று புகார் எழும்புகிறது. நான் எப்பொழுது தான் குளிக்கிறது?''

''முன்னாலும் இல்லாமல், பின்னாலும் இல்லாமல் நடுவில் குளிப்பதுதானே?'' என்று ஆவடிக்கையாகக் கேட்டாள் விசாலாக்ஷி.

''அப்பொழுது போனால், 'எல்லோருடனும் போட்டி, புருஷர்களோடு போட்டியிட்டுக் கொண்டு இப்பொழுது தானா குளிக்க நேரம்!' என்ற ஏசல் காதில் விழுகிறது?''

''போடி, அசடே. அதெல்லாம் ஒன்றுமில்லை. இப்பொழுது மாமனார் பென்ஷன் வாங்கிக் கொண்டு விட்டாரோ இல்லையோ? அதனால் அம்மா சிக்கனக் கமிட்டியாகிவிட்டார். அதன் பிரபாவம் இதெல்லாம். இந்த அற்பத்தையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு உழப்பிக் கொள்ளுவார்களோ? அடி பைத்தியமே!''

''உங்களுக்கு அற்பமாக இருக்கலாம். என் உள்ளத்தை அம்புபோல் தைக்கிறது ஒவ்வொரு சொல்லும்.''

''நீ கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று தான் நான் சொல்லுவேன். தினமும் தான் யாராவது ஒருத்தர் முன்னால் குளிக்கிறார்கள். ஒருத்தர் பின்னாடிக் குளிக் கிறார்கள். சிலருக்கு மத்தியில் ஸ்நானம் முடிந்து விடுகிறது. நீ சொல்வது அனைனத்தும் அவர்களையும் தானே பாதிக்கிறது? குடும்பம் என்றால் அப்படித்தான் இருக்கும். இரண்டு சௌகரியமும் இருக்கும், நான்கு அசௌகரியமும் இருக்கும். ஒன்றிற்காகச் சிரித்துக்கொண்டே இருக்க முடியாது. மற்றொன்றிற்காகச் சதா அழுதுகொண்டே இருக்க முடியாது.

அம்மா சொல்வதைக் குற்றமாக எடுத்துக் கொள்ளாதே. பெரியவர்கள் நம் நலனுக்காகத்தான் சொல்லுவார்கள். மொத்தத்தில் எல்லோரும் சீக்கிரம் வேலைகளை முடித்துக்கொண்டு விடவேண்டும் என்பதுதானே?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. விறகு ஆகிவிட்டால் நீங்கள் பதிலுக்கு வாங்கிப் போடுவீர்கள். என் அகமுடையானுக்குத் தனக்கென்று ஒரு தம்படி கிடையாது. நாங்கள் எதை வாங்குவோம்? ஏன், இவர்கள் தாம் சீக்கிரமே குளித்துக் காண்பிக்கட்டுமே!''

''அபிதா, அம்மாவையா சொல்லுகிறாய்? பெரியவர்களைப் பற்றிக் கண்டபடி பேசாதே அம்மா. நமக்கு அது சிரேயஸ்கரம் அல்ல. அவர்கள் காலத்தில் அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்களோ? அதில் நாம் நூற்றில் ஒரு பங்கு கூட.....''

''அவர்கள் பட்டால் நாம் படவேண்டும் என்று எங்கு எழுதியிருக்கிறது? 'நாம்தான் அவ்வளவு கஷ்டப்பட்டோமே, நம் குழந்தைகளையாவது நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும்' என்று அவர்களுக்குத் தோன்றக்கூடாதா? சுருக்சுருக்கென்று தைக்கும்படி பேசுவானேன்?''

''நான்தான் சொல்லுகிறேனே, அவர்கள் வேண்டுமென்று உன்பேரில் குறைகூறவில்லை என்று. நம்பமாட்டேன் என்கிறாயே? பெரியவர்களை இப்பொழுது சுகமாக வைத்துக் கொள்வது நம் கடமை. அவர்கள் அவர்களுடைய பெரியோர்களுக்குச் செய்திருப்பார்கள். அவர்களையும் நமக்குச் சரி சமானமாக வைத்துக் கொண்டு, 'அவர்கள் ஏன் இதைச் செய்யவில்லை, அதை ஏன் அப்படிச் செய்தார்கள்?' என்றெல்லாம் நாம் கேட்கலாமா? வேளையில் எழுந்து, பறக்கப் பறக்க அவர்கள் வேலை செய்ததெல்லாம் போதுமே? இனிமேலாவது அவர்கள் ஒருவித நிர்ப்பந்தமும் இல்லாமல்

ஹாய்யாக இருக்கட்டுமே?'' என்று சாந்தமாகக் கூறினாள் விசாலாக்ஷி.

அபிதாவுக்குப் பேச்சு ரசிக்கவில்லை. அவள் சூள் கொட்டியபடியே மாடிக்குப் போய்விட்டாள்.

'புது மாடுகள் மிரளுகின்றன. நாட்கள் சென்றால் இராவண்டி இழுக்க ஆரம்பித்துவிடும். முதல் முதலில் கொஞ்சம் பாய்ச்சலும் உதைப்பும் இல்லாவிட்டால் வாழ்வில் ரசமேது!' என்று விசாலாக்ஷி தன் ஓரகத்திகளைப் பற்றி நினைத்துக் கொண்டாள்.

★ ★ ★

அருணாசலம் திரும்பிப் பார்த்தான். தன் மனைவி வரும் வேகத்திலிருந்தே அவள் யுத்த முஸ்தீப்புடன் வருகிறாள் என்று அவனுக்கு மூக்கில் வியர்த்துவிட்டது. தலை நிமிராமலேயே அவன் வேகமாக எழுத ஆரம்பித்தான்.

இந்த விதமாக அடிக்கடி அபீதா குசாம்பாள் வீராங்கனை அவதாரம் எடுப்பது இப்பொழுது கொஞ்ச நாட்களாக வழக்கமாகி விட்டது. அருணாசலம் கவனிக்காமல் இருப்பதை அவள் ஒரு புகலாகக் கொண்டாள்.

''ஹ¯ம்!'' ஒரு பெருமூச்சு வெளியே வந்து வீட்டின் கூரையையே பிளக்க முயன்றது. அருணாசலத்திற்குத் தான் எழுதுவதில் கவனம் செலுத்த முடியவில்லை. ஆயினும் தலை நிமிராமல் ஏதோ கிறுக்கினான்.

''ஹ¯ம்... ஊ... ம்.''

இப்பொழுதும் அவன் தலைநிமிரவில்லையாயினும் மனக் குழப்பம் கொண்டான்.

''ஹ¯ ஊம், நான் எக்கேடு கெட்டால் யாருக்கு என்ன? அவ்வளவு அலட்சியமான வஸ்துவான பிறகு உயிருடன்

இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன?'' என்று அபிதா கூரையைப் பார்த்துக் கேட்டாள்.

தாம்பத்தியச் சச்சரவின் நடுவில் தலையிடமாட்டேன் என்று மறுத்துவிட்டது போலும் அக்கூரை. ஆனால் அருணாசலம் அவள் கேள்விக்குப் பதில் சொன்னான். இதுவரையில் எத்தனையோ நாட்கள் இந்த நாடகம் நடந்திருக்கிறது. அன்று அவன் நாள் முழுவதும் வெயிலில் நின்று களைப்படைந்து இருந்தான். இப்பொழுது அவனுக்கு இதமாகச் சுசுரூஷை செய்யாமல் குறை கூறும் படலத்திற்குத் தன் மனைவி இறங்கியது அவனுக்கு அளவிலாக் கோபத்தை அளித்தது.

''இப்பொழுது என்ன என்கிறாய்?'' என்று கேட்டுச் சீறினான் அவன்.

''என்ன, சொல்லுவதென்ன? ஒரு வேலையும் இல்லை. எப்பொழுதும் தண்டச்சோறு தின்றுகொண்டு இருந்தால்...''

''நாக்கை அடக்கு!'' என்று பல் இடுக்கிலே மீண்டும் சீறினான் அருணாசலம்.

''அடக்கி அடக்கித்தான் என் உள்ளம் குமுறுகிறது. உங்களுக்கு உறைப்பு இல்லாமல் இருக்கலாம். நான் ஏன் கேட்டுக் கொள்ளவேண்டும்? இந்த லட்சணத்தில் இருப்பதற்கு, கல்யாணம் இல்லாமல் இருப்பதுதானே?''

''இப்பொழுதுதான் என்ன? கல்யாணம் ஆகவில்லை என்று நினைத்துக்கொண்டு உன் பிறந்தகத்துக்குப் போய்விடேன்.''

''ஊரார் உங்களைக் கண்டு சிரிப்பார்களே என்று போகவில்லை.''

''அதைப் பற்றி நீ இப்பொழுது கவலைப்பட வேண்டாமே? சீமந்தம் கழித்து உன் பெற்றோர்களுடனே

போய்விடு. அப்புறம் உனக்கு எப்பொழுது இஷ்டமோ, அப்பொழுது வந்து கொள்ளலாம்.''

''வராமலே இருப்பதாக உத்தேசம்.''

''ரொம்ப நல்லதாகப் போச்சு. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. காலில் கட்டின குண்டாங்கல் அறுந்து விழுந்த மாதிரி எனக்கு'' என்றான் அருணாசலம் யோசிக்காமல்.

அப்பொழுது இருந்த உடல் களைப்பில் இருவர் வாயிலும் வார்த்தைகள் கட்டு மீறி வந்தன. ஆழ்ந்து ஆலோசித்து விஷம் தோய்த்து வார்த்தைகளை வெளிக் கிளப்பவில்லை. ஆனால் அபிதாவின் நைந்த உள்ளத்தில் அருணாசலத்தின் வார்த்தைகள் அனைத்தும் ஆணித்தரமாகப் பதிந்தன.

என்றும் நோகப் பார்த்தும், கடிந்து பேசியும் அறியாத அபிதாவுக்குச் சிறு சொல்லும் பெருங் குற்றமாகத் தோன்றிற்று. அவள் சூட்சும புத்தியும், நுண்ணிய கவன சக்தியும் இப்பொழுது ஆபத்தை விளைவித்தன. சாதாரணமாக உதறவேண்டிய அற்ப விஷயத்தையும் அவள் கற்பனா சக்தி, கொடிய சொல்லம்புகளாகவும் சகிக்கவொண்ணாத துயரமாகவும் தீட்டிக் காண்பித்தது. இந்த அதிர்ச்சி தாங்காது அவளுடைய நரம்புகள் தளர்ந்தன. 'ஹிஸ்டீரியா' என்னும் மனோ வியாதிக்கு அவள் ஆளாகிவிட்டாள். ஆனால் அது மிகவும் மிதமாகவே இருந்தபடியால் யாருக்கும் சட்டென்று தெரியவில்லை.

அவள் சிரிக்க ஆரம்பித்தால் சிரித்துக்கொண்டே இருப்பாள். அழ ஆரம்பித்தால் ஓயாமல் ஒழியாமல் அழுவாள். யார் தேற்றியும் தேறமாட்டாள். அவள் விசும்பலையும், தேம்பலையும் தினந்தோறும் கேட்ட அவள் கணவன் அதை நீலித்தனம் என்று நினைத்து, கவனிப்பதை விட்டுவிட்டான்.

மெல்ல ஒரு வாரம் கடந்தது. தன்னையும் மீறி அழுகை வருங்கால், தன் கணவன் தன்னை அன்பு மொழிகளால் ஆதாரமாகத் தாங்கிக்கொண்டு ஆசுவாசப்படுத்தவேண்டும் என்று ஏங்கினாள் அபிதா. தன் நிலைமையை அவன் புரிந்துகொள்ளவில்லை என்றும் அவள் அறிந்தாள். ஆயினும் அவனிடம் நெருங்கித் தன்னைப்பற்றி நிதானமாகச் சொல்லிக்கொள்ளும் சக்தி அவளுக்குப் போய்விட்டது. நாக்குத் தடுமாறிற்று, உடல் நடுங்கிற்று, கண்களில் நீர் வழிந்தது, காரணமில்லாமலேயே. தனது மனைவியின் தேகநிலையைப் பற்றி நின்று நிதானித்து யோசிக்க அருணாசலத்திற்கு நேரமில்லை, கவனிக்கப் பொறுமை யில்லை. இருவருக்கும் இடையே பேச்சே அற்றுவிட்டது.

சீமந்த நாள் வந்தது. கும்பல், சடங்குகள், மனோவியாதி எல்லாம் சேர்ந்து கொண்டன. அபிதா அவைகளை எதிர்க்கச் சக்தியற்றவளாய்ப் புயலில் அகப்பட்ட இலைச் சருகைப் போல் தத்தளித்தாள் ஒரு கணம். மறு கணம் நினைவற்றுப் பந்தலிலேயே விழுந்துவிட்டாள்.

''கர்ப்பவதி, பலஹீனமான பெண், அலைச்சல் தாக்குப்பிடிக்கவில்லை'' என்று பலர் ஏதேதோ கூறினார்கள். அவளை ஆசுவாசப் படுத்தினார்கள்.

இரண்டு நாளைக்கெல்லாம் அவள் பிறந்தகம் போய்விட்டாள். அவளுடைய தேகநிலையை உத்தேசித்துத் தான் அவள் முன்னதாக அனுப்பப்பட்டாள். ஆயினும் அபிதாவின் இருதயத்தில் தன் கணவனுடன் நடந்த மனத்தாங்கல்தான் அதற்குக் காரணம் என்ற எண்ணம் வேரூன்றி நின்றது.

அவள் ஊருக்குச் சென்ற பிறகு அருணாசலத்திற்கு வேலையே இல்லை போலவும், வீட்டில் ஐந்தாறு பேர் குறைவாக இருப்பது போலவும் பிரமை தட்டியது. ஆனால் அவன் தன்னைத் தானே பரிகசித்துக் கொண்டான்.

'போனால் என்ன? வந்துவிடுகிறாள், இன்னும் நான்கு மாதத்தில். அதுவரை எனக்கு மூச்சுவிடக்கூட நேரமில்லை; அடுத்த வாரம் ஆர்க்கியாலஜி எக்ஸ்பர்ட் ஸர். கணபதி வரப் போகிறார்' என்று தேற்றிக் கொண்டான்.

கபடமற்றவனாகையால் அருணாசலம், தான் தன் மனைவியுடன் போட்டுக் கொண்ட சண்டையையும், மனஸ்தாபத்தையும் பேச்சு நிறுத்தத்தையும் முற்றிலும் மறந்துவிட்டிருந்தான்.

மூன்றாம் பாகம்

1. வறண்ட குளம்

தும்பி வாயால் வழியும் தடாகத்தில் தெப்ப உற்சவம் நடக்கும் காலம் போய்விட்டது. சேற்றின் சதசதப்பில் தோன்றும் ஈரத்தைத் தவிர்த்துத் தண்ணீரின் ஜாடையே தெரியவில்லை. வரிசை வரிசையான கற்பட்டிகளில் தும்பும் தூசும் நிரம்பிக் கிடந்தன. அவை ஒரு பொட்டலுக்கு வழி காட்டின. நாதனற்ற பெண்ணைப்போல் பரிதாபமாக இருந்தது அவைகளின் தோற்றம். நீராழி மண்டபம், பாழடைந்த சிதிலம்போல் காணப்பட்டது. இல்லை; வாஸ்தவத்தில் ஒரு குறைவும் இல்லை. புல் பூண்டுகளே நிறைந்து கிடந்தன.

மணலையும் கரடுமுரடான பாதையையும் பொருட்படுத்தாமல் டாக்ஸி ஒன்று விர்ரென்று வந்து, மெல்ல ஒரு குதிபோட்டுவிட்டு வீட்டு வாசலில் நின்றது. ரகுநாதனும் கமலாவும், ஆளுக்குக் கையில் ஒரு மூட்டையுடன் இறங்கினார்கள். அவர்கள் பின்னால் ஒரு யுவதி நிதானமாக இறங்கினாள். இழுத்துப் போர்த்துக் கொண்டு அவள் தன் தகப்பனாரின் பின்னால் நின்று கொண்டிருந்தாள். அவர் முன்னே செல்ல, அவள் அன்ன நடை நடந்து கொண்டு பின் தொடர்ந்தாள். அவள் கலாதான். பதினாறு வயதுச் சிறுமி கலா இப்பொழுது ஒரு இளநங்கையாகிவிட்டாள். வசந்த காலத்தின் நாணம் அவளைக் கௌவிக் கொண்டது. அவளுடைய அங்க அவயங்களில் சாந்தி குடிகொண்டிருந்தது. குறுகுறுத்த கண்களும் முறுவலித்த இதழ்களுமே அவளது நிர்மலமான வதனத்தின் சின்னங்களாக விளங்கின.

வாசற்படிக்கட்டில் மேல் படியில் நின்றுகொண்டு, தனது நெடுநாளையப் பழக்கப்படி குளத்தை நோக்கினாள் கலா. தன்னுள் ஏற்பட்டிருக்கும் பலவித மாறுதல்களைப் போல் அக்குளத்திற்கும் நேர்ந்து இருக்குமோ என்று நினைத்தாளோ!

இளம் நங்கை, பழைய கோவில், புதிய வீடு இவைகளுக்கு என்று ஒரு பிரத்தியேக அழகு; அழகில் தோய்ந்து கசியும் ஒரு நிறைவு. வித்தியாசம், ஒருமை இனம் மாறி மாறித் தோன்றுதலில் இருக்கும் ரசம் வேறு எதிலும் இல்லை. இந்த அற்புதத் தத்துவத்திற்குச் சான்று, காலை, மாலை, குளிர், வெயில். மாரி, மாறி மாறி வருவதில் பழமை புதுமையாகிறதும், பார்த்துச்சற்றுச்சலிப்புறும்சமயம்புதுமை பழமையாகிறதுமேயாகும்.

கலா இந்த இரண்டு வருடங்களின் நிலையை, குளத்தைக் கொண்டு அளந்தாள். பனி மூடிய அந்த நேரத்திலே, மெல்லிய மஸ்லின் படுதாவின் பின்னால் நிற்கும் ராஜகுமாரிபோல் நின்றது, நீராழி மண்டபம். ஆனால் அந்தக் காட்சி ஒரு கணம்தான் இருந்தது. சூரியன் தன் ஆட்சியை நிலைநாட்ட வந்துவிட்டான். அதை எதிர் நோக்கிக் கலா ஆவலுடன் குளத்தைப் பார்த்தாள். ஆனால் அவள் கண்ட காட்சி அவளைத் துணுக்குறச் செய்தது.

தான் அதுகாறும் கவனிக்காமல் இருந்துவிட்டவை களை அவள் அப்பொழுதே உணர்ந்தாள். ஆதித்தனின் வரவை அலைக்குஞ்சுகள் நளினமாகக் கொண்டாடவில்லை. தண்ணீர் வற்றிப்போன அந்தக் குளம் பாளம் பாளமாக வெடித்து இருந்தது. கலாவுக்குத் தன் உள்ளத்தில் யாரோ கீற்றுக் கீற்றாகக் கீறிவிட்டாற்போல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. குளத்தைச் சுற்றி முட்செடிகள் குவிந்து கிடந்தன. படிகளின்

இடுக்கில் புல் வளர்ந்து கிடந்தது. அந்த ஏமாற்றத்தில் உதய கன்னிகையின் தளிர்க்கரங்களின் ஸ்பரிசம் கலாவை வழக்கம்போல் மெய்ம்மறக்கச் செய்யவில்லை. உடலில் குறுகுறுப்பு, தலையில் நிம்மதியுடன் கூடிய மயக்கம், மனத்தில் ஆனந்தம், திருப்தி எல்லாம் அவளுக்கு இப்பொழுது இல்லை. நெஞ்சை அடைக்கும் ஏமாற்றத்துடன் ஸ்தம்பித்து நின்றுவிட்டாள் அவள்.

''என்னம்மா, கவிதா ரசம் பொங்கி வழிகிறதோ?'' என்று முரளீதரன் தன் இயல்பான சகஜ பாவத்துடன் எடுப்பாகக் கேட்டான். கலா அப்பொழுதே தன் சுய உணர்வைப் பெற்றாள். முகம் கோவைப்பழம் போலாக ஒரு விநாடி இமைகளை நிமிர்த்தி முரளியைப் பார்த்துவிட்டுப் பதற்றத்துடன் கீழே தாழ்த்திக் கொண்டாள். ஒரு குறுநகையே அவனுக்குப் பதிலளித்தது. அவள் வேகமாக உள்ளே போய்விட்டாள். முரளி ஏதோ புதுமையைக் கண்டவள்போல் அவளையே நோக்கிக் கொண்டு ஸ்தம்பித்து நின்றான்.

''கலா, ஏண்டியம்மா வாசலிலேயே நின்றுவிட்டாய்? காபி குடிக்க வா. பல் தேய்த்துக்கொண்டாயா?'' என்று ஜானகியம்மாள் அன்பொழுகக் கூப்பிட்டாள்.

விசாலாக்ஷி தன் மருமகளைப் பார்த்தாள். ''முரளீதரனுடன் பேசிக்கொண்டு நின்றுவிட்டிருப்பாள். 'தில்லையில் கலந்து கொண்டால் அவர் திரும்பியும் வருவாரோ'? '' என்று கிண்டல் செய்தாள்.

அத்தையின் மொழிகள் கலாவைக் குறுகுறுவென்று ஓர் இனிய கிளர்ச்சிக்கு ஆளாக்கின. அவள் பதில் ஒன்றும் கூறாமல் சிரித்துவிட்டுக் காபி குடிப்பதில் ஈடுபட்டாள்.

சற்று நேரத்திற்கெல்லாம், ''சின்ன அத்தை எங்கே?'' என்று அவள் கேட்டாள், தன் குழப்பத்தை மறைக்க.

அருணாசலம் மாடிப்பக்கம் போய்க்கொண்டிருந்தான். அதைப் பார்த்துவிட்டுத்தான் அவளுக்கு அபிதாவின் ஞாபகம் வந்தது. கமலா தன் பெண்ணை ஜாடை காட்டி அடக்கினாள். ஆனால் கலாவின் குரல் அருணாசலத்திற்குக் கேட்டு விட்டது. அவன் முகம் வாடி, வெளிறிற்று. திரும்பிப் பாராமலே அவன் மெதுவாக மாடிப்படி ஏறினான்.

கலா ஒன்றும் புரியாதவளாய்த் தன் அத்தையின் முகத்தையும், தாயின் முகத்தையும் மாற்றி மாற்றி நோக்கினாள். ஆனால் அவளுக்கு நிதானமாக விவரிக்க யாரும் தயாராக இல்லை. ஜானகியம்மாளும் முகத்தை என்னவோ போல் வைத்துக் கொண்டு எழுந்து போய்விட்டாள்.

அருணாசலம் தன் அறையை அடைந்தான். அவன் உடலும் உள்ளமும் ஒருங்கே சோர்வுற்றிருந்தன. அவன் தன் கையிலிருந்த காகிதக் கட்டுகளை வீசி எறிந்துவிட்டுத் தலையை இரு கைகளாலும் தாங்கிக் கொண்டு படுக்கையில் சாய்ந்து விட்டான்.

அவனுடைய இருதயம் ஷண்டிங் வண்டிபோல் பின்னோக்கியும் முன்னோக்கியும் சென்று கொண்டிருந்தது.

. அபிதா தன்னை விட்டுப் பிரிந்ததிலிருந்து அவனுக்கு நரக வேதனையாகத்தான் இருந்தது. அதற்குத் தான் காரணமா, அல்லது அது விதியின் கொடுமையா, பெண்ணின் சாகசமா என்று அவனால் பரிசோதித்துச் சீர்தூக்கிச் சொல்ல முடியவில்லை. மொத்தத்தில் தாங்க மாட்டாத துயரமாக இருந்தது அவனுக்கு.

அவள் சீமந்தம் கழித்து ஊருக்குச் சென்றாள். எல்லாப் பெண்களும் தான் பிறந்தகம் செல்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்படித்தான் இரண்டு வருஷ காலம் திரும்பி வராமலேயே இருந்து விடுகிறார்களா? அவர்கள் தாம் என்ன இப்படித்

திரும்பி வராத நிலைக்கு ஆளாகிவிடுகிறார்களா? கணவனுடன் சண்டை பிடித்துக்கொண்டு பிறந்தகம் செல்வதும், சமரசம் அடைந்து திரும்பி வருவதும் வாழ்க்கையில் சகஜமாக நடப்பவைதாம். அபிதாவின் விஷயம் எந்த நியதிக்கும் உட்பட்டதாக இல்லாமல் விபரீதமாக முடிந்துவிட்டது. 'முடிந்துவிட்டது' என்று அவள் வாழ்விற்கே முற்றுப்புள்ளி வைப்பதற்கு அருணாசலத்தின் மனம் அஞ்சியது. அவன் உள்ளம் கூசிற்று.

புக்ககத்தில் இருக்கும்போதே அவள் ஒரு வாரமாகக் கணவனுடன் பேசவில்லை. ஊருக்குச் சென்றுவிட்டாள். கொஞ்ச நாட்கள் வரை தன்னிடம் மன்னிப்புக் கோரி அவன் கடிதம் எழுதுவான் என்று அவள் நினைத்தாள். ஆனால் ஒன்றும் வரவில்லை. அவன்தான் அவளுடன் மனஸ்தாபப் பட்டதையே மறந்துவிட்டானே! அதை அவள் எப்படி அறிவாள்? பிறகு தனக்கே கோபம் தணிந்துவிட்டது. அதற்குப் பதில், மனத்தில் ஏக்கம் குடிகொண்டது. கணவன் தன் பேரில் கோபமுற்று இருக்கிறான் என்று நினைக்கும்பொழுது அவளுக்குத் துக்கம் அடைத்தது. தானே எழுதுவோம் என்று நினைத்தாள். அவள் உடல்நிலையும் மனநிலையும் ஒரே விதமாக க்ஷீணித்துப் போயிருந்தன. மிகவும் பலஹீனமாக இருந்ததுடன் மனத்தையும் குழப்பி உழப்பிக் கொண்டதில் அடிக்கடி மயக்கமுற்றுத் திடீர் திடீரென்று விழுந்துவிட்டாள்.

அருமைப் பெண்ணுக்குக் குழந்தை பிறந்து எடுத்துப் பாலூட்டிச் சீராட்டப் போகிறோம் என்று உலக இயல்புடன் நினைத்த பெற்றோர்கள் அவளது உடம்பின் கோளாற்றைக் கண்டு திடுக்கிட்டனர். தீவிரமாகச் சிகிச்சை செய்வதற்கு அவளுடைய கர்ப்பமான சந்தர்ப்பம் இடம் கொடுக்க வில்லை. செய்யாமல் தெய்வமே கதி என்று விடவும் மனம் கேட்கவில்லை. அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருந்த

பீதியிலும் கவலையிலும் அபிதாவின் கணவனைப் பற்றியும் அவளது மனநிலையைப் பற்றியும் மண வாழ்க்கையைப் பற்றியும் சிந்திக்க அவர்களுக்கு நேரம் இல்லை. எப்படியாவது தங்கள் குழந்தை பிழைத்தால் போதும் என்று இராப் பகலாக உழைத்துப் பாடுபட்டனர். அவ்வப்போது ஜகந்நாதனும், ராமநாதையரும் எழுதிய கடிதங்களுக்குக்கூட விடை எழுத முடியவில்லை.

அப்படியும் இப்படியுமாகக் குறித்த காலத்தை உந்தித் தள்ளி விட்டார்கள். ஓர் அழகான ஆண் மகவைப் பெற்று எடுத்தாள் அபிதா. அந்தோ, அதை எடுத்து அணைத்துக் களிக்க அவள் கொடுத்து வைக்கவில்லை போலும்! ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் அதன்தாய் நினைவு நீச்சில்லாமல் கிடந்தாள். கடும் ஜுரம் கண்டது. ஜன்னியில் என்ன என்னவோ பிதற்றினாள். யாரும் அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் வைர மனம் படைக்கவில்லை. உள்ளம் குமுறிக் குமுறி விம்முதலே வீட்டில் பெரிதாகிவிட்டது. ஏதோ சாங்கியத்தைக் குறைக்காமல் புண்ணியாஹ வாசனாதிகள் முடிவடைந்தன.

குழந்தை வளர்ந்தது. ஆனால் அதைப் போஷித்துப் பாலிக்கும் பாக்கியம் அபிதா பெறவில்லை. அவளுக்கு ஜுரம் போயும் பிதற்றல் விடவில்லை. வைத்தியர்கள் அவளுக்கு மூளை குழம்பிவிட்டது என்று தீர்ப்புச் சொல்லிவிட்டார்கள்! அன்பு, பாசம், பிணைப்பு, கோபம், தாபம், துயரம் யாவும் கடந்த நிலையில் அவள் இருந்தாள். ஆனால் என்ன பரிதாபம்! சுய முயற்சியால் அவள் அக்கீர்த்தி அடைந்திருந்தால் அவள், பாரெங்கும் போற்றும் பரம ஞானி என்று பாராட்டப் பட்டிருப்பாள். இப்பொழுது விதியின் சூழ்ச்சியில் இந்நிலை ஏற்பட்டதால் அவள், உலகத்தார் அநுதாபத்திற்கும், இகழ்ச்சிக்கும் ஆளானாள்.

அருணாசலம் அவளையும் குழந்தையையும் போய்ப் பார்க்கவே இல்லை. தன் அம்மாவும் மன்னியும் மற்றவர் களும் பார்த்துவிட்டு வந்து சொன்னதே ஈட்டிபோல் தாக்கிற்று. அவளிடம் தான் எவ்வளவுதான் காதல் கொண் டிருந்தான் என்பதை அவளைப் பிரிந்த நொடியிலேயே அறிந்த அவன், அந்த உணர்வால் பன்மடங்கு பாதிக்கப்பட்டான்.

ஜகந்நாதன் அடிக்கடி தம் தம்பியிடம் வருவார். அவனைத் தேற்ற முயலுவார். தன் குழந்தையைப் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டியது அவன் கடமை என்று வற்புறுத்துவார்.

''என்னால் சகிக்க முடியாது, ஜகம். அவள் புத்திசாலித் தனம் எல்லாம் மறைந்துபோய், அவள் பைத்தியமாக நிற்பதை நான் எப்படிப் பார்ப்பேன்? நிமிஷத்திற்கு ஒரு புதிய கற்பனையை ஜோடித்துக் காட்டும் அவள் மூளை, சூன்யமாக நிற்பதைக் காண நான் கல்நெஞ்சல்லவா படைத்து இருக்கவேண்டும்? சதா சஞ்சலிக்கும் அவள் திருஷ்டியில் எதுவும் தப்பாது. இப்பொழுது அவள் மணந்த புருஷனை யுங்கூட அடையாளம் தெரியாமல் நிற்பதைப் பார்க்க வேண்டுமா? அதைக் காட்டிலும் என் இரண்டு கண்களையும் பிடுங்கி எறிந்துவிடுவேன். அவள் பாம்புச் செவிகளினால் நந்தவனத்தில் கூவும் எந்தப் பட்சியின் துவனியையும் கண்டு பிடித்து விடுவாளே, இப்பொழுது அவள் காதுக்குத் தான் பெற்ற பிள்ளையின் அழுகைகூட எட்டுவதில்லையே!

''அந்தப் பரிதாபத்தை, அந்தக் கண்ணராவியை நான் பார்க்க வேண்டுமா, ஜகம்? ஜகம், என்னைத் தொந்தரவு செய்யாதே - வேண்டாம். பிறக்கும்போதே துர்ப்பாக்கிய வானான அந்தப் பிள்ளையைப் போய் என்ன பார்வை? தன் அம்மாவையே இழந்துவிட்ட அந்தப் பீடையை என்ன

பார்வை? ஜகம், ஐயோ, இதைக் காட்டிலும் அவள் இறந்து விட்டாலே மேல்'' என்று அருணாசலம் கதறினான்.

''நீ சொல்கிற பாம்புக் காதினாலும் கூர்ந்த கண்ணினாலும் அந்தப் பாழும் நுட்ப புத்தி, மிருதுவான இருதயம் இவைகளாலும் எல்லாம் வந்த வினைதான் இது. நந்தவனத்தில் பறவைகளின் கீதத்தைக் கேட்டால் போதுமா? மலர்களின் நறுமணத்தை அநுபவித்தால் ஆகிவிட்டதா? முள் தைக்கும்போது கதறிக் கொண்டிருப்பதா? வாழ்க்கையில் லட்சியம் அவசியம் வேண்டியதுதான். ஓரளவு ரசிப்புத் தன்மை, கற்பனா சக்தி யாவும் ஒருவருக்கு இன்றியமை யாதவையே. ஆனால், அதற்காகப் பாதை கரடுமுரடாக இருக்கும்போது, கற்களைப் பொறுக்கி எறிந்துவிட்டு, முட்களைக் களைந்துவிட்டு வழியைப் செப்பனிட்டுக் கொண்டு மேலே நடக்கத்தான் வேண்டும். குடும்ப வாழ்க்கை ஒருநாள் இன்ப வாரியாகத் தோற்றமளிக்கும். அடுத்த நாள் அது வெறும் கானல் நீரோ என்று ஐயத்தை எழுப்பும். மூன்றாம் நாள் துக்க சாகரமாக மாறிவிடும். ஒருநாள் சலனமே இல்லாத சூன்யமான மௌனமாக இருக்கும். மனம் இடிந்து போகும் சமயம், புத்துயிர் பெற்று, புன்முறுவல் பூக்கும். இதையெல்லாம் சகஜமாக ஏற்றுக் கொள்ளும் சக்தியோ சாமர்த்தியமோ சகிப்புத் தன்மையோ அவளிடம் இல்லை. அதைத் திருத்தி லகானைப் பிடிக்க நீ தயாராக இல்லை. உன் வேலையில் நீ முழு மனத்தையும் அர்ப்பணித்துவிட்டாய். நடந்தது நடந்துவிட்டது. இனி அதற்கு வருந்திப் பயனில்லை. நான் சொல்வதைக் கேள். ஒருமுறை உன் வேட்டகத்திற்குப் போய்விட்டு வா. உடம்பிற்காக இல்லாவிட்டாலும், ஊருக்காகப் பால் குடிக்கவேண்டும் என்பார்கள். நீ ஒரு தரம் போய்விட்டு வா. அப்புறம் நான் உன்னைத் தொந்தரவு செய்யவில்லை'' என்று பலவும் சொல்லி வற்புறுத்தினார் ஜகந்நாதன்.

அவர் நயமாகவும், பயமாகவும் சொல்வதைத் தட்டமாட்டாமல் ஒருமுறை தன் மாமனார் வீட்டிற்குச் சென்றான் அருணாசலம். 'அந்த ஓர் அநுபவமே ஜன்மத்துக்கும் போதும், இனி உயிர் இருக்கும் வரை அவர்கள் விட்டு வாசற்படி தாண்டுவதில்லை' என்று பிரக்ஞையுடன் திரும்பி விட்டான் அவன்.

இப்பொழுது அதைப்பற்றி நினைக்கும்போது அருணாசலத்தின் நரம்புகளின் ஊடே ஒருவித மின்சார வேகம் குடிகொண்டது. உடல் புல்லரித்தது. மண்டையில் ரத்தம் கொதித்தது. அவமானம் அவ்விதம் மனித சரீரத்தை உலுக்கும் என்று அவன் நினைத்தப் பார்த்ததே இல்லை. குழந்தையின் முகம் அவன் கண்முன்னே தோன்றி, புன்சிரிப்பில் மலர்ந்தது. அவன் மார்பை இறுகப் பிடித்துக் கொண்டான். குண்டுக் காயம் பட்டவன்போல் அவன் முகம் வேதனையால் சுருங்கியது. கையால் தொட்டுக்கூட அறியாத அந்தக் குழந்தையிடம் புத்திர பாசமா? அருணாசலத்தின் நெஞ்சம் வறண்டது. அவன் வாய் தன்னையே எக்களித்து ஏளனமாகத் தூஷித்தது. இன்றும் அந்த ஒரு நாளின் நினைவு அவன் மனக் கண்முன் வாடாமல் நின்றது.

அருணாசலம் தன் மனைவியைப் பார்த்தான், அழைத்தான், அருகே நெருங்க எத்தனித்தான். அவள் ஏதேதோ உளறிக் கொட்டிக் கொண்டு இடி இடி என்று சிரித்தாள். கண்ணீர் வடியாமல் அவன் மார்பில் உறைந்து கொண்டுவிட்டது. அவனுக்கே பித்துப் பிடித்துவிட்டதோ எனும்படி ஸ்தம்பித்து நின்றான் அவன். அவன் அருகில் நின்ற அவனுடைய மாமனார் அவனைப் பார்த்து, ''பார்த்தீர்களா மாப்பிள்ளை? உங்கள் கை திறனைப் பார்த்து மனங்களித்து ஆகிவிட்டதா? திருப்திதானே?'' என்ற விஷம் தோய்ந்த சொற்களை வெளியிட்டார். அருணாசலம் உள்ளம் இடிந்து

நைந்துபோனநிலையில் இருந்தான். அவன்சாத்துவீகமாகவே பதில்சொன்னான்.

''என்ன, நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே?''

''புரியவில்லையா? அதோ கேளுங்கள்!'' என்று அபிதாவின்அறையைச்சுட்டிக்காண்பித்தார், மாமனார்.

''பழைய சாதம் தானே? போடி, மாயக்காரி உத்தியோகம் இல்லாதவன் பெண்டாட்டிக்குப் பழைய சாதம்தான். ஹீ - ஹீ - ஹீ, தண்டச் சோற்றுத் தடி ராமரே, என்னை எங்கள் அப்பா வீட்டுக்கு அனுப்பிவிடு. மாட்டே? அஹ - ஹ - ஹா!'' என்று பயங்கரச்சிரிப்பின்இடையேகத்திக் கொண்டிருந்தாள் அபிதா.

''கேட்டீர்களா? கள்ளங்கபடமற்ற குழந்தையை உங்களிடம் கொடுத்தேன். ரோஜா மலர் போன்ற என் பெண்ணைக் கசக்கி முகந்து விட்டீர்கள். மேதாவியான என் குழந்தையை மூளை கலங்கும்படிச் செய்த மகா பாவிகள் நீங்கள். உங்கள் குலம் நா.....''

''இதோ பாருங்கள், அதிகம் பேசவேண்டாம். உங்கள் பெண்ணைத் தொட்டாற் சிணுங்கியாக வளர்த்துவிட்டு என் காலில் கட்டிவிட்டதும் அல்லாமல், சாபம் வேறு கொடுக்க வந்துவிட்டீர்களோ? சாதாரண வாழ்க்கைகூட நடத்தத் திறமையற்ற உங்கள் பெண் அருமையானால் அவளை உங்கள் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருப்பதுதானே? என் கழுத்தை அறுப்பானேன்?''

''இனிமேல் அவர் அப்படித்தான் பேசுவார். அவருக்கு அவளைப்பற்றி இனி என்ன? நாளைக்கே ஒரு பெண்ணைப் பார்த்து அவர் அம்மா அவருக்குக் கல்யாணம் பண்ணி

வைப்பாள். அவருக்குக் குழந்தையும் குட்டியும் பிறக்கும். அவர்கள் வீடு நிறைந்துவிடும். நம் வீட்டில் குத்து விளக்கை நொடிப் பொழுதில் அணைத்துவிட்டார்கள்.''

அருணாசலத்திற்குத் தன் மாமியார் இந்த வார்த்தையைச் சொன்னதும் தாங்கமாட்டாத கோபம் வந்துவிட்டது. ''சரி, சரி. உங்கள் பிரலாபத்தைக் கேட்க நான் இங்கு வரவில்லை. என் குழந்தையைக் கொடுத்து விடுங்கள், நான் போகிறேன்'' என்றான்.

''உன் குழந்தையா? என் பெண்ணின் வாழ்வையே கெடுத்து விட்ட நீ அவள் குழந்தையைத் தொடவும் லாயக்கற்றவன். எங்கள் வயிறு எரிகிறது. ஒரு குழந்தைக்காக நீ ஏங்கித் தவிக்க வேண்டும். இந்த ஜன்மம் இல்லை, இன்னும் ஏழேழு ஜன்மமும்...''

அவர் பேசி முடிப்பதற்குள் அருணாசலம் குறுக்கிட்டான்.

''ஸார், நிறுத்திக் கொள்ளுங்கள். சாபம் இடுவது பெரியவர்களுக்கு அழகல்ல. அநாவசியமாக உங்கள் மதிப்பைத் தாழ்த்திக் கொள்ளாதீர்கள்'' என்று கூறிவிட்டு அவன் வெளியேறி விட்டான். மறுபடியும் அவர்கள் வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை.

அன்றிலிருந்து அருணாசலம் ஒரு மௌனியாகி விட்டான். வேலை செய்த நேரம் போகத் தன் அறையில் அடைபட்டுக் கிடந்தான்.

ஊரிலிருந்து திரும்பி வந்ததும் தன் அண்ணனைக் கூப்பிட்டு நடந்ததைச் சொன்னான். ''ஜகம், உலகத்தில் உன்னைப்போல் எல்லோரும் இருப்பார்கள் என்று நினைக்காதே. எல்லோருமே மாணிக்கம் ஆகிவிட்டால்

வெறும் கற்கள் எங்கே செல்வது? உன் போன்றவர்களின் உயர்வை எடுத்துக் காட்டவே சில அதமர்கள் பிறந்து இருக்கிறார்கள்'' என்றான்.

அதற்குப் பிறகு அவன் வாயினின்று சகஜமான பேச்சு ஒன்றும் வெளிவரவில்லை. 'வேண்டும்', 'வேண்டாம்', 'ஆமாம்', 'சரி', 'உம்' என்ற சொற்கள் தவிர அவன் தமிழ்ப் பாஷையையே மறந்து விட்டானோ என்றுகூடத் தோன்றிற்று.

மாடியில் அவன் தன் பழங் கதைகளையெல்லாம் புரட்டிக் கொண்டு அவஸ்தைப் பட்டான். கீழே கலா தன் அத்தையைத் தொடர்ந்து கொண்டே சென்று கேள்விகள் கேட்டாள்.

''அத்தை, சின்ன அத்தை சமாசாரம் என்ன? அவள் எங்கே? ஏன் இந்த மர்மம்? அம்மாவுக்கு முன்பே தெரியுமா? எனக்கு மாத்திரம் எப்படித் தெரியாமல் இருந்தது? அவள் குழந்தை எங்கே? ஏன் இன்னும் வரவில்லை? அதற்கு ஒன்றரை வயதாகி இருக்காதா இப்பொழுது? உயிருடன் இருக்கிறதோ? அருணாசல மாமாவுக்கு என்ன உடம்பு? ஏன் பழையபடி என்னுடன் பேசவில்லை?''

கலா கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் விசாலாக்ஷி நிதானமாகப் பதில் கூறினாள்.

''அப்படியா, அத்தை? ஐயோ பாவம், பாவம்!'' என்று கண்களில் நீர்துளும்பப் பரிதவித்தாள் கலா.

''அதெல்லாம் உனக்கு எதற்குக் கலா? உனக்குத் தெரிந்ததாகவே காண்பித்துக் கொள்ளவேண்டாம், தெரிகிறதா?'' என்று எச்சரித்துவிட்டு எழுந்து போய்விட்டாள் விசாலாக்ஷி.

2. மீனா ''மின்னி''யான கதை

அத்தையின் ஆட்சியில் அநேக விஷயங்கள் தெரிந்தது போல் காட்டிக் கொள்ளப்படாமலும், தெரியாமல் மறைத்தும் செய்யப்பட்டு வந்தன என்று சீக்கிரமே அறிந்து கொண்டு விட்டாள் கலா. அவளுடைய பெற்றோர்களாவது நடுக் கூடத்தில் இருந்துகொண்டு பொதுவாகப் பேசி விட்டுக் காலத்தைக் கழித்தனர். ஜானகியம்மாளுடனும், ராமநாதையருடனும் பேசினார்கள். ஜகந்நாதனுடனும், விசாலாக்ஷியுடனும் கலந்து கொண்டனர். அருணாசலத்தைப் பற்றி உள்ளூற வருத்தப்பட்டனர். ஆனால் தன் அத்தையின் கால்களையே சுற்றி வந்த கலா அநேக விஷயங்களைக் கிரகித்துக் கொண்டாள். தெருவில், குளத்தில் கண்ட வறட்சி குடும்பத்திலும் காணப்பட்டதை அறிந்தாள். மழையில்லாத குறையினால் நிலத்தில் பயிர் சுபிட்சமாக இல்லை. விலைவாசிகள் ஏறிவிட்டன. கஷ்டங்கள் தலைவிரித்து ஆடின.

கௌரவமாக, வயிறார உண்டு குடித்தனம் நடத்தவதே பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது. பானை பானையாய் அடுக்கிக் கிடந்த உக்கிராண அறை, இப்பொழுது பெருக்கி மெழுகிச் சின்ன டப்பாக்களுடன் விசாலமாக விளங்கியது. அதன் உள் அர்த்தம் கலாவுக்குப் புரியாமல் இல்லை.

'அத்தையின் சாமர்த்தியத்தை மெச்சுவதா? அத்திம்பேரின் ஒத்துழைப்பைப் புகழுவதா? இவர்களைப் போலத் தாம்பத்திய வாழ்க்கை அடையப் புண்ணியம் செய்திருக்க வேண்டும்! எப்படித்தான் சமாளிக்கிறார்களோ? நாம் மூன்று பேரே இருந்தும், அப்பாவுக்கு நல்ல சம்பாத்தியம் இருந்தும், ஒரு விதமாகத் தட்டுமுட்டு இல்லலாமல் அம்மாவால் செய்ய முடியவில்லையே? அம்மாவிடம்

இதைப் பற்றிச் சொல்வோமா? அத்தைக்குத் தப்பாகி விடுமோ?

'இவ்வளவு பாடுபடுவதற்கு அத்தை தக்க பிரதிபலனை அடைகிறாளா? அதுதான் இல்லை. அருணாசல மாமாவுக்கு வேலை வெட்டி இல்லை. அவரைப் பராமரிக்க வேண்டி இருக்கிறது என்பதோடு இல்லாமல், அவருடைய ஆராய்ச்சிக்கு அதிகப் பணமும் செலவாகிறது. முரளியின் கேளிக்கைகளுக்கு அளவே இல்லை. பிறர் கஷ்டம் தெரியாத ஒரு பிரகிருதி அவன். இவ்வளவிற்கும் எப்படித்தான் ஜானகி மாமிக்கு இது விஷயங்கள் தெரியாமல் இருக்கின்றனவோ? தன் பாட்டுக்கு, 'அடீ விசாலம், அடுப்பை மூட்டிப் பாணலியில் எண்ணெய் வை. பட்சணம் செய்யலாம்!'' என்று சொல்லிக் கொண்டு இருக்கிறாள்!'

சாதம் பரிமாறும்போது, சிலருக்கு நல்ல வாசனை நெய்யும், சிலருக்கு வாங்கின மட்ட நெய்யும், மற்றும் சிலருக்கு அதுவும் இல்லாமல் எண்ணெயும் சேருவதைக் கலா கவனித்து இருந்தாள். முக்கியமாக அத்திம்பேர் எண்ணெயைத் தவிர வேறு ஒன்றையும் கண்ணெடுத்தே பார்ப்பதில்லை. சாதாரணமாகப் பார்ப்பவர்கள் எதையும் கண்டுபிடிக்க முடியாது.

பற்பல விதமான எண்ணக் குவியல்கள் வந்து கலாவைத் தாக்கின. குழந்தைகள் நடராஜனும், பிரபாவும் காலத்தை உணர்ந்தவர்கள்போல் உள்ளே சென்று மெதுவாகக் கேட்டு, அங்கேயே தின்று விட்டுத் திரும்பினர். அத்தையின் பயிற்சியின் பலனோ என்று வியந்தாள் கலா. அவளுக்கு மிகவும் ஆச்சரியத்தை அளித்தது வேறு ஒரு விஷயம். அத்தை மனிதப் பிறவிதான் என்று சில சமயம் தெரிய வந்தது. கலா இதைக் கவனிக்காதவள்போல் கவனித்து இருந்தாள்.

விசாலாக்ஷி ஒருநாள் தன் கணவரிடம் சென்றாள். ''இதென்ன முடிவில்லாத கஷ்டமாகிவிட்டது? உங்கள் தம்பிக்கு நீங்கள்தாம் சொல்லுங்களேன். அவரும் இப்படி வாளாக இருந்துகொண்டு, இந்த முரளீதரனும் ஒரு வேலையிலும் நிலைக்காமல் திரிந்து கொண்டும் இருந்தால் என்ன செய்வது? அம்மா பாட்டில் வகை தெரியாமல் பேரம் பண்ணி வைத்து விடுகிறார். இப்பொழுது பட்டுப் புடவைக்குப் பணம் யார் கொடுப்பது? நாம்தானா இந்த மொத்தக் குடித்தனத்திற்கும் பொறுப்பாளி? உங்கள் கலெக்டர் தம்பிதான் ஏதாவது உதவி செய்யக்கூடாதா?''

''விசாலி, உனக்கு உடம்பு தள்ளவில்லையோ? சற்றுத் தூங்கி விட்டு வாயேன். என் காதுகளில் கேட்பது என் விசாலியின் பேச்சாக இல்லையே. நீ தானே எனக்குச் சொல்வாய்? 'பெரிய பிள்ளையும், நாட்டுப் பெண்ணுந்தான் பெற்றோர்களின் பிரதி நிதிகள். அப்பா, அம்மா ராஜ்யம் முடிந்துவிட்டது. அவர்களுக்கு இப்பொழுது ஓய்வு காலம். இப்பொழுது நம் முறை. நம் தம்பிகள் பிற்காலத்தில் நமக்குச் செய்வார்கள்' என்றெல்லாம்? உனக்கு இப்பொழுது மிகவும் அசதியாக இருக்கிறது என்றுதான் நான் நினைக்க வேண்டியிருக்கிறது. அம்மாவுக்கு நம் கஷ்டம் தெரிவானேன்? இருக்கவே இருக்கிறது, முடியாவிட்டால் தானே தெரிந்து போகிறது. நடக்கிற மட்டும் நடக்கட்டுமே? அப்புறம், விசாலாக்ஷிக்கும் பிறருக்கும் வித்தியாசம் வேண்டாமா?'' என்றார் ஜகந்நாதன்.

இம்மொழிகளை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த கலாவின் கண்களில் நீர் துளித்தது. 'எத்தகைய வாத்சல்யம்! என்ன பெருமிதம்! அத்திம்பேரைப் போன்ற கணவர் கிடைக்கப் புண்ணியம் செய்து இருக்க வேண்டும். என்னதான் சிரித்து விளையாடி, கொஞ்சிக் குலாவிக் குடித்தனம்

செய்தாலும், அத்தையைப் போல் அநேக இடைஞ்சல்கள் நடுவே, பலவித இன்னல்களைச் சகித்துக் கொண்டு வாழ்க்கை நடத்துவதுதான் ரசம் மிகுந்தது. நமக்கும் நம் நோக்கங்களைப் புரிந்து கொண்டு, மனமொத்து நம்முடன் வாழ்க்கைப் போரில் ஈடுபடும் கணவன் கிடைப்பானா?'

அவள் சிந்தனைகளைக் கலைத்துக் கொண்டு முரளியின் குரல் ஒலித்தது.

சிறு பிராயத்தில் விளையாடும்போதெல்லாம் முரளி அவளை மிரட்டுவான் - ''உன்னை எனக்குத்தான் கமலா மாமி கொடுக்கப் போகிறாள்! தெரியுமோ இல்லையோ? நான் சொன்னபடிதான் நீ கேட்க வேண்டும்'' என்பான்.

''போடா, ஒருகாலும் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளமாட்டேன். நீ கோழிக்கனா கண்டு கொண்டிரு'' என்பாள் அவள்.

'இப்பொது எதற்கு அந்த ஞாபகம் வருகிறது?' என்று தன்னையேகண்டித்துக் கொண்டாள் கலாவதி.

அவள் இவ்வாறு ஏதேதோ பைத்தியக்காரத்தனமாக யோசித்துக் கொண்டு இருந்ததில் அப்பொழுது முரளி கூறினது அவள் காதில் சரியாக விழவில்லை: ''நான் சொல்வதே உன் காதில் விழவில்லையா? நீ என்னம்மா, பி. ஏ. கிளாஸ் சேர்ந்து விடுவாய். நான் சொல்வது உன் காதில் விழுமா?... அது இருக்கட்டும் கலா, நீ என்னுடன் பேசமாட்டேன் என்கிறாய்? வருகிறாயா 'காரம்' ஒரு கேம் ஆடலாம். நீ ஒரு 'கப்' கூட வாங்கியிருக்கயாமே?''

''நான் வரவில்லை..... நீங்.....-நீ..... அப்புறம் விளையாடலாமே'' என்று தடுமாறினாள் கலா.

''மன்னி, மன்னி, இந்த வேடிக்கையைக் கேளேன். கலாவதி தேவிக்கு என்னை எப்படிக் கூப்பிடுவது என்று கூடத்

தெரியவில்லை. என் உயரத்திற்கு ஏற்ற மரியாதை செய்ய வேண்டாமா? நான் இப்பொழுது 'நீங்கள்' ஆகப் போகிறேன். அடுத்த ஓர் அடி உயரும்போது 'தாங்கள்' ஆக மாறிவிடுவேன்.''

கலாதன் குழப்பத்தை அடக்க மாட்டாமல் தவித்தாள். ''சரி, விளையாடுவோம்'' என்று அவள் முன் வந்தாள். முரளீதரனும் குதூகலமாக விளையாட வந்தான்.

கலாவிடம் ஏற்பட்ட மாறுதல்களுக்கு அவனுக்குக் காரணம் புரியவில்லை. இதுவ:ரை எப்பொழுது வந்தாலும், சதா தன்னுடன் விளையாடிக்கொண்டும், சண்டை பிடித்துக் கொண்டும் இருந்த கலாவிற்குத் திடீர் என்று என்ன வந்துவிட்டது? 'வாடா', 'போடா' என்று வலுவில் கூப் பிட்டவள் இப்பொழுது தன்னால் இயன்றவரை ஒன்று மில்லாமல் மொட்டையாகப் பேசினாள். இல்லாவிட்டால், 'அப்பா' ஒன்று சேர்த்துக் கொண்டாள். பல கேட்டால், ஒரு பதில் சொன்னாள். அடிக்கடி எங்கோ போய் மறைந்து கொண்டாள். முன்போல் தாராளமாகத் தன்னுடன் பழகமாட்டேன் என்றாள்.

அதற்குக் காரணம் கலாவுக்கே தெரியவில்லை. தன்னால் இயன்றவரை சங்கோஜத்தை அகற்றிவிட்டு, முன்போல் அவனிடம் பழக எத்தனித்தாள். முன்னெல்லாம் தான் 'வெடுக், 'வெடுக்'கென்று பேசியதை நினைத்தால்கூட இப்பொழுது அவளுக்கு மிகவும் நாணமாக இருந்தது. எவ்வளவு முயன்றாலும் அவளுக்கு முரளியோடு முன்போல் வேடிக்கையாகப் பேசத் தைரியம் வரவில்லை.

முரளீதரன் உருவத்தில் ஆஜானுபாகுவாக வளர்ந்து இருந்தானே தவிர, உள்ளத்தில் குழந்தையாகவே இருந்தான். அதே பொறுப்பற்றத்தனம், அதே குறும்புத்தனம், உதாசீனம், விளையாட்டுப் புத்தி அவனிடம் இன்றும் இருந்தன.

''கலா, நான் முன்னே சொன்னேன் பார். நீ அப்பொழுது நாம் பெரியவர்கள் விஷயத்தில் தலையிடக்கூடாது என்றாய். நான் விடாமல் தலையிட்டேன். இப்பொழுது பார், நான் சொன்னபடியே தான் நடந்து இருக்கிறது. இப்பொழுது நீ பாலுவின் மனைவி மீனுவைப் பார்க்கவேண்டுமே! அவள் இப்பொழுது 'மின்னி கோபால்'. இதோ பார் அவள் படம்'' என்று பத்திரிகையிலிருந்து வெட்டி எடுத்த ஒரு துண்டை நீட்டினான் முரளி. கலா படித்தாள். ''ஸ்ரீமதி மின்னி கோபால், சித்தூர் கலெக்டரின் மனைவி; இன்று அகில இந்திய மாதர் சங்கத்துக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, 'பெண்களின் கடமை'யைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். ஆழ்ந்த உலக ஞானமும், உயரிய படிப்பும் பெற்ற மெத்த பண்பாளி இவர் என்பதை அவருடைய மணிமொழிகள் புலப்படுத்திவிட்டன. நம் நாடு முன்னேறுவதற்கு இத்தகைய பெண்ணரசிகள் இன்னும் தேவை.''

இன்னும் எவ்வளவோ எழுதி இருந்தது. கவர்னர் சீமாட்டியை வரவேற்று, தேநீர் விருந்து அளித்ததைப் பற்றியும், அவளுடைய சாதுரியமான பேச்சைப் பற்றியும் புகழுரைகள் நிறைய இருந்தன. தேநீர்க் கூட்டத்தில் நடமாடும்போது எடுத்த புகைப்படங்கள் வேறு இருந்தன.

கலாவினால் கூடப் பேசாமல் இருக்க முடியவில்லை. ''அட, தேவலையே! கறுத்து, பருத்த, இடித்த புளிபோல் இருந்த மக்கு மீனாக்ஷியா இது?''

''அதுதானம்மா, சந்தர்ப்பங்கள் இடம் கொடுத்தால் மீனு, 'மின்னி' ஆகலாம், கலா, களிமண் ஆகலாம்'' என்றான் முரளி.

கலாவின் முகம் சிவந்துவிட்டது. தலை குனிந்து கொண்டாள். தாராளமாகப் பேச முன்வந்த நாக்கும் மீண்டும்

உள்ளே சென்று விட்டது. அவள் வாயைக் கிளறவேண்டும் என்றே முரளீதரன் அவ்வாறு பேசினான். ஆனால் அவள் பதில் பேசாததைப் பார்த்து விட்டு ஏதாவது பொதுவாகவாவது பேசினால் போதும் என்று மீனாக்ஷியைப் பற்றிப் பேசத் தொடங்கினான்.

''இந்தப் பரிணாமத்தின் கதையைக் கேள். பாலு தன் சுயநலத்தை நிலைநாட்டிவிட்டு, இஷ்டப்படி மாமனாரிட மிருந்து பணம் கறக்க மீனாக்ஷியை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு இருந்தான். ஆனால் அப்பொழுது அவளுக்குத் தெரியவில்லை. நான் வேடிக்கையாக அதைப்பற்றிக் கூறினாலும் கணவனைத் தாங்கிப் பேசினாள். அவனைத் தெய்வம் என்று தொழுதாள். அந்தத் தெய்வத்திற்கு 'தான்' தவிர இதர விஷயங்கள் கண்ணுக்கே புலப்படாவென்று அவள் சற்று நிதானமாக அறிந்துகொண்டாள். உணர்ந்த மாத்திரத்தில் ஆத்திரம் கொண்டாள். ஆனால் அந்த நெருப்பை அணைக்கும் கைங்கரியத்தைப் பெரிய மன்னி ஏற்றுக்கொண்டு விட்டாளாம். மன்னியின் சொற்களைக் கேட்டுக்கொண்டு அவள் ஓர் ஆங்கில உபாத்தியாயர், ஒரு ஹிந்தி முன்ஷி, தையல் வகையறா, மற்றும் டீ கொடுப்பது, குடிப்பது, வீட்டை நவீன முறையில் அலங்காரம் செய்வது முதலியன சொல்லித் தருவதற்கு ஓர் ஆங்கிலோ - இந்தியக் கிழவி - இவ்வளவு பேரையும் நியமித்துக் கொண்டாளாம். யோகாசனங்கள் பயின்றாளாம். கொஞ்ச நாட்கள் மூச்சு விடாமல் மராமத்து இலாகா தீவிரமாக வேலை செய்ததாம். ஒட்டடை அடித்து, வெள்ளை பூசி, பழைய காரையைப் பெயர்த்து எடுத்துப் புதிய காரை போட்டு...''

''வீடு கட்டினார்களா?'' என்று கலா தெரியாதவள் போல் கேட்டாள். முரளி சிரித்தான்.

''ஊஹூம். இன்னும் பழைய கலா அடியோடு மறைந்து விடவில்லையே. பேகம், ஸலாம்!'' என்றான். பிறகு விட்ட இடத்தில் மீண்டும் ஆரம்பித்தான். ''என்ன சொல்லிக் கொண்டு இருந்தேன்? ஆமாம், இந்தக் கடிபிடியெல்லாம் ஓய்ந்த சமயம் நான் அங்கே போனேன். ஒருநாள்... அந்த வேடிக்கை இன்னும் மறக்கவில்லை.'' முரளீதரன் இன்றுபோல் சிரிக்க ஆரம்பித்தான்.

''சீக்கிரம் சொன்னால்தானே? நாளைக்கு மீனு, அதாவது மின்னி இங்கு வரப்போகிறாளாமே?''

''ஆமாம், அதற்குத்தான் நான் இப்பொழுது உனக்கு முன்னடியாகச் சொல்கிறேன். நாளைக்கு அவளைப் பாரேன், எப்படி மாறிவிட்டிருக்கிறாள் என்று?''

''ஒருநாள் என்னவோ வேடிக்கை என்றாயே...''

''அதுவா, அது ஒன்றும் இல்லை. இந்தப் பெண்களுக்கே வம்பு அதிகம். அவளைப் பற்றிப் புகார் சொன்னால் அதைக் கேட்க உனக்கு என்ன அவ்வளவு உற்சாகம்?''

கலா எழுந்து போக எத்தனித்தாள். முரளி அவளை நிறுத்தினான்.

''உட்கார். நான் சும்மா தமாஷுக்குச் சொன்னேன். கோபமா கலா?''

''கோபமா? எதற்கு? நாழிகையாகி விட்டது. அத்தை தனியாக வேலை செய்கிறாள்.''

''இதைக் கேட்டு விட்டுத்தான் போயேன். ஒரு நாள் நான் கீழே ஹாலில் உட்கார்ந்து கொண்டு பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தேன். வாசிப்பது ஏது, வெறுமனே அதன் மறைவில் ஒளிந்து கொண்டிருந்தேன். பாலு, படியில் குதித்துக்

கொண்டு இறங்கிக் கீழே வந்தான். வாசலில் கார் நின்றது. நேரே அதை நோக்கி நடந்தான். நான் உட்கார்ந்து இருந்ததற்கு எதிர்ப்புறத்தில் ஒரு கதவு திறந்தது. கையில் ரிஸ்ட் வாட்சை முடுக்கியபடியே மீனு வெளியே வந்தாள்.

‘‘ ‘இருங்கள். சத்தியநாதன் வீட்டு ‘டூ’க்குத்தானே போகிறீர்கள். நானும் அங்கேதான் புறப்பட்டுக் கொண்டு இருக்கிறேன்’ என்றாள்.

‘‘பாலுவின் முகத்தைப் பார்க்க வேண்டுமே? இத்தனை நாட்களாக மீனு என்ன தான் செய்து கொண்டிருந்தாள் என்பதை அவன் ஒருநாளும் கவனித்ததில்லை. அவள் என்றும் இல்லாத வழக்கமாகத் தன்னுடன் தேநீர்க் கச்சேரிக்கு வருகிறேன் என்று கூறியது அவனுக்கு ஆச்சரியத்தை அளிக்காமல் என்ன செய்யும்? அப்பொழுதே ‘ஹார்ட் பெல்யூர்’ ஆகிக் கீழே விழுந்து விடவில்லையே என் அண்ணன் என்று எனக்கு இன்றும் ஆச்சரியமாக இருக்கிறது. அவ்வளவு கோரமாக இருந்தது அவன் முகம்.

‘உனக்கு அவாளைத் தெரியாதே?’ என்றான் மெதுவாகப் பாலு, சுண்டெலிக் குரலில்.

‘‘ ‘ஏன் தெரியாமல்? நேற்றுக்கூட அவளுக்கு நான் தானே ‘கேக்’ வாங்கிக் கொடுத்தேன். நம் வீட்டிலிருந்து ஐந்து டேபிள் கிளாத் வேறே கொடுத்து அனுப்பினேன். அதைப்பற்றி உங்களுக்கென்ன? நான் வருகிறேன்’ என்று சுருக்கமாகக் கூறிவிட்டு அக்களில் ஒரு பெரிய தோல் பையை அடக்கிக் கொண்டு தன் அறையின் கதவைச் சாத்திப் பூட்டிக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள் மன்னி. பாலு, வாயைப் பத்துப் பதினைந்து தடவை திறந்தான். மறுபடியும் மூடிக் கொண்டான். பார்க்கும்போது, மீனு அவனை அழைத்துச் சென்றாளா, அவன் மீனுவை அழைத்துச் சென்றானா என்றே சந்தேகமாகி விட்டது.’’

கலாவும் அவனுடன் சேர்ந்து சிரித்தாள். அத்துடன் கலாவிற்கு, மனிதர்கள் அவ்வளவு எளிதில் அடியோடு மாறிவிட முடியுமா என்ற சந்தேகம் தோன்றிக் கொண்டேதான் இருந்தது. அதை வாய் விட்டும் கூறினாள் அவள்.

''என்ன இருந்தாலும் பாலு மாமா கடைசல் பிடித்தாற் போல் இருப்பதற்கு, பக்கத்தில் உறைபோல் சரீரத்துடன்...''

''இவ்வளவுதானா நீ கவனித்தது? அவள் யோகாசனங் கள் செய்து உடம்பு எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? அவள் கறுப்புச் சருமம்கூட ஆரோக்கியமாக இருப்பதனால் பளபளவென்று மின்னுகிறது.''

''இருந்தாலும்...'' என்று கலாவின் உள்ளம் பல்லவி பாடியது. அவளால் நம்பவே முடியவில்லை. இன்னும் இருபத்து நான்கு மணி நேரந்தானே? நேரே பார்த்துவிட்டால் போகிறது!

''நான்தான் சொன்னேனே - முரளியிடம் அவளுக்கு என்ன சங்கோஜம்? சாதாரணமாக விளையாடிக் கொண்டுதான் இருக்கிறாள்'' என்று கமலா கூறியது இருவர் காதிலும் விழுந்தது. முரளீதரன் கலாவைப் பார்த்தான். கலா தலை குனிந்தாள்.

''கலா, என்னிடமா வெட்கம்?'' என்றான் முரளி. அவன் குரலின் குழைவு அவளைச் சங்கடத்தில் ஆழ்த்தியது.

3. விசாலத்தின் விசாரம்

அடுத்த நாள் காலையும் வந்துவிட்டது. மற்றவர்கள் சகஜமாக இருந்தாலும் கலாவுக்கு மட்டும் துடிப்பு நிலைகொள்ளவில்லை. முரளி கூறினதெல்லாம் நிஜந்தானா? தன்னைக் கேலி செய்து வேடிக்கை பார்க்கவேண்டும் என்று

சூழ்ச்சி செய்து இருக்கிறானா? இருக்காது. பத்திரிகையில் படித்தது பொய்யாகுமா?

டாக்ஸி வந்தது. இவர்கள் வீட்டில் மெதுவாக நின்றது. பாலு இறங்கினான்; மீனு இறங்கவில்லை. கார் மேலே சென்று மூன்றாவது வீட்டு வாசலில் போய் நின்றது.

ஜானகியம்மாளுக்கு இதைக் கண்டவுடன் மிகவும் வருத்தமாகிவிட்டது. பாலகோபாலன்னக்கூட வரவேற்க மனமில்லாதவள் போல் உள்ளே போய்விட்டாள்.

''சாண் பெண்ணுக்கு ஆணவத்தைப் பார். அற்பத்திற்குப் பவிஷு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிக்குமாம். முகத்தில் அடித்தாற்போல், மாமனாரும் மைத்துனனும் நிற்பதைக் கூடப் பார்க்காமல் நேரே போகிறாளே? அக்கிரகாரத்தில் எல்லோரும் வேடிக்கை பார்க்கிறார்கள். பத்துப் பேர் பார்த்துச் சிரிக்க என் குடித்தனம் இப்படி வாசலுக்கு வரவேண்டும் என்று நான் என்ன பாவம் செய்தேனோ?'' என்று சற்று உரக்கவே கூறிக்கொண்டு அவள் பின்புறம் சென்றுவிட்டாள்.

கலாவிற்கும் ஏமாற்றந்தான். மீனுவைப் பார்க்க இன்னும் வெகு நேரம் ஆகுமோ என்று யோசித்தவாறே அவளும் உள்ளே சென்றாள்.

''வாருங்கள். மீனாக்ஷி அந்த வீட்டிற்குப் போயிருக்கிறாளா? கை கால் அலம்பிக்கொள்ள தண்ணி கொடு, முரளி. அண்ணா காபி பலகாரம் சாப்பிடட்டும்'' என்று விசாலாக்ஷி மைத்துனனை உபசரித்தாள்.

பெரிய மடிசஞ்சி போல், சுத்தப் பட்டிக்காட்டைப் போல், 'கை அலம்பிக்கொள், வாய் கொப்புளித்துக் கொள்' என்று விசாலாக்ஷி கூறினது பாலகோபாலனுக்கு எவ்வளவு தான் அருவருப்பு அளித்தது என்று விவரிக்க முடியாது.

''இந்தச் சனியனுக்குத்தான் இந்த இடத்திற்கு எல்லாம் வரவே பிடிக்கமாட்டேன் என்கிறது'' என்று முணுமுணுத்தவாறே அவன் முரளி கொடுத்த செம்பு நீரை வாங்கிக் கொண்டு முற்றத்துப் பக்கம் சென்றான்.

''என்ன மன்னி, அவன் எச்சில் கையையே அலம்பும் வழக்கம் கிடையாது. ஸ்பூனால் சாப்பிட்டுவிட்டுக் கையைத் துணியில் துடைத்துக் கொண்டு விடுவான். நீ சுத்தக் கர்நாடகம் போல் அவனைத் துன்புறுத்துகிறாய்'' என்று முரளி கேலி செய்தான்.

முரளி சொல்லித்தான் விசாலாக்ஷிக்குத் தெரிய வேண்டும் என்பதில்லை. அவளுக்குத் தெரிந்தாலும், இந்த வீட்டில், பெரியவர்கள் முன்னிலையில் இப்படித்தான் செய்யவேண்டும் என்ற நிபந்தனையை அவள் அவ்விதமாக நாசூக்காகவே கூறி, வற்புறுத்தினாள். இல்லாளின் செங்கோலின் நுனியால் ஒரு தட்டு.

★ ★ ★

''மீனு, உனக்கு வெல்ல அதிரசம் பிடிக்குமே என்று இன்று பண்ணினேன். வாயேன், வெண்ணெயைத் தொட்டுக் கொண்டு இரண்டு எடுத்துக்கொள்'' என்று விசாலாக்ஷி பரிவுடன் தன் ஓரகத்தியை அழைத்தாள்.

''நானும் வந்ததிலிருந்து உங்களிடம் இரண்டு மூன்று விஷயங்கள் சொல்ல வேண்டும் என்று இருந்தேன்.....

''முதலில் என்னை 'மீனு', 'கீனு' என்று கூப்பிடாதீர்கள் என்று பத்தாயிரம் தரம் சொல்லியாகிவிட்டது. 'மின்னி' என்று அழையுங்கள். எப்படித்தான் உங்களுக்குச் சொல்வதென்றே தெரியவில்லை.''

இடது பக்கத்தில் இருந்த மேலாடையைக் கொஞ்சங் கூட அநாவசியமாக முதுகைப் போர்த்தாமல், இடது புறமாகவே தோளுக்குக் கீழ் கொண்டு வந்து கையில் பிடித்துக் கொண்டிருந்தாள் மீனாக்ஷி. அதன் நுனியில் ஏதோ பட்டுவிட்டதுபோல் விரலால் சுண்டிவிட்டு, முகத்தை நாசூக்காக வலித்துக்கொண்டு, அங்கு இருந்த மணையின் மேல் கைக்குட்டையை விரித்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

''தினமும் இதே தானா? வெல்லச் சீடை, வெல்ல அதிரசம், அரிசி உப்புமா. உங்களுக்கு ஏன் வேறு ஏதாவது 'டீஸன்டாக' ஒன்றும் தோன்றக் கூடாது?'' என்று கேட்டாள் 'மின்னி'.

விசாலாக்ஷி வாயடைத்து நின்றுவிட்டாள். மூன்றாவது வீட்டு வைத்தியநாதையரின் அசட்டுப் பெண்ணின் இடத்தில் பால கோபாலனின் மனைவி மீனா தோன்றினபோது கூட அவ்வளவு ஆச்சரியப்படவில்லை அவள். இப்பொழுது தன் எதிரே வீற்றிருக்கும் 'மின்னி கோபா'வின் தரிசனம்தான் அவளுக்குத் தாங்க முடியாத வியப்பாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்திற்குச் சற்றும் பொருந்தாவிட்டாலும், விசாலாக்ஷிக்குத் 'தன் வினை தன்னைச் சுடும்' என்ற பட்டினத்தார் வாக்கு ஞாபகம் வந்தது. அழுது மனம் முறிந்து போனவளை அழைத்து ஆசுவாசப் படுத்தி, வழி சொல்லிக் கொடுத்ததற்குப் பலன், தானே பரீட்சைப் பாத்திரமாக மாறிவிட்டதுதானா? 'படியேன், உன் அகமுடையானுக்குச் சரிநிகராக நாகரிகமாகப் பழகக் கற்றுக்கொள்ளேன்' என்று உபதேசம் செய்தது தானல்லவோ? இப்பொழுது அவள் கணவனையும் மிஞ்சி விட்டு, பெரியவர் சின்னவர்கள் பார்க்காமல் எல்லோர் எதிரிலும் பட், பட்டென்று வெட்டுவதைப் போல் பேசுவதைப் பார்த்து அசூயைப் படலாமா?

விசாலாக்ஷி இந்தத் தடவை ஒரு பக்ஷ காலமாக மீனாக்ஷியைக் கவனித்து வந்ததில் அவளுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. மீனாக்ஷியாக இருந்த காலத்தில் அவள் அசடாக இருந்தாலும், குரூபமாக இருந்த போதிலும் தங்கமான குணத்தையுடையவளாக இருந்தாள். உள்ளம் உருகி, உணர்ச்சிகளை உணரும் தன்மை படைத்து இருந்தாள். இப்பொழுதோ வெளி மெருகு பிரகாசமாக இருந்ததே தவிர, நளினம் இருதயத்தை விட்டு வெளியே அங்க அவயவங்களுக்கு வந்து விட்டதே தவிர, உள்ளே அந்தராத்துமா இறந்து விட்டது; உள்ளம் உறைந்து கல்லாகி விட்டிருந்தது. கணவனும் மனைவியும் அலங்காரம் செய்யத் தகுந்த சிலைகளாக இருந்தனர். ஒருவரை ஒருவர் தூக்கி எறிந்து பேசும் இயந்திரங்களாயினர். பண விஷயத்தில் கருமிகளா யினர் - அதாவது பிறருக்குக் கொடுக்கும் விஷயத்தில். தங்கள் ஆடம்பரத்திற்கு வீணாகச் செலவிடுவது மிகவும் சகஜமாகவே கருதப்பட்டது. அதில் ஒன்றிலேதான் இருவருக் கும் ஒத்துழைப்பு இருந்தது. மற்றப்படி அன்பு எனும் பிணைப்போ, மன ஒற்றுமையின் பசையோ அவர்களுக்கு இல்லை. அருகே நின்றாலும் வற்றின மரங்கள்போல் தனித்து நின்றனர். இருவர் உள்ளங்களுக்கும் இடையே கணக்கிட முடியாத தூரம் இருந்தது. நாகரிகமாக இருவரும் கண்ணாடி அணிந்து இருந்தாலும் அன்புப் பெருக்கு இல்லாததால் அவர்கள் அகக் கண்கள் திரை மூடிக் கிடந்தன.

இதைக் கவனித்த விசாலாக்ஷி துக்கம் தாங்கமாட்டாமல் மனத்திற்குள்ளேயே கண்ணீர் வடித்தாள். பகவானைப் பிரார்த்தித்தபடி இருந்தாள்.

'சுவாமி, ரசம் நிரம்பிய வாழ்க்கையில் ஓர் அணுக்கூட அவளால் ரசிக்க முடியவில்லையே? நீடித்து நிற்கும் அம்சங்களான அன்பு, பாசம், முயற்சி என்பவைகளை அவளுக்குப் புரியாதவைகளாகவே விட்டுவிடாதே.

துக்கத்தின் சாயையிலும், வறுமையின் இழுப்பிலும், சந்தோஷத்தின் உச்சத்திலும், திருப்தியின் நிறைவிலும் இருக்கும் ருசி, உற்சாகம் கண்டோருக்கல்லவோ தெரியும்? பிரேமையில்லாத வாழ்வு பாலைவனமல்லவோ? அத்தகைய வறட்சிக்கு அவர்களை இலக்காக்காதே. அவர்கள் ஒன்றும் தெரியாத குழந்தைகள்' என்று அவள் சதா பிரார்த்தனை செய்துகொண்டே இருந்தாள். அவர்களது செல்வத்தில் திளைக்கும் வாழ்வு அவளுக்குச் சூன்யகரமாகவே தோன்றிற்று. அது ரசமற்றது, வறட்சியானது, பயங்கரமானது என்றே அவள் நினைத்தாள். அவர்களிடம் பச்சாதாபப் பட்டாள்.

மீனாக்ஷிக்கு இப்பொழுது நாக்கு மிகவும் நீண்டுவிட்டது. அதன் கூர்மையைக்கொண்டு தாய், தகப்பன், புக்ககத்து மனிதர், வேலையாட்கள், சிறியவர், பெரியவர் யாவரையும் சுரீர் சுரீர் என்று விளாசினாள். அவர்கள் உள்ளத்தில் பட்ட ரத்தக் காயத்தை அவள் பொருட்படுத்த வில்லை. அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்ற எண்ணமே அவள் மனத்தில் எழவில்லை.

ஜானகியம்மாளுக்குத் தன் நாட்டுப் பெண்ணின் வெளித் தோற்றத்தில் ஏற்பட்ட மாறுதலே தெரிந்தது. அதில் அவள் அளவிலா மகிழ்ச்சி கொண்டாள். அவளிடம் சகல விஷயங் களையும், எல்லா ரகசியங்களையும் சொல்லி, அவள் அபிப் பிராயத்தைக் கோரினாள். மனத்தை ஆற்றிக் கொண்டாள்.

''அபிதாவின் கதி இப்படியாகுமா? குழந்தையைப் பார்க்கக் கூடக் கொடுத்து வைக்கவில்லை, நான். அருணாசலத்துக்கு வேலையில்லை.''

''வேலை வெட்டி இல்லாமல் அவர் இங்கு பளுவாக இருக்கும்போது பொண்டாட்டியும் பிள்ளையும் வேறு இல்லாவிட்டால் என்ன குறைந்துவிட்டது? காப்பாற்ற

வகையில்லாதவர்கள் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமலே இருப்பதுதான் நலம். கொடுத்து வைப்பது என்ன இதில்? அந்தக் குழந்தையை வேறு இங்கு கொண்டு சுமத்த வேண்டுமா?''

மீனாக்ஷியின் பதிலைக் கேட்டுக்கொண்டிருந்த விசாலாக்ஷிக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அருணாசலம் இதைக் கேட்டுக் கொண்டே வந்துவிடப் போகிறாரே என்று அவள் அச்சமுற்றாள். தான் ஏதோ சொல்லிக் கொடுத்து, மீனாக்ஷி இதைச் சொல்கிறாள் என்று யாராவது நினைத்துவிடப் போகிறார்களே என்று பீதியுற்றாள். இப்படிப் பேசுகிறாளே என்று பயந்தாள். ஆனால் ஜானகியம்மாளுக்கு அதெல்லாம் ஒன்றும் தோன்றவில்லை.

''ஐயோடி பெண்ணே! நீ சொல்வதைக் கேட்டால் எனக்குச் சிரிப்பு வருகிறது'' என்றாள் அந்த அம்மாள். மேலும் தூண்டி விட்டாற்போல் பேச ஆரம்பித்தாள். மாமியார் ஒவ்வொரு விஷயமாகச் சொல்லவும், நாட்டுப்பெண் எல்லோரையும் அசட்டையாகத் தூக்கி எறிந்து பேசிக் கொண்டே சென்றாள். பெரிய மைத்துனனுக்குப் 'பயந்தாங் கொள்ளிப் பட்டம்' கட்டினாள். இரண்டாவது மைத்துனனுக்கு 'உதவாக்கரை' என்று மகுடம் சமர்ப்பித்தாள். கணவனை 'அகம்பாவி' என்று துச்சமாகத் தள்ளிவிட்டாள். முரளீதரனை 'அதிகப்பிரசங்கி' என்றாள். விசாலாக்ஷியை நிந்தித்தாள். அபிதாவைக் கேலி செய்தாள். மாமியாரை மட்டந்தட்டினாள். இத்தனையும் கேட்டு ஜானகியம்மாள் மனமகிழ்ந்தாள். அதைக் கண்டு விசாலாக்ஷி வருத்தப்பட்டாள்.

அனைத்தையும் கவனித்து, கலா வெகுண்டாள். அத்தையை மிகவும் கோபித்துக் கொண்டாள். ''ஏன் அத்தை, அவர்கள் இப்படிப் பேசுவதற்கெல்லாம் இடங் கொடுக்கிறாய்? இது உன் குடும்பம் தானே? உன்னையே எடுத்து எறிந்து பேசுவதை ஏன் சகித்துக் கொண்டு இருக்கிறாய்?

அத்திம்பேருக்குத் தெரியுமா? அவரும் கூடவா பேசாமல் பொறுத்துக் கொள்கிறார்?''

''கலா, என் குடும்பம், உன் குடும்பம் என்று ஒன்று இருக்கிறதா? எல்லாம் நம் குடும்பம்தான், அவர்களும் நம் மனிதர்கள்தாம். அத்தோடு மாமாவும் மாமியும் இருக்கும் வரை அவர்கள் குடைகீழ் நாம் இருக்கிறோம். அவ்வளவு தானே?''

''உன் வாதங்கள் உனக்குத்தான் புரிகின்றன. எனக்குப் பிடிக்கவே இல்லை. இவள் இருந்த லட்சணத்திற்கு..... ஏன் அத்தை, அவளைத் திருப்பி நாலு வார்த்தைகள் சுடச்சுடக் கேட்பது தானே? அவள் நடத்தும் அவந்தரைக் குடித்தனத்தைப் டற்றி முரளி சொல்வதைக் கேள்.''

''அப்புறம் நமக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம், கலா?''

''ஆமாம், இந்தக் கர்வத்தைத் தவிர வேறு என்னத்தைக் கண்டது?''

''கர்வம் வேண்டாமா? சுயமரியாதையும் தற்பெருமை யும் சிறிதளவு வேண்டியதுதான்.''

சூள் கொட்டிவிட்டுக் கலா அகன்றாள். அவள் முகத்தில் அதிருப்தி குடிகொண்டிருந்தது.

4. கலாவின் கலக்கம்

கலா தன் பெட்டியில் புடைவைகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீர் துளும்பிக் கொண்டிருந்தது. அதை மறைக்க அவள் பெட்டிக்குள் தலையை மறைத்துக் கொண்டு இருந்தாள். பம்பாய்க்குத் திரும்பிப் போகும் நாள் நெருங்கிவிட்டது. இரண்டு மாத

காலமாக இந்தக் குடும்பத்துடன் இருந்துவிட்டுப் பிரியும் போது அவளுக்கு எப்பொழுதுமே துக்கமாக இருக்கும். இந்தத் தடவை வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாக வருத்தம் தோன்றிற்று. அதற்குப் பற்பல காரணங்கள் இருந்தன. அவைகளில் சில மேலோங்கி நின்றன.

அத்தை விசாலத்தின் குடும்ப நிர்வாகம் அவளை வாட்டியது. சிறு பெண்ணேயாயினும், தன் அத்தை சிரமப்படுவதைக் காண அவள் மனம் கஷ்டப்பட்டது. அத்தை படும் கஷ்டத்தை யாரும் புரிந்துகொள்ளவில்லையே என்று உருகினாள் கலா. சில சமயம் குழந்தை பிரபாவுக்கு ஏதாவது வாங்கவேண்டும் என்று விசாலாக்ஷி ஆசைப்படுவாள். ஆனால் வெளிக்கு, ''ஐயோ, சின்னக் குழந்தைக்குப் பட்டுப் பாவாடை என்னத்திற்கு? அழுக்காகிவிடும். தாராளமாக விளையாட முடியாது. மெல்லிசுத் துணியில் தைத்துப் போடுங்கள். குழந்தையை இப்பொழுதிலிருந்து கஷ்டப் படுத்தாதீர்கள்'' என்று அவள் சாதுரியமாகச் சொல்லும்போது கலாவின் கண்களில் நீர் துளிக்கும். வாஸ்தவத்தில் விசாலாக்ஷி தன் குழந்தைக்குத் தினமும் ஒரு ஜரிகைப் பாவாடை கட்டி, நித்தமும் ஒரு நகை போட்டுப் பார்க்க எவ்வளவு ஆசைப்பட்டாள் என்பது கலாவுக்குத் தெரியும். தான் குழந்தையாக இருந்தபோது - ஏன், இப்பொழுது கூடத்தான், - அத்தை தன்னை விதவிதமாக அலங்கரித்துத் தன் ஆசையை நிறைவேற்றிக் கொண்டாள். தன் விஷயமே அப்படி யென்றால், பெற்ற குழந்தையிடம் எவ்வளவு பாசம் இராது?

குழந்தைக்குப் பாவாடை, நகை என்றாலும் அப்பாவைக் கேட்டுச் செய்து போட்டு நிரப்பலாம். தினமும் பணமுடையினால் கஷ்டப்படும்போதும், தனியே வேலை செய்ய முடியாமல் தவிக்கும் போதும் காசு கொடுத்து உதவ முடியுமா? பெரிய மானிகளான அத்தையும் அத்திம்பேரும்

அந்த விஷயத்தில் கிட்டே கூட யாரையும் அண்டவிட மாட்டார்களே? தன் திருப்திக்குத் தன் கையினால் ஆகிய காரியத்தைச் செய்து உதவி வந்தாள் கலா. இப்பொழுது அத்தையைத் தனித்துவிட்டுப் போக மனமில்லாமல் தவித்தாள் அவள்.

அவள் அந்தரங்கமாகக்கூட அதை ஒத்துக்கொள்ளா விட்டாலும், சில நாட்களாக வீட்டில் ஒரு பேச்சு அடிபட்டு வருவது அவள் காதில் பட்டு மிக்க வேதனையை அளித்தது. அதுதான் முரளீதரனின் விவாக விஷயம். அவன் பொறுப்பற்றுத் திரிகிறானாம். ஒரு கால்கட்டு ஏற்படுத்தினால் தானே ஒரு நிலைக்கு வந்து விடுவானாம். அப்பொழுது தானாகவே பொறுப்பு வந்து விடுமாம். முரளீதரன் அதற்கு இடம் கொடுக்கவில்லைதான். அவன் வேடிக்கையாகவே பேசினான்.

''அம்மாவுக்கு ஒரு நாட்டுப்பெண் மாத்திரம் பைத்தியமாக இருப்பது பிடிக்கவில்லை. இன்னமும் ஒன்று வேண்டுமாம்'' என்றும், ''என்னை ஒரு பெண் மணப்பதும் பேய்க்கு வாழ்க்கைப் படுவதும் ஒன்றுதான்'' என்றும் அவன் கூறிவிட்டால் முடிந்துவிட்டதா? சில சமயம், ''பிச்சை எடுத்தாவது சம்பாதிக்கத் தெரிந்த பெண்ணைத்தான் மணப்பேன்'' என்பான். தன்னால் விரல்கூட அசைக்க முடியாதாம். தன்னை வலிய வந்து மணக்கும் பெண்ணுக்கு அதுவே அபராதமாம். இல்லாவிட்டால் அவள் பசியோடு சாக வேண்டியதுதான் என்றும் கூறுவான். இதனால் எல்லாம் கலா திருப்தியடையவில்லை. இதைக் காட்டிலும் எத்தனையோ பேர்களை, 'நான் தீவிர சந்நியாசி, மணக்கமாட்டேன்' என்று விரதம் பூண்டவர்களை எல்லாம் மூக்குக் கயிறு போட்டு இழுத்து வந்து மணக்க வைத்து விட்டிருக்கிறார்கள். இவன் மட்டும் அதற்கு விலக்காகி விடுவானா?

'ஆமாம், அவன் மண்ந்து கொண்டு விட்டுப் போகிறான். அதற்கு நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?' என்று தன்னையே சோதித்துப் பார்த்தாள் கலா.

'நமக்கென்ன? முரளிக்கும் கல்யாணமாகிவிட்டால் நாம் இனி முன்போல் சகஜமாக இருக்க முடியாது. வேற்று மனிதர்கள் நிறைந்து விடுவார்கள் இந்த வீட்டில். முரளியின் தோழமையையும் இழந்து விடுவோமே என்ற கவலைதான். அவனும் நானும் எத்தனை நாட்கள் எவ்வளவு இன்பகரமாக விளையாடி இருக்கிறோம்? இனிமேல் ஒரு புதிய பெண் வந்து, அவனைத் தன்னுடையவன் என்று சொந்தம் பாராட்டுவாள்' என்று நினைத்தாள் கலா. அதைச் சமாதானமாகக் கொள்ள அவள் மனம் ஒப்பவில்லை.

'முரளியின் மனைவி எப்படி வாய்ப்பாளோ? அதிகாரம் செய்வாளோ? ஓர் அடக்குமுறையும் அவனிடம் பலிக்காது. பயந்து நடுங்குவாளோ? பெண்களைக் கண்டால் அவனுக்கு மதிப்பே கிடையாதே? வருகிறவள் அழகியாக இருந்தாலும் ஒன்று சொல்லுவான்; குரூபியாக இருந்தாலும் உயிரை எடுத்துவிடுவான். படிப்பாளி என்றால் தூஷிப்பான்; படிக்கவில்லை என்றால் முட்டாள் என்று பழிப்பான். மிகவும் சகிப்புத் தன்மை கொண்ட பொறுமைசாலிதான் அவனிடம் பழகமுடியும். சில சமயம் தேள் போல் அவனைத் திருப்பிக் கொட்டவும் அவளுக்குச் சக்தியிருக்கவேண்டும்.

கலா தன் சிந்தனைகளை நிறுத்திக் கொண்டாள். முரளீதரனின் மனைவி எப்படி இருந்தால் தனக்கு என்ன என்று அவள் யோசித்து முடிவு கட்டுவதற்குள் முரளீதரனே எதிரே வந்துவிட்டான்.

''என்ன கலா, கண் ஏன் சிவந்திருக்கிறது? எங்களை விட்டுப் பிரியக் கஷ்டப்பட்டுக் கொண்டா?''

கலா அதற்குப் பதில் அளிக்கவில்லை. கேள்வி கேட்டாள்.

''கல்யாணமாமே?''

''அதற்கா அழுகிறாய்?'' என்றான் அந்தக் குறும்புக்காரன்.

கலாவுக்கு மிகவும் குழப்பமாகிவிட்டது. எழுந்து போக எத்தனித்தாள். அவன் பேச்சு அவளுக்குத் திடீரென்று விரசமாகப்பட்டது. அவளுக்கு மிகவும் கோபம் வந்து விட்டது. ஆனால் தன்னை அடக்கிக் கொண்டு கிட்டே வந்த பிரபாவை மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள். நடராஜன் ஒரு வாழைப் பழத்துண்டைக் கொண்டு அவள் வாயில் திணித்தான்.

''பிரபா, பழம் தின்னு, நன்னாயிருக்கு'' என்று பரிந்தான் அவன்.

''என்ன கரிசனம் அவனுக்கு?'' என்று வாய்விட்டுக் கூறிச் சிரித்தாள் கலா.

முரளீதரன் அவளையே நோக்கிக் கொண்டு நின்றான். குழந்தைகளுடன் விளையாடுவதில் தானும் கலந்து கொள்ளவில்லை.

''வா, பப்பூ, வாசலுக்குப் போகலாம்'' என்று நடராஜன் குழந்தை பிரபாவைக் கனிவோடு அழைத்து, ஆதரவாகக் கை பிடித்துக் கூட்டிச் சென்றான்.

''கலா!''

''என்ன?''

''எனக்குக் கல்யாணமா என்று கேட்டாயே?''

''அதற்கென்னவாம் இப்பொழுது? கல்யாணக் கடிதம் எங்களுக்கு வராமலா போய்விடும்?'' என்று கேட்டு விட்டாள் கலா. பிறகு நாக்கை நறுக்கென்று கடித்துக் கொண்டாள்.

''நாளன்றைக்குப் பெண் பார்க்கப் போக வேண்டுமாம். அப்பாவும் அம்மாவும் இப்பொழுது என்னுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். சரி என்று ஒப்புக்கொண்டு விட்டேன்'' என்றான் முரளி.

''எனக்கு மிகவும் சந்தோஷம். ஆனால் உங்கள் வயதில் இப்பொழுது பெண்களுக்குக்கூடக் கல்யாணமாவதில்லை என்பதை நினைத்தால்...''

''ஆம், நினைத்தால்?''

''ஒன்றும் இல்லை.'' கலா மறைந்து விட்டாள்.

5. பெண் பார்த்த படலம்

ராமநாதையர் அந்தப் பெண்ணின் தாத்தாவுடன் பேசிக்கொண்டிருந்தார். ஜகந்நாதன் பெண்ணின் தகப்பனாருடன் உரையாடினார். முரளீதரன் இரு கைகளையும் சேர்த்துக் கொண்டு ஏதோ மெதுவாகத் தாளம் போட்டுக் கொண்டிருந்தான். அவன் கண்கள் அந்த அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தவாறு அலைமோதின.

பெண் வந்தாள். மெதுவாக நமஸ்கரித்தாள். ஒவ்வொருவரையும் நமஸ்கரித்து விட்டுத் தன் தகப்பனாரை நோக்கி நின்றாள். அவர் அவள் ஜாடையை அறிந்துகொண்டு, ''அவரையும் வணங்கு அம்மா'' என்றார்.

ஜகந்நாதன் தம் ஓரக்கண்ணால் தம் தம்பியைப் பார்வையிட்டார். அவன் இவ்வளவு சாதுவாக விவாகத்திற்கு ஒத்துக் கொண்டதுமல்லாமல், பெண் பார்க்கச் சம்மதித்ததும், இதுவரை யார் பேச்சிலும் அநாவசியமாகக் குறுக்கிடாமல், அடக்கமாக உட்கார்ந்திருப்பதும் காணப் பெருமிதம்

கொண்டார். களை பொருந்திய அவன் முகமும், சுருள் சுருளாக இருந்த தலையும், கட்டுமஸ்தான உடம்பும் இப்பொழுது அவருக்குப் புதிய அழகுடனும், பொலிவுட னும் காட்சியளித்தன. மிகவும் பெருமை அடைந்தவராய் அவர் நமஸ்கரிக்க நின்ற பெண்ணை நோக்கினார்.

ஜனக மகாராஜாவின் சபையில் நின்ற ஸ்ரீராமனைப் பற்றி,

"தோள்கண்டார், தோளேகண்டார் தோடுகழல் கமலம்
அன்ன,
தாள்கண்டார், தாளேகண்டார், தடக்கை கண்டாரும்
அஃதே;
வாள் கண்ட கண்ணார் யாரோ வடிவினை முடியக்கண்டார்?

என்று கம்பர் வருணிக்கிறார்.

தம் தம்பியின் விஷயமும் அவ்வாறே என்று இறுமாந்தார் ஜகந்நாதன். 'முரளியின் திருப்பாதத்தைப் பார்த்தாலே போதுமே, அந்தப் பெண் அவனுடைய சௌந்தரியத்தை அளவிட்டு விடலாமே' என்று அவர் நினைத்தார்.

அந்தப் பெண் குனிந்து அவன் முன்னே வணங்க வந்தாள். சடக்கென்று எழுந்து நின்றான் முரளி.

"வேண்டாம், அம்மா" என்று அவன் வெகு சகஜமாகக் கூறினது எல்லோரையும் திகைப்புறச் செய்தது. அவன் அதோடு நிற்காமல் பெண்ணின் தகப்பனார் பக்கம் திரும்பிச் சுடச்சுட வார்த்தைகளைக் கொட்டினான்.

"ஏன் சார், உங்களுக்குக் கொஞ்சங்கூட உங்கள் பெண்ணிடம் பிரியமில்லையா? இப்படி வந்தவன்

போனவன் எதிரில் எல்லாம் பெண்ணைக் கொண்டு நிறுத்துவது, அவன் இஷ்டப்பட்டால் மணப்பது, இல்லாவிட்டால் வேறு ஒருவன் எதிரே நிறுத்தி - இதே நாடகமா?''

''நாங்கள் என்னப்பா செய்வது? வரன் கிடைப்பது அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. எங்களுக்கு மட்டும் எங்கள் குழந்தையை எவனோ ஒருவன் பார்வையிட்டுக் கொண்டு நிற்பது சந்தோஷமாகவா இருக்கிறது? இல்லாவிட்டால் யார் சம்மதிக்கிறார்கள்? பெண்ணைப் பிள்ளை பார்க்கவேண்டும், அவன் வீட்டினர் அனைவரும் பார்க்கவேண்டும். அவளை ஆடச்சொல்லி, பாடச்சொல்லிப் பார்த்துவிட்டுப் பிறகு வெகு சுலபமாகச் சகுனம் சரியாக இல்லை பொய்ச் சாக்குச் சொல்லிவிட்டுப் போகிறார்கள்'' என்று தாத்தா பதில் சொன்னார்.

''சந்தையில் மாடு விற்பதுபோல், கண்ட காளையின் எதிரில் ஓர் இளம் பெண்ணைக் கொண்டு நிறுத்துகிறீர்களே? உங்களுக்கு வெட்கமாக இல்லையா? எவனாவது என்னைப்போல் ஒருவன் பார்க்க வந்தால் அவனை, 'போடா, தடியா! உன்னிடம் காட்டி, நீ அபிப்பிராயம் கூற என் பெண்ணை நான் பொருட்காட்சி சாலையில் வைத்திருக்க வில்லை' என்று திட்டி அனுப்புவதுதானே? மனமறிந்து கொலைக் களத்திற்கு அனுப்புவதுபோல் இந்தப் பெண் பார்க்கும் நாடகத்திற்குப் பெண்களை உட்படுத்துகிறவர்கள், தகப்பன் என்று சொல்லிக் கொள்ளக்கூட லாயக்கற்றவர்கள். உங்களுக்கு வெட்கமாக இல்லையா, சார்? அம்மா, நீயோ புத்தி தெரிந்த பெண். இனி இதற்குச் சம்மதியாதே. அப்படியாவது வலுவில் சென்று உன்னை அடிமையாக்கிக் கொள்வானேன்? அதைக்காட்டிலும் மணம் இல்லாமலே இருப்பது மேலல்லவா?'' என்றான்.

பெண்ணின் தகப்பனார் முரளீதரனைத் தட்டிக் கொடுத்தார்.

''என் பெண்ணை மணக்காவிட்டால் போகிறது. உன்னைப் போல் நாலு பிள்ளைகள் இருந்தால் நம் சமூகமே சுகப்படும். நீ இன்னும் நான்கு இடங்களுக்குச் சென்று இதேபோல் கூறிவிட்டு வா, அப்பா. தங்கள் பெண்களைப் பற்றி உன் பேச்சைக் கேட்காவிட்டாலும், அவர்கள் பிள்ளைகளாவது இந்த மானக் கேடான வழக்கத்தைப் பின்பற்றாமல் இருக்கட்டும்'' என்றார்.

ஆனால் தாத்தாவிற்கு இது ஒன்றும் பிடிக்கவில்லை. அவர் கண்கள் கோப ஜ்வாலைகளை வீசின.

''ஏய், போதுமடா உன் அலட்டல். ஏதோ சிறு பிள்ளையாக லட்சணமாக இல்லாமல் அளக்கிறாயே?'' என்று முரளியைத் தாக்கிப் பேசினார். ராமநாதையரைப் பார்த்தும் மடமடவென்று சில காரமான வார்த்தைகளைக் கொட்டினார். இறுதியில், ''உங்கள் பிள்ளையை அடக்கி வளர்க்கத் தெரியாவிட்டால், அவனைக் கூட்டிக்கொண்டு வெளியே வரக்கூடாது. நாங்கள் மானத்திற்காக உயிரை விடுகிறவர்கள். பிறரையும் பழிக்கமாட்டோம், பிறர் எங்களை அவமானப் படுத்துவதற்கும் சம்மதிக்க மாட்டோம்'' என்றார்.

''சரிதான் அப்பா'' என்று அவர் பிள்ளை அவரை அடக்கினார். பிறகு இவர்களிடம் வந்து தம் தந்தையின் பேச்சுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

ராமநாதையருக்கு மிகவும் கோபமாகத்தான் இருந்தது. ஆனால் அந்தக் கிழவருக்குச் சரியாகப் பதில் பேசினால் தம் மதிப்புக்கே குறைவு வரும் என்று அவர் பேசாமல் இருந்து விட்டார். அவர் புத்திரரான ஜகந்நாதன் மட்டும் வாயால் கொட்டி விடுவாரா? தமக்கு எவ்வளவு துயரம் ஏற்பட்ட

போதிலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. முரளீதரனைப் போகும்படி ஜாடை காட்டி விட்டு, பெண்ணின் தகப்பனாரைத் தாமே ஆசுவாசப்படுத்த முயன்றார்.

''பரவாயில்லை சார். பெரியவர் ஏதோ மனக் கஷ்டத்தில் சொல்கிறார். அதை நாங்கள் தப்பாக எடுத்துக் கொண்டு விடுவோமா?'' என்று சாந்தமாகக் கூறிவிட்டு, தகப்பனாரை அழைத்துக்கொண்டு வெளிக் கிளம்பினார்.

வீட்டை அடைந்ததும், பொங்கி வந்த கோபத்தை, இதுகாறும் அடக்கி வந்த சலிப்பை, ஜானகியம்மாள் பேரில் காண்பித்தார் ராமநாதையர். இவர்களைக் கண்டதும் அந்த அம்மாள் வெகு ஆவலுடன் பெண்ணைப்பற்றி விசாரித்தது தான் நிபம் என்று பிடித்துக் கொண்டார் அவர்.

''ஆமாம், நீ பெற்றிருக்கும் பிள்ளையின் அழகுக்கு இது வேறு கேட்க வேண்டும் என்று தோன்றுகிறதே உனக்கு? 'பெண் எப்படி இருக்கிறது' என்று கேட்க ஓடி வந்து விட்டாள்.''

ஜானகியம்மாளுக்கு ஒன்றும் புரியவில்லை. போன இடத்தில் என்ன நடந்ததோ என்று அவளால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஆயினும் முரளீதரன் கோணல் குணம் என்னவோ எக்கச்சக்கமாகச் செய்துவிட்டது என்று மட்டும் அறிந்தாள் அவள். இல்லாவிட்டால் தாம் போய் வந்த ஞாபகமே இல்லாமல் ஏதோ புத்தக யோசனை நடுவில் விழித்துக் கொண்டு பதில் சொல்லுவாரே அவர்? அதைச் சுப சூசகமாகக் கொண்டு விஷயத்தைக் கிரகிக்கும் சக்தி அவருடைய மனைவியிடம் உண்டு. இன்றும் அவர் பெண்ணைப்பற்றி ஏதேனும் தாறுமாறாகச் சொல்வார். நாம் அவரைக் கேலி செய்வோம் என்று எண்ணி வந்த ஜானகியம்மாள் தன் கணவரின் பதிலைக் கேட்டு ஸ்தம்பித்து விட்டாள்.

சாதாரணமாக உடனே பதில் சொல்லும் ஜகந்நாதனும் ஒன்றும் கூறாமல் விறுவிறென்று உள்ளே சென்றுவிட்டது, அவளுக்குப் புதியதாகத்தான் இருந்தது. விஷயம் ஏதோ பெரிது என்று ஊகித்தவளாய், அந்த அம்மாள் பேசாமலே இருந்து விட்டாள். தன் ஆவலை அடக்கிக் கொண்டு மௌனமாகவே சுசுரூஷைகள் செய்ய ஆரம்பித்தாள்.

ஜகந்நாதன் உள்ளே சென்று விசாலாக்ஷியிடம் நடந்ததையெல்லாம் கூறிவிட்டுத் திரும்பினார். எதிரே முரளீதரன் வாயில் ஒரு பாட்டுப் பாடியபடியே உல்லாசமாக வருவதைப் பார்த்ததும் அவருக்கும் ஆத்திரம் வந்துவிட்டது.

''என்னடா நினைத்துக்கொண்டு இருக்கிறாய் உன் மனத்தில்? இவ்வாறு அவமானப்படுத்த வேண்டும் என்றே எங்களை அழைத்துச் சென்றிருக்கிறாய் நீ. உன்னைக் கொன்றால் கூடப் பாவமில்லை. அப்பாவையாவது வரவேண்டாம் என்று தடுத்து இருக்கக்கூடாதா? உனக்கு எப்பொழுதடா புத்தி வரும்? வயது குட்டிச்சுவருக்கு ஆவதுபோல் இருபத்து இரண்டு எட்டிவிட்டது. இப்படிப் பட்ட மூடப் பிள்ளையுடன் திண்டாட வேண்டும் என்று எங்கள் தலையில் எழுதியிருக்கிறதே! உன்னை உதைக் கட்டுமா? உன் மென்னியைப் பிடித்து முறித்து விட்டால்கூட எனக்குத் தப்பாகப் படாது. ஒரு தம்படிக் காசுக்குப் பிரயோசனமில்லை என்றால், இப்படிக் குடியைக் கெடுக்க வேண்டுமா? உன்னை வெட்டிக் கண்ட துண்டமாக்க என் கை துடிக்கிறது'' என்று இரைந்தார் அவர். ரேழியில் நின்றபடியே கேட்டுக் கொண்டிருந்த தாய் இப்பொழுது கூடத்திற்கு வந்தாள்.

''ஏண்டா பாவி, ஏண்டா இப்படி என் வயிற்றெரிச் சலைக் கொட்டிக் கொள்கிறாய்? உன்னைப் பெற்ற வயிற்றில் நான் பிரண்டையைக் கட்டிக் கொண்டாலும் போதாது;

கொஞ்சம் நெருப்புக் கூடச் சேர்த்துக் கட்டிக்கொள்ள வேண்டும். பிறந்த போதே உன்னைக் குழி வெட்டிப் போடாமல் போய்விட்டேனே?'' என்று முரளியைப் பார்த்துத் தன் ஆத்திரம் தீரக் கத்தினாள். அவளுக்கு இன்னும் போன இடத்தில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. மூத்த மகனே தன் வாய் திறந்து இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொள்ளும்போது முரளி செய்த குற்றம் சாமான்யமல்ல என்று மட்டும் தெரிந்து விட்டது அவளுக்கு.

தாயும் சேர்ந்து கொண்டதும் ஜகந்நாதனுக்கு என்ன தோன்றிற்றோ, பேசாமல் போய்விட்டார். பிறகே அவர் தாயும் தன் நாட்டுப் பெண்ணைக் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சமையலறைப் பக்கம் சென்றாள்.

முரளீதரன் தன் அண்ணன் அவ்விடத்தை விட்டு அகலும் வரை பேசாமல் குற்றம் செய்தவன் போலவே நின்றான். ஆனால் அவர் முதுகு மறைந்ததோ இல்லையோ, தாயின் வாயைக் கிளற அவளைப் பின் தொடர்ந்தான்.

''என்ன நடந்தது என்று தெரியாமலேயா என்னை அதற்குள் குழி வெட்டி மூடியாய்விட்டது? ஏனம்மா, நான் கேட்கிறேன், நீ கோபித்துக் கொள்ளாமல் சொல். உனக்கு ஒரு குழந்தைகூடப் பிறந்து இறந்தது இல்லையே? மிகவும் ஆசையாக இருக்கிறதா? ஒன்றாவது செய்து பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறதா?'' என்றான் கிண்டலாக.

விசாலாக்ஷிக்கு அவன் கூறும் அநுபவம் மிகவும் பரிசயமானது. பிரஸ்தாபிக்கும்போது அவளுக்குப் பழைய ஞாபகங்கள் வந்து வயிற்றில் சங்கடம் செய்தது. முரளீதரன் விடாமல் பேசிக்கொண்டே போனான்.

''அம்மா, எனக்காக இப்பொழுது குழி தோண்டுவ தென்றால்...''

''முரளீ, உனக்கு வேறு பேச்சு அகப்படவில்லையா, அப்பா?'' என்று அவனை இடை மறுத்தாள் விசாலாக்ஷி. அவள் குரல் உணர்ச்சி மேலீட்டால் நடுங்கியது. கன்னங்களில் சிறு நீர்த் துளிகள் வழிந்து ஓடின. முரளீதரன் முகத்திலும் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவன் எழுந்து போய்விட்டான்.

என்றைக்குமே அவனுக்குச் சிறு குழந்தைகளிடம் அதிகப் பிடிப்பு. ஒவ்வொருதரம் தன் மன்னி பிறந்தகம் செல்லும்போதும் அவன் அவள் திரும்பி வரும்போது கொண்டு வரப்போகும் குழந்தையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். ஆனால் அவள் வெறுங்கையுடன் திரும்பும்போது ஜகந்நாதனைக் காட்டிலும் அவனே மிகவும் ஏமாற்றமடைவான். இப்பொழுது புண்பட்ட இடத்தில் தொட்டு விட்டதை உணர்ந்து அவன் மிகவும் வேதனைப் பட்டான். அதற்கு வருந்தினவனாய்க் கூடத்தில் நின்று கொண்டிருந்தான்.

ஜானகியம்மாள் தன் கணவரிடம் சென்றாள். முரளீதரன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தன் மதனியின் அருகில் சென்று அமர்ந்து கொண்டான்.

விசாலாக்ஷி தன் மைத்துனனைப் பார்த்தாள். ''முரளி, நீ சின்னக் குழந்தையா? இன்னமுமா உன் விளையாட்டுப் புத்தி விடவில்லை? இத்தனை நாட்கள் செய்த விஷமங்கள் எல்லாம் ஒன்றுமில்லை. அப்பாவையும் அண்ணாவையும் பிறர் வீட்டில் கேலிக்கு இடமாக்குவது உனக்கு அழகா?''

''பின்னே என்னவாம்? நான் வேண்டாம்; வேண்டாம் என்று சொன்னாலும் கேட்காமல் தொந்தரவு செய்தால்? ஒரு பெண்ணைப் பஜாரில் விற்பதுபோல் கொண்டு வந்து நிறுத்துவதாம். அதைப் போய் ஒருவன் பார்ப்பதாமே? இது உங்களுக்கு வெகு அழகோ?''

''நீ சொல்வது சரிதான். அதற்கு அப்பாவையும் அண்ணாவையும் பரிகாசத்திற்குப் பாத்திரமாக்கி விட்டாயே?''

''நீதான் அதற்குக் காரணம். அதற்கு இஷ்டப்படா விட்டால் தக்கபடி.....''

முரளீதரனின் கடைசி வார்த்தைகள் தொண்டைக் குள்ளேயே சென்றுவிட்டன. விசாலாக்ஷிக்குப் புலப்பட வில்லை. தன் விநோதப் போக்குக்குத் தான்தான் காரணம் என்று அவன் சுட்டிக் காட்டியது அதைக் காட்டிலும் விசித்திரமாக இருந்தது அவளுக்கு.

''நானா? நானா காரணம்?''

''ஆமாம், நீதான். ஒன்றும் தெரியாதுபோல் பாசாங்கு செய்கிறாயே? நான் குழந்தை முதல் யாரை மணப்பது என்று நீங்கள் சொல்வீர்கள்? இப்பொழுது அது மறந்து விட்டதாக்கும்! புத்தி தெரிந்தது முதல் கலா என் பெண்டாட்டி என்று என் மூளையில் புகுத்தி விட்டு இப்பொழுது பின்வாங்கப் பார்க்கிறீர்களா?''

விசாலாக்ஷியின் மூளை தீவிரமாக யோசனை செய்ய ஆரம்பித்து விட்டது. அவன் கூறுவது வாஸ்தவந்தான். சிறு பிராயத்திலிருந்து கலாவை முரளீதரனுக்குத்தான் முடி போட்டு வைத்து இருந்தது. அவன் கூறியதுபோல் இப்பொழுது அவளுக்கு அந்த ஞாபகமே இல்லை. மேலும் தங்கள் பெண்ணுக்கு வயது பதினாறு ஆகியும் போனதரம் வந்தபோது அவள் பெற்றோர் அவள் விவாகத்தைப் பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்கவில்லை. ஒரு சமயம் அவள் பி.ஏ. தேற வேண்டும் என்று தன் அண்ணன் எண்ணினாரோ என்று தோன்றிற்று.

''முரளி, என்ன சொன்னாய்? கலாவா? கலாவையா சொல்கிறாய்? யோசித்துப் பார்த்தாயோ? கலா இப்பொழுது உனக்கு எட்டாத கனியாகிவிட்டாளே அப்பா? முதலாவது அவள் உன்னைக் காட்டிலும் ஒரு வருஷப் படிப்பு முந்திவிட்டாள். அடுத்த வருஷம் அவள் பி.ஏ. பட்டதாரி ஆகிவிடுவாள். பம்பாயில் இருப்பவள். தகப்பனுக்கு ஒரே பெண். அண்ணாவுக்கு இப்பொழுது ஆயிரம் ரூபாய் சம்பளமாம். அவர்கள் பெண்ணைக் கிராமத்தில் இருக்கும் ஓர் 'இண்டர்மீடியட்டு'க்குக் கொடுப்பார்களா? பெரிய மனுஷனின் பெண், படித்தவள், அழகி என்று எத்தனையோ பேர் நான் நீ என்று அவள் கைக்குப் போட்டியிடுவார்கள். நாமாவது முன்போல் அவர்களுடன் சம நிலையில் இருக்கிறோமா? தங்கள் அருமைப் பெண்ணை நம்மைப் போன்ற ஏழைக் குடும்பத்தில், நாலு பேர் நடுவில், கிராமத்தில் நிரந்தரமாக இருப்பதற்குக் கொடுப்பார்களா? நாம் எதிர்பார்ப்பதே தவறு என்பேன் நான்.

''அத்துடன், முரளி, நீ அவளை மணந்துகொண்டால் சந்தோஷமாக இருக்க முடியாது. உன் முரட்டுச் சுபாவத்துக்கும் அவள் மிருதுவான தன்மைக்கும் சரிப்படாது. அவள் செல்லப் பெண். மனம் நோகாமல் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். அபிதாவின் பேரில் அவள் கணவன் உயிரை வைத்து இருந்தும், வேலை நிமித்தம் சற்றுக் கவனிக்காதது அபிதாவைப் பைத்தியமாக்கிவிட்டது. உன்னால் ஒரு நாள் கூடத் தழைந்து பேசப் பொறுமை கிடையாது. அப்புறம் ஒருவர் வழி ஒருவர் போகாவிட்டால் மிகவும் சங்கடம். மீனு - பாலுவைப் பார். அவர்கள் வாழ்க்கையே பாழாகிவிட்டது.

''மொத்தத்தில் இதெல்லாம் வீண் அபவாதத்துக்கு இடம். அப்புறம் மனத்தைப் பிய்த்துக் கொள்வதில் பயனில்லை.

''பெண்ணின் மனம் நொந்தால் மன்னி தாங்க மாட்டாள். தன் கணவனை ஏசுவாள், இடித்துக் காட்டுவாள். எங்கள் அண்ணா என்னிடம் குறை கூறுவார். என் மனம் தாபப்படும். வேண்டாம், முரளி, நம் குடும்பம் இப்பொழுது இருக்கும் நிலைமையே நன்றாக இல்லை. இன்னமும் மோசமாக வேண்டாம்.

''கலாவை மறந்துவிடு. வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாவிட்டால் நீ பிரம்மச்சாரியாகவே இரு. ஆனால் இந்த எண்ணத்தை மட்டும் விட்டு விடு.

''கணவனுக்கு வேலையில்லை என்ற ஒன்றையே தாங்கமாட்டாமல் அபிதா புத்தியை இழந்துவிட்டாள். கலா பங்குக்கு உன் குணக்கேடு வேறு சேர்ந்துகொண்டால் அவள் உயிரையே மாய்த்துக் கொண்டு விடுவாள். கல்லைக் குத்துவானேன், கையை வலிப்பானேன்?''

ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டு விசாலாக்ஷி முறத்தில் அரிசியை எடுத்துக் கொண்டு கல் பொறுக்க முற்றத்துப் பக்கம் சென்றாள்.

''இந்தக் கடைசிப் பாணமாவது பலிக்கிறதா பார்ப்போம்'' என்று அவள் வாய் முணுமுணுத்தது. அவளுடைய அதரங்களில் புன்னகை தவழ்ந்தது.

'கலாவின் நினைவை அடியோடு விட்டுவிடுவதாமே? ஏனோ? அவள் என்ன அவ்வளவு உசத்தி? அவளை என் காலில் வந்து விழும்படி செய்யாவிட்டால் நான் முரளி இல்லை. ஆனால் அவள் நிஜமாகவே என்னை மதிக்க மாட்டாளோ? சின்ன வயதில் என்னை எத்தனையோ தரம் 'மக்கு' என்று அழைத்து இருக்கிறாள். அதற்காக?' என்று யோசித்துக் கொண்டே முரளியும் அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

இப்பொழுதே தன் மந்திரம் பலிக்க ஆரம்பித்துவிட்டது என்று விசாலாக்ஷி எப்படி அறிவாள்!

6. அபலை அபிதா

விசாலாக்ஷிக்கு அன்று பொழுதே போகவில்லை. ஜகந்நாதன் ஏதோ காரியமாகப் பட்டணம் சென்றிருந்தார். இப்பொழுது நடராஜனும் தெருக்கோடியிலிருந்த பள்ளிக்குச் சென்றுவிடுகிறான். மாமனாரும், மாமியாரும், அவர்கள் பேத்தியும் கூடத்தில் உறங்கிக் கொண்டிருந்தனர்.

வாசற் கதவைத் திறந்து கொண்டு படியில் அமர்ந்து கொண்டாள் விசாலாக்ஷி. தெருவிலும் மத்தியான்ன வேளையின் நிசப்தம் குடிகொண்டிருந்தது. அப்பொழுது ஒரு தந்திச் சேவகன் வெகு வேகமாக அவர்கள் வீட்டைத் தாண்டிச் சென்றதைக் காண, அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் மூன்றாவது வீட்டில் நின்றதும் அவள் மார்பு வெடித்துவிடும் போலாகிவிட்டது. கதவைத் திறந்தபடியே விட்டு விட்டு, அவள் வைத்தியநாதையர் வீட்டிற்கு ஓடினாள்.

அவள் எதிர்பார்த்தபடியே தந்தி பாலகோபாலனிட மிருந்து தான் வந்திருந்தது. மீனாக்ஷிக்கு ஜ்வரமாம். நினைவில்லாமல் இருக்கிறாளாம். உடனே புறப்பட்டு வரும்படி எழுதியிருந்தது.

விசாலாக்ஷி இந்தச் சமாசாரத்தை எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்கு ஓடி வந்தாள். அவள் இருதயம் பட பட வென்று அடித்துக் கொண்டது. ''பாவம் மீனா. ஏதோ கொஞ்சம் சுமாராகச் சமாளித்துக் கொள்ளும் சமயம் இப்படியா வரவேண்டும்! ஏதோ அற்ப விஷயத்திலாவது சந்தோஷமாக இருந்தாளே, அதற்கும் கொடுத்து வைக்கவில்லையா? சுவாமி, அவளைக் காப்பாற்றிவிடு. அவளுடைய தாய் தந்தையருக்கு அவள் ஒரே குழந்தை' என்று மனனம் செய்தவாறே அவள் விரைந்தாள்.

வைத்தியநாதையர் வீட்டில் அவர் மனைவி, ''அவளுக்கு உடம்பு சரியாக இல்லை என்றால் மனசு கேட்கவில்லைதான். ஆனால் அவள் இப்பொழுது இருக்கும் விதத்துக்கும், மாப்பிள்ளையின் குணத்துக்கும் நான் எப்படி அங்கே போய் இருப்பேனாம்? நீங்களும் கூட வந்தால்தான் நான்.....'' என்றாள்.

''உனக்கு, பெண் பிழைப்பாளோ மாட்டாளோ என்ற கவலைகூட இல்லையாக்கும். சே, சே! குழந்தை பிரக்ஞை யற்றுக் கிடைக்கிறாளாம்.'' அவர் மேலும் கீழும் நடந்தார்.

'என்னவோ பைத்தியம்போல் கேட்கிறோமே? அவருக்கு மாத்திரம் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று இருக்காதோ? வராமலா இருப்பார்?' என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொண்டு, ஊருக்குப் புறப்பட ஆயத்தங் களைச் செய்வதில் முனைந்தாள் தாய்.

மூன்றாவது வீட்டில் விசாலாக்ஷி தன் மாமியாரிடம் தானும் கூடப் போவதாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''இருக்கட்டும், பார்ப்போம். முதலில் நான் மட்டும் போய்விட்டு வருகிறேன். பிறகு அவசியம் ஏற்பட்டால் நீயும் போனால் போகிறது'' என்று அவள் தீவிரத்தை அடக்கிவிட்டாள் ஜானகியம்மாள்.

★ ★ ★

மீனாக்ஷி ஜ்வரத்துடன் படுத்து இப்பொழுது ஒரு மாதமாகிவிட்டது. ஜானகியம்மாள் போய் இரண்டு நாட்களுக்கெல்லாம் திரும்பிவிட்டாள். அதற்குப் பிறகு மீனாக்ஷிக்கு ஜ்வரம் குறைந்திருக்கிறது என்று ஒரு கடிதம் வந்தது. மற்றப்படி இதுவரை ஒன்றுமே தெரியவில்லை. இவர்கள் என்ன எழுதியும் பாலகோபாலன் அவர்களுக்குப் பதில் போடவில்லை.

''இப்படியும் ஒரு பிள்ளை இருப்பானா? ஆபத்து நேரத்தில்கூட அவனுக்கு நம் ஞாபகம் வருவதில்லை. மாமனார் மாமியார் பணக்காரர்கள். நம்மால் என்ன உதவி செய்ய முடியும்? கவலை வேண்டுமானால் விடாதே தவிர...'' என்று நொந்துகொண்டாள் ஜானகியம்மாள்.

''நாம் இங்கிருந்து எப்படிச் சொல்ல முடியும், அம்மா? எப்படியிருந்தால் என்ன? நானும் உங்கள் பிள்ளையும் போய்ப் பார்த்து விட்டு வருகிறோமோ மைத்துனர், கவலையில்தான் எழுதக்கூடத் தோன்றாமல் இருக்கிறாரோ, என்னவோ?'' என்றாள் விசாலாக்ஷி.

''சரி, உன் இஷ்டம்'' என்று கூறிவிட்டாள் மாமியார்.

அதன்படியே ஜகந்நாதனும் விசாலாக்ஷியும் கிளம்பிச் சென்றார்கள். அவர்களை ரெயிலேற்ற முரளியும் கூடச் சென்றான்.

ஸ்டேஷனில் டிக்கட் வாங்கப்போகும் வரை பேசாமலிருந்து விட்டு, அந்தத் தறுவாயில் விசாலாக்ஷி மெல்லத் தன் விருப்பத்தை அவிழ்த்துவிட்டாள்.

''டிக்கட்டுக்கு என்ன அவசரம்? இன்னும் நிறைய நேரம் இருக்கிறதோ இல்லையோ? முரளி வேண்டுமானால் வீட்டுக்குப் போகட்டுமே?'' என்றாள்.

முரளீதரனுக்கு அதைக் காட்டிலும் வேறு என்ன வேண்டும்? அண்ணாவின் கண்டிப்பான பார்வையின் கீழ் நின்றுகொண்டு தவிப்பதைவிட எங்கேயாவது ஓடுவோமா என்று அவன் குதித்துக் கொண்டுதான் இருந்தான்.

ஜகந்நாதன் முதலில் சற்று நேரம் பதில் சொல்ல வில்லை. பிறகு, ''ஒன்றும் வேலை இல்லை. அதற்குள் அவனுக்கென்ன தாசில் தடமாடிப் போகிறதாம்? இங்கேதான் இருக்கட்டும்'' என்று கூறிவிட்டார்.

விசாலாக்ஷியின் முகம் தொங்கிவிட்டது. முரளியின் வதனமும் வாடிற்று. ஜகந்நாதனும் தம் ஓரக்கண்ணால் இதைக் கவனித்தார். அவர் விசாலாக்ஷியின் சுபாவத்தை மிகவும் நன்று அறிந்தவராதலால், அவள் நம்மிடம் பிரத்தியேகமாக ஏதோ கூற விரும்புகிறாள் என்று மட்டும் அறிந்தார். முரளியைப் பார்த்து, ''சரி, போடா'' என்றார். அவன் சிட்டெனப் பறந்துவிட்டான்.

''என்ன?'' என்று கேட்டார் அவர்.

''ஒன்றும் இல்லையே?''

''என்னதான் என்று சொன்னால் என்ன?''

''ஒன்றும் இல்லை.''

''சரிதான், சொல்.''

''ஒன்றும் இல்லை அபிதாவைப் போய்ப் பார்த்துவிட்டுப் போகலாமே என்று பார்த்தேன்.''

''ஊம்? அங்கேயா? அங்கே யார் உன்னையும் என்னையும் அழைத்தார்கள்?''

''நம்மை யார் அழைக்க வேண்டும்? நம் பொருளை நாம் போய்ப் பார்த்துவர அழைப்பு வேறு ஒன்று வேண்டுமா என்ன?''

''உனக்கு ஒன்று தோன்றிவிட்டால் அதை யாராலும் எதிர்த்துப் பேச முடியாது.''

''.....''

''நம் பொருள் என்று நீ வாய் கூசாமல் அழைக்கும் அபிதாவோ தன் புத்தி சுவாதீனத்துடன் இல்லை. மேலும், அவளை அவர்கள் வீட்டிலேயே இத்தனை நாட்களும் விட்டு விட்டு, திரும்பிக் கூடப் பார்க்காமல் இருந்துவிட்டு,

இப்பொழுது மட்டும் எப்படி அங்கே போவது? அதெல்லாம் ஒன்றும் யோசிக்காமல் உனக்குத் திடீரென்று எண்ணங்கள் தோன்றிவிடும்.''

''இல்லை, அவளுக்கு இப்பொழுது நல்ல குணமாம். அந்த ஊரிலிருந்து வந்த மாமி ஒருவர் சொன்னார். எனக்கு அவளைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று இருக்கிறது. சுமாராகிவிட்டால் நாம் அவளை அழைத்துக் கொள்ள வேண்டாமா?''

''எல்லாம் இங்கிருந்து பேசுவதற்குச் சரிதான். ஏற்கனவே அவர்களுக்கு நம் பேரில் மனஸ்தாபம். பெண்ணின் சுபாவத்தை, மெலிக்கையை, அறிந்து நடக்கத் தெரியவில்லை என்று குறை. அருணாசலமே அவளைப் பைத்தியமாக்கிவிட்டதாக.....''

''அதெல்லாம் பழைய கதை...''

''சரி, சரி. எனக்கென்ன? உனக்கும் ஒரு நாளைக்குப் பாடம் கற்பித்தால்தான் என்னை நச்சரிக்காமல் விடுவாய்'' என்று முணுமுணுத்துக்கொண்டே ஜகந்நாதன் சென்று அபிதா இருக்கும் ஊருக்கு டிக்கட் வாங்கி வந்தார்.

தமக்கிருந்த கோபத்தில், அதை மறக்க ஒரு தினசரிப் பத்திரிகையும், விசாலாக்ஷியும் பேசாமலிப்பதற்காக ஒரு நாவலும் வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறினார். சூட்சுமியான விசாலாக்ஷி பேசாமலிருந்தாள். அவள் தன் கணவரின் மௌனத்தைக் கலைக்கத் தைரியமற்று, அக்கம்பக்கத்தில் வீற்றிருப்பவர்களிடம் பேச்குக் கொடுத்துக் கொண்டிருந்தாள். நாவல் படிப்பதற்கும் மனத்தில் ஒருவித அமைதி வேண்டாமா? தனக்குத் தோன்றியதைக் கூறிக் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டாளேதவிர, உள்ளத்தில் சந்தேகங்களும் பயங்களும் தோன்றாமல் இல்லை.

அபிதாவின் உடல்நிலை இப்பொழுது மிகவும் அபிவிருத்தி அடைந்துவிட்டிருந்தது என்று கேட்டதிலிருந்து அவளுக்கு அவா தாங்கமுடியவில்லை. அபிதா பூரண குணமடைந்தவுடன் அவளை அழைத்து வந்து தன் கைக் கீழ் வைத்துக் கொண்டு, வாழ்க்கைக்கு இன்றியமையாதவையான சில விஷயங்களைக் கற்றுக்கொடுத்து, அவளை அருணாசலத் திடம் சேர்ப்பித்துவிட வேண்டும். அப்பொழுதுதான் தனக்குத் திருப்தியாக இருக்கும். இத்தனை நாட்கள் பிரிந்திருந்ததாலும், மேலும் அபிதாவுக்கு உடல் நலம் குன்றி இருப்பதனாலும் அருணாசலம் அவ்வளவு முரடனாக இருக்க மாட்டான் என்றே விசாலாக்ஷி நம்பினாள். இருந்தாலும் அந்த நம்பிக்கை அவ்வளவு திடமாக இல்லை.

அவள் அடிக்கடி நேரிலும், கணவன் மூலமாகவும் அருணாசலத்தினிடம் வற்புறுத்திப் புத்தி கூறியதற்கு அவன் அளித்த பதில் ஒன்றேதான்:

''சரிதான், கிடக்கட்டும், வாழத் தெரியாவிட்டால் அவர்கள் அப்படித்தான் மடியவேண்டும். அதற்காக நாம் என்ன செய்வது? - பொல்லாப்பா? ஹூம்! யார் யாரைக் குறைகூற வேண்டும்! பெண்ணை வளர்க்கத் தெரியாதவர்களுக்கு வாய்வேறா? பைத்தியம் பிடித்தால் அப்படியே தவிக்கவேண்டியதுதான். அதற்காக நாம் என்ன செய்ய முடியும்? அவள் பேச்சை என் காதில் போடாதீர்கள். அந்த ஒரு சமாசாரம் மட்டும் என்னிடம் நடக்காது. பெண் அவ்வளவு அருமை என்றால் அவர்களே வைத்துக் கொண்டு சீராட்டட்டுமே?''

இந்தப் பதிலைக் கேட்டு விசாலாக்ஷி மனம் குன்றிவிடுவாள். கப்பலாகிய அவளுடைய சம்சாரத்தில் யாதொரு குறையும் இருக்கக் கூடாது என்பது அவள் விருப்பம். எந்த ஒருவருடைய வாழ்விலும் ஏற்றத் தாழ்வுகள்

இருக்கத்தான் செய்யும். அவைகளை ஆய்ந்தெடுத்து, சரி தட்டிக் கொண்டு பழகவேண்டியது அவரவர்கள் கடமை என்று அவள் கருதினாள். ஆதலால், அருணாசலத்தின் மனப்போக்கு அவளுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக விட்டு விடவும் மனம் இல்லை. தன்னால் இயன்றதைச் செய்வதற்கு ஆயத்தமாக இப்பொழுது அபிதாவைத் தேடிக்கொண்டு கிளம்பிவிட்டாள் விசாலாக்ஷி.

★ ★ ★

உள்ளத்திலே பீதியும் சங்கையும் போராட, கணவரின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சினவளாக விசாலாக்ஷி வண்டியை விட்டிறங்கி அபிதாவின் பிறந்தகத்துப் படியை ஏறினாள். இந்த விஷயத்தைப் பிரஸ்தாபித்தது முதற்கொண்டு ஜகந்நாதன் அவளிடம் முகங்கொடுத்துப் பேசவே இல்லை. தன் இஷ்ட தெய்வங்களையெல்லாம் வேண்டியவாறே முன் நடந்தாள் விசாலாக்ஷி.

ஜகந்நாதன் வண்டிக்காரனுக்குச் சத்தம் கொடுத்து அனுப்பிவிட்டு, திரும்பிப் போகும் வண்டியை நோக்கிக் கொண்டு நின்றார். தன் உயிர்த் தோழனைப் பிரியும் காதலியைப்போல் அவர் நின்று, அவ்வண்டி புழுதியில் மறைவதைக் கண்ணுற்றுக் கொண்டிருக்கும் காட்சியைப் பார்த்த விசாலாக்ஷிக்கு அந்நிலையிலும் சிரிப்பு வந்தது. ஆனால் அதை வெளிக்காட்டத் தைரியமற்றவளாய், வெகு சகஜ பாவத்துடன் அவள் தன் கணவரின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

வீட்டு வாசற் கதவு சாத்தியிருந்தது. அவர்களது மனக் குழப்பத்தில் அதுவும் ஓர் ஆறுதலாகத் தோன்றிற்று.

'நீதானே என்னை இந்த நிலைக்கு வலுக்கட்டாயமாக இழுத்து வந்திருக்கிறாய்? இனி உன்பாடு. அவமானமோ,

அவமரியாதையோ எதுவானாலும் நீயே முதலில் நின்று ஏற்றுக்கொள் என்பதுபோல் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அவமரியாதை நேர்ந்துவிட்டால் திரும்பி வேகமாகச் செல்ல ஆதாரமாக வண்டியை நிறுத்திக் கொள்ளாமல் போய்விட்டோமே என்று எண்ணியவராய்த் தூரத்தில் குன்றும் புழுதிப் படலத்தை மறுபடியும் பார்த்து நின்றார் ஜகந்நாதன்.

தெருவில் வீடு. வண்டி வந்து நின்றதையும், இருவர் இறங்கி வாசற்படியில் நிற்பதையும், கதவு திறக்கப்படாமல் கிடப்பதையும் பல பேர் கவனித்துவிட்டார்கள். இதை உணர்ந்த விசாலாக்ஷி தைரியம் அனைத்தையும் கையில் கொண்டு, கதவின் மேல் சற்றுப் பலமாகவே தட்டினாள். பிறகு அதன் அதிர்ச்சியே தாங்காதவள் போல் சற்று அகன்று நின்றாள்.

கதவு திறந்தது. ஆயுள் தண்டனையை ஏற்கப் போகும் குற்றவாளிகளைப்போல் ஜகந்நாதன் தம்பதிகள் எதற்கும் ஆயத்தமாக நின்றார்கள்.

அபிதாவின் தகப்பனார்தாம் வந்தார்.

''யார்? ஜகந்நாதனா? இந்த ஏழை பேரில்.....'' வார்த்தையை முடிக்காமலேயே கண்களில் நீர் ததும்ப, அவர் ஜகந்நாதனின் கையைப் பற்றினார்.

விசாலாக்ஷி, கனவு உலகில் பிரவேசிப்பதுபோல் வாசற்படியைத் தாண்டி உள்ளே சென்றாள்.

★ ★ ★

அபிதாவின் தகப்பனார் சிவசுப்பிரமணிய ஐயர் தலைமேல் கை வைத்தபடி உட்கார்ந்திருந்தார். விசாலாக்ஷியும் ஜகந்நாதனும் அருகே மௌனமாக வீற்றிருந்தார்கள்.

அபிதாவின் தாய் குஞ்சம்மாள் கண்களில் நீர் சொரிய தன் பெண்ணின் உடல்நலத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தாள்.

''நான் என்ன சொல்லுவேனடி, விசாலி! மணிக்கணக் காக அவள் சுவரைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து பேய் விழி விழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் என் வயிறு சாம்பலாகிவிடும். செய்யாத வைத்தியமில்லை. பார்க்காத டாக்டர் இல்லை, கொடுக்காத ஔஷதமில்லை. கையில் இருந்த பணத்தை எல்லாம் வாரி இறைத்தாகிவிட்டது. இனியாவது கடவுள் கண் திறப்பாரோ?''

விசாலாக்ஷியும் தன் புடைவைத் தலைப்பால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

''எத்தனை நாட்களாக மறுபடியும் இப்படி ஆயிற்று?'' என்று விசாரித்தார் ஜகந்நாதன்.

''பிள்ளை பெற்ற புதிதில் பிதற்றிக் கொண்டிருந்தாள். பிறகு வைத்தியத்தில் அதெல்லாம் மாறிவிட்டது. சித்தப் பிரமைபோல் உட்கார்ந்திருப்பாள். மெதுவாக அதுவும் போய் நல்ல நினைவு வந்தது'' என்று சொன்னாள் குஞ்சம்மாள்.

அதற்குள் சிவசுப்பிரமணிய ஐயர் குறுக்கிட்டார். ''அந்த நாட்களை நினைத்தாலே எனக்கு வயிற்றைச் சங்கடம் செய்கிறது. பைத்தியமாகக் கத்தினது எனக்குப் பிரமாதமாகத் தோன்றவில்லை. அப்பொழுது என் மனத்தில் மாப்பிள்ளை யின் பேரில் அடங்காக் கோபமிருந்தது. ஊரார் வேடிக்கை பார்க்கும் போதும் நான் உணரவில்லை. அவர்களது அநுதாபத்தை விரும்பிற்று என் உள்ளம். ஆனால், குண மடைந்த பிறகு அவள் யாருடனும் பேசாமல் உட்கார்ந்திருக் கும் காட்சி என்ன கோரம்! தான் பெற்றெடுத்த குழந்தையைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் சதா கண்ணீர் வடித்துக்கொண்டு வீற்றிருப்பாள். என் நெஞ்சத்திலும் உதிரம் கசியும். அம்மாவோடு பேசமாட்டாள். என்னிடம் முகங் கொடுக்க

மாட்டாள். வயிறார உண்ணமாட்டாள், உடல் மறக்க உறங்க மாட்டாள்! அப்படியும் நெருங்கி, அவளை ஒரு தடவைக்கு இரண்டு தடவை கேட்டால் பதில் சொல்லுவாள். 'அம்மா, உன் மாமியாரகத்துக்குப் போக வேண்டுமா? உன் அகமுடையானை வரச் சொல்லட்டுமா?' என்று கேட்டால், 'வேண்டாம், அப்பா. உங்களுக்குத்தான் விடாது; முடிந்தால் உங்களையும் தொந்தரவு செய்யாமல் எங்காவது ஓடிவிடுவேன்' என்பாள். ஒரே ஒருநாள் மட்டும், 'விசாலம் மன்னி வருவாளா?' என்று கேட்டாள். ஒரே ஒருநாள் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு, அதன் முகத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். குழந்தை 'ப்ப்ப் - பா' என்று விளையாடினான். 'போடா, முண்டமே, உனக்கு இனி இந்த ஜன்மத்தில் அப்பா கிடைக்கமாட்டார்' என்று கூறிவிட்டு, பொலபொல வென்று கண்ணீர் சிந்தினாள். நான்கேட்டேன், 'உன் மாமனாருக்குக் கடிதம் போடட்டுமா?' என்று. அவள் அதற்குப் பதில் விக்கி விக்கி அழுதாள்.

''அப்பா, எதைக்கொண்டு நீங்கள் எழுதுவீர்கள்? நான் இனி போய் அவர்களுக்கு என்ன நன்மை செய்துவிடப் போகிறேன்? நான் யாருக்குமே பாரம்!' என்று கூறிவிட்டு விழுந்தவள் மறுபடியும் இந்த நிலைமைக்கு வந்துவிட்டாள். என்ன செய்வது என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை.''

விசாலாக்ஷியின் முகம் அழுது அழுது உப்பி விட்டிருந்தது. ''மறுபடியும் அவளுக்குச் சிகிச்சை செய்தால்?'' என்று கேட்டாள் அவள்.

''திருச்சூரில் ஒரு நம்பூதிரி இருக்கிறாராம். அவரிடம் அழைத்துச் சென்றால், வைத்தியத்துடன் மந்திர ஹோமங் களின் உதவியால் எவ்விதமான கொடிய வியாதியையும் குணப்படுத்தி விடுவாராம்.''

''அதைச் செய்யலாமே?''

''செய்யலாம், அதற்குப் பண வசதி வேண்டாமா? இப்பொழுது என் கை ஒடிந்துவிட்டது. பேசாமல் உட்கார்ந் திருக்கிறேன். ஆனால் அவள் குணமே அடையவேண்டாம். அவள் சுயபுத்தியுடன் இருந்து வருந்திச் சித்தரவதை அடைவதைக் காட்டிலும் இதுவே மேல். இப்படியே இருக்கட்டும். ஒரு கால் நாங்கள் கண் மூடிவிட்டால், நீ அவளை அழைத்துச் செல்.''

ஜகந்நாதன் அடைத்த தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசலானார். ''அப்படியெல்லாம் பேசாதீர்கள், மாமா. ஏதோ நடந்தது நடந்துவிட்டது. நீங்கள் எங்களை நெருங்க யோசித்தது போலவேதான் நாங்களும் உங்களிடம் வரத் தயங்கினோம். இப்பொழுதும் விசாலத்தின் பிடிவாத மில்லாவிட்டால் இங்கு நான் வந்தே இருக்கமாட்டேன். வந்தது நல்லதாயிற்று.''

''விசாலத்தைப் போன்ற பெண்ணைப் பெறப் பாக்கியம் செய்திருக்கவேண்டும். நீங்கள் இருவரும் என் குழந்தைகள் போல் சகஜமாக வந்துவிட்டுப் போவதைப் பற்றி நான் என்ன சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. இந்த மாதிரிப் பெருந்தன்மையான மனிதர்களும் இருக்கிறார்களா என்று என்னால் நம்பமுடியவில்லை. அப்படிப்பட்டவர்களைப் பற்றி நாங்கள் என்ன என்னவோ.....''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. இனி நீங்கள் வீண் கவலைப் படாதீர்கள். எங்களால் முடிந்ததைச் செய்கிறோம். உங்கள் மாப்பிள்ளையைத் திருப்புவதுதான் உங்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்து இருக்கிறது'' என்று கூறினார் ஜகந்நாதன்.

குழந்தை கிருஷ்ணமூர்த்தியிடம் சற்று விளையாடிக் கொண்டிருந்துவிட்டு, பிரிய மனமில்லாமல் ஜகந்நாதனும் விசாலாக்ஷியும் அவ்வூரை விட்டுக் கிளம்பினார்கள்.

''உங்கள் குழந்தைக்காக நீங்கள்...'' என்று சிவசுப்பிரமணிய ஐயர் ஆரம்பிப்பதற்குள், அவர்கள், ''அதெல்லாம் எங்கள் பொறுப்பு மாமா'' என்று அவரைப் பேசவிடாமல் அடக்கிவிட்டார்கள்.

அந்தப் பொறுப்பை எப்படி நிறைவேற்றுவது என்பதுதான் பெரிய பிரச்னையாகிவிட்டது.

7. தெய்வப் பிறவி

''ஒன்று சாதித்துவிட்டாய். இனி ஒரு பாகம் இருக்கிறது. விசாலம், நீ மிகவும் புத்திசாலிதான். ஆனால் சில சமயம் நீ நடந்து கொள்ளும் விதம் உன்னை என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரு குலுக்குக் குலுக்கினால் கூட...'' என்று மனைவியை நிந்தாஸ்துதி செய்தார் ஜகந்நாதன்.

''நீங்கள் தாம் இப்படிச் சொல்லுகிறீர்கள். என் மாமியாரைக் கேட்டுப் பாருங்கள். என்னைப் போன்ற சாதுவான பெண்கள் கூட இந்த உலகில் இருக்கிறார்களா? யாரை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்களேன். 'விசாலம் ஒரு வாயில்லாப் பெண். கணவன் சொல்லுக்கு எதிர் நினைக்கக் கூட மாட்டாள்' என்று தான் சொல்லுவார்களே தவிர...''

''ஆமாம், ஆமாம்! இந்த மாதிரி 'சாது'க்களைத் தான் நம்பக் கூடாது. ஓசையில்லாம் போரில் கொள்ளி வைப்பார்கள்.''

விசாலாக்ஷியின் முகபாவத்திலோ பேச்சிலோ கணவரின் பேச்சில் கோபமே தெரியவில்லை. அதை அவள் மிகவும் ரசித்து அநுபவித்துக் கொண்டே இருந்தாள். தன்

கோரிக்கைப்படி அபிதாவைப் பார்த்தாகிவிட்டது. இனி மீனாக்ஷியைக் காணவேண்டும். அதற்கும் ரெயிலேறியாகி விட்டது. அவள் உள்ளத்தில் திருப்தி நிலவியது.

ஜகந்நாதனுக்கோ பற்பல உணர்ச்சிகள் வேதனையை அளித்தன. அவர் குரல் கோபத்தில் ஆரம்பித்து, கண்டிப்பது போல் மாறி, இறுதியில் சிணுகலாக மாறிவிட்டது. விசாலாக்ஷியின் பிடிவாதத்திற்கும், கொள்கைகளுக்கும் காரணம் அவளது பெருந்தன்மையும் உதாரகுணமுமேயாகும் என்பதை அவர் நன்கு அறிவார். ஆகையால் அவரால் வெகு நேரம் வரை கோபமாக இருக்க முடியவில்லை.

ரெயில் இவர்கள் யோசனைகளை லட்சியம் செய்யாது பறந்து சென்றது. ஜகந்நாதன், விசாலாக்ஷி மனத்திலோ தம்பியின் வீட்டில் எவ்வித வரவேற்புக் கிடைக்குமோ என்ற பயம் தோன்றிக் கொண்டேதான் இருந்தது.

''சம்பந்திகள் எதிரில் நாம் அவமானப்படவேண்டும் என்று நம் தலையில் எழுதியிருந்தால், அது நம்மை விட்டு விடுமோ?'' என்றார் ஜகந்நாதன்.

''அவமானமா? என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? அவர் யார்? உங்கள் தம்பி. உங்கள் குழந்தையைப்போல். அவர் சொன்னால் அது அவமானமா? அதிலும் நீங்கள் அதையெல்லாம் கடந்துவிடவில்லையா? ஒரு பெரியாரை ஒருவன் முட்டாள் என்று அழைத்தால் அது அவருக்கா அவமானம்? தன் நிலையைத் தாழ்த்திக் கொண்டு அத்தகைய வார்த்தையை வெளியிட்டவனே முட்டாள். அவர் ஏதாவது மரியாதைக் குறைவாகப் பேசினால் அது அவருடைய பதவிக்கும் கௌரவத்துக்கும் குறைவே தவிர, உங்களை என்ன செய்கிறது?'' என்று கேட்டாள் விசாலாக்ஷி. ''நாம் அபிதாவைப் பார்க்கப் போன போதும் அப்படித்தான்

சொன்னீர்கள். இப்பொழுது போய்விட்டு வந்தோமே, என்ன அவமானம் நடந்துவிட்டதாம்? அந்த மாமாவைப் பார்க்கவும் எனக்குப் பரிதாபமாக இருந்தது. நீங்கள் உங்கள் தம்பிக்குக் கடிதாசு போட்டீர்களோ?'' என்று இன்னும் கொஞ்சம் கூறிவிட்டே நின்றாள் அவள்.

''விசாலி, நீ சாமர்த்தியக்காரியடி!'' என்று புகழ்ந்தார் ஜகந்நாதன். ''கடிதம் எழுதினேன்; பதில் வரும்.''

அவரிடம் அவ்வாறு அடித்துப் பேசிவிட்டாளே தவிர, மைத்துனனின் வீட்டு வாசலில் நுழையும்போது விசாலாக்ஷிக்கு எவ்வளவோ அதைரியமாகத்தான் இருந்தது. ஆனால் அவள் வெகுநேரம்வரை சங்கடப்பட நேரவில்லை.

''விசாலம், ஏன் அம்மா, நீ வந்தாயா? நான் என்ன சொல்வேனடி, இங்கு நான் படும்பாடு!'' என்று பிரலாபித்த வாறே மீனாக்ஷியின் தாய் அவளை எதிர்கொண்டழைத்தாள்.

விசாலாக்ஷிக்கு ஏனோ அது ரசிக்காமல் போய்விட்டது. ''மாமி, மீனு எப்படி இருக்கிறாள்?'' என்று மட்டுமே அவள் கேட்டாள்.

''உடம்பு சுமார்தான். லேசாக ஜ்வரம் அடிக்கிறது. இன்னும் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. ஆனால், உன்னிடம் சொல்லிக் கொண்டால் என்ன? பெற்ற பெண்ணானாலும் அவள் குற்றங்கள் நம் கண்ணுக்குத் தெரியாவா? எதற்கு எடுத்தாலும் தப்பு என்கிறாள். அதற்கு மேல் அவள் அகத்துக்காரர், மாமாவை அலட்சியமாக நடத்துகிறார். ஆயிரம் இருந்தாலும் அவரவர்கள் வீட்டில் இருக்கும் கௌரவம், வெளியே வந்தால் தக்காது. மாமாவுக்கும் மனம் நொந்துவிட்டது.

''அதிகாரம், இரைச்சல். கத்திக் கத்தி நேற்றுச் சமையல்காரன் ஓடிப்போய்விட்டான். இன்று காலை

எழுந்ததும் நர்ஸ் மாப்பிள்ளையிடம் ஏதோ காரசாரமாகப் பேசிவிட்டுப் போய்விட்டாள். வேலைக்காரி ஒருத்தி இருக்கிறாள். அவள் எனக்காக ஏதோ செய்கிறாளே தவிர, அவளும் என்று நின்றுவிடுவாளோ?''

''நான்தான் வந்துவிட்டேனே?'' என்றாள் விசாலாக்ஷி. ''நீங்கள் கவலைப்படாதீர்கள். இராக் கண் விழித்து நீங்கள் மிகவும் சோர்ந்துவிட்டிருக்கிறீர்கள். வேலைக்காரர்களுக் கென்ன, வேறு சிலரைத் தேடி வைத்தால் போகிறது.''

''எப்படித் தேடி வைப்பாயோ, அம்மா! மருந்து வாங்கிக் கொண்டு வா என்றால் கூடச் சேவகன் பத்து வார்த்தை சொல்லுகிறான். அதை அவரிடம் சொல்ல முடியவில்லை. இவளிடமும் நெருங்க முடியவில்லை. பேசாமல் நம் ஊருக்கு வந்துவிடு என்றால் முடியாதாம்.''

''இருக்கட்டும், இருக்கட்டும், பார்ப்போம்'' என்றாள் விசாலாக்ஷி.

நான்கே நாட்களில் வீட்டு நிர்வாகம் பூராவும் ஏற்றுக் கொண்டுவிட்டாள் விசாலாக்ஷி. சிரித்த முகமும் சாந்தமயமான சொற்களும் பொருந்திய விசாலாக்ஷியைக் கண்டு மீனாக்ஷியின் தாய் அகமகிழ்ந்தவாறு இருந்தாள். ஆனால் மீனாக்ஷி ஓரகத்தியையும் அதட்டினாள், குறை கூறினாள், சிடு சிடுத்தாள். அதுதான் அந்த அம்மாளுக்கு மிகவும் வருத்தமாக இருக்கும்.

''விசாலம், உன்னைப் போன்ற பெண்ணைப் பெறக் கொடுத்து வைக்கவேண்டும். உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்கும் மாமாவுக்கும் ரொம்பவும் சந்தோஷம். உன்னையும் இவள்துன்புறுத்துகிறாளேஎன்னுமனத்துடன்உருகுகிறேன்.''

''அவளுக்கு உடம்பு சரியாக இல்லை, மாமி. பலஹீனமாக இருக்கும்போது அப்படித்தான் எடுத்ததற்

கெல்லாம் காரணமில்லாமல் கோபம் வரும். அதற்குத்தான் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் உற்றார் உறவினர்கள் அருகே இருக்கவேண்டும் என்று வைத்திருக்கிறது'' என்று விசாலாக்ஷி அந்த அம்மாளுக்குச் சமாதானம் கூறினாள். அப்பொழுதுதான் குளித்துவிட்டுச் சென்று கொண்டிருந்த ஜகந்நாதனைக் கூப்பிட்டு, ''இந்தாருங்கள், மருந்து வாங்கிக் கொண்டு வந்துவிடுங்கள். அப்புறம் சாப்பிடலாம். இப்பொழுதே ஒரு வேளை மருந்து தப்பிவிட்டது'' என்றாள்.

ஜகந்நாதன் மருந்துப் புட்டியை வாங்கிக் கொண்டு வாசற்படி இறங்கினார். ஒரு பியூன் அவரிடம் வந்து அவர் கையில் இருந்த சீசாவை வாங்கிக் கொண்டான். ''சாமி, நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள். நான் மருந்து வாங்கி வருகிறேன்'' என்றான். விசாலாக்ஷி சொன்னதைக் கேட்டுக்கொண்டே இருந்தான் அவன் என்று நன்கு புலப்பட்டது. ஜகந்நாதன் சிரித்துக் கொண்டே புட்டியை அவனிடம் கொடுத்துவிட்டுத் திரும்பினார்.

ஒரு வேலையாளையும் ஒன்றும் உத்தரவிடாமல் தாங்களே செய்து வந்தனர் ஜகந்நாதன் தம்பதிகள். வைத்தியநாதையரின் மனைவி சமைத்தாள். விசாலாக்ஷியும் வைத்தியநாதையரும் மீனாக்ஷியைக் கவனித்துக் கொண்டார் கள். ஜகந்நாதன், தம்பிக்கு மாடிக்குச் சாப்பாடு கொண்டு போவது, மற்றும் சில வெளி வேலைகள் ஆகியவற்றைக் கவனித்து வந்தார். நான்கு நாட்களாயின. ஆட்களுக்கு இந்தப் புதிய மனிதர்களின் போக்கே விசித்திரமாக இருந்தது. 'இன்னும் மனிதர்கள் வந்துவிட்டார்களே, அவர்களும் சேர்ந்து கொண்டு நம் பேரில் கொடிய ஆட்சி செலுத்தப் போகிறார்களே, அப்படியானால் நாம் வேலை நிறுத்தம் செய்யவேண்டியதுதான்' என்று அவர்கள் சற்று முரண்டிப் பார்த்தார்கள். ஆனால் அதற்கு நேர்மாறாக, வந்தவர்கள்

தங்கள் தயவையே நாடவில்லை என்பதையும், குசலம் விசாரிக்க வரும் பெரிய மனிதர்களை நாசூக்காக வரவேற்பதையும், அசூயைப் படாமல் தோட்டி செய்ய வேண்டிய வேலைகளையும் செய்யத் தயங்காமல் விசாலாக்ஷி ஓடியாடுவதையும் கண்டு அவர்கள் பிரமித்தனர். தங்களையும் அறியாமலேயே அவர்களுக்கு வந்தவர்களிடம் மதிப்பும் மரியாதையும் தோன்ற ஆரம்பித்தன. தாங்களே வலுவில் வேலைகளைச் செய்ய முன் வந்தார்கள்.

மீனாக்ஷிக்குக் கொஞ்ச நாட்களாக ஜ்வரத்தின் தாபம் குறைந்திருந்தது. படுக்கையை விட்டு எழுந்து செல்ல முடியாவிட்டாலும் உடல் நிலைமை தெளிவாகவே இருந்தது. தன்னைச் சுற்றி நடப்பதைக் கவனிக்கத் தொடங்கினாள். உடல் செயலற்று விழுந்து கிடந்த நிலையில், மூளை அதிவேகமாக வேலை செய்தவாறே இருந்தது.

தனக்குக் கல்யாணமானதும், கணவனின் அன்பற்ற தன்மையுடன் தான் நடத்திய வாழ்க்கையும், தனது குடித்தனமும் அவள் கண்முண்னே பவனி வந்து அவள் மனத்தில் பற்பல விதமான சிந்தனையைக் கிளப்பிவிட்டன.

விசாலாக்ஷியின் மண வாழ்க்கைக்கும் தன் வாழ்விற்கும் இருக்கும் வித்தியாசங்கள் அவளை எழுப்பின.

'அவள் வாழ்க்கையும் நிறைந்திருக்கிறது, என் வாழ்க்கையும்தான் நிரம்பி இருக்கிறது. ஆனால் இவ்விரு நிறைவில்தான் என்ன வித்தியாசம்!'

இவ்வாறு அவள் உள்ளூற வியந்து கொண்டிருக்கும் போது விசாலாக்ஷியே அங்கு வந்துவிட்டாள். இழுத்துக் கட்டிய புடைவையை அவிழ்த்து விட்டுக்கொண்டே மணியைப் பார்த்துவிட்டு, கையில் தெர்மா மீட்டரை எடுத்துக் கொண்டு மீனாக்ஷியிடம் வந்தாள். சிரித்த முகத்துடன்

பேசியபடியே சுகரூஷைகளைச் செய்யும் தன் ஓரகத்தியைக் கண்கொட்டாமல் பார்த்தாள் மீனாக்ஷி.

''மீனு, என் மட்டித்தனத்தை என்ன சொல்வாய் போ! நானும் என் புடைவையும் முகரையும்! மணி ஐந்தாகி விட்டது. மைத்துனர் வந்துவிடுவார். உன் முகத்தைக் கூடத் துடைக்கவில்லை. நான் மட்டும் லட்சணமாகத் தலைவாரிப் பின்னிக்கொண்டு குலுக்குகிறேன். யாராவது கேட்டால் கூடச் சிரிப்பார்கள் - என்ன?'' என்று கூறிக் கொண்டே விசாலாக்ஷி, மீனாக்ஷிக்கு வேண்டியதைச் செய்துவிட்டு, அவளுக்கு வேற்றுடை உடுத்தி தலையைக் கோதி, படுக்கையை உதறிப் போட்டுவிட்டு, அவ்வறையை அழகாக ஒழுங்கு படுத்திவிட்டுத் திரும்பினாள்.

அவள் செய்கைகளைக் காணக் காண மீனாக்ஷிக்கு வியப்பும் பக்தியும் அதிகரித்தன. ''சமையற்காரன் திரும்பி வந்துவிட்டானாமே?'' என்று மட்டுமே வாய் திறந்து கேட்டாள்.

''ஆமாம், வந்துவிட்டான். வராமல் எங்கே போய் விடுவான்? போனால் தனக்கே மனசு உறுத்துகிறது. எஜமானி அபாயமாகக் கிடக்கும்போது விட்டுவிட்டு ஓடுகிறோமே என்று அவர்களுக்கே அவமானமாக இருக்கிறது. இதை விட்டால் அவர்களுக்கு நல்ல இடம்?.....''

விசாலாக்ஷி கூறிக்கொண்டே போனது முழுவதையும் செவிகொடுத்து மீனாக்ஷி கேட்கவில்லை. அவளுடைய சுபாவத்தைப் பற்றியும், பேச்சு வன்மையைப் பற்றியும் அவள் ஆராயத் தொடங்கினாள்.

'இப்படிப் பேசுகிறாளே? அவ்வளவு வெள்ளை மனசு பெற்றவளா இவள்? வேலைக்காரர்கள் ஏன் ஓடிவிட்டார்கள் என்று இவளுக்குத் தெரியாதா? குடும்ப நிர்வாகத்தில்

நுண்ணிய விஷயங்களையும் ஊகித்துச் சாமர்த்தியமாக நடக்கும் இவளுக்கு, கேவலம் இந்த விஷயம் தெரியாமலா இருக்கும்? வேஷம் போடுகிறாளே! அதில் இவளுக்கு என்ன லாபம்? லாபமில்லாமல் என்ன? குடும்பத்துக்குப் பணம் போதவில்லை. இதுவரை நம்மைக் கேட்டதற்கு நாம் அனுப்பவில்லை. இப்பொழுது இவள் நடத்தை, இனாம் கேட்கப் போகும் வேலையாள், தீபாவளிக்கு முந்தின நாள் காட்டும் சுறுசுறுப்பை ஒத்ததுதானோ? இங்கிருந்து ஒரு காலும் பணம் பெயராது என்று இவளுக்குத் தெரியுமே? இருந்தவரை நல்லதனமாக இருந்தால், போகும்போது ஏதாவது கிட்டாதா என்ற ஆசையோ? அல்லது, ஒரு சமயம் இவ்வளவு அந்தஸ்தில், பெரிய வீடு, ஏவலாட்கள், செல்வாக்கு இவைகளைப் பார்த்தவுடன் கிடைக்காத பேறு கிடைத்த உணர்ச்சியோ? இவ்வளவு ஐசுவரியத்தையும் தன்னை நம்பி விட்டு விட்டார்களே, நன்றாக அநுபவித்தோமே என்ற நன்றியோ? யோசித்து யோசித்து மண்டையைக் குழப்பிக் கொண்டாள் மீனாக்ஷி.

விசாலாக்ஷி தன் வேலை முடிந்ததற்கு அடையாளமாக ஒரு புன்முறுவல் பூத்துவிட்டு வெளியே சென்றாள்.

அவளிடம், ''மன்னி, என் அம்மாவைக் கூப்பிடுங்கள்'' என்றாள் மீனாக்ஷி.

''ஏன்? நர்ஸ் இன்று வரவில்லையாக்கும்? வேலைக்காரியும் மாட்டேன் என்று சொல்லிவிட்டாளா? எனக்கு இதெல்லாம் வழக்கமே இல்லை. அதிலும் இன்றைக்கு வெள்ளிக்கிழமை. இப்பொழுது தான் குளித்துவிட்டு மடி உடுத்தினேன். நான் உன்னை எப்படித் தீண்டுவது? மெல்ல எழுந்து 'பாத்ரூமு'க்குப் போகிறாயா? டாக்டர் கொஞ்சம் எழுந்திருக்கலாம் என்றாரே?'' என்று கேட்டாள் தாய்.

இதைக் கேட்டுக் கொண்டே வந்த விசாலாக்ஷி அவளை மறுத்துத் தானே முன் வந்தாள். ''நன்றாக இருக்கிறது, மாமி! அவள் எழுந்திருக்கக் கூடாது. நான் இருக்கும்போது உங்களுக்கு என்ன சங்கோஜம்? மீனு, நான் உன் தமக்கைபோல். என்னிடம் கூச்சமா? இந்த வேலையெல்லாம் பெரியவர்கள் செய்ய முடியுமா?'' எனக் கூறிவிட்டுச் சென்று, தானே 'பெட்பானை'த் தூக்கிக் கொண்டு வந்தாள். மீனாக்ஷியின் தாய் அவ்விடத்தைவிட்டகன்றாள்.

மீனாக்ஷி வாயே திறக்கவில்லை. ஆயினும் அந்தத் தொட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு சற்றும் அருவருப் பில்லாமல் செல்லும் விசாலாக்ஷியைக் கண்கொட்டாது நோக்கினாள். அடுத்து இருந்த 'பாத்ரூமி'ல் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அப்பொழுது தன் அறையில் மெல்ல இருள் சூழ ஆரம்பித்தது.

கையில் அத்தொட்டியுடன் விசாலாக்ஷி வாசற்படியில் ஒரு கணம் நின்றுகொண்டிருந்தது மீனாக்ஷியின் கண்களில் கேவலம் ஒரு மானிடப் பெண் மிகவும் நீசமானதொரு தொழிலைச் செய்வது போல் தோன்றவில்லை. சாக்ஷாத் ஸ்ரீ மகாலக்ஷ்மியே அமிர்த கலசத்துடன் நிற்பதுபோல் இருந்தது. தேவி பராசக்தி, அருள் ஜோதியை ஏந்தி நிற்பது போல் இருந்தது.

மீனாக்ஷிக்கு மயிர் சிலிர்த்தது தேகமெங்கும். அவள் மனத்தில் எத்தனையோ கதவுகள் திறந்தன. கண்கள் புத்தொளி பெற்றன. பயபக்தியுடன் அவள் இரு கன்னங்களிலும் அறைந்து கொண்டவாறே வாய்விட்டு முணுமுணுத்தாள்.

''தேவி, உன்னை நான் நிந்தித்துவிட்டேன். உன் பதவி என்ன, என் மட்டம் தான் என்ன! நீ அன்பின் ஜோதி. என் அகம்பாவத்தை அகற்றிய தெய்வ ஒளி நீ. உன்னைப் பற்றிச்

சம்சயிக்கவும் எனக்கு மனம் வந்ததே! இந்தப் பாபத்துக்கு நான் என்ன பிராயச்சித்தம் செய்வேன்?

''உன் வாழ்வின் நிறைவு, பெரியோர்களின் பராமரிப்பு, குழந்தைகளின் போஷணை... இன்னும்...''

மீனாக்ஷியால் யோசிக்கவும் முடியவில்லை. நெஞ்சு அடைத்தது. அவள் கண்களில் தாரை தாரையாக நீர் பெருக்கிற்று.

விசாலாக்ஷி திரும்பிப் போகையில் இதைக் கவனித்து விட்டாள். ''அசடே, இதற்காகவா கண்ணில் ஜலம்? இவ்வளவு செய்யக் கூட எனக்குப் பாத்தியதை இல்லையா? மீனு, நான் உன் தமக்கை அல்லவா?'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

வாசலில் கார் வந்துவிட்டது. உள்ளே வந்த பாலு உரத்த குரலில், ''இந்த அறையில் ஏன் விளக்கில்லை?'' என்று அதட்டியவாறே வந்தான்.

மீனாக்ஷிக்கு அந்த அதிகாரம் பிடிக்கவில்லை. கண்களை மூடிக்கொண்டு, தூங்குவதுபோல் அவள் பாசாங்கு செய்தாள். பாலு அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்துவிட்டு, தனது அறைக்குச் சென்றுவிட்டான்.

மீனாக்ஷி மீண்டும் யோசனையில் ஆழ்ந்தாள். 'என்ன அபசாரம் செய்துவிட்டேன்! அவளிடம் இல்லாத ஆட்களா நம்மிடம் இருக்கிறார்கள்? ஆனால் வித்தியாசம் இதுதான். நம் பணியாட்கள் நம்மைக் கவனிப்பதில்லை, அவள் குடியானவர்கள் அவளைத் தாயெனப் பாவிக்கிறார்கள். அவள் பார்க்காத பணமா? அவள் பெரிய இடத்தில் பிறந்த பெண்ணல்லவா?

தாய் அலுத்துக் கொண்டாலும் அவள் சலிப்பதில்லை. பெற்ற அன்னை செய்ய அஞ்சியதையும் அவள் துணிவுடன் செய்து விடுகிறாளே? அவள் தெய்வமோ?

'விசாலி மன்னி, உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? பெரிய அபசாரமல்லவோ நான் நினைத்து விட்டேன்? உன் வயதென்ன, உன் பதவி என்ன? உன்னை அவமதித்ததற்கு ஈசுவரன் என்னை மன்னிப்பானோ?'

இந்தச் சிந்தனையிலேயே மீனாக்ஷி தூங்கிவிட்டாள். அன்றிரவு அவள் ஜ்வரம் அதிகமாயிற்று. அருகே விசாலாக்ஷி வீற்றிருப்பது அவள் மனவேதனையை அதிகரித்தது.

8. காதல் கடிவாளம்

வாசலில் தயங்கித் தயங்கி ஒருவன் நிற்பதைக் கவனித்து, ''யாரப்பா அது?'' என்று கேட்டாள் ஜானகியம்மாள்.

''ஒண்ணுமில்லீங்க. சின்ன அம்மா இன்னும் திரும்பலீங்களா?''

''இல்லை. நீ யார்?''

''பருப்புக்காரன். பரவாயில்லீங்க. நான் அப்புறம் வந்து பேசிக்கிறேன்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டான் அவன்.

ஜானகியம்மாள் உள்ளே சென்றாள். கூடத்தில் பிரபாவும் நடராஜனும் பெரிதாக அழுதுகொண்டிருந்தனர். பேத்தியைக் கையில் வாங்கிக்கொண்டு, நடராஜனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள் அந்த அம்மாள்.

''இதுதான் குழந்தை; உனக்கென்னடா கேடு!'' என்று அதட்டியவாறு நடராஜனை இரண்டு அறை வைத்தாள் தாய்.

''ஏன் குழந்தையை அடித்துக் கொல்லுகிறாய்? அவள் இருக்கும்போது எண்ணெய் போட்ட மெஷினைப் போல் கஷ்டம் அறியாமல் இருந்த குடித்தனம் இப்பொழுது

தெருவுக்கு வந்துவிடும்போல் இருக்கிறது'' என்று ராமநாதையர் கடிந்து கொண்டார்.

''அவள் எப்படித்தான் குடித்தனம் செய்தாளோ தெரியவில்லை. வீட்டில் ஒரு சாமான் இல்லை. இரண்டு பேர் குறைந்தும் பணம் போதவில்லை. அவள் இன்னும் பாலு குடித்தனம், கமலா குடித்தனத்தையெல்லாம் வைத்துச் சமாளித்தாள். அவள்தான் எனக்கு ஒன்றும் தெரியாமல் நடத்தி வந்தாள் என்றால், அவளுக்குக் கடன் கொடுத்த பால்காரி, காய்க்காரி முதற்கொண்டு என்னிடம் ஒன்றையும் சொல்லாமல் மர்மமாகப் போய் விடுகிறார்கள். கடிதம் வேறு எழுதியிருக்கிறாள்; எனக்கு வேண்டியதற்குச் சிரமப்பட வேண்டாமாம். வாங்கிக்கொண்டால், பிறகு அவள் வந்து கணக்குப் பார்த்துக் கொள்ளுகிறாளாம்.''

முரளீதரன் தன் தாயின் பேச்சைக் கேட்டுக் கொண்டே அங்கு வந்தான். போட்டியிட்டுக்கொண்டு அழும் குழந்தைகள் இருவரையும் அழைத்துக் கொண்டு வாசற் பக்கம் சென்றான். தன் ஜேபியிலிருந்து இரண்டு மிட்டாய்களை எடுத்து அவர்களுக்குக் கொடுத்துவிட்டு விளையாட்டுக் காட்டினான்.

''அண்ணா, அம்மா அடிச்சூட்டா என்னை... மன்னிகிட்டே போகணும்...'' என்று நடராஜன் அழுதான்.

''மன்னீ... ஈ... ஈ'' என்று பிரபா ஒத்துப் பாடினாள்.

முரளீதரனுக்குத் தானும் அவர்களுடன் சேர்ந்து மன்னியின் வரவுக்காக ஒரு குரல் அழவேண்டும் போல்தான் இருந்தது. விசாலாக்ஷி இரண்டு மாதமாக வீட்டில் இல்லாதது ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தெரிந்தது.

அவள் கலா விஷயமாகக் கூறிய சொற்கள் ஒவ்வொன்றும் அவன் காதுகளில் சம்மட்டியால் அடிப்பது

போல் ஒலித்துக் கொண்டு இருந்தன. தான் கலாவுக்குத் தகுதியற்றவன், அவளை அடைவது மிகக் கடினம் என்று நன்கு அறிந்திருந்தான் அவன். ஆயினும் கலாவை அடியோடு மறக்க அவனால் முடியவில்லை. அதற்கு மாறாக அவன் எப்பொழுதும் அவள் ஸ்மரணையாகவே இருந்தான். கலாவின் நினைவுடன் கலாவின் அத்தையின் நினைவும் சதா சர்வ காலமும் போட்டியாகத் தோன்றிக் கொண்டிருந்தது. மன்னியின் ஆதரவில்லாமல் குழந்தைகளும் ஏங்கின.

ஒருத்தர் கூறியும், யார் வேண்டிக் கொண்டும், புத்தி சொல்லியும் வராத பொறுப்பு முரளீதரனுக்கு இப்பொழுது தானாகவே வந்துவிட்டது. குழந்தைகளிடம் இருந்த பாசம், மன்னி வரும் வரை அவர்களைத் தானே பராமரிக்க வேண்டும் என்ற பொறுப்பு வந்துவிட்டது அவனுக்கு. அவர்களுடைய உடுப்பையும் உணவையும் கவனிக்கும் சமயம் வீட்டில் சாமான்கள் இல்லாததும், அவை குறைவதும் அவன் கண்களில் படும். தாய்க்குச் சகாயமாக அவன் அக்குறைகளை ஒரு பங்கு சரி தட்டுவான்.

கலாவுக்குத் தக்க புருஷனாக விளங்க வேண்டும். அவள் தன்னை மணக்காவிட்டாலும் போகட்டும், 'முரளீதரன் அவளுக்குத் தகுதியற்றவன்' என்று மட்டும் இருக்கக் கூடாது என்ற அவனது ஆண்மை வீராப்புக் கூறும். அதன் அதட்டலுக்குப் பவ்வியப் பட்டு அவன் ஒரு கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டான். அந்தக் கம்பெனியின் மானேஜர் ஜகந்நாதனின் நெடு நாளைய சிநேகிதர். வெகு நாட்களாகவே முரளியை அவரிடம் வேலையில் அமர்த்த வேண்டும் என்று ஜகந்நாதன் நினைத்ததுண்டு. ஆனால் தம்பியின் குணத்தைக் குறித்து அவருக்கு மிகவும் சஞ்சலமாக இருந்தது. இவை அனைத்தும் முரளீதரன் அறிந்த விஷயமே. அவனுக்கு அப்பொழுது அது வேடிக்கையாகவே இருந்தது;

இப்பொழுது வெகு முக்கியமாகத் தோன்றிற்று. அவன் போய் வெகு வினயமாகக் கேட்டதும், ஜகந்நாதனின் நண்பர் அவனை எடுத்த் எடுப்பிலேயே நூறு ரூபாய் வேலையில் நியமித்துவிட்டார். இப்பொழுது இரண்டு மாதச் சம்பளம் வாங்கிவிட்டான்.

அந்தச் சந்தோஷத்தைத் தன் மன்னிக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அவன் ஆத்திரத்துடன்துடித்தான். அத்துடன் இல்லாமல் அவள் கூறியதைப் போல் தான் ஒன்றும் உதாவாக்கரை அல்ல என்று மார்பு தட்டவேண்டும் என்ற அவாவும் உடன் வந்தது.

ஆயின், அது அவ்வளவு சுலபமாக இல்லை. நடுநடுவில் அவனுடைய பழைய விஷமக் குணம் தலை நீட்டியபடியே இருந்தது. ஆபீஸில் வேலை செய்து கொண்டிருக்கும் போது யார் பேரிலாவது ஒரு விஷமம் செய்து வேடிக்கை பார்க்கவேண்டும் என்று துடிக்கும் அவன் மனம். எல்லாவற்றையும் வீசி எறிந்துவிட்டு, உல்லாசமாக எங்கேயாவது சுற்றுவோமா என்று அலையும் அவன் காலும் கையும். மானேஜர் பார்க்காத சமயமாக அவர் வழுக்கைத் தலையில் 'கிரீங்... ங்' என்று ஒரு காகித ஏரோப்பிளேனை விடுவோமா என்று நினைத்தவனாய் ஒன்று செய்தும் விடுவான். ஆனால் பறக்கவிடும் நேரத்திலே, அந்தப் பளபளப்பான வழுக்கை மண்டையில் கலாவின் சாந்தமான முகம் பிரதிபலிப்பதுபோல் ஒரு பிரமை தட்டும். அவள் இனி ஓர் அடி கைக் கெட்டாத தூரத்திற்கு நகர்ந்துவிட்டதாக எண்ணுவான் அவன்.

''நான் என்ன சொன்னேன், முரளி? உன்னால் முடியாது. அவள் கனவை விட்டுவிடு. நீயாவது, உருப்படியாக ஒரு காரியம் செய்வதாவது!'' என்று தன் மன்னியின் குரல் ஏளனமாகக் காதில் ஒலிக்கும்.

முரளீதரன் காகித விமானத்தைக் கிழித்து எறிவான். முன்னிலும் பன்மடங்கு சிரத்தையுடன் தன் வேலையில் ஈடுபடுவான். நேரேகாட்டிலிருந்து பிடித்து வந்த குதிரையைக் கடிவாளத்திற்கு அடிபணியச் செய்வதுபோல் தான் இருந்தது முரளீதரன் தன்னை வேலையில் ஈடுபடச் செய்வது. கலாவின் முகம் அவனது குறிக்கோளாக இருந்தது, விசாலாக்ஷியின் பேச்சு அவனுக்குத் தூண்டுகோலாயிற்று.

தான் உத்தியோகம் பார்ப்பதாயும், குழந்தைகள் மன்னிக்காக ஏங்குவதாயும், தான் வேலைக்குப் போய் விட்டால் வீட்டைக் கவனிக்க ஆள் வேண்டியிருப்பதால் உடனே புறப்பட்டு வரும்படியும் தன் அண்ணனுக்குக் கடிதம் எழுதினான் முரளீதரன்.

அக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டு ஜகந்நாதன் அடைந்த வியப்பிற்கு இணையில்லை. ''விசாலி, இதைப் பார்!'' என்று கடிதத்தை மனைவியிடம் நீட்டினார்.

''நாமும் கிளம்ப வேண்டியதுதானே? எனக்கே பத்து நாட்களாக இங்கு இருப்பே கொள்ளவில்லை. மீனாவுக்கும் குணமாகிவிட்டது. எனக்கும் குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்று ஆவலாக இருக்கிறது. இன்றே கிளம்பு வோமே? பாவம், அம்மா என்ன கஷ்டப்படுகிறாரோ?'' என்று கூறிக்கொண்டே மீனாக்ஷியைத் தேடிக்கொண்டு போனாள் அவள்.

''மீனு, ஐயோ, உம்... மின்னி, நாங்கள் ஊருக்குப் போகிறோம். முரளி எழுதியிருக்கிறான். அவனுக்கு வேலையாகிவிட்டதாம். பாவம், குழந்தையை நான் என்ன என்னவோ சொல்லிவிட்டேன். மனத்தில் வைத்துக்கொண்டு என்ன கஷ்டப்படுகிறானோ?''

''என்ன, மன்னி, அவரை என்ன சொன்னீர்கள்?'' என்று கேட்டாள் மீனாக்ஷி.

''அது என் ரகசியம். அது இருக்கட்டும்... மாமி, நீங்கள் அவளை அழைத்துக் கொண்டு ஊருக்கு வந்துவிடுங்கள். நீங்கள் அவளைப் பார்த்துக் கொள்வதைக் காட்டிலும் நான் ஒன்றும் விசேஷமாகச் செய்துவிட மாட்டேன். இருந்தாலும் எனக்கு அஞ்ஞானம், பாருங்கள்; ஊருக்கு வந்து என் கையால் சமைத்து நாலு வேளை சாதம் போட்டால்தான் எனக்குத் திருப்தியாக இருக்கும் போலிருக்கிறது.''

''அதற்கென்னம்மா, நாங்கள் சீக்கிரமே வந்துவிடுகிறோம். நீ இல்லாவிட்டால் எனக்கும் இங்கு இருப்புக் கொள்ளாது'' என்றாள் மீனாக்ஷியின் தாய்.

பாலகோபால் அறைக்குள் வரும் சத்தத்தைக் கேட்டு அவர்கள் பேச்சு நின்றது. அவன் தன் மனைவி பக்கம் பார்த்தவாறே, ''நான் ராத்திரி ஒன்பது மணிக்குத்தான் திரும்புவேன்'' என்றான்.

அப்பொழுதுதான் அங்கே வந்த ஜகந்நாதன் அவனைப் பார்த்துப் பேசினார்: ''பாலு, அப்படியானால் நான் இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்: உன் மன்னியும் நானும் சாயங்காலம் வண்டிக்கு ஊருக்குப் போகிறோம்.''

''போங்களேன்.''

''போங்களேன் என்றால்? நீ டிக்கட்டுக்குப் பணம் கொடுக்காவிட்டால் நாங்கள் போய்விட முடியுமா?'' என்று ஜகந்நாதன் வேடிக்கையாகக் கேட்டார்.

''இல்லாவிட்டால் நீங்கள் எல்லாம் லேசில் போய்விடுவீர்களா? அந்த மட்டும் ரெயில் சார்ஜுடன் ஒழிந்ததே, இன்னமும் ஊருக்குப்போய்.....''

''அபசாரம்! தெய்வத்தை நிந்திப்பது அபசாரம்! அவர்கள் தெய்வத்தையே மிஞ்சியவர்கள். நாக்கை அடக்கிக்

கவனித்துப் பேசுங்கள்!'' என்று கத்தினாள் மீனாக்ஷி. அவள் முகத்தில் கோபம் குடிகொண்டிருந்தது.

பாலகோபால் வியப்புடன் தன் மனைவியை நோக்கி விட்டு, தோளை ஒருமுறை அசட்டையாகக் குலுக்கியபடியே வெளியே சென்றுவிட்டான்.

ஜகந்நாதன் அவன்விட்டெறிந்த ரூபாய் நோட்டுக்களை வைத்துக்கொண்டு வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றார். விசாலாக்ஷி மீனாக்ஷியின் படுக்கையை அணுகினாள். அவள் நெற்றியைப் பிடித்தபடியே அவளை ஆசுவாசப்படுத்தினாள்.

''அசடு, அலட்டிக்கொள்ளாதே. தெய்வத்தை நிந்திப்பது மட்டும் அபசாரமல்ல; மனிதர்களைத் தெய்வத் திற்குச் சமானமாகச் சொல்வதும் அபசாரமே, தெரிகிறதா? மின்னி, நாங்கள்.....''

''ஐயோ, மன்னி, மின்னியும் வேண்டாம், கின்னியும் வேண்டாம். மின்னி இறந்துவிட்டாள் என்றே நினையுங்கள். பழையபடி என்னை மீனு என்றே அழையுங்கள். மன்னி, உங்களிடம் எனக்குப் பேசக் கூடத் தெரியவில்லை. நீங்கள் என்மீது இவ்வளவு பிரியமாக இருப்பதற்கு நான் அருகதை யல்ல. உங்களை நான் அவமதித்தேன், கேலி செய்தேன், வைதேன். நீங்கள் அன்பே வடிவாகத் திகழ்ந்தீர்கள். உங்கள் வாழ்க்கையே ஒரு பிரேம கீதம். உங்கள் மூலமாகவே நான் ஒரு சகோதரியின் பக்கபலத்தையும், தாயின் மாசற்ற பாசத்தையும் ருசித்தேன். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? பன்முறை வாயெடுத்தேன். நீங்கள் பெரியவர்கள், நான் உங்கள் கால் தூசுக்குச் சமானம். உங்களை நான் புகழுவதா, மெச்சுவதா? ஆனாலும் என் நன்றியைத் தெரிவிக்காமலும் இருக்க முடியவில்லை. என்ன செய்வேன்? உங்களுக்குப் பிரதியுபகாரம் என்னால் என்ன செய்ய முடியும்?''

அவள் பேச்சைக் கேட்டு விசாலாக்ஷி கண்ணீர் உகுத்தாள். அதே சமயம் அவள் மனமும் வேலை செய்தது. திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் அவள் மீனாக்ஷியின் கையைப் பிடித்துக் கொண்டாள். ''மீனு, நீ கூறுவது நிச்சயமா? பின் வாங்கமாட்டாயே? நான் எதைக் கேட்டாலும் செய்வாயா?'' என்று உணர்ச்சி ததும்பக் கேட்டாள்.

''அதென்ன அப்படிக் கேட்டீர்கள்? நான் நாடகமா நடிக்கிறேன்? உங்களுக்கு என் பேச்சில் நம்பிக்கை இல்லையா? எனக்கு இதுதானா வேண்டும்? இன்னமும் வேண்டும்.....''

''இல்லை, மீனு. எனக்கு நிஜமாகவே ஒருவேலை இருக்கிறது. நாங்கள் இங்கே வரும்போது அபிதாவை எட்டிப் பார்த்துவிட்டு வந்தோம். அவளுக்கு இப்பொழுது ஒரு விதத்தில் குணம்தானாம். ஆனால் குணமான சமயத்தில் தன் கணவனையும், புக்ககத்தையும் பற்றிக் கேட்கிறாளாம். நம் வீட்டுக்கு வரவேண்டும் என்று ஆசைப்படுகிறாளாம். ஆனால் முன்பு அவளுடைய அப்பா மைத்துனரிடம் நடந்துகொண்ட மாதிரி, இப்பொழுது அவர்கள் நம் வீட்டுக்கு வருவதற்கு இடம் கொடுக்கவில்லை. பெருந் துயரம் வந்துவிட்டால் மனிதர்களுடைய வேகமெல்லாம் குறைந்து விடுகிறது. இப்பொழுது அந்த மாமா தம் பெண்ணின் ஆசையை நிறைவேற்ற மாட்டாமல் தவிக்கிறார். அந்த ஏமாற்றத்தில் அவளுக்கு உடம்பு திரும்பிக் கொண்டுவிட்டது. இனி மலையாளத்துக்கு அழைத்துப் போய் வைத்தியம் செய்தால் தான் அவளுக்குக் குணமாகுமாம். அதற்கு அவர்களிடம் பூரண வசதி இல்லை. அத்துடன் பூரண குணமடைந்தாலும் அவள் மீண்டும் கணவனுடன் சேர்ந்து வாழ்வாள் என்ற நிச்சயம்

இல்லை. அவள் சுயபுத்தியோடு ஏக்கத்துடன் உயிர் மாய்வதைவிட, தன் கஷ்டம் தெரியாமல் பிதற்றுவது மேல் என்கிறார் அவளுடைய தகப்பனார். பாவம், பெற்ற மனம்.

''உன்னால் முடிந்தால், எனக்காக, நம் ஒரு சகோதரிக்காக, ஓர் ஏழைத் தகப்பனாருக்காக, அவளுக்குப் பணம் கொடுத்து வைத்தியம் செய்து வை'' என்று முடித்தாள் விசாலாக்ஷி.

''இதற்கென்ன பிரமாதம், மன்னி. நாம் எல்லோரும் சந்தோஷமாக இருக்கும்போது அபிதா மட்டும் கணவனையும் பிள்ளையையும் இழந்து சந்தோஷமற்ற வாழ்வு வாழ்வானேன்? அதைப் பார்த்துக் கொண்டிருப்பது நமக்கே நல்லதல்ல. அடுத்த மாதமே அதற்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்றாள் மீனாக்ஷி.

''மீனு, நீ தங்கக் கட்டி. நீயும் உன் கணவருடன் ஒத்து வாழ்ந்து சந்தோஷமாக இருந்தால் எனக்கு ஒரு குறையும் இராது. அதற்கும் ஈசுவரன் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறானோ?''

''என்னையா சொல்லுகிறீர்கள்? என்னைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். என் கணவரின் அன்பு கிட்டிவிடும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது'' என்றாள் மீனாக்ஷி உள்ளக் கிளர்ச்சியுடன். மகிழ்ச்சியினால் அவள் முகம் பிரகாசித்தது.

''நிஜமாகவா, மீனு? அது எப்படி நடந்தது?'' என்று அவள் காதுக்கருகே மெதுவாகக் கேட்டாள் விசாலாக்ஷி.

''அது என் ரகசியம்'' என்று பதிலளித்தாள் மீனாக்ஷி.

''அப்படியேதான் இருக்கட்டுமே. எப்படியோ நீங்கள் சந்தோஷமாக இருந்தால் போதும்'' என்றாள் விசாலாக்ஷி.

''நீ ஊருக்கு வருவதென்றால் நாழிகையாகிவிட்டது. இல்லை, பேசிக்கொண்டே இருப்.....'' என்று குறுக்கிட்டார் ஜகந்நாதன்.

''வருகிறேன். - பாரேண்டி, இவரை!'' என்று செல்லமாகக் கணவரைக் கடிந்துவிட்டுக் கிளம்பினாள் விசாலாக்ஷி.

9. அன்பின் உருவம்

குளத்தில் கணுக்கால் ஜலம்தான் இருக்கும். இருந்தாலும் வார்வாராக வெடித்து, கிழவியின் சருமம் போல் சுருங்கியும் உலர்ந்தும் காட்சியளித்த வறண்ட சேற்றுத் தரையைக் காட்டிலும், இந்தக் காட்சி பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தது. அத்துடன், ஊரில் ஒரு கிராமப் புனருத்தாரண வாலிபர் சங்கம் புதிதாகக் குடியேறி இருந்தது. அச் சங்கத்துப் பிள்ளைகள் தினமும் கையில் கொத்து மண்வெட்டி, கூடை சகிதம் வந்து புல்பூண்டுகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு, குளத்தைச் சுற்றிச் செதுக்கிவிட்டார்கள். குப்பை, செத்தை இல்லாமல் பெருக்கி விட்டுச் சுத்தமாக வைத்தனர். வீடுவீடாக வந்து, ''குப்பையைத் தெருவில் கொட்டாதீர்கள். கூடையில் போட்டு வையுங்கள்'' என்று வினயமாகக் கேட்டுக் கொண்டார்கள். நாலு பக்க வீதிகளிலும் குப்பையைத் தங்கள் கையினாலேயே அகற்றினார்கள். ஊராருக்கும், அவர்களைப் பார்த்து அப் புண்ணிய கைங்கரியத்தில் உற்சாகம் பிறந்து விட்டது. எல்லோரும் சேர்ந்து உழைத்ததில் ஊர் சுத்தமாயிற்று.

விசாலாக்ஷி, பிரபாவுக்குத் தலை வாரிப் பின்னிய படியே நடராஜனுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தாள். கண்கள் மட்டும் தெருவையே நோக்கிக் கொண்டிருந்தன. தபால்காரன் ஏதாவது செய்தி கொண்டு வருவானோ என்று அவள் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள்.

தபால்காரனும் வந்தான். அவன் தன் கையிலிருந்த கட்டிலிருந்து தேடிப்பிடித்து எடுத்து ஒரு கடிதத்தைக் கொடுப்பதற்குள் மிகவும் துடியாகத் துடித்தாள் விசாலாக்ஷி. ஆனால் அவள் ஆத்திரப்பட்டதற்குத் தக்க பலனையே அவள் பெற்றாள். எதிர்பார்த்த கடிதம் வந்துவிட்டது. திருவனந்த புரத்திலிருந்து அருணாசலம் எழுதியிருந்தான். மேல் விலாசம் ராமநாதையரின் பெயருக்கு இருந்தாலும், விசாலாக்ஷி பிரித்துப் படித்தாள்.

''.....அபிதா இப்பொழுது முன்போலவே சகஜமாக இருக்கிறாள். அதாவது பேசுகிறாள், சிரிக்கிறாள், தன் வேலைகளைப் பார்த்துக் கொள்கிறாள். ஆனால் பழைய தெம்பும் தெளிவும் தோன்றுவதில்லை. அவளை இன்னமும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமாம். மனத்திற்கும், உடலுக்கும் அதிகச் சஞ்சலமில்லாமல் வைத்துக் கொண்டால் பழைய பலமும், தெளிவும் வந்துவிடுமாம். இப்பொழுதுதான் குழந்தையுடன் விளையாடுகிறாள்.

''அடுத்த வாரம் புறப்பட்டு வரலாமென்று இருக்கிறோம். அபிதாவுக்கு நம் வீட்டையும், ஊரையும் பார்க்கவேண்டும் என்று மிக்க ஆசையாக இருக்கிறதாம்.....''

இதைப் படித்தவுடன் விசாலாக்ஷிக்கு ஆனந்தத்தினால் மார்பு விம்மிற்று. ''உனக்குத்தான் நல்லகாலம் வந்துவிட்டது என்று நினைக்காதே. எங்களுக்கும்தான் வந்திருக்கிறது'' என்று அவள் குளத்தைப் பார்த்துக் கூறினாள்.

முரளீதரன் வெளியிலிருந்து வந்தான். ''என்ன மன்னி கடிதம்?'' என்று கேட்டான்.

''கடிதத்துக்கு மேல் கடிதம்; விஷயத்துக்கு மேல் விஷயம்; உனக்கென்ன குறைச்சல்!'' என்று சொல்லிக் கொண்டே விசாலாக்ஷி அவனிடம் அருணாசலத்தின் கடிதத்தைக் கொடுத்தாள்.

உள்ளே ஓடிப்போய் வேறு இரு கவர்களையும் எடுத்துக் கொண்டு வந்து அவனிடம் கொடுக்க வந்தாள். ''இதோ பார்த்தாயா, முரளி? கலா நாளைக்குப் பிளேனில் வருகிறாளாம். அண்ணாவும் மன்னியும் அப்புறம் வருகிறார்களாம், எப்படி?''

''சரிதான்'' என்றான் முரளி, வெகு அலட்சியமாக, கலா பம்பாயிலிருந்து பிளேனில் வருவதில் தனக்கு ஒருவித ஆச்சரியமும் இல்லை என்று காட்ட நினைத்தானோ? அல்லது, 'வந்தால் வரட்டுமே? லீவு ஆரம்பமாகிவிட்டது. அவர்கள் வரும் வழக்கம் தானே?' என்று தான் நினைத்தானோ?

''இந்தச் சமாசாரத்தைக் கேட்டால் நீ சந்தோஷப் படுவாயாக்கும் என்று நினைத்தேன். உனக்கு அவர்கள் வரவைப்பற்றி ஒன்றும் குதூகலிக்கும்படி இல்லையாக்கும். சரி, இந்த இரண்டு கடிதங்களையும் படித்துவிட்டு உன் அண்ணாவிடம் கொடுத்துவிடு. நாளைக்கு காலை 'ஏரோட்ரோ'முக்குப் போய்க் கலாவை அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்று சொல்'' என்று கூறிவிட்டு, அவனுக்கேற்ற அசட்டையுடன் அவ்விரு கடிதங்களையும் அவன் மடியில் வீசி எறிந்துவிட்டு, ''நட்டு, பிரபா, வாருங்கள் குளிப்பாட்டுகிறேன்'' என்று கூப்பிட்டுக்கொண்டே பின்புறம் சென்று விட்டாள் விசாலாக்ஷி.

மதனியின் முதுகு மறைந்ததும், முரளீதரன் அந்தக் கடிதங்கள் இரண்டையும் ஆவலுடன் பிரித்துப் படிக்கலானான். படிக்கப் படிக்க இறும்பூது எய்தினான். ஆனந்தம் அவனைத் தாக்கிக் கீழே தள்ள முயன்றது. ஒரு தரம் படித்தான். அவனுடைய இரத்தம் கொதித்தது, செவிகளில் ரீங்காரம் செய்த அரவத்தில் அவனுக்கு ஒன்றும் சரியாகப் புலப்படவில்லை. மூளையைக் கிண்டிவிட்ட போதை கண்ணை மறைத்தது.

கலாவின் கடிதம் ஒன்று. அதையே முன்பு படித்தான்.

"..... அத்தை, நீ கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதில் அளிப்பதென்றே ,எனக்குத் தெரியவில்லை. குறிப்பு மாத்திரத்தில் சகலத்தையும் அறிந்து கொள்ளும் என் அத்தையின் கடிதமா இது என்று நாலு நாழிகை யோசித்தேன். வேறு எப்படித்தான் இருக்க முடியும் என்று நீ நினைத்தாய்?

"படிப்பு மனிதனுக்கு மிகவும் அவசியம்தான். ஏட்டுப் படிப்பல்ல. அறிவும், ஞானமும் தான் முக்கியம். பட்டம் பெற்றுவிட்டதனாலேயே ஒருவர் பெரியவராகிவிட முடியுமா?

"அத்திம்பேரைப் போல் படிப்பு மட்டம் என்கிறாய். அத்திம்பேரைப் போன்ற கணவர் வாய்க்கவேண்டும். அத்தையைப் போல் சாதுரியமாகக் குடித்தனம் செய்ய வேண்டும் என்பதுதானே என் லட்சியம் எல்லாம்? அந்த ஒரு வாக்கியத்தினால் அவரை மட்டம் தட்டினதாக நீ எண்ணலாம். அந்த ஓர் உபமானத்தினாலேயே நீ அவரை எவ்வளவு உயர்த்திவிட்டாய் என்பது உனக்குத் தெரியுமா? என் அருமை அத்தையையும் அத்திம்பேரையும் என்றும் விட்டுப் பிரியாமல், அத்திம்பேரின் தம்பியையே மணக்க எனக்குக் கசக்கிறதோ!

"இன்று அப்பா என்னைக் கேட்டபோது எனக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. பெரியவர்கள் இதைக் கூடத் தெரிந்துகொள்ள முடியாத குருடர்களா என்ன என்ற பிரச்னை என் மனத்தில் எழுந்தது.

"ஆனால், நீ கடைசியாக எழுதியிருக்கும் விஷயம் எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. முரளியின் (ஆமாம், இப்பொழுது பெயர் சொன்னால் என்னவாம்.) முரளியின் பழைய வேடிக்கைப் பேச்சும், விஷமங்களும் இல்லா விட்டால் எப்படி இருக்கும்.....!"

முரளீதரன் இந்தப் பகுதியை மனப்பாடம் செய்து கொண்டான். பிறகு ரகுநாதனின் லிகிதத்தைப் பார்வை யிட்டான்.

''விசாலம், உன் கடிதம் கிடைத்த பிறகுதான் எனக்கு கலாவின் விவாகத்தைப் பற்றிய நினைவே வந்தது. கமலா இதைப்பற்றி எத்தனையோ தரம் என்னிடம் பிரஸ்தாபித்து இருக்கிறாள். ஆனால் ஒரு தடவைகூட நான் காது கொடுத்துக் கவனமாகக் கேட்டதில்லை. கலாவுக்கு வயதாகிவிட்டது. அவளைக் கல்யாணம் செய்து கொடுத்து வேற்றகத்திற்கு அனுப்பிவிட வேண்டும். என்னுடனேயே வைத்துக் கொண்டு இருந்துவிட முடியாது. இவ்வளவும் உன் கடிதத்தின் மூலம்தான் நான் அறிந்துகொண்டேன். என் ஆயுள் முழுவதும் கலா என் குழந்தையாகவே, என்னிடமே இருப்பாள் என்று தவிர நான் கனவுகூடக் கண்டதில்லை. அதிலும் எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது என்னவென்றால், கலா என்னைவிட்டுப் பிரிய இஷ்டப்படுவாள் - இஷ்டப்படுகிறாள் - என்பதுதான்!

''கலாவை உன்னிடம் ஒப்படைப்பதில் எனக்கு என்ன ஆட்சேபணை? கலா பிரியப்படுவாளா என்று கமலாவைக் கேட்டேன். கலாவே வந்தாள். நான் கேட்ட கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை. என் கண்களுக்கு அவள் எப்பொழுதும் போல்தான் சிரித்தாள். ஆனால் உன் மன்னி அதற்கு விசேஷ வியாக்கியானங்கள் செய்கிறாள். கலாவின் சம்மதம் அவள் முகத்தில் கொடி கட்டிப் பறக்கிறதாம்!

''என்னவோ, எல்லோரும் பெண்ணைப் பற்றியும், பெண் உள்ளத்தைப் பற்றியும் எழுதுகிறார்கள்: என் வாழ்க்கையில் நான் பழகும் மூன்று பெண்கள் - பெண், தங்கை, மனைவி - இவர்கள் மனமே என்னால் அறிய முடியவில்லை.

முகூர்த்த நாளைப்பற்றி மாமாவைக் கேள். விவாகத்திற்கு ஏற்பாடுகள் செய்வது என் பொறுப்பு. உங்கள் வீட்டில் எனக்கு நிரந்தரமாக ஓர் இடம் கிடைத்துவிட்டது. இப்பொழுதே எனக்கு ஓய்வு எடுத்துக் கொண்டு விட்டதுபோல நிம்மதி ஏற்படுகிறது.''

முரளீதரன் தன் மன்னியைத் தேடிக்கொண்டு உள்ளே சென்றான். இதற்குள் குழந்தைகள் இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். விசாலாக்ஷி, அவன் காலடிச் சத்தம் கேட்டு அவன் கலத்தைத் தயாராகப் போட்டாள். ''முரளி, சாப்பிட வா'' என்று கூப்பிட்டுவிட்டு, அவனுக்குப் பிடித்தமான மாங்காய் வெல்லப் பச்சடியைத் தாராளமாக இரண்டு கரண்டி பரிமாறினாள்.

முரளீதரன் இலையில் இட்ட இனிப்பைச் சுவைத்தான். உள்ளத்தில் திகட்டிய தித்திப்பு அத்துடன் போட்டியிட்டது.

''மன்னி, இந்த அன்பு என்னும் உணர்ச்சி மிகவும் வேதனை அளிக்கிறது அல்லவா?'' என்று அவன் பேச்சைத் துவக்கினான்.

விசாலாக்ஷி தலை குனிந்தபடியே பாத்திரத்தில் கையை அலம்பினாள். ''நீ சொல்வது எனக்குப் புரியவில்லை. காதும் கேட்கவில்லை'' என்றாள் அவள்.

''சரிதான், மன்னி. நான் தோற்றுவிட்டேன் என்று ஒப்புக் கொள்ளுகிறேன். கலாவைப் பற்றி நான் சிறிதும் சிரத்தை எடுப்பவனல்ல என்று உன்னிடம் கதைக்க வேண்டும் என்று நினைத்தேன். நீ என்னடா என்றால்.....!''

''நான் உன் வாழ்வில் குறுக்கிட்டது, தப்பு. சிரத்தை இல்லாதவனை இழுத்துப் பிடித்து மணக்கச் செய்வது பாபம் அல்லவா?''

''மன்னி, உன்னை என்ன என்று சொல்லுவதென்றே எனக்குத் தெரியவில்லை. 'அன்பு தெய்வம்' என்கிறார்கள்.

அப்பொழுது அன்பு என்பது வேறு, அதற்கு நீ தெய்வம், அதிபதி, என்றல்லவா புலப்படுகிறது? இல்லை, நீயே அன்பு.''

''சரி, சரி, கறி வேண்டுமா, சொல்'' என்று கேட்டாள் மன்னி.

''பேச்சை மாற்றாதே. நான் கேட்டதற்குப் பதில் சொல். பிரேமை என்பது ஒருவித வலி அல்லவா, மன்னி? ஏன், சாபம் என்றுகூடச் சில சமயம் தோன்றிவிடுகிறது. மனிதனை என்ன பாடுபடுத்தி விடுகிறது, இந்த அன்பு!''

''உனக்கென்ன அப்படி வந்துவிட்டது, முரளி? அருணாசலம் அண்ணாவைச் சொல், ஒத்துக்கொள்கிறேன். அபிதா தன் கணவன் பேரில் வைத்திருந்த அன்பில், யாரும் அவரை ஒரு சொல் சொல்லக் கூடாது என்று தவித்தாள். பைத்தியமே பிடித்துவிட்டது. அவருக்கோ மனைவியிடத்தில் வைத்திருந்த அளவு கடந்த காதல், அவளைப் பிரிந்து இருக்கமாட்டாமல் ஒன்றுமில்லாத சப்பாணி மனிதராக்கி விட்டது. உயிரை இழந்து ஒரு மரப்பாச்சிபோல் ஆகிவிட்டார்.

''பிரியம் என்பதே கடுகளவும் இல்லாமல் மீனுவின் வாழ்க்கையே பாழாக இருந்தது. ஐசுவரியம், அழகு, வசதி, சாமர்த்தியம் யாவும் அதன் முன் பயனற்றவையாக இருந்தன. இப்பொழுது, பிரேமை அவர்கள் வாழ்க்கைப் பாலைவனத்தை நந்தவனம் ஆக்கின நதியாக அமைய ஆரம்பித்திருக்கிறது.

''உன் விஷயம்தான் கேட்கவே வேண்டாம். அப்பாவின் மிரட்டலும், அம்மாவின் ஏசலும், அண்ணாவின் மனச் சலிப்பும், என் கெஞ்சுதலும் ஆகிய இவையனைத்தும் செய்யாத அற்புதத்தை ஒரு பெண் - நேற்றுப் பிறந்த பெண் கலா - சுலபமாகச் சாதித்து விட்டாள். அவள் வாயால் பேசவில்லை. கையால் தொடவில்லை, கண்ணாலும்

மயக்கவில்லை. உடன் பழகி ஊறிவிட்ட உங்கள் பரஸ்பர அன்பு, உன்னை மாற்றிய மந்திரக் கோலாக மாறிவிட்டது'' என்று ஒருவாறாக முடித்தாள் விசாலாக்ஷி.

முரளி சற்று நேரம் பேசாமல் யோசித்தான். பிறகு தன் மன்னியைக் கேள்விகள் கேட்டான்.

''அன்பு என்பது அருணாசலத்தின் வாழ்வில் ஒரு சாபமாக விளங்கிற்று; பாலுவுக்கு அது ஓர் ஊற்று, எனக்கு மந்திரக்கோல். உன்னைப்பற்றி மட்டும் சொல்லிக்கொள்ளாமல் இருந்துவிடுவது மிகச் சாதுரியமோ?''

''என்னைப் பற்றியும் தான் சொல்லுவேன். அப்பா, அம்மா, ஏன், நட்டுவும் கூடத்தான் அதற்கு விலக்கில்லை.

''எங்கள் வாழ்வில் அன்புதான் ஜீவநாடி. அப்பா, அம்மா அதற்கு அஸ்திவாரம். நடராஜன் பிறந்த வேளை தாயன்புக்கு லோபம் வந்துவிட்டது. அவனை நான் எடுத்து வளர்த்திராவிட்டால், அவன் வளர்ந்தே இருக்கமாட்டான். தைரியமற்ற ஒரு மாமிச மூட்டையாக இருந்திருப்பான். அவன் வரையிலும் அன்பு அவனுக்கு உயிர் அளித்த சஞ்சீவி என்று சொல்லுவேன்.''

முரளீதரன் சாப்பிட்டுவிட்டு எழுந்தான். கையை அலம்பிக்கொண்டு வந்தான்.

''அதைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. இதுதான் என் கண்மணி. வாடி, என் அன்பே, என் கட்டிக் கரும்பே'' என்று கூறியபடியே குனிந்து பிரபாவைத் தூக்கி கொண்டான்.

அவன் குனிந்தபொழுது அவனுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத் துண்டு விழுந்தது. அது முன்பு எப்பொழுதோ அபிதா எழுதிய கதையில் வந்த கதாநாயகியின் சித்திரம். அது கலாவின் ஜாடையாக இருக்கிறது என்று அவன்

அதை எடுத்து வைத்திருந்தான். விசாலாக்ஷி அதை எடுத்துப் பார்த்தாள். முரளீதரன் அதைக் கவனிக்கவில்லை.

''ஏன் மன்னி, இதன் ஜாடை கலாவைப் போலவே இருக்கிறதல்லவா?'' என்று அவன் கேட்டான்.

விசாலாக்ஷி படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ''ஆமாம். இது ஏது?'' என்று கேட்டாள்.

''ஏதென்றா கேட்கிறாய்? பிரபாவையா ஏதென் கிறாய்?''

''நீ பிரபாவையா சொன்னாய்?''

''ஆமாம். அவள் கண்களைப் பாரேன். சாக்ஷாத் கலாவே என்னைப் பார்க்கிறாள். அப்படித்தானேடி, பிரபாக் குட்டி. நான் சொல்வதைக் கேள் - கலா வரப்போகிறாள்'' என்று கொஞ்சினான் முரளி.

''கலா வயப்போயா...'' என்று ஒத்துப்பாடி நிறுத்தினாள் பிரபா.

''அதுதான் சமத்து. என் கண்ணல்லே, நீ'' என்று சொல்லிக் கொண்டே பிரபாவை வாரி எடுத்துப் பன்முறை முத்த மிட்டான் முரளி.

''அட, வெட்கம் கெட்டவனே!'' என்றாள் விசாலாக்ஷி. அவள் முகத்திலும் குரலிலும் பெருமிதம் தாண்டவமாடிற்று.

— நிறைந்தது —